# ஓம்சக்தி '99



## இந்து மாமன்றம்

அரசினர் ஆசிரியர் கலாசாலை

பத்தனை, கொட்டகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாக்கக் குழு

திரு. சுப்பையா ராஜ்குமார்
(இதழாசிரியர்)

திரு. எம். பாரதலிங்கம்
திரு. என். மனோகரன்
திரு. எஸ். ஜோதிகண்ணா
திரு. எஸ். சேதுரட்ணம்
திரு. ஜீ. ஆனந்தராஜா
திரு. எம். மணிமொழி

திரு. எஸ். தமிழ்வண்ணன்
செல்வி. எஸ். சுபநாளினி
செல்வி. எல். நவலக்சுமி
செல்வி. ரீ. மீனாம்பிகை
செல்வி. ஓ. கௌரி
செல்வி. பி. கலைவாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Phone : (STD 04112) - 22115

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

1, சாலை தெரு, காஞ்சிபுரம் - 631 502.

முகாம் : தேதி 22.2.99

இவ்வாண்டு - [illegible]
நடந்து வரும் [illegible]
இந்த மலரும் இவ்வாண்டே 'ஓம் சக்தி'
என்னும் [illegible]
[illegible].
"சக்தியான [illegible]" என்பது [illegible]
[illegible]
[illegible]
~~[illegible]~~
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அன்னை பராசக்தியாள் [illegible]
அநுக்ரஹிக்கிறோம்.

நாராயண ஸ்ம்ருதி:

ATTAM - VISVAMS.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PHONE { ASHRAMA: 588253
CULTURAL
CENTRE:



**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatte,
COLOMBO - 6.

24.10.99

## வாழ்த்துச் செய்தி

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை இந்து மாமன்றம் ஆண்டுதோறும் வெளியிடும் 'ஓம் சக்தி' சஞ்சிகையானது, இவ்வாண்டும் வெளிவர உள்ளதென அறிந்து, அவர்களுக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

"மனிதனது பந்தத்திற்கும் (துன்பத்திற்கும்), விடுதலைக்கும் (இன்பத்திற்கும்) – இந்த இரண்டிற்கும் அவனது மனமே காரணம்" என்று கூறுகிறது ஸ்ரீமத் பகவத் கீதை. 'நன்மையும் தீமையும் பிறர் தர வாரா' என்பதும் தமிழ் கூறும் உண்மை.

ஆகவே, அறிவை வளர்த்து, சிந்தனைகளை நல்முறையில் அமைத்து, அன்பு வழியில் வாழ்வோர், மேலான இன்பத்தைப் பெறுவர் என்பது திடமாகிறது. அதற்கு மாறாக வாழ்பவர்களுக்கு, இம்மையிலும், மறுமையிலும் எந்தப் பயனும் இல்லை என்பதும் திடமாகிறது.

இளம் வயதிலிருந்தே மனதை நெறிப்படுத்தத் தொடங்குதல் சிறந்தது. இந்த நோக்குடனே, பள்ளிகளில் சமயமும் போதிக்கப்படுகின்றது. ஆனால், மாணவர்களிடத்தே நாம் விரும்பும் மாற்றத்தை இன்னும் உறுதியாகவும், பரவலாகவும் காண இயலவில்லை என்பதும் உண்மையே. இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். எப்படியாயினும், இந்நிலைமையினை இன்னும் சிறப்பாக நெறிப்படுத்துதல் எம் அனைவரின் கடமை என்பதில் ஐயமில்லை.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை மிகவும் அமைதியான இடத்தில், நல்ல இயற்கை சூழலுக்கு மத்தியில் அமைந்துள்ளது. மனதில் அமைதியை வளர்த்துக் கொள்வதற்கு அது நல்ல இடம். இங்கு கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்வர் என எதிர்பார்க்கிறோம்.

'ஓம் சக்தி' இதழை வெளியிடும் இந்து மாமன்றத்தினருக்கு எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

சுவாமி ஆத்மகனானந்தா

இதழாசிரியர்
'ஓம் சக்தி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துமாமன்ற "ஓம் சக்தி" நூல்
வெளியீட்டுக்கு ஆசியுரை
~ஸ்ரீமத்சுவாமி தந்திரதேவா அவர்கள்

யதன்சைட் அரசினர் ஆசிரியர் கலாசாலை இந்துமாமன்றம் வெளியிடும் ''ஓம் சக்தி'' ஆன்மீக சஞ்சிகை ஓர் மகிழ்ச்சியான விடயமாகும். நற்பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்கு ஓர் முக்கியமான பங்கு உண்டு. நவீனகாலத்தில் கல்வி முக்கியமானதென்பதை ஏக மனத்துடன் வலியுறுத்த வேண்டும். ஆனால் ஒரு எச்சரிக்கை தேவை. அதாவது நன்றாகக் கல்வி கற்றுக் கொண்டால் மட்டும் மன நிறைவைப் பெற்றுக் கொள்ள முடியாது. உதாரணமாக ஒருவன் கல்விமூலம் உயர் பதவி வகித்திருந்தாலும் குடிபோதை, லஞ்சம் போன்ற பழக்கங்களிலிருந்தால் அவனது கல்வி பதவி பயனற்றுப் போகும். ஆகவே கல்வியுடன், ஒழுக்கம், பக்தி அவசியமானது. நமது இந்துமதம் ஒரு தத்துவங்கள் கடல் போன்றது. உபநிஷதங்கள் யோகசஸ்த்திரங்கள், மறுபிறப்புத் தத்துவ அடங்கியுள்ள ஒரு ஆன்மீக சமுத்திரம். இளைஞர் சமுதாயம் தேவையான கல்வி பயிற்சிகளுடன் இந்துமதத்தின் மகிமையை அறிந்துகொள்ள வேண்டும் மேலும் சமுதாயத்தின் மகிமையை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் சமுதாயத்தில் இன, மத, பேதமற்ற முறையில் சகலருக்கும் அன்புகாட்ட வேண்டும். இவ்வழியை ஆசிரியர்கள் காட்ட வேண்டும். ஓம் சக்தி நூல் பயனுடையதாகட்டும்.

ஆசியுடன்
**ஸ்வாமி தந்திரதேவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யதன்சைட், ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் குருக்களின் ஆசிச் செய்தி

1999ம் ஆண்டு பிரமாதி வருஷத்திலே ``ஓம் சக்தி'' 12ம் வருட மலரை, யதன்சைட் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இந்துமாமன்றத்தினர் வெளியிடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்து சமயம் என்னும் பாற்கடலில் இருந்து அற்புதமான முத்துக்களை ஆசிரியர்கள் திரட்டித் தந்துள்ளார்கள்.

எமது சமயத்தை நாம் நன்றாக அறிந்து பற்றிக்கொள்வதற்கு இப்படிப்பட்ட மலர் வெளியீடுகள் மிக மிக அத்தியாவசியமானவையாகும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் அவர்கட்கும் மலர் வெளியீட்டு குழுவினர்க்கும் திருவருட் சக்தி துணை புரிய வேண்டுகிறேன்.

இந்துக்களாகிய நாம் காலம் அறிந்து செயலாற்ற வேண்டும் மனித சமுதாயம் நோய், பசி முதலாய பிரச்சினைகளின்றி வாழ்ந்தாலே சமய நெறி சிறக்கும்.

நாயன்மார்கள் தாம் வாழ்ந்த காலத்திலே, மக்கள் துன்பமின்றி வாழ இறைவனைப் பிரார்த்தித்து பல அற்புதங்கள் செய்து நமக்கு வழிகாட்டியுள்ளார்கள் இன்று பல வகைப்பட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் நாம் வாழ்கின்றபோதும் முழுமையாக தெய்வத்தை நம்பி நாயன்மார்களுடைய தேவார திருவாசகம் மூலம் பிரார்த்தனை செய்தால் நமக்கு நன்மையே விளையும். 21ம் நூற்றாண்டு பிறக்கப்போகும் இத்தருணத்திலே மக்கள் தொகை 600 கோடியெனக் கணக்கிட்டுள்ளனர். அதற்கேற்றபடி உணவு உற்பத்தி இல்லை. எனவே பலர் பட்டினியால் வாடுகின்றார்கள். விஞ்ஞானிகள் தமது வழியில் பல ஆராய்ச்சிகள் செய்து உணவுத் தட்டுப்பாட்டை நீக்கப் பாடுபடுகிறார்கள். ஆனால் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை ``இலர் பலராகிய காரணம் நோலாதவர் பலர்'' (திருக்குறள்) இந்துக்களாகிய நாம் சிவசக்தியை அன்ன பூர்ணேஸ்வரி என்ற பெயரால் வணங்கிறோம். அந்த அன்னபூர்ணேஸ்வரி காசி எனும் திருத்தலத்தில் இருந்து அனைவர்க்கும் படி அளப்பதாக நம்புகிறோம். அன்றாட உணவு அனைவருக்கும் கிட்ட நாமனைவரும் உணவு உட்கொள்ளும் முன்பு வழிபாடு செய்தல் வேண்டும்.

அன்னத்தைப் பார்த்து வணங்கி
"எல்லாம் வல்ல சிவசக்தி அன்னையே
எம் பசி தீர அன்னம் வழங்கி அருள்வாய்
அதனால் பசுக்களும் புத்திர பாக்கியமும் பெற்று
ஐஸ்வர்யத்துடன் வாழ அருள் புரிவாய்
அந்த உணவிலே நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும்
கிடைக்க அருள்புரிவாயாக
எங்களுக்கு இந்த அன்னம் எப்போதும்
குறைவின்றிக் கிடைக்க அருள்வாயாக
ஆட்சியுலகை உடையாய் போற்றி
அடியார்க்கு அமுதெல்லாம் ஈவாய் போற்றி"
என்று வழிபட்டு பின்பு உணவருந்த வேண்டும்
"அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம் பலம்" என்ற தேவாரமும் கூறலாம்.

இப்படிப் பிரார்த்தனை செய்து சாப்பிடும் உணவு நமக்கு நன்மை விளைக்கும் அமிர்தமாக மாறிவிடும். நல்லெண்ணங்கள் நல்ல விளைவுகளை உண்டாக்கும் தன்மை வாய்ந்தன.

``21ம் நூற்றாண்டில்'' எமது இந்து சமய ஆசிரியர்கள் எமது வருங்கால சந்ததியினர்க்கு, உணவிற்கு முன்பு இறைவனைப் போற்றும் பழக்கத்தை ஏற்படுத்தி நாமும் நாடும் நலமுடன் வாழ உதவும்படி பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!
நாம் தெய்வ சக்திதனை நன்றாகத் தேர்ந்துணர
ஓம்சக்தி மலர் போல ஓராயிரம் தோன்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**சு. தேவசேனாதிபதி குருக்கள்**
யதன்சைட் - கொட்டகலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதல்வர் முழுமனதார வாழ்த்துகிறார்....

ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நோக்குடன் இயங்கும் எமது கலாசாலையானது முழுமையான ஆசிரியர்களை உருவாக்குவதில் சமயமும் சமபங்கு வகிக்கின்றது என்பதனை நிருபிக்கும் வண்ணம் தனது இந்து மாமன்றத்தின் மூலமாக 'ஓம் சக்தி' நூலினை வருடந்தோறும் வெளியிடுவது வரவேற்கத்தக்கது.

சமயக் கல்வியின் அவசியம் இன்று சகல மட்டங்களிலும் ஏற்றுக்கொண்டுள்ள போது சமயத்தினை வளர்க்கும் நோக்குடன் செயற்படும் இந்துமாமன்றமும் அதன் நூலாக்கக் குழுவினரும் உண்மையிலே பாராட்டப்படக் கூடியவர்கள்தான்.


வெளிவரும் இந்நூல் எம்மக்கள் மத்தியில், விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, விழுமியங்களையும் கட்டிக்காக்க வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

**சு. முரளிதரன்**
ஆசிரியர் கலாசாலை,
யதன்சைட்,
கொட்டகலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதி அதிபர் வாழ்த்துகிறார்.......

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சமயமான இந்து சமயத்தின் சக்தி வழிபாடானது உலகெங்கும் பரந்து மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது.

இந்து சமயத்தை வளர்த்துச் செல்வதிலும் சமயத்தின் அரும் பெருங்கருத்துக்களை மக்களிடையே வேரூன்றச் செய்வதிலும் வரலாற்றுச் சான்றாக விளங்குவதிலும் முக்கியம் பெறுவது அந்தந்த காலங்களில் தோன்றுகின்ற நூல்களென்றால் அது மிகையாகாது.

அந்த வகையில் எமது ஆசிரியர் கலாசாலையின் இந்து ஆசிரிய குழாத்தினது இந்துமாமன்றத்தினால் வருடா வருடம் வெளியிடப்படுகிற 'ஓம் சக்தி' நூலும் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்நூலானது எமது கலாசாலையின் எட்டாவது வெளியீடாக அமைவதோடு இந்து சமயத்தை வளர்க்க இதுவும் உதவும் என்பதையிட்டு பெருமைப்படுகின்றேன்.

சமீபகால சைவ சமயத்தின் வளர்ச்சியின் ஒரு சான்றாதாரமான இவ் ''ஓம் சக்தி'' சிறப்புற அமைய எனது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

எஸ்.ஜெயகுமார்
(பிரதியதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உப அதிபர்

## வாழ்த்துகிறார்......

அன்புள்ளம் கொண்ட இந்து மகனுக்கு அன்னையின் அருள் கேட்காமலே கிடைக்கும் ''ஓம் சக்தி'' ஓங்காரமாக ஒலிக்க மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள் சைவப் பயிர் தழைக்க நாளும் பணி புரிந்து அருந்தொண்டாற்றிட மெய்யன்பர்கள் அனைவருக்கும் குருவருளும் திருவருளும் கூட்டுவிக்குமாறு எல்லாம் வல்ல எம் பெருமானை வேண்டுகின்றேன்.

மலர் 'ஈஸ்வர பக்தியால்' விளைவும் நன்மைகளை விளக்கி அமைதி, நல்வாழ்வு மலரச் செய்வதாக விளங்கவும் என் மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்.

**~அத்தி முகவனை நித்தம் நினைப்பவர் சித்த மகிழ்வோடு முத்திபெறுவரே~**

**பழனிமுத்து ஸ்ரீதரன்**
(உப அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுப்பு விரிவுரையாளரின் வாழ்த்துச்செய்தி

எமது கலாசாலை இந்துமாமன்றத்தினால் வெளியிடப்படும் ''ஓம் சக்தி'' மலர் இம்முறையும் வெளியிடப்படுவதையிட்டு பெருவுகையுறுகிறேன்.

ஆத்மிக சிந்தனையின் கட்டுமானத்தில் உயிர்ப்புப் பெறும் சமய வாழ்வும், சம்பிரதாயங்களுமே சமூக முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிய முடியும். சௌஜன்னியத்தை ஏற்படுத்த முடியும். என்ற வகையில் வளர்ந்துவரும் ஆயிரமாம் ஆண்டுத் தேவைகளை ஈடுகட்டும் வகையில் பல்துறைசார்ந்த அறிஞர்களால் சமயம் நோக்கப்பட்டு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அது பன்முகப்பார்வை கொண்டதாக, புத்தாக்கம் செய்யப்பட வேண்டியதும் காலத்தின் தேவையாகும். எனவே எமது கலாசாலை ''ஓம்சக்தி மலர்'' ஆசிரிய மாணவர்க்குச் சமயம் தொடர்பான களத்தினை வழங்குவதன் மூலம் இதன்பால் ஈர்க்கப்பட ஒரு தூண்டுதலாக அமையும் என்ற வகையில் இம்முயற்சி பயனுள்ள பணியென நம்புகின்றேன். இது வெற்றுச் சங்காக அல்லாமல் காற்றொலி எழுப்பும் சங்காக அமையும் என்ற நம்பிக்கையுடன் எல்லாம் வல்ல சக்தியினை வேண்டி வாழ்த்துகிறேன்.

'அன்பே சிவம்'

**திரு. வி. எஸ். இதயராஜா**
இந்துசமய விரிவுரையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலோசகரின் வாழ்த்து

*மானிட உள்ளங்கள் - என்றும்*
*மகிழ்வுடனும் மாண்புடனும் - வாழ*
*மறைந்திருந்தே மகிமை புரியும்*
*மறைகள் கூறும் மகிமையே - உன்*
*திருநாமத்தால் சைவத்தின்*
*சிறப்புதனை செப்புகின்ற................*

*நூலினுக்கு ஆலோசகர் என்ற*
*வகையில்*
*வாழ்த்துக்கள் கூறுவதில்*
*பெருமையடைகின்றேன்.*

**திருமதி. சுமதி அன்பரசு**
(விரிவுரையாளர், இந்துமாமன்ற ஆலோசகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேரவைத் தலைவர் வாழ்த்துகிறார்......

எமது கலாசாலையின் இந்து மாமன்றத்தினால் எட்டாவது முறையாகவும் 'ஓம் சக்தி' நூல் வெளிவருவது யதன்சைட் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கு மிகுந்த பெருமை சேர்த்து தருவதோடு மலையகத்தின் ஆசிரிய சமூகத்தினர் இவ்வாறான ஆத்மீக சிந்தனை கொண்ட நூலினை வெளியிட்டு எம்மக்களுக்கும் ஆன்மீக பணி செய்வது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

20ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 21 ம் நூற்றாண்டிற்கு அடியெடுத்து. வைக்கப் போகும் இவ்வேளையில் மனிதன் எவ்வளவு தான் விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் முன்னேறிச் சென்றாலும் அவனுடைய மன நிம்மதியைப் பெற்றுத் தருவதில் இவை எவையும் துணை நிற்கப் போவதில்லை. மனிதன் ஆத்மீக சிந்தனையில் தன்னை ஈடுப்படுத்தி கொண்டு ஒழுக்க சீலர்களாகவும் நற்பண்புடையவர்களாகவும் வாழ சமய பெரியார்களின் கருத்துக்களையும் வாழ்க்கை முறைகளளையும் முன்மாதிரியாகக் கொண்டு சிறந்ததொரு ''பகுத்தறிவு'' கொண்ட மனிதனாக வாழ முடியும். அதற்கு இந்த நூலிலுள்ள மெய்ஞான கருத்துக்கள் பெரிதும் துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

எனவே இந்நூல் வெளிவருவதற்கு முன் நின்று உழைத்த இந்து மாமன்றத்தினருக்கும் தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர், மற்றும் இந்துமாமன்ற உறுப்பினர்களினதும் முயற்சியை பாராட்டுவதோடு, இதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்கிய பொறுப்பு விரிவுரையாளர்களுக்கும. விசேட நன்றிகளை கூறிக் கொள்வதோடு, அத்தோடு ஏனைய சகல உதவிகளையும் நல்கிய அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், விரிவுரையாளர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு இந்நூல் சிறப்பாக வெளிவர சகல ஆசிரிய மாணவர்கள் சார்பிலும் வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

நன்றி!

**பீற்றர் ரோய் கப்ரியல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்றத் தலைவரின் மனதிலிருந்து மலரும் வார்த்தைகள்

''அன்பே சிவம்''

ஞான சம்பந்தப் பெருமானின் பாடல் பெற்றதும், நாவலர் வளர்த்த சைவமும் கொண்ட நம் ஈழமணித் திருநாட்டின் மகரந்தமாய் விளங்கும் மலையகத்தில் கலையகமாய் ஒளி வீசும் எமது ஆசிரியர் கலாசாலையின் இந்து மாமன்றமானது பல்வேறு சமயப் பணிகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அதில் ஒன்று தான் இந்த ''ஓம் சக்தி'' நூல் வெளியீடு.

இந்த நூற்றாண்டின் நிறைவில் வெளியிடும் இந்த ''ஓம் சக்தி'' என்னும் சமயப் பிரவாகம் நூல் வடிவில் ஊற்றெடுக்க அன்னையின் அருள் கிட்டியுள்ளது என்பது எம் அனைவருக்கும் இனிய செய்தி. இந்து சமயத்தின் சிறப்புமிக்க கருத்துக்களைச் சுமந்து வரும் இந்நூல் எதிர் காலத்தில் இந்துசமயம் பற்றிய தேடலுக்கு உறுதுணையாய் அமைய வேண்டும் என்பதே எனது அவாவும் பிரார்த்தனையுமாகும்.

இந்நூல் சிறப்பாக வெளிவர உதவிய ஆசிரிய மாணவர்களின் ஆதரவையும், ஆலோசனையையும் மறக்க முடியாது. அத்தோடு இந்நூலின் உருவாக்கத்துக்கு தன்னையே அர்ப்பணித்துச் செயற்படும் இதழாசிரியர், நூலாக்கக்குழு மற்றும் செயற் குழுவினது பணியும் அளப்பரியது.

மேலும் இந்நூலை வெளியிட அனுமதியும் ஆலோசனையும் தந்த முதல்வர், பிரதிமுதல்வர், உப முதல்வர் மற்றும் மன்றத்தின் பணிக்கு உயிரோட்டம் தருகின்ற மன்ற ஆலோசகர்களான விரிவுரையாளர் திரு.எஸ். இதயராஜா, திருமதி. சுமதி அன்பரசு ஆகியோருக்கும் நான் என்றும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளளேன்.

ஆசிச் செய்திகளை வழங்கிய மதிப்பிற்குரிய சமயப்பிரமுகர்களுக்கும் எமது சமயப்பணிக்கு தம்மாலான பணியாக விளம்பரங்களைக் கொடுத்த வர்த்தகப் பிரமுகர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் இறையருள் கிடைக்க எனது பிரார்த்தனைகள்.

ஓம் சக்தி நூலானது இன்று போல் என்றும் வெளிவந்து இவ்வகிலமெங்கும் அன்னை புகழ் பரப்பும் நூலாக மலர வேண்டும். அதற்கு எம்மை அர்ப்பணித்து செயற்படுவோமாக.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

இவ்வண்ணம்

**துரைசாமி உமாசங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துமாமன்ற செயலாளரின் இதயத்திலிருந்து........

இன்றைய காலகட்டத்தில் இந்துசமயமானது பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க வேண்டிய ஓர் நிலையில் இருந்தும் வளர்வதில் சாதகமான போக்கையே கொண்டுள்ளது. அத்தகைய தானாக வளரும் நெறிக்கு முடிந்தவற்றை ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆக்கமும், ஊக்கமும், இந்துவாகிய என்னுள்ளும் எழுந்தது. அந்த வகையில் செயலாளராக இருந்து நூல் வெளிவருவதில் எம்மன்றத்தின் சார்பாக நான் அகமகிழ்கின்றேன். இத்தகைய செயல்கள் தொடர்ந்தும் வளரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. எண்ணற்ற சிக்கல்களைக் கொண்டிருந்த வேளையில் கூட எடுத்த விடயத்தை சிறப்பாக முடித்த எமது நூலாக்க குழுவின் இதழாசிரியரையும், அவரோடு இணைந்து கொண்ட உறுப்பினர்களையும் பாராட்டியே ஆகவேண்டும்.

இது போன்ற செயல்கள் மேலும் வளர வேண்டும் என்று இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.



**நல்லையா சந்திரசேகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து............



கலாசாலையின் இந்துமத வளர்ச்சிக்காக பல செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இந்து மாமன்றம். இந்து மாமன்றத்தின் ஒரு அங்கமான 'ஓம் சக்தி' நூலை சிறப்பாக வெளியிடுவதற்கு தொடர்ந்து இரண்டு வருடங்களும் (1998-1999) எனக்கு கிடைத்த வாய்ப்பை எல்லாம் வல்ல அன்னை பராசக்தி எனக்கு வழங்கிய பெரும் பாக்கியமாக எண்ணுகின்றேன்.

கடந்த வருடத்தில் இந்நூலை வெளியிடுவதில் பெற்றுக் கொண்ட அனுபவங்களை வைத்துக் கொண்டும் எமது ஆசிரியர் மாணவர்களின் முழு ஒத்துழைப்பும் விளம்பரங்களை தந்துதவிய நிறுவனங்கள், பதுளை ஊவா ஹைலனட்ஸ் தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர்களான திரு.க.சந்திரராஜ், வே.அன்பழகன், எம். தியாகராஜ், கே. ராஜேந்திரன், சிவகுமார், சுந்தரம்பிள்ளை, சென்ஜேம்ஸ் எஸ். அண்ணாதுரை, எஸ்.கணேசன், பெ.ராசலிங்கம், பதுளை தர்ஷிகா புக்சென்டர், வே.ஸ்ரீதரன், பசறை கிக்கிரிவத்தை எம். அன்புராஜ், திருமதி.இரா.தவமலர், புஸ்ஸல்லாவ எம்.ரமேஷ், கொட்டகலை பிரபல வர்த்தகரும் சமாதான நீதிவானுமாகிய திரு.எல்.விஸ்வநாதன், ஹட்டன் திருமதி. சந்திரபவாணி பரமசாமி போன்றோரின் பல்வேறுப்பட்ட பங்களிப்பும் இந்நூல் சிறப்பாக வெளிவருவதற்கு துணை புரிகின்றன. எனவே இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை இத்தருணத்தில் கூறுவது பொருத்தமானதே.

இம்மலர் சிறப்பாகவும் அழகாகவும் வெளிவருவதற்கு ஆசி செய்திகளை அனுப்பிவைத்த காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கராச்சார்யார், திருகோணமலை இந்து அபிவிருத்தி சபைத்தலைவர் ஸ்ரீமத் தந்திரதேவ மகராஜ் சுவாமிகள், இலங்கை இராமகிருஷ்ணமிஷன் சுவாமி.ஆத்மகனானந்தஜி, யதன்சைட் ஆலய பிரதம குரு தேவசேனாதிபதி வாழ்த்துரைகளை வழங்கியதோடு இம்மலரை தயாரிக்க ஆரம்பித்தது முதல் இறுதி வரை எமக்கு எல்லாவகையான உதவிகளையும் ஆலோசனைகளையும், ஆசி செய்திகளையும் தந்துதவிய அதிபர், பிரதி அதிபர், உப அதிபர், பொறுப்பு விரிவுரையாளர்களான திரு.எஸ்.இதயராஜா, திருமதி.சுமதி அன்பரசு, ஆக்கங்களை திருத்தி தந்த விரிவுரையாளர்களான திரு.எஸ்.இதயராஜா, ஜே.சற்குருநாதன், பதுளை ஊவா ஹைலண்ட்ஸ் த.ம.வி. ஆசிரியர் திரு.எஸ்.பிரபாகரன், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், மற்றும் முதற் பக்க படத்தை வரைந்த இரண்டாம் வருட ஆசிரிய மாணவன் திரு.எம்.புவனகுமார், இதனை அச்சிட்டு தந்த ஹட்டன் பிரின்டெக் அச்சகத்தார். திரு.ஆ.முகுந்தன் ஆசிரியரின் பங்களிப்பும் இம்மலரின் சிறப்பை மேலும் மெருகூட்டுகிறது.

இம்மலரை தங்களின் கரங்களுக்கு தவழவிடும் வரை என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்த விடுகையாண்டு இந்து சமய பிரிவு ஆசிரிய நண்பர்களான திரு.து.உமாசங்கர், ந.மனோகரன், கோ.ஆனந்தராஜா, சு.சேதுரட்ணம், மு.பாரதலிங்கம், மு.புவனகுமார், மு.இந்திரகுமார், சு.ஜோதிகண்ணா, செ.சந்திரமோகன், ஆர். ஸ்ரீவத்சன், ஆரம்பப்பிரிவு-2, என்.சந்திரசேகரன், என்.ஆனந்தகுமார், ஆர்.ரவீந்திரா, அ.விக்னேஸ்வரன், முதலாம் ஆண்டு இந்துசமய பிரிவு ஜே.நித்தியா, சந்திரகுமார், நூலகப் பொறுப்பாளர் திரு.செ.பி.தேவதீபன், சிற்றூழியர் கே.ராஜசேகரன், நூலாக்கக் குழுவினர், இந்துமாமன்ற நிருவாக குழுவினர் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

பல்வேறு சிரமத்திற்கு மத்தியிலும் கடந்த இதழில் சேர்த்துக் கொள்ளப்படாத ஆக்கங்களையும் இணைத்துக் கொண்டு இம்முறையும் பல்வேறு சிறப்பம்சங்களுடன் வெளிவரும் 'ஓம் சக்தி' நூல் எதிர் வரும் காலங்களில் மென்மேலும் உயர்ந்து புகழ்பரப்பி இந்துசமயத்தின் புகழ் எல்லாத்திசைகளிலும் பரவவேண்டுமென எல்லாம் வல்ல அன்னை பராசக்தியை வேண்டி தங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

'இறைபணியில்'

**சுப்பையா ராஜ்குமார்**
(இதழாசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் இதயத்திலிருந்து.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாமன்றம்

| | |
|---|---|
| காப்பாளர்: | திரு.S.முரளிதரன் (அதிபர்) |
| | திரு.S.ஜெயகுமார் (பிரதி அதிபர்) |
| ஆலோசகர் | திரு.S.இதயராஜா (விரிவுரையாளர்) |
| | திருமதி.சுமதி அன்பரசு (விரி...) |
| தலைவர்: | திரு.T.உமாசங்கர் |
| உபதலைவர்: | திரு.N.சந்திரகுமார் |
| செயலாளர்: | திரு.N.சந்திரசேகரன் |
| உபசெயலாளர்: | திரு.V.விவேகானந்தன் |
| பொருளாளர்: | திருமதி.வீ.தேவிகா |
| இதழாசிரியர்: | திரு.சு.ராஜ்குமார் |

**நிருவாக சபை உறுப்பினர்கள்**

திரு.S.ஜோதிகண்ணன்
திரு.G.ஆனந்தராஜா
திரு.V.இராஜேந்திரா
திரு.R.ஸ்ரீவத்சன்
திரு.P.ரவிச்சந்திரன்
திரு.M.மணிமொழி
திரு.N.மனோகரன்
திரு.M.பாரதலிங்கம்
திரு.A.தமிழ்வண்ணன்
திருமதி.S.கௌசல்யா
செல்வி.P.கலைவாணி
செல்வி.P.ரேணுகா
செல்வி.N.புவனேஸ்வரி
செல்வி.A.சரளா
செல்வி.A.நிரஞ்சனி
செல்வி.S.சுபநாளினி
செல்வி.L.நவலட்சுமி
செல்வி.T.தினமணி
செல்வி.T.மீனாம்பிகை
செல்வி.O.கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுத் தொடர்—08


நூலின் பெயர்: ஓம் சக்தி

பொருள்: இந்து சமய சஞ்சிகை

உரிமை: நூலாக்கக் குழு

முதற்பக்கப் படம்: திரு.எம்.புவனகுமார்

அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள்: 400

பக்கங்கள் 150

வெளியீடு இந்து மாமன்றம்

எழுத்தின் அளவு: 12 புள்ளி

காகிதத் தாளின் தன்மை கினியோபேங் 70g

காகிதத் தாளின் அளவு: 250X190 mm

கணனி தட்டெழுத்தும், வடிவமைப்பும்: ஆ.முகுந்தன் (பிரின்டெக்)


அச்சுப்பதிப்பு: printech
Creative Technologies,
Hatton.
051-23848




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலை நிருவாகத்தினருடன், இந்துமாமன்ற செயற்குழுவினர்



**முதலாம் வரிசை:**
திரு.S.ராஜ்குமார் (இதழாசிரியர்), திரு.J.சற்குருநாதன் (விரி.), திருமதி.சுமதி அன்பரசு (விரி., ஆலோசகர்), திரு.R.லெனின் மதிவானம் (விரி.), திரு.P.ஸ்ரீதரன் (உப அதிபர்.), திரு.S.முரளிதரன் (அதிபர்), திரு.S.ஜெயகுமார் (பிரதி அதிபர்), செல்வி.K.பரமேஸ்வரி அம்மையார், (விரி.), திரு.S.இதயராஜா (பொறுப்பு விரிவுரையாளர்.), திரு.C.ஞானப்பிரகாசம் (விரி.), செல்வி.M.சந்திரலேகா(விரி.), திருமதி.V.தேவிகா, (பொருளாளர்), திரு.D.உமாசங்கர் (தலைவர்), திரு.N.சந்திரசேகரன் (செயலாளர்),

**பின்வரிசை**
(இடமிருந்து வலம்) செல்வி.P.கலைவாணி, திருமதி.S.கௌசல்யா, செல்விகள்.N.புவனேஸ்வரி, A.நிரஞ்சனி, P.ரேணுகா, திருவாளர்கள், S.ஜோதிகண்ணா, N.மனோகரன், S.சந்திரகுமார், (உ.த), R.ஸ்ரீவட்சன், V.விவேகானந்தன் (உ.செ), M.பாரதலிங்கம், M.மணிமொழி, A.தமிழ்வண்ணன், செல்விகள்.S.சுபநாளினி, D.மீனாம்பிகை, L.நவலக்சுமி, O.கௌரி, D.தினமணி,

சமூகமளிக்காதோர்:
திரு.G.ஆனந்தராஜா, திரு.V.ராஜேந்திரா, திரு.P.ரவிச்சந்திரன், செல்வி.A.சரளா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரினுள்ளே.....


1. காஞ்சி காமகோடி பீடாதிபதி - ஸ்ரீ நாராயண ஸம்ருதி சுவாமிகளின் ஆசி.
2. சுவாமி தந்திரதேவா மகாராஜ் அவர்களின் ஆசி
3. ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் - சுவாமி ஆத்மகனானந்தஜி அவர்களின் ஆசி
4. யதன்சைட் ஆலய பிரதம குருக்கள் தேவசேனாதிபதி அவர்களின் ஆசியுரை
5. கலாசாலை அதிபர் முழுமனதார வாழ்த்துகிறார்
6. பிரதி அதிபர் வாழ்த்துகிறா்
7. கலாசாலை உப அதிபர் வாழ்த்துகிறார்
8. பொறுப்பு விரிவுரையாளரின் வாழ்த்துச் செய்தி
9. ஆலோசகரின் வாழ்த்து
10. மாணவ பேரவைத் தலைவரின் உள்ளத்திலிருந்து......
11. மன்ற தலைவரின் மனதிலிருந்து மலரும் வாழ்த்துக்கள்
12. இந்துமாமன்ற செயலாளாரின் இதயத்திலிருந்து
13. இதழாசிரியரின் இதயத்திலிருந்து
14. இந்து மாமன்ற உறுப்பினர்கள் விபரம்

| | |
|---|---|
| 15. ஓம் சக்தி | 01 – 02 |
| 16. அற நெறியும் இறையருளும் | 03 – 04 |
| 17. சைவத்தின் மேற் சமயம் வேறில்லை | 05 – 06 |
| 18. திருமால் | 07 – 08 |
| 19. இந்து சமயமும் சமரசமும் | 09 – 10 |
| 20. இந்து சமயம் கண்ட விஞ்ஞானம் | 11 – |
| 21. தெரிந்து கொள்வோம் | 13 – 14 |
| 22. இந்து சமயத்தில் பல வகையான பிரிவுகள் காணப்படுவது ஏன் ? | 15 – 16 |
| 23. ஓம் சக்தி | 17 |
| 24. நிரந்தர பௌர்ணமியாய் சைவ நெறி | 18 |
| 25. திருக்கோணேச்சர ஆலயச் சிறப்பு | 19 – 20 |
| 26. இந்துக்களும் சாதியமும் | 21 – 22 |
| 27. வேத இலக்கியமும் அவை பிரதிபலிக்கும் வாழ்வியல் அம்சங்களும் | 23 – 25 |
| 28. சைவத்தை வளர்த்த செம்மல்கள் | 26 – 27 |
| 29. பக்தியும் பண்ணிசையும் | 28 – 29 |
| 30. பன்னிரு திருமுறைகள் | 30 – 31 |
| 31. இறைவனால் இயங்கும் உலகம் | 32 – 33 |
| 32. சுபகாரியங்கள் நடத்துவது எப்போது? | 34 – 39 |
| 33. சைவசித்தாந்தத் தத்தவங்கள் | 40 |
| 34. மலையக பண்பாடும் வழிபாட்டு மரபும் | 41 – 45 |
| 35. எந்நாட்டவருக்கும் இறைவா! | 46 |
| 36. துர்க்கையும் நீயானாய் | 46 |
| 37. பத்துக் கட்டளைகள் | 47 |
| 38. புண்ணியமும் பாவமும் | 48 – 49 |
| 39. நவரச நாயகி | 50 – 51 |
| 40. அருள் நெறியும் மாதரும் | 52 |
| 41. பாம்பை வழிபடுவது ஏன் ? | 53 |
| 42. சமயச் சடங்குகளில் நாட்டாரிசை | 54 |
| 43. இந்து சமயத்தின் வளர்ச்சிப் போக்கு | 55 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44.அட்சர தெய்வங்களின் பயன்களும் அதற்கு சொல்ல வேண்டிய மந்திரங்களும் 56 – 57
45.சாதிய சமுக கருத்துருவாக்கத்தில் நாயன்மார்களின் பங்களிப்பு 58 – 61
46.பக்தனின் கணங்கள் 62
47.ஆன்மீக ஹைகூ 62
48.இறைவன் ஒருவனே 63
49.கர்ணனும் கண்ணனும் 64 – 65
50.ஆனாய நாயானார் 66 – 67
51.நாச்சியார் திருமொழியில் தெய்வீகக் காதல் 68
52.சமுதாய மேம்பாட்டில் ஆலயங்களின் பங்களிப்பு 69
53.ஸ்ரீ கிருஷ்ண பிடாரன் 70 – 71
54.மலையகமும் கோயில்களும் 72 – 73
55.யாதுமாகி நின்றாய் காளி 74
56.ஆலயங்களில் நடைபெறும் மூவகை கிரியைகள் 75 – 76
57.பூஜை 77 – 78
58.விருந்தோம்பல் 79
59.சக்தியே சகலமும் 80
60.சோமஸ்கந்த மூர்த்தி 81
61.இசையின் மகத்துவம் 82 – 83
62.மலையகமும் மதமாற்றமும் 84 – 85
63.சைவத் தொண்டில் குரவர்களும் ஆதீனங்களும் 86
64.திருக்குறள் ஓர் அறிமுகம் 87 – 88
65.சிந்தனைக்குச் சில.... 89
66.சைவமும் முத்தமிழும் 90
67.பஞ்ச பூதக் கோயில்கள் 91
68.நாத பிரம்மம் 92 – 93
69.பிற்காலத் தோத்திரங்களில் தாய்த் தெய்வப்பாடல்கள் 94 – 95
70.மலையகம் என்ற பின்புலத்தில் மதங்களின் செல்வாக்கு 96 – 97
71.மலையகமும் இறைவழிபாடும் 98 – 99
72.செயலாளர் நன்றியுடன் நினைவுகூறுகிறார். 100


நம் இதயம் இறைவனை நாடி ஆசைகளை அறவே மறந்து பக்தி செய்தால் அருவமான பரம்பொருளை உணரலாம்.

-இந்துமதம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மாமன்றம்
அரசினர் ஆசிரியர் கலாசாலை
யதன்சைட்-கொட்டகலை.

# ஓம் சக்தி '99
# நூல் வெளியீடு

**இடம்: கலாசாலை-பிரதான மண்டபம்.**
**திகதி: 3-12-99 வெள்ளிக்கிழமை**
**நேரம்:காலை 9.00 மணி**

**தலைமை**
**திரு. சு. முரளிதரன்**
(கலாசாலை முதல்வர்)

**பிரதம அதிதி**
**கௌரவ. தெ. ஈஸ்வரன்**
(இலங்கைக்கான மொரீசியஸ் தூதுவர்)

**நூல் விமர்சனம்**
**திருமதி. சந்திரபவாணி பரமசாமி**
(செயலாளர், மலையக இந்து அபிவிருத்திச் சபை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

எஸ். நித்தியகல்யாணி இந்துசமயப்பிரிவு 98-99, விடுகையாண்டு.

"யாதுமாகி நின்றாய் காளி
யாவு மாகி நின்றாய்"

ஆம் கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் முன்தோன்றி முன்னின்ற மூத்தகுடி தமிழ்க்குடி. இத் தமிழ் மரபில் சைவமும் தமிழும் தழைத்தோங்கி தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால் அதற்கு காரணம் இத்தமிழ்க் குடிக்கேயுரிய தனிச்சக்தியாகும். எங்கும், எதிலும், என்றும் சைவர்கள் காண்பது சக்தியே, வானிலேறி சந்திர மண்டலத்தை அடைந்து நிற்கும் மனிதர், விஞ்ஞான அணுச் சக்தியை பயன் படுத்துகின்றனர் என்றால் சைவ மக்கள் அதற்கு மேலாக வலிமையை சிந்தனா சக்தியாக்கி ஆன்மீக சக்தி மிக்கவர்களாக்குவதற்கு முயற்சி செய்கிறார்கள் மனித சக்தியின் அளப்பெரும் ஆற்றல் இன்று பரந்து வியாபித்து ஏழ்கடலையும் தாண்டி நிற்கின்றது. அது மட்டுமா? ஆழ்கடலையும், அதிசயங்களையும் ஆராய்ந்து அற்புத சாதனங்கள் படைத்து விட்டான் மனிதன். விண்ணை ஆராய்ந்த கண்கள் மண்ணையும் அகழ்ந்து செல்கின்றன. மனித சக்திக்கு மேலாக ''ஓம் சக்தி'' என்றொரு அண்ட சராசரங்களையும் அசைந்து இனிய நாதம் எழுப்புகின்றது. அலை கடலிலும் வீசும் இளம் தென்றலிலும் இனிய கானத்திலும் அப்பப்பா எங்கெங்கும் சக்தியடா என்று பாடியதன் பொருள் அவற்றின் இனிமையை நுகரும் போதல்லவா புலப்படுகின்றது.

சக்தியானது தருமத்திற்கு மூலமான மூர்த்தியாம் ''சிவப்பிரமம்'' என ஞானநூல்களால் வர்ணிக்கப்பட்டுள்ளது. அச் சிவப்பொருள் ''கற்பனை கடந்த ஜோதி'' யானாலும் ஆலயவழிபாட்டு மரபிலே கருணையினால் பல்வேறு வடிவங்களாகி, அற்புத கோலங்களாகி அம்மை அப்பானாகிய, இந்து சமயத்தின் இருபெரும் அறங்களில் ஒன்றாகிய இல்லறமும் உலகியல் வாழ்வும் சிறப்படையும் வண்ணம், அர்த்த நாரீஸ்வர மூர்த்தியாக விளங்குகின்றது.

இவற்றிலே சிவ மூர்த்தங்கள் பலமூர்த்தங்களாகி இந்து சமயத்தின் ஐந்து நெறிகளில் அருளாட்சி செய்வதால் சிவத்திற்கு ஒரு ராத்திரி 'சிவராத்திரி' என விசேடமாகவும் சாக்த நெறியிலே அப்பனில் பாதியாம் அன்னைக்குள்ள அதிக சமுகப் பொறுப்புணர்வின் காரணமாக ஒன்பது ராத்திரிகள் சக்திக்கு சிறப்பாக 'நவராத்திரி' எனவும் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். உலகியல் வாழ்விற்கு முக்கியத்துவம் அளிக்கும் கோட்பாடாகவே சக்தி வழிபாட்டைக் கொள்ள வேண்டும். லௌகீகத் தேவைகளை நிறைவேற்றவும், ஆன்மீக நெறிக்கு சாதாரண மக்களை வழிப்படுத்தவும் சக்தி தேவைப்படுகின்றது. ஆன்ம நோன்பின் அடித்தளத்தைப் பக்குவப்படுத்துவதாகவே சக்தி நோன்பமைகின்றது.

இந்து சமுதாயத்திலே தாயானவள் துன்பம் துடைப்பவளாகவும், துயர் போக்குபவளாகவும், துக்க நிவாரணியானவளாகவும், தூயசேவை செய்பவளாகவும் விளங்குபவள் என்பதை வலியுறுத்துவதற்காக ஆற்றல் சக்தியாக 3 நாளும், பொருட் சக்தியாக 3 நாளும், அறிவுச் சக்தியாக 3 நாளும் பகிர்ந்தளித்து தாய்க்கடவுள் வழிபாட்டிற்கு நவராத்திரி மேன்மையளித்துள்ளது. இச்சக்தி மூர்த்தமானது சூக்குமமாக இருக்கும் போது சிவலிங்கமாகவும், தூலமாக வெளிபடும் நிலையில் துர்க்கையாகவும், லக்ஷ்மியாகவும் சரஸ்வதியாகவும் மாந்தர் வகைப்படுத்தினர். இவ்வாறு மலை, அலை, கலை, என்ற மூன்று இயற்கையம்சங்கள் பலவும் கலந்து இந்து சமயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய கலாசார வளர்ச்சிக்கும கலா பூர்வமான கலைப்படைப்புகட்கும் அவை ஆதர்சனமான இருப்பிடங்கள் ஆகின.

இச்சக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனத் தத்துவத்தில் பேசப்படுவதானது வாழ்விலே பொருள், வீரம், அறிவு என்பதாக இனங்கண்டு வாழ்வின் தேவை கருதி வழிபாட்டிற்குரியதாயிற்று. இத்தேவைகள் எக்காலத்திற்கும் பொதுவானவை. சிந்து வெளியில் கிடைத்த தொல் பொருள் ஆய்வு ஆதாரங்களிலும் சக்தி வழிபாட்டிற்கான மூலம் கிடைத்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எதையும் பெற்றுத்தருபவள் தாய் என்பதால் தாய்க்கடவுள் வணக்கம் காலந்தோறும் சிறப்புப் பெற்றது.

அன்னையானவள் ஈழவள நாட்டில் துர்க்கா தேவியாக, பத்திரகாளியாக, வீரமாகாளியாக, முத்துமாரியாக, புவனேஸ்வரி அம்பாளாக பல்வேறு மூர்த்தங்களில் கிராமந்தோறும் அமர்ந்து திருவருள் பொழிகின்றாள். பாரத நாட்டிலே காமாட்சியாக மீனாட்சியாக, விசாலாட்சியாக மட்டுமன்றிக் காஷ்மீரத்தில் அம்பிகையாக, குஜராத்தில் கல்யாணியாக, வங்காளத்தில் மகாகாளியாக மைசூரில் சாமுண்டீஸ்வரியாக, லலிதாம்பிகையாக, பராசக்தியாக, பார்வதி பரமேஸ்வர உமாசகித மூர்த்தியாகி பரமசிவ மூர்த்தத்துடன் ஊழிக்கால இறுதியிலும் பரம்பிரமமாகி நின்று விளங்குகின்றாள் இதனையே ''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாயாங்கே மாதொரு பாகனார் வருவார்'' என்ற திருவாக்கிற்கிணங்க பஞ்சகிருத்திய தத்துவத்தில் மட்டுமல்லாது, பக்தர்களின் உள்ளத்திலும் இறைவனுடன் சேர்ந்து அவன் கொண்ட வடிவிற்கேற்ப தோற்றமளிப்பாள் சக்தி.

துர்க்க விநாசினியாகவும் காலவிநாசினியாகவும், காளித்தாயைக் கண்டார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். எனவே வாழ்வலும், தாழ்விலும் மட்டுமல்ல வாக்கிற்கும் அரசியாக வெள்ளைக் கலையுடுத்து வெள்ளை கமலத்தில் வீற்றிருக்கும் கல்விக்கரசி கலைவாணி அறிவில் கலப்படம் வேண்டாம் தூய்மை நிலை பெறுவோம் என ஞான நிலையில் உயர்வினையும் அன்னை சரஸ்வதியாக விளங்கி ஆதிபராசக்தி எடுத்துக் காட்டி உள்ளாள். பொதுவாக நவராத்திரி என்பது சக்தி பூசை எனவும், நவமியில் முடிவதால் மகாநவமி எனவும், சரஸ்வதி பூசையுடன் முடிவதால் சரஸ்வதி பூசை எனவும், கும்பத்தில் ஒன்பது நாள் ஆராதிப்பதால் கும்பபூசை எனவும், பத்தாம் நாள் முடிவில் தொழிலாற்றும் ஆயுதங்கள் பூசிக்கப்படுவதால் ஆயுத பூசை எனவும், தசமியன்று முடிவதால் விஜயதசமி எனவும், பத்து நாளில் நோம்பு முடிவதால் மகா நோன்பு மானம்பூ எனவும் பல விதமாக விளக்கம் பெற்று பல்வேறு கலையம்சங்களையும் கொண்டு விளங்குகின்றது.

அகிலத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா என்கிறது பக்திப்பாடலொன்று. உலகத்தை ஆள்பவள் சக்தி போன்று இல்லறத்தை ஆள்பவள் இல்லாள் ஆக பெருமை பெறுகிறாள். ஆம் இல்லாள் அகத்து இருந்தாள் இல்லாதது எதுவுமில்லை என்பது வள்ளுவர் கூற்று எதுவும் இல்லையென்று கூறாமல் நிறை குணத்துடன் இல்லாள் வீட்டில் இருப்பாளானாள் அந்த இல்லமே பொலிவு பெற்ற இல்லமாகும். ஆயிரம் ஆண்கள் சாதிக்க முடியாதவற்றை பெண் ஒருத்தியால் சாதிக்க முடியும் ஆகவே ஓம் சக்தியின் மகாவலிமை ஒவ்வொரு ஆணின் முன்னேற்றத்திலும் ஒவ்வொரு பெண் பக்கபலமாக நின்று துணை புரிகின்றாள் என்பது எத்தகைய உண்மை ''ஓம் சக்தி'' என்பதை தாரக மந்திரமாக கொண்டு ஒவ்வொரும் செயல் புரிந்தால் அதிக நலன் பெறலாம். ''நம்பினார் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறியும் இறையருளும்

இரா.ராஜேஷ்கண்ணா, ஆரம்பக்கல்வி-2 விடுகையாண்டு (98-99)

நன்னெறி, அறநெறி, ஒழுக்க நெறி என்று நல்வாழ்வுக்கு ஏற்ற முறைகள் அனுஷ்டிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் இன்னதை செய், இன்னதைச் செய்யாதே என்கின்ற கட்டளைகள் உள்ளன. இவைகளைக் கடைப்பிடிக்கிற அளவு நாம் உயர்ந்தோர் சான்றோர் பண்பட்டவர், நாகரிகமானவர் ஆகின்றோம். தேவைகளைப் பெருக்கிக் கொள்ளவதனால் துன்பங்களும் அதிருப்தியும் ஏற்படுகின்றன. எளிய வாழ்கையில்தான் மகிழ்ச்சியைக் காண முடியும். இத்தகைய வாழ்கையைப் பெறுவதற்கு இறையுணர்வுடன் கலந்த அறநெறி வாழ்க்கையைக் கடைபிடிக்க வேண்டும்.

இந்து சமயம் மனித வாழ்வுக்குப் பல வகையிலும் வழிவகைகளை வகுத்து அதன்படி ஒழுகும் நிலையைப் போதிக்கும் சமயம். நமது சமய அறநெறிகள் வாழ்க்கையாகிய மாளிகையைக் காற்றும் ஒளியும் வீசுமாறு கட்டியெழுப்ப உதவுகிறது. எல்லாச் சமயங்களும் இறை நம்பிக்கையை ஏற்படுத்தினாலும் கூட இந்துசமய வாழ்க்கை நெறியானது இறைவனது திருவருளைப் பெறுவதற்கு உகந்த வழியைப் போதித்து உள்ளது. ''அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்கிறது திருவாசகம். இறையருளின்றி நாம் எக்காரியத்தையும் நிறைவேற்றிட முடியாது. மானிட வாழ்க்கையில் இறையருள் கைகூடினால் தான் எக்காரியங்களும் கைக்கூடும். இதனையே இந்துமதம் எடுத்துக் கூறுகின்றது. சமய நெறிகள் அனைத்தும் ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு ஏற்ற அனைத்து வழிவகைகளையும் கூறுவதாக அமைகின்றன. இந்து சமய வாழ்க்கை என்பது தூய உள்ளத்துடன் இறைவனின் திருவருளை அண்டி நிற்கும் வாழ்க்கை முறையாகும். மனப்பக்குவம், இறைதியானம், உண்மை, சத்தியம் கொண்டோரால் மட்டுமே எமது சமய வாழ்க்கை, அறநெறி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும்.

எமது முயற்சிகள் அனைத்தையும் முன்னெடுத்துச் செல்வது இறையருளேயாகும். இறைவன் பால் அன்பு கொண்டே அடியார்கள் தங்கள் பணிகளை நிறைவேற்றி வீடுபேறு பெற்றனர். நல்ல பணிகள் நடக்கும் போது இறையருள் தானகவே வந்து கைகூடும். ஒவ்வொரு மனிதனதும் மனத்தில் எழும் எண்ணங்களே செயலுருப்பெறுகின்றன. அவை நல்லவையாகவும். மனித மேம்பாட்டுக்கு உகந்தவையாகவும் இருப்பின் அது மக்களால் பின்பற்றப்படுகின்றது. போற்றப்படுகின்றது. இந்த நல்ல எண்ணக்கருக்களை மனதில் தோன்றவைப்பது இறைவன் திருவருளுடன் கூடிய அறநெறியே. அளவுக்கதிகமான ஆசைக்கும் அற்ப இன்பங்களுக்காகவும் அலையும் மனத்திற்கு அவற்றை நிறைவேற்றிக் கொள்ள அறநெறியும், இறையருளும் துணைபோகாது என்ற உண்மையையே இந்து மதம் எடுத்தியம்புகின்றது.

ஒவ்வொரு தாக்கத்திற்கும் ஒவ்வொரு எதிர்த்தாக்கம் உண்டு. இது விஞ்ஞானத் தத்துவம். இதனையே இந்துமதம் விஞ்ஞான வளர்ச்சிக்கு முன்பே கூறிவிட்டது. உள்ளத்தைப் தூய்மைப்படுத்தி ஆசையை அளவுப்படுத்தி நல்லன செய்பவர்களுக்கு இறையருள் எப்போதும் துணை நிற்கும். இதனையே அறநெறியாளர்கள் எடுத்தியம்பியுள்ளனர். இந்த வகையில் வாழ்க்கையில் அறநெறியில் நின்று ஒவ்வொருவரும் ஆற்றும் பணிகளுக்கேற்றவாறே எதர்ப்பணியும் ஏற்படும். நல்ல பணிகளைச் செய்யும் போது அதில் ஏற்படும் தாக்கம் நல்லவையாகவே இருக்கும். இறையருளின் தன்மையை இன்னதென்று புரிந்து கொள்ள ஆண்டுகள் பல எடுக்கும் நிலையான வாழ்வு மலர வேண்டுமானால் அதற்கு இறையருள் மிக அவசியமாகும். இறையுணர்வு கொண்டவர்களுக்கு இன்ப துன்பங்களில் பாதிப்புக்கள் குறைவாக அமையும் இறையருள் கொண்டவர்களது வாழ்க்கையை அழித்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் ஆசாபாசங்களை வளர்த்துக்கொண்டு இறையருளைத் தேட நினைப்பது ''ஓட்டைக்குளத்தில் நீர் வார்ப்பது போன்றதாகும். பிறவிப் பெருங்கடலிலே எம்மை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் இறைவன் தன்னை உணர்ந்து நெறிப்படுபவர்களைத் தன் திருவருட் சக்தியால் நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்றான். எனவே மானிடராகிய எமக்குத் துன்பங்களைந்து இன்பங்கொடுக்கும் இறைவன் இறையருளே மேலானதாகவுள்ளது.

ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து மனிதநிலை அடைந்து இறக்கும் வரை அவன் செய்யும் காரியங்கள் யாவும் ஆசாபாசங்களில் கட்டுண்டு செய்யும் காரியங்களாகவே அமைந்து விடுகின்றன. அதனால் தான் அவன் நல்லதையும் செய்கின்றான். கெட்டதையும் செய்கின்றான். மனப்பக்குவம், இறைதியானம், நம்மிக்கை, இறையருள் ஆசையை ஒழித்தல, தூய்மையான வாழ்க்கை, அன்பு நிலை, பொறுமை, உண்மை பேசுதல் போன்ற ஒழுக்க நெறிகளை ஒருவர் கடைப்பிடித்து ஒழுகும் போது, அதன்மூலம் பெறப்படும் பேரின்ப நிலை, கொண்ட ஆன்மாவே இறையருளைப் பெறுவதற்கு தகுதி கொண்டது.

தேகங்கள் அழியக் கூடியவை. செல்வங்கள் நிலை பெற்றிருக்கக் கூடியவையல்ல, எப்போதும் அருகிலேயே இருக்கின்றது அழிவு. ஆகையால் அறநெறியில் நின்று இறையருளைப் பெற்றுத் தர்மத்தைச் சேமித்துக் கொள்ள வேண்டும்.

''அறநெறி இறை நெறி, இரண்டு மின்றி மனித வாழ்வு சாத்தியமில்லை ஒருவன் விலங்கு போன்றும் வாழலாம், ஆனால் எவ்வளவு இழிந்த வாழ்க்கை"

எனவே அறநெறி இறையருளைப் பெற்று, கடைப்பிடித்து நமது வாழ்க்கையில் உயர்வினையடைவோமாக.

---

**1999ம் ஆண்டு இந்து மாமன்ற செயலாளர் அறிக்கையிலிருந்து சில துளிகள்**

1.02.1999 அன்று உத்தியோக பூர்வமாக இந்து மாமன்றம் பிரதி முதல்வர் திரு.எஸ்.ஜெயக்குமார் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. 10.02.1999. அன்று மன்றத்தின் முதலாவது நிர்வாகக் குழுக்கூட்டம் பொறுப்பு விரிவுரையாளர் திரு.எஸ்.இதயராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிர்வாகக்குழு கூட்டத்தில் இவ்வருட செயற்பாடுகளுக்கான பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1.ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் பூசையை கற்கை நெறிப் பிரிவுகளின் அடிப்படையில் நடாத்துவதோடு கூட்டுப்பிரார்த்தனையும் நடாத்துதல்.

2.குரு பூசைத் தினங்களை முறையாக அனுஷடிப்பது.

3.தெரிவு செய்த சில பாடசாலைகளுக்கிடையிலும் கலாசாலை மட்டத்திலும் சமய அறிவு, தொடர்பான பேச்சு, கட்டுரை, திருமுறை ஓதல், வில்லுப்பாட்டு, கோலப்போட்டி என்பவற்றை நடாத்துதல்.

5.நவராத்திரி விழாவினைத் தொடர்ந்து பத்து நாட்களும் அனுஷ்டித்தலும், வாணி விழாவும்.

6.வருடாந்த வெளியிடப்படும் ''ஓம் சக்தி" நூலினை இவ்வருடம் வெளியீடு செய்தல்.

நிர்வாகக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட இத்தீர்மானங்கள் அனைத்தும் சக்தியின் அருளால் இனிதே நிறைவேற்றப்பட்டு ''ஓம் சக்தி" நூலும் வெளிவருவதலானது மனமகிழ்வைத் தருகிறது.

நன்றி
இவ்வண்ணம் மன்றச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மேற்சமயம் வேறில்லை...

**செல்வி. சண்முகராஜா சுதர்ஷினி, இந்து சமயப்பிரிவு விடுகையாண்டு (98-99)**

"சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நாள் மறை செம்பொருள்.... "



உலகிற்கொரு எடுத்துக் காட்டாக வரலாற்று காலத்துக்கு முன்பிருந்தே உலகினில் சைவ சமயம் விளங்குகிறது. திருமுறைகள் கூறும் சிவ பரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சிவாநந்தரை சொரியும் ஒரு வைதீக நெறியாக இது விளங்குகின்றது. இந்த சைவ சமயமானது அயல் வழக்குகளில் கலப்புகளை தவிர்த்துத் தனித் தன்மையுடன் இயங்கி வெற்றி பெற்று மக்கள் வாழ்க்கையில் நம்பிக்கையை வளர்த்து, உலகியலில் கூடிய வல்லமை பொருந்திய தென்பதை யாராலும் மறுக்க முடியாது.

இவ்வாறு மேற்சமயம் வேறில்லாத சைவத்தின் இன்றைய நிலை என்ன? என ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு நோக்குவோமானால் மேற் கூறிய வீர முழக்கம் இப்போது தொய்வடைந்து போவதை நாம் காணக் கூடியதாயுள்ளது. இதற்கு காரணம் மதமா? மானுடமா? என்பது ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

அன்று அடியார்களும் நாயன்மார்களும் உயிரை கொடுத்து மறுமலர்ச்சி அளித்து சைவம் எங்கே? இன்று தமது சுயலாபத்திற்காக மதம் மாறும் வேடதூதர்கள் எங்கே? என்ன நடக்கிறது சைவத்துக்கு? இன்று வேறு சிலர் தந்திரமாக தங்கள் அணிக்குள் சைவத் தமிழர் விழுமியங்களை சேர்த்து அவ்விழுமியங்களுக்கு தாங்களே காரண கர்த்தாக்கள் என்று வெளி உலகிற்கு காட்டும் ஒரு இழிநிலையில் இருந்து கொண்டு எம் சைவத்தின் பால் கடன் வாங்கிய கொள்கைகளை வைத்துக் கொண்டு இன்று சைவத்துக்கே எதிரான கருத்துக்களை முன்வைக்கின்றனர். இது அர்த்தமற்ற செயல் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறாக நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் இவ்வளவு இறுமார்ப்போடு பேசுவதற்கும் எழுதுவதற்கும் காரணம் யாது? இது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

சைவத்திற்காக நாம் என்ன செய்துள்ளோம்? என்ன செய்ய விரும்புகிறோம்? என்ற கேள்வியே எழுகின்றது. பதில் பூச்சியமே. வீர சைவத் தமிழர்கள் எங்கே? எமது பாரம்பரிய நடைமுறைகள் எங்கே? சைவத் தமிழர் விழுமியங்கள்? எங்கே சைவத் தமிழர் கோட்பாடுகள்? அதோ அங்கே சில துரோகிகளின் பாதங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் பேனாக்களாலும், பேச்சுக்களாலும் நசுக்கப்பட்ட நிலையில் உள்ளதை நாம் உணர வேண்டும்.

சைவத் தமிழ் மக்களை இன்னுமா ஏன் தூக்கம் விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டது. லட்சக் கணக்கில் பணத்தைக் கொட்டி ஆடம்பரத்தில் இறைவனை காண முயற்சிப்பவர்களே! சற்றே வெளியில் எம் இந்து சமுதாயத்தை சமூக கண் கொண்டு பாருங்கள். இன்று தடம் மாறி திசை திரும்பி குறிக்கோள்களில்லாது பொருளற்ற வீண் விரயம் செய்யும் பணக்காரர்களே ஒரு ஏழை இந்துவின் பசியைக் கொஞ்சம் பாருங்கள். ஆன்மீகத்தை உணர்ந்து கொண்டிருக்கும் தலைவர்களே உங்களால் ஒரு பாமரனுக்கு ஆன்மீகத்தை உணர்த்த முடியுமா ? அதற்கான வழியை யோசியுங்கள்.

இறைவா? ஆலயங்களைக் காப்பாற்று மனிதர்கள் வருகின்றார்கள் ‘மதத்துடன்' என்பதற்கிணங்க ஆலயத்தினுள் ஆடம்பரத்தினை நிலை நாட்ட வரும் சைவத் தமிழ் மக்களே ஆலயங்களில் ஏழைகளுக்கு சம அந்தஸ்த்தை வழங்குங்கள். இறைவனுக்கு முன்னால் ஏது ஏற்றமும், தாழ்வும் இல்லாமல் நாம் அனைவரும் சிந்திப்போமாயின் இன்றைய கால கட்டத்துக்கு ஒரு திருநாவுக்கரசரோ, ஆறுமுகநாவலாரோ நமக்குத் தேவையில்லை. அவர்கள் எம்மை காப்பதற்கான பாதையைக் காட்டியுள்ளார்கள் நம்மை பாதுகாப்பது நம் கடமையாகும்.

இன்று 21ம் நூற்றாண்டோடு கைக்குலுக்க காத்திருக்கும் நாம் எமது சைவத்துக்காக, சைவத்தினைக் காக்க சைவ பாதுக்காப்பு சேவை ஒன்று அவசியம் என்பதை உணர வேண்டும். நம் சமயத்தை நன்கு புரிந்தவர்களுக்கு எழுதுவதை விட சமயத்தை அறிய வேண்டியவர்களுக்கு விளங்கவைக்க எழுத வேண்டும். நம் சமய தத்துவங்களை விளங்கிக் கொண்ட நாம் அவற்றை அறியாதவர்களுக்கு விளங்க வைக்க எழுத வேண்டும். பெயருக்காகவோ, புகழுக்காகவோ, வருவாய்க்காகவோ இறைபணி அமையக் கூடாது. இறைவன் எமக்கு தந்த ஆற்றலை இறைப்பணிக்காக பயன்படுத்துவோமானால் இன்றும் பெற்ற தாயைக் காத்த உத்தமர்களாவோம்.

இன்றைய மக்களது சமுதாய வாழ்வும், ஆன்மீக வாழ்வும் வேகமாக பாதிப்படைந்துள்ள இந்த கால கட்டத்தில் எம் மத கோட்பாடுகளை மீள வலியுறுத்த வேண்டிய ஓர் அவசியம் இன்று காணப்படுகிறது. சூழ்நிலை ஆழுத்தங்களினால் மனவேதனையும் விரக்தியும் அடைந்திருக்கும் சைவ மக்கள் வாழ்வில் தோன்றும் நம்பிக்கையீனங்களுக்கு நாம் விளக்கமளிக்க வேண்டும். அவர்கள் வாழ்வை ஒழுங்குபடுத்தவும், அவர்களின் ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் நாம் செயல் ஊக்கமான பங்களிப்பினை வழங்கவேண்டும்.

எனவே நாம் மதத்தை மாற்ற முன் மனதை மாற்றிக் கொள்ள முனைய வேண்டும். சமூகவியலில் மட்டும் முற்போக்கு சிந்தனை தேவை என்று இல்லை ஆன்மீகத்திலும் முற்போக்கான சிந்தனைகளை புகுத்த வேண்டும். எனவே சைவத் தமிழ் மக்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து சைவத்தின் பெருமைகளை நிலைநாட்டிடுவோம்.

“ இந்து என்று சொல்லு
நீ இந்துவாக வாழு ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால்

**திருமதி. வாசுகி ஸ்ரீதரன், ஆரம்பப்பிரிவு-2, விடுகையாண்டு.**

முல்லை நிலத்துத் தெய்வம் மாயோன் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. மாயோன் அல்லது திருமாலைப்பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்றதாக அறியப்படுகின்றது. மிகவும் பழைய நூல்களில் மால், மாயோன் என்ற பெயர்கள் வழக்கிலிருந்தன.

திருமால் மும்மூர்த்திகளிற் காக்கும் கடவுளாவார். திருமாலை விஷ்ணு என்றும் கூறுவர். உலகம் எங்கும் நிறைந்துள்ளார் என்பது பொருள். இவர் நான்கு கைகளையுடையவர். சங்கு, சக்கரம், உடைவாள், கதை, வில் ஆகியவற்றை தாங்கியிருப்பார். சங்கின் பெயர் பாஞ்சஜன்யம், உடைவாளின் பெயர் நத்தகம், கதாயுதத்தின் பெயர் கௌமேதகம். வில்லின் பெயர் சார்ங்கம் இவர் மார்பில் ஒரு மரு உண்டு. அதன் பெயர் ஸ்ரீவத்ஸம்.

கழுத்தில் கௌஸ்துபம் என்ற ஆரம் ஒளிரும், நீல நிற மேனி கொண்டவர். இடுப்பிலே பீதாம்பரம் என்று கூறப்படும் மஞ்சள் நிற ஆடை இருக்கும். இவருடைய கைகள், காற்பாதங்கள், கண்கள் தாமரை மலர் போலிருக்கும் என்று கூறுவர் இவ்விதத் திருக்கோலத்திலே ஆலயங்களில் திருமாலின் உருவம் அமைந்திருக்கும். சில கோவில்களில் ஆதிசேடன் என்று கூறப்படும் பாம்பின்மேல் படுத்துக்கிடப்பது போலிருக்கும். இந்த நிலை கிடந்த கோலம் எனப்படும். பாற்கடலிலே இவ்விதம்தான் திருமால் ஆதிஷேடன் பாம்பில் சயனித்திருக்கிறார். கிடந்த நிலையில் திருமால் யோக நித்திரை செய்கிறார்.

சில இடங்களில் தலைக்கு மேலே குடைபோல ஆதிஷேடன் படமெடுத்திருக்க அவனது உடலையே சிம்மாசனமாகக் கொண்டு அமர்ந்திருக்கும் கோலத்திலே இருப்பார் இந்த நிலை ''இருந்த நிலை" எனப்படும். சில இடங்களில் நிற்பது போலத் தோன்றுவார். இந்த நிலை ''நின்றநிலை" எனப்படும் ஸ்ரீதேவி, பூமிதேவி என திருமகளை திருமாலின் தேவியாகச் சொல்வர்.

உலகத்து உயிர்களையும் காக்கும் கடவுள் இவரேயாதலின் அங்ஙனம் காப்பாற்றுவதற்காக அவ்வப்போது உலகத்தில் மனிதரைப்போலத் தாமே தோன்றுவார். சிவபெருமானைப் போலன்றி திருமால் அவதாரங்கள் எடுப்பவர். பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனிலும் பார்க்க அவதாரம் எடுத்துவரும் திருமால் அடியார்களை அண்மித்துச் செல்லக் கூடியவராகக் காணப்படுகின்றர். திருமால் தாமே மானிடராய் மண்ணுலகத்திற்கு இறங்கி வந்ததையே அவதாரம் என்கின்றோம். அவதாரம் என்ற சொல் இறங்குதல் என்றும் பொருள் கொண்டதாகும். அவதாரங்கள் பத்து என்று கூறுவர் அவையாவன

| | |
|---|---|
| **1. மச்சாவதாரம்** | **6. பரசுராமவதாரம்** |
| **2. கூர்மாவாதராம்** | **7. இராமவதாரம்** |
| **3. வராகவதாரம்** | **8. கிருஷ்ணாவதாரம்** |
| **4. நரசிம்மவதாரம்** | **9. பலராமாவதாரம்** |
| **5. வாமனாவாதாரம்** | **10. கல்கி அவதாரம்** |

பிரமனிடமிருந்து வேதங்கள் களவாடப்பட்ட பொழுது திருமால் மச்சாவதாரம் எடுத்தார். ஒரு சமயம் பிரளயம் ஏற்பட்டது. அப்போது பிரமதேவன் சிறிதளவு தூங்கினான். அந்த வேளை பார்த்து ஹயக்ரீவன் என்ற அசுரன் பிரமனிடம் இருந்து வேதங்களைக் கவர்ந்து சென்று கடலுள் மறைந்தான். இதனைக் கண்ட திருமால் உடனே மீனுருவம் எடுத்துக் கொண்டு ஹயக்கிரீவனைக் கண்டு பிடித்து மாய்த்து அவனிடமிருந்து வேதங்களைக் கொண்டுவந்து பிரமனிடம் சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்களை அடக்குவதற்காகத் தேவர்கள் அமிர்தத்தைப் பெறும் பொருட்டுப் பாற்கடலைக் கடையும் பொழுது அவர்களுக்கு உதவி செய்வதற்காக திருமால் கூர்மவதாரம் எடுத்தார். வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கொண்டு மந்தரமலையை மத்தாக வைத்துப் பாற்கடலைத் தேவர்கள் கடையும் பொழுது மந்தரமலை அடிப்புறத்திலே ஆதாரம் இல்லாமல் கடலில் மூழ்கியது. அப்போது திருமால் மிகப் பெரிய ஆமையின் உருவத்தை எடுத்துக்கொண்டு அந்த மலையின்கீழ் சென்று அதனைத் தாங்கினார். அவர் முதுகில் மந்தரமலையாகிய மத்து நிலைத்துச் சுழன்றது. இரணியக்கன் என்ற அசுரன் பூமியைக் கடலாழத்தில் அமுக்கிக் கொண்டிருந்த போது திருமால் வராகவதாரத்தை எடுத்தார். அவர் ஒரு பெரிய பன்றியாகத் தோன்றி கடல் நீரின் ஆழத்திலே மூழ்கி தம் கொம்புகளின் நுனியிலே பூமியைத் தாங்கினார்.

அட்டூழியங்களைச் செய்த இரணியகசிபு என்பவனை அழிப்பதற்கு எடுத்த அவதாரமே நரசிம்மவதாரம் எனப்படும். இரணியக்கனின் சகோதரனான இரணிய கசிபு திருமால் தனது தமயனைக் கொன்றதாலே தீராப்பகை கொண்டு திருமாலை எவரும் வணங்குதல் ஆகாது என்று உத்திரவிட்டான். எல்லோரும் தன்னையே தெய்வமாக வணங்க வேண்டும் என்றும் கூறினான். அவனது மகனான பிரகலாதன் அவனுக்கு நேர்மாறாக விளங்கித் திருமால் தூணிலும் இருக்கிறார் என்று தந்தைக்கே கூறினான். இரணியன் தூணைப் பிளந்தபோது திருமால் அந்தத் தூணிலே மனித உடம்பும் சிங்கத்தலையும் கொண்ட நரசிங்க அவதாரம் எடுத்து இரணியனைக் கொன்றார். அசுரனாகிய மகாபலி முறையில்லாமல் தேவர்களின் உலகைக் கவர்ந்த பொழுது அவனை அழிக்கத் திருமால் வாமனாவதாரம் எடுத்தார். காசிப முனிவரின் வேண்டு கோளின்படி திருமால் அதிதிக்குப் பிள்ளையாகப் பிறந்து வளர்ந்தார். அவர் குள்ளமான வடிவோடு விளங்கியதால் வாமனர் எனப்பட்டார். வாமனர் மூவடிமண்ணை மகா பலியிடம் பெற்று ஓரடியிலே மண்ணுலகையும் மற்றொரு அடியிலே விண்ணுலகத்தையும் அளந்தார். மூன்றாவது அடியை மகாபலியின் தலையிலே வைத்து அவனைப் பாதாளத்திலே அமுக்கிப் புகுத்தினார்.

அரசகுலத்தினர் ஒரு சமயம் மிகவும் இறுமாப்புக்கொண்டு மக்களைத் துன்புறுத்தியபொழுது திருமால் அதனைத்தடுக்க பரசுராமாவதாரம் எடுத்தார். மதக்கினி என்ற முனிவருக்கும் ரேணுகைக்கும் நான்கு புதல்வர் தோன்றினர். அவர்களுள் நான்காவது புதல்வர் பரசுராமர் இவர் இருபத்தொரு முறை அரச குலத்தில் தீய பண்புகள் தலையெடுக்க ஒட்டாமல் அழித்து நீதியை நிலை நாட்டினார்.

திருமால் இராமவதாரம் எடுத்த பொழுது அரக்கனான இராவணனைக் கொன்று அட்டூழியங்கள் செய்த எல்லோரையும் அழித்து நல்லோர்களைக் காத்தார்.

பூமியை ஆண்ட மன்னர்கள் ஒரு சமயம் நெறியிலிருந்து மிகவும் பிறழ்ந்தனர். இதன்போது திருமால் கண்ணனாக அவதரித்து கம்சனையும் மற்றும் பகைவரையும் கொன்றார்.

திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகப் புத்தாவதாரமும் கூறப்படுகிறது. சிலர் புத்தாவதாரத்தைச் சொல்லாமல் பலராமவதாரம் என்றும் கூறுவர்.

கலியுகத்தின் முடிவிலே உலகத்தைக் கையாளுபவர்கள் அளவிடமுடியாத அக்கிரமங்களையும் அநியாயங்களையும் செய்யும் பொழுது திருமால் கல்கியவதாரம் எடுப்பார் என்று கூறப்படுகிறது. இந்த அவதாரத்தின் போது திருமால் தீயவர்களை அழித்து தருமத்தை நிலை நாட்டுவார் எனக் கூறப்படுகின்றது.

திருமாலின் அவதாரப் பெருமைகளை வைணவ ஆழ்வார்கள் தங்கள் பாடல்களிலே எடுத்தாண்டுள்ளனர். திருமாலின் அவதாரங்கள் அருட்செயல்களாக் கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயமும் சமரசமும்

செல்வி. தமயந்தி அருணாசலம்,
இந்து சமயப்பிரிவு, முதலாம் வருடம் (1999-2000)

மக்களை இவ்வுலகில் அறவழியில் வாழ்வித்துப் பின் முத்தி நிலையை நல்குவதனையே எல்லா மதங்களுங் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. எல்லாஉயிர்களையும் தன்னுயிர்போல் கருதி அன்பு செலுத்தல், பிறவுயிர் மேல் தீங்கிழைக்காமை, பிறர் நலனுக்காக தனது சுகபோகங்களை தியாகஞ் செய்தல் என்பன எல்லா மதங்களுக்கும் பொதுவானவை. இவற்றை அறியாதவர்களிடம் மதப்பற்று மதவெறியாக மாறிவிடுகிறது. ஒவ்வொரு மதத்தையும் சேர்ந்த மெய்யறிவு பெறாதவர்கள் தங்கள் சமயமே மெய்ச்சமயமென்றும் பிறசமயங்கள் மக்களை தீயவழியிலாழ்த்துகின்றனவென்றும் கருதி தங்கள் சமயத்தை பிறர்மீது வலிந்து திணிக்க முற்படுகின்றனர். இதனால் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் மறைந்து குரோதங்களே முன்நிற்கின்றன.

ஐரோப்பிய சமுதாயத்தை மதவெறி பீடித்திருந்ததால் மிகநீண்ட சமயப்போர்கள் இடம்பெற்றன. 16ம் 17ம் நூற்றாண்டுகளில் மதவெறியின் காரணமாக ஐரோப்பாவில் ஏற்பட்ட போர்களால் கிறிஸ்தவ உலகில் பிளவேற்பட்டது. இடைக்காலத்தில் இஸ்லாமியரின் ஆட்சி உலகில் பல பாகங்களிலும் பரவியபோது அவர்களின் மதவெறியாலும் பல இனங்கள் அழிந்தன.

இந்துக்கள் வாழும் பாரதம் மதவெறியின் அதிகமான இன்னல்களுக்கு உள்ளான நாடெனலாம். கிறிஸ்தவ இஸ்லாமிய தாக்குதலுக்குள்ளான போதும் தங்கள் மதத்தை உயிரினும் மேலானதாக போற்றியே வந்திருக்கின்றனர். ஆடவரும், மகளிரும், சிறார்களும் பிறமதத்தை தழுவுவதினின்றும் இறப்பதை விரும்பி எரியிற் புகுந்தனர்.

சமரசக்கொள்கை இந்து சமுதாயத்திற் பண்டைகாலந்தொட்டே நிலவி வந்திருக்கின்றது. இந்து சமயத்தின் அமைப்புங் கொள்கைகளுமே இதற்கு காரணமாகும். இந்துக்களை சைவர், வைணவர், சாக்தர் என மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். சிவன், விஷ்ணு எனும் சொல் பூரணானந்தம், எங்கும் நிறைந்த பொருளெனப்படும். சாக்தர்கள் சக்தியை வழிபடும் பெண்ணாக உருவகித்து வழிபடுகின்றனர். கிரியைகளிலன்றி அடிப்படைக் கொள்கையில் இவை வேறுபடவில்லை. உபநிடத நூல்களே இவற்றிற்கு அடிப்படைத்தத்துவங்களாக அமைகின்றன. பிறசமயங்களைப் போல் இந்து சமயம் குறிக்கப்பட்ட தலைவரால் ஏற்படுத்தப்படவில்லை. எல்லாஇந்துக்களும் ஒரேவழியை பின்பற்றவேண்டும் என்றும் விதிக்கப்படவில்லை. மக்களின் மனோநிலையிலும் இயல்புகளிலும் வேறுபாடுளதென்ற உண்மையை அறிந்த மறைநூல் வகுத்த முனிவர்கள் வீடுபேறெய்துவதற்கென கர்மமார்க்கம், பக்தி மார்க்கம், யோக மார்க்கம், ஞானமார்க்கம் எனும் நான்கு வழிகளை வகுத்திருக்கின்றனர். இம் மார்க்கங்கள் பலவற்றிலேனும் ஒன்றிலேனும் ஒருவன் இறைவனை அடையலாம். கர்ம மார்க்கம், பக்தி மார்க்கத்தை எவரும் எளிதில் கடைபிடிக்கலாம். கருமயோகி இறைவனை சிந்தித்தப்படியே வினையாற்றுகின்றான். அவன் தன் வினைப்பயன் பற்றி கவலை கொள்வதில்லை. பக்திமார்க்கமானது அன்புநெறியாகும். பிரம்மச்சரியம் முதலிய நோன்புகளை மேற்கொள்பவரே யோக மார்க்கத்தையும், அறிவு முதிர்ச்சி பெற்றோரே ஞான மார்க்கத்தையும் பின்பற்றலாம். இந்நான்கு வழிகளும் இந்து சமயத்திலுள்ளபடியால் பிறசமயத்தவர்கள் கையாளும் வழியில் இந்துக்கள் அதிக வேறுபாட்டை காண்பதில்லை. பிறசமயத்தினர் பின்பற்றும் வழிகளையும் கர்மம், பக்தி முதலிய நான்கு வழிகளிலும் உட்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக்காலத்தில் மறைநூல்வகுத்த முனிவர்கள் வெவ்வேறு மக்களால் கூறப்படும் வெவ்வேறு தெய்வங்களும் பரம்பொருள் ஒன்றினையே குறிக்கின்றன என அறிந்திருந்தனர். இருடிகள் இந்திரன், வருணன், அக்கினி என்றழைப்தெல்லாம் ஒன்றே என்று இருக்கு வேதம் புகழ்கின்றது. வெவ்வேறு இடங்களில் தோன்றி வெவ்வேறு வழிகளில் கடலைச்சேரும் நதிகள் போல பல மார்க்கங்களும் எத்தன்மையானவாயினும் ஆன்மாவை இறைவன் மாட்டே இட்டுச் செல்கின்றன என்று உடநிடதங்கள் கூறுகின்றன. கீழ்வரும் திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரங்களிலுள்ள அடிகள் சமரசக் கருத்துக்களை கொண்டுள்ளன.

"ஆறு சமயத்தவரைத் தேற்றுந்தகையன தேரிய
தொண்டரைச் செந்நெறிக்கே ஏற்றுந் தகயன"
"வெவ்வேறாய் இரு மூன்று சமயமாகி புக்கானை
எப்பொருட்டும் பொதுவானானை"
"சமயமேலாறு மாகித்தானொரு சயம் புவாகி
இமையவர் பரவி ஏத்த இனிதின் அங்கிருந்தாசன்"

18ம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமான சுவாமிகளின் பாடல்களும் சமரசக் கொள்கையை வலியுறுத்துகின்றன.

"சமயகோடிகளெலாந்தந் தெய்வ மென் தெய்வ மென்றெங்குந்
தொடர்ந் தெதிர் வழக்கிட நின்றதெது"

பண்டைக்காலத்தில் ஆட்சிசெலுத்திய இந்திய மன்னர்கள் தங்கள் ஆட்சிக்குட்பட்ட மக்களால் பின்பற்றப்பட்ட சமயங்களெல்லாவற்றிற்கும் உதவி அளித்தனர். கி.மு.3ம் நூற்றாண்டில் இந்தியா முழுவதையும் ஆண்ட அசோக மன்னன் சமரசக் கருத்துக்களைச் சிலோசாசனங்களில் பொறிப்பித்தான்.பிற சமயங்களைத் தூற்றுவோர் தங்கள் சமயத்திற்கே தீங்கிழைக்கின்றனரென்று அவனுடைய சாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

சமுத்திர குப்தன், கர்ஷதேவன் போன்ற மன்னர்களும் எல்லா மதத்தினரையும் வேறுபாடின்றி ஆதரித்தனர். மொகலாயர்களின் கொடுங்கோன்மையிலிருந்து இந்துக்களை மீட்க வேண்டும் என்று அவா கொண்டு சுதந்திர இந்து அரசை நிறுவிய சிவாஜி மகாராஜன் இஸ்லாமிய மதகுரு மாரையும் பள்ளி வாசல்களையும் அலட்சியம் செய்யக்கூடாதென தனது படையினருக்கு ஆணையிட்டான்.

19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயராட்சியில் இந்து சமுதாயம் அமிழ்ந்திருந்தபோது மதமாற்றஞ் செய்தற்பொருட்டெடன வந்த கிறிஸ்தவ பாதிரிமார்கள் இந்துக்களின் கொள்கைகளையும் சமுதாய கோட்பாடுகளையும் அலட்சியம் செய்து தாக்கினர். இச்சந்தர்ப்பத்தில் இந்து சமுதாயம் சீர்த்திருத்த இயங்கங்களையும் பல ஞானிகளையும் தோற்றுவித்தது. ஆரிய சமாஜம் போன்ற இயக்கங்கள் இந்து சமய பாதுகாப்பிற்கு உழைத்தன.

19ம் நூற்றாண்டு தீர்க்கதரிசி என உலகத்தவரால் போற்றப்படும் இராமகிருஸ்ணர், இயேசுநாதர், நபி முதலியவர்களும் அவதார புருஷர்கள் எனவும் இவர்கள் மூலமும் இறைவனை அடையலாம் என்கிறார். இவரின் சீடர்களால் உருவாக்கப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் உலகின் பல பாகங்களிலும் கிளையமைத்து சமரசக் கொள்கையை போதிக்கின்றது. மகாத்மாகாந்தியும் 20ம் நூற்றாண்டில் இந்துமத சமரசக்கொள்கையை வலியுறுத்துவதில் முன் நின்றார்.

தெய்வத்தன்மையை மனிதருக்கு நல்குவதே எல்லா மதங்களின் நோக்கம். சமயத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்திலேயே சாந்தி நிலவும். ஒரு சமுதாயம் அழியாது நிலைபெற சமயம் ஒரு ஊன்றுகோலாகும். வர்க்கப்போராட்டம், தேசியவாதம் என்பவற்றால் பிளவு பட்டிருக்கும் இன்றைய உலகில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கு சமரசம் இன்றியமையாததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயம் கண்ட விஞ்ஞானம்

சு.ஷோபனா, இந்துசமயப்பிரிவு, இரண்டாம் வருடம்

இன்றைய உலகின் ஈடிணையில்லாத தனிப்பெரும் சமயம் எமது இந்து சமயம். இவ் இந்து சமயமானது தன்னகத்தே பல அரிய பெரிய பெருமைகளையும் தத்துவங்களையும் கொண்டு விளங்குகின்றது. இந்துமதத்தை ஏனையவற்றிலிருந்து வேறுப்படுத்திக் காட்டுவதும், அதனால் தனிப் பொலிவுடன் விளங்கச் செய்வதும் அதன் பழக்கவழக்கங்களே எனின் அது மிகையில்லை. இவ்வகையில் இந்து மதத்தவரான இந்துக்கள் தமக்கென தனியான பழக்கவழக்கங்களினூடாக தன்னிகரில்லாத ஒரு நாகரிகத்தோடு உலகில் மிளிர்கின்றனர். அநேகம் பேர் இப்பழக்கவழக்கங்கள் மூடத்தன்மையானவை என்று கூறினாலும் ஆழ்ந்து நோக்குகையில் அவை பல்வேறு விஞ்ஞான விளக்கங்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ''நேற்றைய மூடப்பழக்கம் இன்றைய விஞ்ஞானம்'' என்பது முதுமொழி.மூடப்பழக்கம் எனப்பிறரால் விமர்சிக்கப்பட்டவையெல்லாம் இந்துக்களின் விஞ்ஞான அறிவையே விளக்குகின்றன. உற்று நோக்குவோம்.

இந்துக்கள் வடக்கே தலை வைத்துப்படுப்பது இல்லை. வடக்குத் திசையில் தலைவைத்துப் படுக்கக் கூடாது என நம் பெரியோர்கள் சொல்வதைக் கேள்விப்பட்டு இருக்கிறோம். வடக்கில் தலை வைத்துப்படுத்தால் வடதுருவ காந்த ஈர்ப்பு சக்தியால் இரத்தம் மூளைக்கு அதிகம் பாய்வதையும் மூளைக்குத் தேவையான ஓய்வு கிடைக்காமல் பாதிப்பு ஏற்படுகின்றது என்பதையும் விஞ்ஞானம் நிருபித்துள்ளது.

காலையில் குளித்து அரச மரத்தைச் சுற்றும் பழக்கம் இந்துக்களிடையே உள்ளது. அரச மரத்தில் இருந்து ஓசோன் (ozone) அதிகமாக வெளிவருகின்றது என்றும் மலட்டினை நீக்கும் சக்தி இதற்குண்டு எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

திருநீறு, குங்குமம், உருத்திராட்சம், துளசிமணி என்பன நாம் அணியும் சமயச் சின்னங்களாகும். திருநீறு உடலின் துர்நாற்றத்தைப் போக்கும் ஆற்றலையும், வியாதிகளைக் குணப்படுத்தும் ஆற்றலையும், தொற்று நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தியையும் கொண்டுள்ளது. கன்னிப்பெண்களும், சுமங்கலிகளும் அணியும் குங்குமமானது உடலின் நாடி நரம்புகள் சந்திக்கும் நெற்றிப் பொட்டில் அணியப்படுவதனால் மஞ்சளின் சக்தி உடம்பில் ஊடுருவி உடம்பில் விஷப் பாதிப்புகள் ஏற்பட்டு இருப்பின் அதனை நீக்குகின்றது. உருத்திராக்கத்தை அணிந்தால் உள்ளுறுப்புக்களுக்கு ஆற்றலைக் கொடுக்கின்றது. இரத்த கொதிப்பு இருமல் முதலிய நோய்களைத் தணிக்கின்றது. உருத்திராக்கத்தை உரைத்துக் கொடுத்தால் ஜன்னி நீங்கும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மேலும் துளசி இருமல், காசம் முதலிய நோய்களுக்கு மருந்தாகும். பெருமாள் கோயில்களில் வழங்கப்படும் துளசித் தீர்த்தம் உடலில் ஏற்பட்டுள்ள விஷ சக்திகளை அகற்றவும்,உடலின் சூட்டைத் தக்க வைக்கவும் உதவுகிறது.

காலையில் சூரியனைப் பார்த்து சூரிய நமஸ்காரம் செய்யும் போது சூரியனின் கதிர்களில் இருந்து விற்றமின் (டி) என்ற சத்து உடலுக்குக் கிடைக்கின்றது. அத்துடன் சூரிய நமஸ்காரம் பல்வேறு நோய்களை அகற்றவல்ல சிறந்த உடற் பயிற்சியாகும். தியானத்தின் மூலம் இரத்த அமுத்த நோய் குறைகின்றது. மேலும் பல்வேறு நோய்களைக் குணப்படுத்தலாம் எனவும் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசி முதல் மார்கழி வரையுள்ள மாதங்களில் நோய்க் கிருமிகளும் புழுப் பூச்சிகளும் பரவுகின்றன. அப்போது பட்டாசு, சொக்கப்பனை கொளுத்தப் படுவதனாலும் தீபங்கள் (கார்த்திகைத் தீபம்) ஏற்றுவதனாலும் அவை செத்து மடிகின்றன என விஞ்ஞானம் கூறுகின்றது.

ஆலய வழிப்பாட்டில் பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் இடுதலும் பின் தலையில் குட்டிக் கொள்ளுதலும் செய்யப்படுகின்றன. உடலுக்குப் பயிற்சி அளிப்பதுடன் மூளையுடன் தொடர்புடைய நரம்புகள் குட்டுதல் மூலம் விறுவிறுப்பகச் செயல்படுகின்றன. இதனால் ஞாபக சக்தியும் அறிவு கூர்மையும் ஏற்படுகின்றன.

''ஏகம் சத்'' என்பது ரிக் வேத வாக்கியம் இதன் பொருள் ''உள்ளது ஒன்று'' என்பது ஆகும். ரிக்வேதம் உலகத்தில் தோன்றிய முதல் நூல் என்பது எல்லோரும் ஒத்துக் கொண்ட உண்மை. உலகில் பல்கோடி வேறுபட்டப் பொருள்கள் இருப்பதை நாம் கண் முன்னே காண்கின்றோம். இருப்பினும் ''உள்ளது ஒன்றே'' என்று வேதம் கூறுகின்றது. சாதாரண மனிதனால் இதை ஏற்றுக்கொள்ள இயலாது தான். அணுவினை ஆராய்ச்சி செய்தவர்களில் தலைசிறந்தவரும், நோபல் பரிசு பெற்றவருமாகிய ''ஆதர்ஜஸன் பெர்க்'' என்பவர் மேற்கூறிய இந்து சமயக் கூற்றில் அடங்கியுள்ள விஞ்ஞான உண்மையை வியந்து பாராட்டுக்கின்றார். அக்கினியிலும் காற்றிலும் தங்கத்திலும் இதைபோன்ற கோடானுகோடி பொருட்களின் அணுவும் ஒன்றே தான் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ளும் பொழுது ''உலகில் இருப்பதெல்லாம் ஒன்றுதான் ஒன்றின்றிப் பிரிதில்லை என்ற உண்மை விளங்குகின்றது. இந்த பேருண்மையைப் முதன் முதலில் கண்டு வேதம் படைத்தவனே விஞ்ஞானிகளுள் தலை சிறந்தவன் என ஆதர் ஜஸன் பெர்க் மனம் திறந்து கூறுகின்றார்.

விஞ்ஞான ரீதியாக உலகம் தோன்றி ஏறக்குறைய 200 கோடி ஆண்டுகள் ஆகின்றன எனக் கணக்கிட்டு உள்ளனர்.அமைதியாக இருந்த அண்டகோசம் வெடித்துச் சிதறி உலகம் உருவாகியதாகவும், அன்று முதல் இன்றுவரை உலகம் விரிவடைந்து கொண்டே போவதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.இது விஞ்ஞானிகளின் நவீன கண்டுபிடிப்பாகும். ஆனால் இது இந்துக்களுக்குப் புதிது அல்ல.இந்து சமயத்தில் உலகத் தோற்றம், விரிவு, ஒடுக்கம் என்ற செயல்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்தத் தோற்றம் விரிவு ஒடுக்கங்கள் ஒரு முறையல்ல பலமுறை தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. என இந்துசமயம் கூறுகின்றது. இந்த உண்மையை விஞ்ஞானம் இன்னும் கண்டு பிடிக்கவில்லை இனிமேல் தான் கண்டுபிடிக்க வேண்டியிருக்கின்றது.

மேற்கூறிய விடயங்களில் இருந்து நாம் தொகுத்து நோக்கும் போது இந்து சமயத்திலே கூறப்பட்ட தினசரி வாழ்வியல் அம்சங்கள், வழிபாட்டு முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பனவற்றை நாம் சாதாரண விடயங்களாகக் கருதாமல் விஞ்ஞான பூர்வமானவை என்று ஏற்றுச் செயல்படுத்துப்போது விஞ்ஞானமா? மெஞ்ஞானமா?சிறந்தது என்பது போன்ற பிரச்சனைகள் எம்மத்தியில் எழ வாய்ப்பில்லை. இவ்வாறாக இந்துமதப் பழக்கவழக்கங்கள் அனைத்தும் விஞ்ஞான ரீதியில் விளக்கக் கூடியதாகவும் இன்றைய விஞ்ஞான யுகத்திலும் மனிதன் வாழ்வாங்கு வாழ இவை வழிகாட்டுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்

P.கலைவாணி, ஆரம்பப்பிரிவு-1, விடுகையாண்டு.

**வினை விலக:**

கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால் அத்துணி வெதும்புமேயன்றி வெந்து சாம்பலாகாது. சூரிய காந்தக் கண்ணாடியை வெயிலில் வைத்து அதன் கீழ்வரும் வெயிலில் துணியை வைத்த உடனே அது சாம்பலாகின்றது. அதுபோல மற்ற இடங்களில் இறைவனைத் தியானிப்பதனால், வழிபடுவதனால் வினைகள் வெதும்பும் திருக்கோயிலில் வழிபட்டால் வினைகள் எரிந்து கரிந்து நீராகிவிடும்.

**பூசை நாட்களுக்குரிய நைவேத்தியங்கள்:**

| | |
|---|---|
| ஞாயிறு | -சர்க்கரைப் பொங்கல். |
| திங்கள் | -பால், தயிர், அன்னம். |
| செவ்வாய் | -வெண்பொங்கல். |
| புதன் | -சாகான்னம், கதம்பசாதம். |
| வியாழன் | -சித்தரான்னம். |
| வெள்ளி | -பால்பாயாசம். |
| சனி | -புளியோதரை. |

**ஏழுவகை அன்னங்கள்:**

| | |
|---|---|
| சுத்தானந்தம் | -தனிச்சாதம். |
| மத்வான்னம் | -தேன் கலந்த சாதம். |
| தத்யன்னம் | -தயிர் கலந்த சாதம். |
| பாயசன்னம் | -அரிசி, பால் சேர்த்த சாதம். |
| குருசாரன்னம் | -அரிசி, எள், நெய் சேர்த்த சாதம். |

**நால்வகை அன்னங்கள்:**

| | |
|---|---|
| முற்கான்னம் | -தேங்காய் சாதம். |
| சர்ஷபான்னம் | -கடுகு சாதம். |
| ஆமிலான்மை | -புளியோதரை. |
| திலான்னம் | -எள்சாதம். |

**தீபநேரம்:**

தினந்தோறும் வீடுகளில் தீபம் ஏற்றி வழிபாடு செய்வதற்கும் நேரம், நெறிமுறை அவசியம், அதிகாலை 4.30 மணிமுதல் ஆறு மணிக்குள் ஏற்றுவதாலும், மாலை 5.30 மணிமுதல் ஆறு மணிக்குள் ஏற்றிவிடுவதாலும், நிறைவான வளமும், பலன்களும் நிச்சயம் உண்டாகும்.

தீபாலங்கார தத்துவம்:

ஊர்வன, பறப்பன, விலங்குகள் எனும் முறையில் விரிந்து பஞ்சபூதங்கள் ஒன்றிலொன்று ஒடுங்கி இறுதியில் கற்பூரம் போல் எரிந்து எவ்வித மிச்சமுமின்றி இறைவனோடு ஒன்றிவிடுதலே தீபாலங்காரத் தத்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீபவகைகள்:**

நெய்த்தீபம் வீட்டின் சுகத்தையும், நலத்தையும் அதிகரிக்கச் செய்யும் எள் எண்ணெய்த் தீபம் சகல பீடை பரிகாரங்களுக்கும் ஏற்றது. விளக்கெண்ணெய்த் தீபம், புகழ், ஜீவன சுகம் தாம்பத்திய சுகம், உறவினர் நலம், வளம், விருத்தி ஆகியன தரும்.

**திருவிளக்கு:**

திருவிளக்கு மும்மூர்த்தி வடிவம். ஆசனமாகிய அடிப்பாகம் பிரம்ம அம்சம், நெடிய தண்டாகிய நடுப்பாகம் விஷ்ணு அம்சம், நெய் ஏந்தும் அகல் பகுதி சிவன் அதன் மேல் உள்ள பகுதி மகேஸ்வரன், சிகரமாகிய உச்சிப்பகுதி சதாசிவன் நெய் - நாதம், திரி - பிந்து, சுடர் - திருமகள், பிழம்பு - கலைமகள், தீ - சக்தி.

**எண்ணெய் பலன்:**

தேங்காய் எண்ணெய் தீபம் ஒரு கோடி ஏற்றிவைப்பதன் பலன் ஒரு நல்லெண்ணெய் விளக்கு ஏற்றி வைப்பதற்குச் சமம். நல்லெண்ணெய் ஒரு கோடி பலன் பசு நெய்யில் ஒரு விளக்கு. 1000 பசு நெய் விளக்கு ஒரு இலுப்பை எண்ணெய் விளக்கு. 10000 இலுப்பை எண்ணெய் விளக்குகளின பலன் கற்பூர தீபாராதனை இதனை காட்டிலும் உயர்ந்தது இல்லை.

**கற்பூரம்:**

கற்பூரம் எரிந்து கரியோ, சாம்பலோ இல்லாமல் மறைந்து விடுகிறது. அதேபோல் ஆன்மா இறைவனுடைய அருட் ஜோதியில் கலந்து ஒன்று பட வேண்டும் என்றே கற்பூர ஆராத்தி செய்யப்படுகின்றது.

**ஆரத்தி:**

விழாக்காலங்களில் சுவாமிக்கு ஆரத்தி எடுக்கும் போது மஞ்சள் குங்குமம் போட்டு கரைத்து தட்டில் இரண்டு சின்ன நெய் ஜோதி ஏற்றி வைத்து ஆரத்தி நீரை துளசி செடியில் ஊற்ற வேண்டும். மனிதர்களுக்கு எடுக்கும் ஆரத்தியில் தான் சுண்ணாம்பு, மஞ்சள் போட்டு வீதியில் கொட்ட வேண்டும்.

**மாவிளக்கு:**

இறைவனுக்கு மாவிளக்கு இடவிரும்புவோர் சனிநாளில் வரும் பிரதோஷத்திலாவது சிவராத்திரியிலாவது பகலில் உண்ணாது இருந்து இரவில் வெண்டாமரைத் தண்டின் நூலால் திரிதிரித்து செந்நெல் அரிசிமாவில் அகல் பண்ணி அதில் காராம் பசுவின் நெய்யை வார்த்து விளக்கேற்ற வேண்டும்.

**சந்தனக் காப்பு:**

சிவனுக்கு சந்தனக்காப்பு சாத்திக் குளிர்வித்தால் உலக உயிர்களைக் குளிர்விப்பது போலாகும கஸ்தூரி, கோரோசனம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் முதலிய நறுமணப் பொருட்களைக் கூட்டி சிவனுக்கு ஒரு முறை சந்தனக்காப்பு செய்தவர் தேவ வருடத்தில் கோடிவருடம் சிவலோகத்தில் இன்புற்றிருப்பர் என்று சிவ புண்ணியத் தெளிவு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்தில் பல வகையான பிரிவுகள் காணப்படுவது ஏன்?

அருள்சத்தியநாதன், (பொறுப்பாசிரியர், மலையகப்பகுதி, தினகரன்)

"நதிகள் பலவாயினும் அவை ஒரே கடலை நோக்கி செல்வதைப்போல..." என்பதாக ராமகிருஷ்ண பரமஹம்சர் உலக மதங்களிடையே காணப்படும் அடிப்படை ஒற்றுமையைச் சுட்டிக் காட்டியது இந்து மதத்துக்கும் பொருந்தும்.

இந்து மதம் ஏராளமான கிளைகளைக் கொண்ட ஒரு ஆலவிருட்சம் மாதிரி. சைவம், சாக்தம், காணபத்தியம், வைஷேடிகம், வைஷ்ணவம், துவைதம், அத்வைதம் என பல சமயப் பிரிவுகளும் கோட்பாடுகளும் அதில் அடக்கம். பல கடவுள் வழிபாடும், ஏகக்கடவுள் வழிபாடும் அதற்கு மேலாக அத்வைதத்தின் முடிவாக சகலத்தையும் சக்தியின் வடிவமாகக் காண்பதும் இந்து சமயத்தில் தான் சாத்தியம். இத்தர்மத்தின் எல்லாப் பிரிவுகளும், இறுதியாக நதி கடலை அடைவது போல, தத்தமது தனித்தனி குணாம்சங்களை விடுத்து அத்வைதம் என்ற அனைத்தையும் அந்த ஏகசக்தியின் வடிவமாக காணும் அந்தச் சூரியன் பெரும் வெளியில் சங்கமித்து விடுவதை இந்து தர்மத்தில் மட்டும் தான் காண முடியும்.

இந்து சமயத்தை வெளியில் இருந்து பார்ப்போருக்கு அல்லது இதனுடன் பரிச்சயமற்றோருக்கு இச்சமயம் குழப்பமானதாகவும் ஒன்றுடன் ஒன்று முரண்படும் தன்மை கொண்டதாகவும் எவ்விதமான நிருவாகத் தன்மையற்றதாகவும் புலப்படுவது உண்மையே.

ஆனால் இவ்வாறு முரண்பாடான ஒரு சமயத்தில் தான் விஞ்ஞான ரீதியிலான பல உண்மைகள் பொதிந்திருப்பதைக் கண்டு "ஒரு காட்டுமிராண்டி" த்தனமான சமயத்தில் இவை எப்படி சாத்தியமென ஆச்சரியப்படவும் செய்கிறார்கள். ஆனால் இத்தருமத்தை ஆய்ந்தோருக்கும் பரிச்சயம் உடையோருக்கும் இம்மதம் பற்றி எவ்விதக் குழப்பமும் இல்லை. ஏனெனில் எந்த ஒரு தனிநபராலும் தனி ஒரு கோட்பாட்டினாலும் தொடக்கிவைக்கப்பட்ட சமயம் இந்து தர்மம் அல்ல. இந்து சமயம் ஆதி உலக மதங்களில் ஒன்று இதன் ஆரம்பம் மனித பரிணாம வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டது. மனிதனின் மன வளர்ச்சி படிப்படியாக முன்னோக்கி வளர்ந்த போது தன்னை விட சக்தி மிக்க ஒன்று உலகில் இருப்பதாகவும் அது தன்னை ஆட்டிப்படைப்பதாகவும் உணர்ந்து கொண்டான் அச்சக்தியை சமாதானப்படுத்தவும் அதனுடன் நட்புறவைப் பேணவும் அது தனக்கு செய்யும் உதவிகளுக்கு நன்றியறிதலுடன் இருக்கவும் அவன் விரும்பினான்.

எந்த ஒரு ஆதி மதமும் மனித சிந்தனையில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றத்தின் விளைவாகவே அதாவது இயற்கை காரணங்களினாலேயே உருவாகியிருக்க முடியுமே தவிர நமக்கு சகல மதங்களினாலும் கற்பிக்கப்படுவதைப்போல கடவுள் என்ற ஒரு தனிச்சக்தியின் நேரடி பிரசன்னத்தின் விளைவாக உருவானதாக இருக்க முடியாது. கடவுளின் நேரடித் தலையீட்டினால் இந்து சமயம் உருவாக்கப்பட்டது என்றோ இப்பிரபஞ்சம் உருப்பெற்றது என்றோ ஏனைய மதங்களில் கூறப்பட்டிருப்பதைப் போல அதிகார பூர்வமாக இச்சமயத்தில் சொல்லப்படவில்லை என்பது இங்கே கவனிக்கத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்திய, கிரேக்க, மெசப்பத்தேமிய சமயங்களை எடுத்துக் கொள்வோமானால் அல்லது செவ்விந்தியர்களினதும் ஆபிரிக்க பழங்குடி மக்களுடையதுமான பல்வேறு சமயங்களின் அடிப்படைத் தன்மைகளை கவனிப்போமானால் இவற்றின் ஊற்றுக்கண் ஒன்றாக இருப்பதையே காணமுடிகிறது. இம்மதங்களில் எல்லாம் ஆதி வழிபாடாக ஆதவன் வழிபாடே இருந்து வந்திருக்கிறது. ஆதி கிரேக்க, இந்து, எகிப்திய, கௌராஷ்டிர, தென்னமெரிக்க மதங்களில் சூரிய வழிபாடு முக்கிய பங்கை வகிக்கிறது. ஆனால் இந்த ஆதி வழக்கம் இன்று வரை தைப்பொங்கல் தினமாக இந்துமதத்திலேயே வழக்கிலிருந்து வருகிறது. மேலும் மேற்குறிப்பிடப்பட்ட ஆதிமதங்கள் அழிந்தொழிந்து போய்விட அல்லது தமது செல்வாக்கை இழந்துவிட

இன்னும் தன் ஆதிக்கத்தையும் வளத்தையும் இழந்துவிடாமல் இருந்து வருவது இந்துசமயம் மட்டுமே. இதற்குக் காரணம் சிலர் நினைத்துக் கொண்டிருப்பதைப் போன்று அல்லாமல் இது குழப்பமானதும் முரண்பாடானதுமான தன்மைகளைத் தன்னிடத்தில் கொண்டிருக்கவில்லை என்பதே ஆகும்.

இந்துமத பிரிவுகள் மனிதனின் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் பார்க்கப்படுமானால் குழப்பம் எதுவும் ஏற்படாது. ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை என்பதை போலவே ஒவ்வொரு மனிதனின் குணங்களும் பார்வையும் வித்தியாசமானவையாகவே உள்ளன. அதாவது அனைவரும் அத்வைதத்தைப் புரிந்துக் கொள்பவர்களாக, பின்பற்றக் கூடியவர்களாக இருக்கமாட்டார்கள். ஆன்மீக அணுகுமுறைகளில் பல படிமுறைகள் இருந்தால் மட்டுமே பல்வகையான மக்களையும் ஆன்மீகம் நோக்கிய பாதையில் இட்டுச் செல்லக் கூடியதாக இருக்கும்.

இந்துமதத்தில் காணப்படும் சிறு தெய்வ வழிபாடு, பல தெய்வ வழிபாடு, மூர்த்தி வழிபாடு, கோயில் வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு, தலவழிபாடு, இஷ்ட தெய்வ வழிபாடு, சக்தி வழிபாடு என பல்வகைப்பட்ட வழிபாடுகள், பல்தரப்பட்ட மனோவளர்ச்சிக் கொண்டவர்களை ஆன்மீக வழிக்குள் இட்டுச்செல்லும் வகையில் அமைந்துள்ளன. தமது தரத்திற்கு அதாவது மனோவளர்ச்சிக்கு ஏற்றவாறு தமது ஆன்மீக வழியை ஒரு இந்துவால் தெரிவு செய்யக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறு தமது ஆன்மீக வழியைத் தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு வேறு சமயங்களில் கிடையாது.

தனியொரு மனிதராலோ, நிறுவனத்தாலோ அல்லது கோட்பாட்டினாலோ நிறுவப்படாத ஒரு இயற்கை மதமாகவும், மனித வளர்ச்சிப் படிகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் இச்சமயம் விளங்குவதாலேயே ஏனைய மதங்கள் அழிந்தொழிந்த பின்னரும் இம்மதம் இன்னும் விஞ்ஞான வளர்ச்சியையும், நவீன மதங்களின் சவால்களையும் அடுத்த ஆயிரமாவது ஆண்டு விடுக்கக் கூடிய சவால்களையும் எதிர் கொள்ளக் கூடிய தன்மைகளை கொண்டதாக விளங்குகிறது.

இந்த அடிப்படையில் இம்மதத்தை அணுகினால் இச்சமயத்தில் குழப்பமும் இல்லை, முரண்பாடுகளும் இல்லை என்பது தெள்ளத்தெளிவாகத் தெரியும். இயற்கை ரீதியிலான அம்சங்களை, மனித வாழ்க்கையை, அதன் நிதர்சனங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், மனிதனின் எதிர்கால வளர்ச்சிப் படிகள் விடுக்கும் சவால்களை இச்சமயத்தால் உள்வாங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. பல ஆயிரம் ஆண்டு காலத்தைக் கடந்த பின்னரும் இன்னும் தன் ஜீவனை இழந்து விடாமல் இருப்பதற்கு காரணம், வளைந்து கொடுக்கக்கூடிய தன்மையைக் கொண்ட இயற்கை மதமாக இந்துமதம் விளங்குவதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

பெ.உதயக்குமார், இந்துசமயம், முதலாம் வருடம் (1999-2000)

நதிக் கரை யோரத்தில்
தென்றல் வீசும் சோலையில்
நவரசம் புரிகின்றவளே !
கல்வி செல்வம் வீரமெனும்
முப்பெருந் தேவிகளாய் அமர்ந்து
எமக்கருள் தந்திடுவாய்

நாடு நலம் பெற வேண்டும்
வீடு வளம் பெற வேண்டும்
சோகங்கள் பறக்க வேண்டும்
தேகங்கள் உன் சக்தியால்
ஆரோக்கியம் பெற வேண்டும்
சிங்கத்தின் நாயகியே! உனை
நாங்கள் வணங்குகின்றோம்

மும்மாரி பொழிய வேண்டும்
உலகு உணவின்மை
ஒழிய வேண்டும்
ஊரார் செழிப்படைய வேண்டும்
வாழ்க்கை வசதிகள் பெருக வேண்டும்
செல்வம் செல்வோம் என்றில்லாமல்
செந்தாமரை மீது - என்றும்
நிலைத்து நின்று
வரங்கள் பல கிடைக்க - உனை
கை கூப்புகின்றறோம்

வெண் தாமரையில் வீற்றிருந்து
வீணையுடன் இசை மீட்டும்
கலைவாணியே !
இவ்வுலகம் ஒற்றுமை
காண வேண்டும் - அதனால்
எண் எழுத்து சிறக்க வேண்டும்
சங்கத் தமிழ் மீண்டும் வேண்டும்
அறிவுக்கடல் எங்கும்
பெருக வேண்டும் - என்றும்
உனைப்பாட இசை வேண்டுமென
உனை வாழ்த்தி வணங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர பௌர்ணமியாய் சைவ நெறி

ஆதியும் அந்தமுமிலா – அற்புத
அமுத நெறியே
உன் வழியில் யான்
நின்று
உமைப்பாகனை வழிபட
கிடைத்த பாக்கியம்
எண்ணி
மகிழ்கிறேன் !

அவைதீக நெறிகளெல்லாம் – தழைத்த
நேரமாகிய
அன்று முதல்
இன்று வரை
போராடியே
நீ
வளர்ந்து வந்தாய் !

இன்றைய விஞ்ஞானம் – காணாத
புதுமைகளை
அன்றே நீ
சொல்லி வைத்தாய்
சொன்னதை
தொடர ஆளில்லாததால்
சற்றே நலிந்து
விட்டாய் !

நீ சொன்ன – கருத்து தன்னை
உள்வாங்கி
பல நெறிகள்
தம்பட்டம் அடிக்கின்றன
தாம் தான்
மெய்யான – நெறி
என.... பாவம் !

அன்றைய அப்பர் முதல்
இன்றைய அப்பன்
வரை
முறையாக வழிபட்டால்
முத்தியை நீ
தந்து
வந்தாய்

அமெரிக்கன் உன் சிறப்பு – கண்டு
உன் நெறி பின்பற்ற
பாவம் நம் அண்ணர்கள்
எங்கோ
ஓடுகின்றனர் !

உள்ளே இருந்து – உன்
குறை காண்பவனே
உண்மையானவன்
எங்கோ இருந்து
எதையோ கூறட்டும்
நாளை
அவர்
அதிலிருப்பது
என்ன நியாயம் !

சமத்துவம் காண்பதற்காய் – நல்
தத்துவம்
சொன்னாய்
நல்லோராய் வாழ்ந்திடவே
நல் ஒழுக்கங்களையும்
சொன்னாய்.

சம்பிரதாயப்படி – வாழ்
என
மனித மனங்களில்
பக்தியை
வளர்க்க
பல பயனான – கருத்துக்களை
சொன்னாய்.

இந்திரன் முதலான – இதர
தெய்வங்களும்
இதுதான் மெய் நெறி
என
உணர வைத்த
உண்மை நெறி
ஆனாய் !

பெண்மை பற்றி – இன்று
பல நெறிகள்
பேசுகையில்
சக்திக்கு சரி பாதி
தந்து
பெண்மைக்கு உரிய
இடம்
தந்தாய்

துளிக்கும் அர்த்தம் – சொல்லும்
துல்லியமான
கதை சொல்லும்
தூய சமயம்
ஆனாய் !

தேய்வதில்
வளரும் நிலவைப் போல
சைவமே
நீ தேய்மானங்கள்
வரினும்
என்றும் பிரகாசம்
தரும்
நிரந்தர
பௌர்ணமியாவாய் !


நடேசன் மனோகரன்,
இந்து சமய பிரிவு,
விடுகையாண்டு (98-99)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சர ஆலய வரலாற்றுச் சிறப்பு

துரைசாமி. உமாசங்கர், இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு (98-99)



''சிவபூமி'' என திருமூலரால் போற்றப்படும் நம் ஈழமணித் திருநாடானது, சைவசமயப் பாரம்பரியங்களைக் கொண்ட நாடாகும். இச்சைவ சமயப் பாரம்பரியங்களின் தொன்மையினை நாம் அறிந்து கொள்ள பேருதவியாக அமைபவை இலக்கியச்சான்றுகள், கல்வெட்டுக்கள், புதைபொருட்சின்னங்கள், தொன்மைமிகு ஆலயங்கள் என்பவையாகும். இவ் ஆலயங்களின் வரிசையிலே சிவாலயங்கள் பிரதான இடம் வகிக்கின்றன. இவற்றுள் சிறப்பு மிக்க ஒன்றாய் விளங்குவது திருக்கோணேச்சரமாகும்.

ஈழமணித் திருநாட்டின் கிழக்குப்பகுதியிலே அமைந்துள்ள தெய்வத் திருநகரான திருக்கோணமலையில் முப்புறமும் கடலலைகள் ''ஓம்'' என்ற ஓசையுடன் வந்து மோதிச் செல்கின்ற இனிய சூழலில், மலைக்குன்றின் உச்சியிலே கோணநாதர், மாதுமையம்பாள் சமேதரராய் வீற்றிருந்து அடியார்க்கு அருள் பாலிக்கும் காட்சி மனம் பூரிக்கத்தக்கது. சிவனேயச் செல்வரான திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற தலமாய் விளங்கும் திருக்கோணேச்சர ஆலயம் பற்றிய வரலாற்றினை இதிகாச புராணக் கதைகளின் மூலம் அறியும் போது இவ்ஆலயத்தின் தொன்மையை உணரமுடிகிறது.

''திரேதாயுகத்தில்'' ஆதிசேடனுக்கும், வாயுபகவானுக்கும் இடையில் ஏற்பட்ட யார் வலிமைமிக்கவன் என்ற போட்டியின் போது ஆதிசேடன் கைலாய மலையை இறுகப்பற்றிப் பிடித்துக் கொண்டிருக்க வேகமாக வீசிய வாயுபகவானின் சீற்றத்தால் அடித்துச்செல்லப்பட்ட மூன்று முடிகளில் ஒன்றே திருக்கோணமலை என ''தக்கிண கைலாயபுராணம்'' கூறுகிறது.

இலங்கைவேந்தன் இராவணன் இவ் ஆலயத்தை வழிபட்டதாகவும், தனது தாயார் சிவவழிபாட்டினை மேற்கொள்ள உதவியாக மலைக்குன்றின் உச்சியிலுள்ள சிவலிங்கத்தை எடுத்துச் செல்வதற்காக அது அமைந்துள்ள பகுதியை வெட்டினான். ஆனால் தனது தாயார் இறந்த செய்தி கேட்டு தனது முயற்சியைக் கைவிட்டான். அவன் வெட்டிய பகுதி ''இராவணன் வெட்டு'' என இன்றும் அழைக்கப்படுகிறது. எனவே இவ் ஆலயமானது கி.மு 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என ''கோணேசர் கல்வெட்டு'' என்ற நூலில் காணமுடிகிறது.

கடற்கோள்கள் முதலிய இயற்கைச் சீற்றங்களினால் பண்டைய கோயில் அழிந்ததாக வரலாறு கூறுகிறது. இதனை ஐரோப்பிய ஆராய்ச்சியாளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பண்டைய கோயில் அழிந்துவிட குன்றின் மேல் அமைந்திருந்த கற்கோயிலை சோழ இளவரசனான ''குளக்கோட்டன்'' புனருத்தாரணம் செய்ததுடன் ஆலயத்திருப்பணிக்குத் தேவையான பொருளீட்ட வயல் நிலங்களை வழங்கியதாகவும் ''கோணேசர் கல்வெட்டு'' என்ற நூல் கூறுகிறது.

வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயமானது அந்நியராட்சிக் காலத்திலும் அழிக்கப்பட்டது. கி.பி. 1624-1627 காலப்பகுதியில் போர்த்துக்கேயத்தளபதியான ''கொன்ஸ்ரந்தீன்தீபா'' என்பவனால் இடிக்கப்பட்டதுடன் அக்கற்களைக் கொண்டு கோட்டை அமைத்ததாக வரலாறு கூறுகிறது. போர்த்துக்கேயர் அழிக்க வருதலைக் கண்ட கோயிலார் மூர்த்திகளை ''கழனிமலை'' என்ற இடத்திற்கு எடுத்துச் சென்று வழிபட்டனர். பின் ''இரண்டாம் இராஜசிங்கன்'' தம்பலகாமப் பகுதியில் கோயில் அமைத்து மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து திருவிழா புரிந்ததாக ''சைவ சமய பாடம்'' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழைய இடத்தில் மீண்டும் ஓர் ஆலயத்தை அமைக்க சைவப்பெருமக்கள் முயற்சித்த வேளையில் குறித்த சில தினங்கள் மட்டுமே வழிபாடியற்ற அனுமதியளித்த ஆங்கிலேயர் திருக்கோயில் அமைக்கவும் அனுமதியளித்தனர். 1950ம் ஆண்டு ஆடித் திங்கள் 3ம் நாள் டாக்டர். பாலேந்திரா என்பவரின் தலைமையில் திருப்பணிச் சபையொன்று உருவாக்கப்பட்டு ஆலயத்தை மீண்டும் கட்டுவதில் மற்றும் காசியில் இருந்து சிவலிங்கத் திருவுருவம் ஒன்றைக் கொண்டு வரவும் முயற்சி மேற் கொள்ளப்பட்டு இன்றைய ஆலயம் எழுந்தருளியது.

இக்காலகட்டத்தில் நகரப் பகுதியில் கிணறு வெட்டிக் கொண்டிருந்தவர்களால் சிவன் (சோமாஸ்கந்தமூர்த்தம்) பார்வதி, சந்திரசேகரர் ஆகிய அழகிய மூன்று திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. இத்திருவுருவங்கள் உலகத்திலுள்ள திருவுருவங்களில் ஒப்புயர்வற்றனவாகும். ஏறக்குறைய முந்நூறு வருடங்கள் மறைந்து கிடந்த ஆலயம் மீண்டும் புதுப்பொலிவு பெற்றது. 1952ம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதி இவ்விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

1952ம் ஆண்டின் பின்னர் ஆலயம் பெரிதாக அமைக்கப்பட்டிருப்பதுடன் சுற்று மதிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் மக்களின் உதவியினால் ஐம்பொன்னாலான 'கண்டாமணி' இவ்வருடம் மணிக்கோபுரத்தில் பொருத்தப்பட்டு ''ஓம், ஓம்'' என ஒலிப்பதானது கேட்போர் மனதில் பரவசத்தையும் பக்தியையும் உண்டாக்கின்றது இருப்பினும் இன்றைய நாட்டின் சூழ்நிலையினால் பக்தர்கள் முன் போல் சென்று வழிபட இயலாத போதும் திருவிழாக்காலங்களான பங்குனி உத்திரத்தில் ஆரம்பித்து பதினெட்டுத் தினங்கள் கொடியேற்றத் திருவிழா நடைபெறும். இக்காலத்தில் இடம்பெறும் ''தெப்பத் திருவிழா'' ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும் மேலும் சிவராத்திரி மாசிமகம், ஆனிஉத்திரம், மார்கழித் திருவாதிரை போன்ற உற்சவங்களும் இடம் பெறுகின்றன.

எல்லாம் வல்ல கோணநாதப் பெருமானின் அருளால் துன்பங்கள் எல்லாம் நீங்கி உலகச் சைவப் பெருமக்கள் போற்றி வழிபடும் பேறு பெறக் கூடிய சூழல் உருவாக வேண்டுமென மனமுருக வேண்டுவோமாக

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களும் சாதியமும்

செல்வி. மாரிமுத்து சாரதாதேவி, இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு (98-99)

இந்துமத அடிப்படைக் கோட்பாடுகளில் வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடும் முக்கியமானதாகும். அதாவது சமயக் கோட்பாடுகளுடன் சமூக வரலாற்றையும் தொடர்புபடுத்துவதாக வர்ணாச்சிரமதர்மக் கோட்பாடு காணப்படுகிறது. வர்ணாச்சிரமதர்மம் எனும் போது மூன்று விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. வர்ணம் - சாதியமைப்பு, ஆச்சிரமம் - வாழ்க்கையமைப்பு, தர்மம் - கடமைகள் எனவே வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடு என்பது இந்துக்களது சாதியிலும், வாழ்க்கையிலும் எத்தகைய கோட்பாடுகளை பின்பற்றுகிறது என்பதை எடுத்துக்காட்டுவனவாக இவை உள்ளன.

வரலாற்று அடிப்படையில் நோக்கின் ஆரம்பகாலத்தில் இந்தியாவில் நுழைந்த ஆரியர்கள் இந்தியாவிலிருந்த சுதேச மக்களுடன் போரிட்டு நிற அடிப்படையில் அவர்களை வெறுத்து ஒதுக்கி அவர்களை ''தஷ்யுக்கள்'' என அழைத்தனர். இதுவே வர்ணாச்சிரம தர்மத்தின் ஆரம்பம் எனலாம்.

ஆரியரது இலக்கியமாகிய வேதங்களிலே படைப்புக் கடவுளாகிய புருடனின் உடலிலிருந்து நான்கு சாதிகள் தோன்றியதாக கூறப்படுகிறது. அதாவது புருடனின் முகத்திலிருந்து-பிராமணனும், தோளிலிருந்து-சத்திரியனும், தொடையிலிருந்து-வைசியரும், பாதத்திலிருந்து-சூத்திரரும் தோன்றினர் என கூறப்படுகிறது. இருக்கு வேதத்தின் ஐதரேய பிராமணத்தில் சாதிகளின் தோற்றம் என்பது சமுதாயத்தின் கடமைகளை திறம்படச் செய்யவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. இது தவிர அங்கு உயர்வு தாழ்வுக்கு இடமில்லை என கூறப்படுகிறது. அத்துடன் பிறப்பால் எந்த சாதியாக இருந்தாலும் நல்லொழுக்கத்தை உடையவராயின் உயர்சாதியாவான் என்பதை ''சத்தியகாமன் கதை'' மூலமாக விளக்கப்படுகிறது. அதே போல் நாலடியாரிலும் பின்வருமாறு கூறப்படுகிறது.

களர் நிலத்துப் பிறந்த உப்பினை சான்றோர்
விளை நிலத்து நெல்லின் விழுமிதாய் கொள்வர்
கடை நிலத்தோராயினும் கற்றறிந்தோரை
தலை நிலத்து வைக்கப்படும்.

மேலும் வர்ணாச்சிரமம் பற்றி மற்றொரு கருத்து யாதெனில் ஒரு குடும்பத்திலுள்ள அங்கத்தவர்களை அவர்களின் செயல்கள் அடிப்படையில் சாதிகளாக பிரித்ததாக கூறப்படுகிறது. அதாவது அறிவு, ஒழுக்கம் உடையவர் கற்றல், கற்பித்தல் தொழில் புரியும் பிராமணராகவும், வீரமிக்க படைத்தொழில் புரியும் சத்திரியராகவும், வியாபார திறனுடையவர் வைசியராகவும், சோம்பேறியாக இருப்பவர் இவர்களுக்கு உதவி புரியும் சூத்திரர்கள் என்றும் கூறப்பட்டது. பகவத்கீதையின் கூற்றுப்படி சாத்வீக குணமுடையவர், ராஜச குணமுடையவர், தாமத குணமுடையவர் என்ற அடிப்படையில் சாதிப்பிரிவு கூறப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் நிறத்தை, தொழிலை, குணத்தை அடிப்படையாகக் கொண்டு சாதிகள் பிரித்தாலும் அதன் பிற்பட்ட காலத்தில் அதாவது தற்காலத்தில் அதன் நோக்கம் மாறுபட்டு செல்வதையும் தீண்டாமை கோட்பாடாக அது மாற்றமுற்று வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. சமூகத்தில் எண்ணற்ற சாதிப்பிரிவுகள் வகுப்பு வாதத்தை தோற்றுவித்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் சாதியினர் இவர்களை புறக்கணித்து ஒதுக்கும் சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக உள்ளது.

உபநிடத கருத்துப்படி உண்மை கூறினான் என்பதால் சத்தியகாமன் அந்தணன் எனக் கூறி அவனது பிறப்பையும் பார்க்காது கற்பிக்க முன்வந்தார் குரு. நாலடியாரிலும் கற்றவரும், நல்லொழுக்கமுடையவருமே உயர் குடி பிறந்தார் எனக் கூறுகின்றன. ஆனால் இன்றைய சமூகத்தில் கற்றவராயினும், உயர் நிலையிலிருப்பவராயினும், நல்லொழுக்கம் மிகுந்தவராயினும் தாழ்குலத்தவர் என்ற காரணத்தால் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர் அனேகர். இவ்வாறு ஒதுக்கப்பட்டவர்கள் மனவிரக்கியடையவதால் இன்று சமூகத்தில் சாதி பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. அவர்களது வாழ்வு பாழடைகிறது. இதனாலேயே சமூகத்தை சீர்திருந்த ''சாதிகள் இல்லையடி பாப்பா குல தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'' என்று பாரதியாரும் அகிம்சா மூர்த்தியாகிய காந்தி சாதிக் கோட்பாட்டை வன்மையாக மறுக்கிறார். இவர் சூத்திரர்களை ''ஹரிஜனங்கள்'' அதாவது கடவுளின் குழந்தைகள் என்கிறார். நவீன இந்தியாவிலும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றி சாதிக் கோட்பாட்டை நீக்க வேண்டும் என போராடுகின்றன.

மனிதனுக்கு மன அமைதியையும் சாந்தியையும் அளிக்கும் ஓர் இடமாக கோயில் உள்ளது. இறைவன் எவ்வுயிர்களையும் பாரபட்சமின்றி ஒன்றாகவே படைக்கிறார். ஆனால் சமூகத்தில் வாழும் உயர் குடிகளே சாதிகள் பல கூறி கோயிலையும் தமது சொத்தாக்கி உள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது. மன அமைதி பெறவரும் சமூகத்தின் ஒரு சாராரை தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி கோயிலினுள் செல்ல விடாதும், கோயில் விடயங்களில் பங்கேற்க விடாதும் தடுத்து தாமே அவர்களின் எஜமானர்களாக கோயிலில் பங்காற்றுகின்றனர். இவ்வாறு ஒடுக்கி அடக்கி இம்சிப்பதால் அவர்களில் பெரும்பாலானோர் சாதியமைப்பையும் அதனைக் கூறும் இந்து மதத்தையும் வெறுக்கின்றனர்.

இன்றைய உலகில் மத மாற்றம் எனும் ஒரு அம்சத்தை நோக்கின் இந்து மதத்தவரைப் போன்று வேறெந்த மதத்தவரும் மத மாற்றத்திற்கு உள்ளாவதில்லை. இலங்கையில் யாழ்ப்பாண சமூகத்தவராயினும் சரி, மலையக சமூகத்தவராயினும் சரி ஏராளமானவர்கள் எமது இந்து மதத்தை விட்டு வேற்று மதத்திற்கு மாறுகின்றனர். இன்றும் மாறிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு ஆரம்பத்தில் கல்வி பெறுவதும் உயர் பதவியைப் பெறுவதும் காரணமாக அமைந்தாலும் தற்போதைய காரணம் சமூகத்திற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவர்களும் இந்து சமயத்தை வளர வைப்பவர்களுமே சாதி என்ற பெயரால் மக்களைப் புறக்கணிப்பதுமாகும். எந்தவொரு மனிதனும் தான் சமூகத்தில் கௌரவமாக வாழவே விரும்புவான். பிறரால் புறக்கணிக்கப்படுவதை விரும்ப மாட்டான்.

எமது சமூகத்தில் சாதிப்பாகுபாடு எனும் கருத்து களைய முடியாதபடி ஊறியிருப்பதை காணமுடிகிறது. இவ் அடிப்படைக் கோட்பாடு மாறும் வரை எமது இந்து மதத்தில் பிற மதங்கள் ஊடுருவுதையும் சமூக சீர்கேட்டையும் யாராலும் தடுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேத இலக்கியமும் அவை பிரதிபலிக்கும் வாழ்வியல் அம்சங்களும்

செல்வி. வே. தங்கமணி, இந்து சமயப்பிரிவு, விடுகையாண்டு

இந்திய இலக்கியங்கள் அனைத்துக்கும் அடி நாதமாக அமைந்து இலக்கியச் செழுமைப் பயந்து இதய கங்கையாக விளங்கும் இலக்கியங்கள் வடமொழி இலக்கியங்களாகும். இவ் வடமொழி இலக்கியங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. வேத இலக்கியம்.
2. லௌகீக இலக்கியம்.

வேத இலக்கியம் எனும் போது ரிக், யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களும் அவற்றோடு தொடர்புடைய ஆரணியங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள் என்பனவும் அடங்குகின்றன. லௌகீக இலக்கியம் என்பது இராமாயண, பாரத இதிகாசங்களும், பாகவதம், ஹரிவம்சம் முதலிய பதினெண் புராணங்களும், காளிதாசர், பாசர், பவபூதி, தண்டி, மகாகவி, பாணர், ஹர்ஷர் முதலிய மகாவிஞர்களின் படைப்புகளான காவிய நாடகங்களுமாகும். இத்துடன் இலக்கியத்தோடு தொடர்புடைய அலங்கார சாஸ்திரம் எனப்படும் அணி நூலும் இலக்கியத் திறனாய்வு நூல்களும் இவ்வகையில் அடங்கும்.

வேத இலக்கியங்கள் பற்றி நாம் இங்கு நோக்குவோமாயின் இவ்விலக்கியங்கள் உலகின் முதல் இலக்கியங்களாக மதிக்கப்படுவது வடமொழி வேதங்களாகும். குறிப்பாக ரிக் வேதமே உலக முதல் இலக்கிய நூலாக விளங்குகிறது. இவற்றை ''சம்ஹிதை'' என்பர். ரிக் வேதக் கவிதைகளை ரிக் என்றே அழைக்கப்படுகின்றது. இவை மந்திரங்கள் எனப்படும். பல்வேறு ரிஷிபுங்கவர்கள் (முனிவர்கள்) தரிசித்த கவிதைகளே அவை. இறையருள் கொண்டும் இறைமை வேட்கையிலும் எழுந்த இனிய பாசுரங்கள் அவை. இயற்கையையே இறைவனாகக் கண்ட முனிவர்களின் இதயத்தினின்றும் எழுந்த இன்னிசைப் பாடல்கள் அவை.

ஆதிமனிதர்களின் கற்பனையில் உதித்த கவிதைகள் மட்டுமன்று மனித குலம் விரிவடைந்து நாகரிகமும் பண்பாடும் பெற்று தத்துவம், விஞ்ஞானம், கவிதை, விமர்சனம், பொருளாதாரம், சமூகம் முதலிய பல்வேறுதுறை சார்ந்த சிந்தனைகளின் மூலக் கருக்களைக் கொண்ட மூவாதபேரிலக்கியமாக வேத இலக்கியங்கள் எம் மத்தியில் உலாவுகின்றன.

மனித குல சரித்திரத்தின் சுவடுகளைப் பதிவு செய்துள்ள இப்பேரிலக்கியமே வரலாற்றின் மூல ஊற்றுமாகும். ரிக் வேதப் பயிற்சி மூலமாகவே மொழியியல் தோன்றியது. கிரேக்க, லத்தீன் மொழிகளோடு சமஸ்கிருதமும் ஒரே மூலமொழியிலிருந்து வந்தது என்ற உண்மை புலனாயிற்று. பழைய தத்துவ ஞானங்களின் ஒப்பீட்டாய்வுக்கும் வழிகோலியது. ரிக் வேதமே இந்தியப் பண்பாட்டின் அடிப்படையான ஆதார சுருதியாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ரிக் வேத காலம் கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். பாலகங்காதர திலகர் போன்றோர் கி.மு ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ரிக் வேதம் தோன்றியது என நிறுவியுள்ளனர். அதற்கும் முற்பட்டது எனக் கருதுவோரும் உளர்.

வேத இலக்கியம் சிந்து நதிப் பாயும் பாஞ்சாலம், கங்கைநதிப் பாயும் வட மாநிலங்களில் ''ஆரியவர்த்தம்'' எனப்பட்ட விந்திய மலைக்கு வட பகுதியில் விளைந்ததாக அகச்சான்றுகள் விளக்குகின்றன. அமைதியான ஆரணியகங்களில் வசித்த முனிவர்கள், நதிக்கரை நாகரிகங்களை உருவாக்கிய மக்களின் இயல்பான வாழ்க்கைப் போக்கையும், வாழ்வதற்கு இடையூறாக இருந்த மனிதர்களோடு போரிட்டபோது எழுந்த பிரச்சினைகளும் அப்பிரச்சினைகளைத் தீர்க்க அவர்கள் இயற்கையின் அற்புத சக்திகளை நாடியதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விலக்கியம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. உழவு, வணிகம், தொழில், அரசியல், பொருளாதாரம், சமுகம், திருமணம் முதலிய வாழ்வியற் சடங்குகள், கலைகள், தத்துவ நோக்கு முதலிய பல அரிய செய்திகளைத் தன்னுள்ளே வேத இலக்கியம் கொண்டிருக்கின்றது.

வேத இலக்கியம் பிரதிபலிக்கும் மக்களின் வாழ்வியல் அம்சங்களை சற்று நோக்குவோமாயின் ஆரம்பத்தில் இயற்கையை கண்டு பயந்த மக்கள் அச்சக்திகளுக்கு தெய்வீக உருவைக் கொடுத்து அவற்றை தம் கடவுளர்களாக வழிபட தலைப்பட்டனர். உதாரணமாக காற்றுக்கு வாயுவையும், மழைக்கு வருணனையும் வழிபட்டனர். வழிபடும் போது ஓர் எதிர்ப்பார்ப்பை அத் தெய்வங்களிடமிருந்து எதிர்பார்த்தே வேண்டுகின்றனர். நான் உனக்கு சில பண்டங்களைத் தருகிறேன், நான் வேண்டுவதைத் தந்தருளும் என்ற வகையில் ஒரு பண்டமாற்று முறையிலே தங்கள் வழிபாட்டை மேற்கொண்டு வந்தனர்.

இந்த உலகத்தை தாம் வணங்கும் கடவுளே படைத்துள்ளான் என நம்பினர். தங்களுடைய கடவுள் மற்றவர்களுடைய கடவுளை விட திறமை வாய்ந்தவர் என்று காட்டுவதற்காக இம்மக்கள் உலகின் தோற்றத்தை அவரவர் கடவுளர்களிடம் ஒப்படைத்தனர்.

போதை மருந்தின் போதையில் அவர்களுக்கேற்பட்ட அனுபூதிகளை உலக ரகசியம் பற்றிய அறிவாக நம்பினர். எனினும் இது தொடர்பான தத்துவ ஆராய்ச்சியிலும் வேத கால மனிதன் இறங்கினான் என்றும் கூறுவதுண்டு. ரிக் வேதத்தில் 'சமுத்திரத்திலுள்ள தண்ணீர் உலகில் முதன் முதலாகப் பிறந்தவனும் பூமியைப் படைத்தவனுமான 'விஸ்வகர்மா' தோன்றியதாகவும் கூறப்பட்டுள்ளது. ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சூரியன் பூமியைச் சுற்றி சஞ்சரிப்பதாக நம்பினார். ராகு விழுங்குவதாலேயே சந்திர கிரகணம் உண்டாவதாக அதர்வ வேத இலக்கியம் கூறுகிறது.

மேலும் வேத கால மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகளில் சொர்க்கம் என்ற ஒரு விதமான நம்பிக்கையும் கொண்டிருருந்தனர் எனக் கூறப்படுகின்றது. மனிதன் மரணத்தின் பின் சொர்க்கத்தை அடைவான் என்றும் அங்கு அவன் உணவு உண்டு சோமரசம் பருகுவான் எனவும் நம்பினர். யாகங்கள் நடத்துபவன் மட்டுமே சொர்க்கத்தை அடைவான் என பார்ப்பனர்கள் பிரசாரமும் செய்துவந்தனர் எனக் கூறப்பட்டது. பார்பனர்களுக்கு தானம் வழங்காதவர் சொர்க்கத்தை அடையமாட்டார்கள் என்று பயம்காட்டினர். மக்களை அவிப்பொருள் அக்கினியில் அர்ப்பணிக்கப்படும் போது புகைப்படலம் அவற்றை தேவர்களுக்கு கொடுக்கும் என நம்பினர். இறந்த உடலைத் தீயில் எரிக்கும் வழக்கம் இந்த நம்பிக்கையிலேயே உருவானதாக இருக்கலாம். மறுபிறவி கொள்கை இந்தியாவில் நிலவி வந்ததற்கு கிரேக்க சக்கரவர்த்தியான அலெக்சாண்டரின் படையெடுப்புக்கு (கி.மு.325) முன்பான தடயங்கள் எதுவுமில்லை. அக்காலத்தில் கிரிஸில் நிலவிய சில பழைய நம்பிக்கைகளின் தொடர்ச்சியாகவே மறுபிறவி நம்பிக்கை இங்கு பரவ ஆரம்பித்தது. வேள்விகளையும், யாகங்களையும் செய்பவர்கள் தான் நிரந்தரமாக சொர்க்கத்தில் வாழ்வர். வேள்வியாகங்களை பார்க்க கூட வாய்ப்பில்லாத சூத்திரர்களுக்கோ சொர்க்கம் புறக்கணிக்கப்பட்டது.

வேத கால இலக்கியம், பிரதிபலிக்கும் மக்கள் மூடநம்பிக்கைகளில் மூழ்கியிருந்தனர். கந்தர்வர்கள், அப்சரஸ்கள் போன்றோரைக் காண்பது கெட்ட சகுனங்கள் என கருதினர். கூடாத செயல்களுக்கும் மந்திரவாதங்களுக்கும் மனித வாழ்க்கையை கட்டுப்படுத்தும் சக்தி உண்டென்றும் வேதங்கள் கூறின. அதர்வ வேதம் முழுவதிலும் இத்தகைய மந்திர வாத நம்பிக்கை நிறைந்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத இலக்கியம் பிரதிபலிக்கும் மக்கள் வைத்திய சாஸ்திரம் பற்றியும் அறிந்திருந்தனர். பல்வேறு மூலிகைகளை அறிந்து வைத்ததுடன் அவற்றை எவ்வாறு நோய்க்கேற்றாற்போல் பயன்படுத்துவது பற்றியுமறிந்திருந்தனர். இக்கால மக்கள் எல்லாம் பேய் பிசாசுகளாளேயே உண்டாகின்றன என நம்பி இவ்வாறு ஏற்பட்ட நோய்களை மந்திரங்களால் நீக்க முடியும் என நம்பினர். இவ்வேத மனிதன் நோய்களுக்கும் மனித வடிவை கொடுத்தான் என அறியக்கிடக்கிறது.

கடவுளர்களை துதிக்கவும் அதை தம்வயப்படுத்தவும், பகைவர்களை அழிக்கவும், அப்பகைவர்களின் செல்வங்களைக் கைப்பற்றவும் மந்திரங்களால் இயலும் என்றும் குடும்ப வாழ்வு திறம்பட அமையத்தக்க வகையில் பிரச்சினைகளுக்கேற்ற வகையில் மந்திரங்களை உபயோகித்து அவற்றை திருப்திப்படுத்தி வாழ்க்கையை இனிதாக்கி வாழ்ந்தான்.

மேலும் வேத இலக்கியம் பிரதிலிக்கும் மக்கள் சமூதாயத்தில் வர்ணப்பாகுபாடு முக்கியப்படுத்தப்பட்டவொன்றாக அமைவதுடன் பிராமணர்கள், சத்திரியர்கள், வைஷியர்கள், சூத்திரர்கள் மிகவும் அடிமைச் சமூகமாகவே அக்கால் சமூக அமைப்பில் காணப்படுகின்றனர் சமூகத்தில் பிராமணர்களே முதன்மையானவர்களாகவும் நாட்டின் அரசியலில் கூட செல்வாக்கு மிகுந்தவர்களாகவும் காணப்பட்டனர். எனவே தொழில் ரீதியாக சமூக அமைப்பை வகை செய்த போதிலும் அவை தவறான எண்ணங்களை மனித உள்ளங்களில் வேரூன்றச் செய்தது எனலாம்.

வேத இலக்கியம் பிரதிபலிக்கும் சமூதாய நிலையை இன்றைய கால கட்டத்தோடு ஒப்பிட்டு நோக்குவோமாயின் தற்கால மனிதனின் நாகரிகம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞான மயமான வாழ்க்கைமுறை எனும் இவற்றிலெல்லாம் வேதங்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை. பழங்கால மனிதனின் சிந்தனைகளும் நம்பிக்கைகளும் வெறும் மாயத் தோற்றங்களும், பயமும், பீதியும் கலந்த கலவையே வேதங்கள், வேத காலத்திலுள்ள கடவுள் கற்பனைகளும், லௌகீக உணர்வுகளும் அக்காலத்தில் வாழ்ந்த மனிதனின் பக்குவமற்ற சிந்தனைகளையே வெளிப்படுத்துகின்றன. வேதங்கள் மூட நம்பிக்கைகளுக்கும் இன்று தலைவிரித்தாடும் சாதிய பாகுபாட்டுக்கும் வித்திட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது. அடிமைச் சமூகத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்துள்ளது பழிக்குப் பழி, வஞ்சத்துக்கு வஞ்சம் எனும் கொடூர எண்ணங்களை மக்கள் மனதில் விதைத்தது என்பன போன்ற குற்றச் சாட்டுக்களும் வேத இலக்கியங்கள் மீது சாய்கின்றன.

எது எவ்வாறாயினும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் மனிதன் சிந்தித்த முறையும் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை விளக்குவதற்கான வரலாற்றுக் குறிப்புகள் வேதங்களில் உள்ளன. வேதத்தின் மனோகரமான இலக்கிய போதம் தலைசிறந்தது. மொழியையும் அதன் இலக்கண வரம்பையும் வரலாற்றையும் பற்றி படிக்க விளைகின்ற மாணவர்கள் வேதங்களைப் படிப்பதால் பலன் கிட்டும் என்றும், பழைய சமூக வாழ்க்கையும், வழிபாட்டம்சங்களையும், ஆசாரங்களையும் பற்றி படி[illegible]ளுக்கு பெரும் கருவூலங்களாக திகழ்ந்து வழிகாட்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மாண்டுபோன உயிரினங்களின் எலும்புகளின் துண்டுகளைப் பாதுகாக்கவும் ஆராயவும் முற்படுவது போல் அறிவார்ந்த ஆராய்ச்சியாளர்களுக்குப் படிக்க ஏராளமான பழைய விடயங்கள் வேத இலக்கியங்களிலுள்ளன என்று கூறிச் செல்வதில் தவறேதுமில்லை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தை வளர்த்த செம்மல்கள்

தொகுப்பு – இரா. ஸ்ரீவத்ஸசர்மா (மீசாலை), விடுகையாண்டு.

மானிடராய் பிறந்து, செயற்கரிய செயல் புரிந்து சிவபக்தியினால் பெருமை பெற்று, சிவனடியார்களாகி இன்றும் ஆலயப் பிரகாரங்களில் தெய்வமாக நின்று அருள் பாலித்து வரும் 63 நாயன்மார்களின் பெயர், விபரம்

| நாயன்மார்கள் | குலம் | ஊர் | பிறந்தமாதம் |
|---|---|---|---|
| 1.அதிபத்த நாயனார் | நுளையர் | நாகப்பட்டினம் | ஆவணி |
| 2.அப்பூதியடிகள் | அந்தணர் | திங்களூர் | தை |
| 3.அமர்நீதி நாயனார் | வணிகர் | பழையாறை | ஆனி |
| 4.அரிவட்டாய நாயனார் | வேளாளர் | கணமங்கலம் | தை |
| 5.ஆனாய நாயனார் | இடையர் | மங்கலவூர் | கார்த்திகை |
| 6.இசைஞானியார் | அந்தணர் | திருநாவலூர் | சித்திரை |
| 7.இடங்கழிநாயனார் | அரசர் | கொடும்பாளூர் | ஐப்பசி |
| 8.இயற்பகை நாயனார் | வணிகர் | காவரிப்பூம்பட்டினம் | மார்கழி |
| 9.இளையான்குடிமாறன் | வேளாளர் | இளையான்குடி | ஆவணி |
| 10.உருத்திரபசுபதி | அந்தணர் | திருத்தலையூர் | புரட்டாசி |
| 11.எரிபத்த நாயனார் | தெரியவில்லை | கருவூர் | மாசி |
| 12.ஏயர்கோன்கலிக்காமர் | வேளாளர் | திருப்பெருமங்கலம் | ஆனி |
| 13.ஏனாதிநாதநாயனார் | சான்றார் | எயினனூர் | புரட்டாதி |
| 14.ஐயடிகள் காடவர் | அரசர் | காஞ்சீபுரம் | கோன் ஐப்பசி |
| 15.கணநாத நாயனார் | அந்தணர் | சீர்காழி | பங்குனி |
| 16.கணம்புல்ல நாயனார் | தெரியவில்லை | இருக்கு வேளூர் | கார்த்திகை |
| 17.கண்ணப்ப நாயனார் | வேடுவர் | உடுப்பூர் | தை |
| 18.கலிகம்பநாயனார் | வணிகர் | திருப்பெண்ணாடம் | தை |
| 19.கலியநாயனார் | செக்கார் | திருவெற்றியூர் | ஆடி |
| 20.சேரமான் பெருமான் நாயனார் | அரசர் | கொடுங்கோலூர் | ஆடி |
| 21.கழற்சிங்க நாயனார் | அரசர் | தொண்டைநாடு | வைகாசி |
| 22.காரி நாயனார் | தெரியவில்லை | திருக்கடவூர் | மாசி |
| 23.காரைக்கால் அம்மையார் | வணிகர் | காரைக்கால் | பங்குனி |
| 24.குங்குலியக்கலய நாயனார் | அந்தணர் | திருக்கடவூர் | ஆவணி |
| 25.குலச்சிறை நாயனார் | தெரியவில்லை | மணல்மேற்குடி | மாசி |
| 26.கூற்றுவநாயனார் | அரசர் | களந்தை | ஆடி |
| 27.கோட்செங்கட் சோழ நாயனார் | அரசர் | சோழநாடு | மாசி |
| 28.கோட்புலி நாயனார் | வேளாளர் | நாட்டியத்தான்குடி | ஆடி |
| 29.சடைய நாயனார் | அந்தணர் | திருவாவலூர் | மார்கழி |
| 30.சண்டேசுவர நாயனார் | அந்தணர் | திருச்சேய்ஞலூர் | தை |
| 31.சக்தி நாயனார் | வேளாளர் | வரிஞ்சியூர் | ஐப்பசி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாயன்மார்கள் | குலம் | ஊர் | பிறந்தமாதம் |
|---|---|---|---|
| 32.சாக்கிய நாயனார் | வேளாளர் | திருசங்கமங்கை | மார்கழி |
| 33.சிறப்புலி நாயனார் | அந்தணர் | திருஆக்கூர் | கார்த்திகை |
| 34.சிறுத்தொண்ட நாயனார் | மாமர்த்திரர் | திருச்செங்காட்டக்குடி | சித்திரை |
| 35.சுந்தரமூர்த்தி நாயனார் | ஆதிசைவர் | திருநாவலூர் | ஆடி |
| 36.செருத்துணை நாயனார் | வேளாளர் | தஞ்சைவூர் | ஆவணி |
| 37.சோமாசிமாற நாயனார் | அந்தணர் | திருஅம்பர் | வைகாசி |
| 38.தண்டியடிகள் நாயனார் | தெரியவில்லை | திருவாவூர் | பங்குனி |
| 39.திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் | ஏகாலியார் | காஞ்சீபுரம் | சித்திரை |
| 40.திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் | அந்தணர் | சீர்காழி | வைகாசி |
| 41.திருநாவுக்கரசு நாயனார் | வேளாளர் | திருவாமூர் | சித்திரை |
| 42.திருநாளைப்போவார் | புலையர் | ஆதனூர் | புரட்டாதி |
| 43.திருநீலகண்ட நாயனார் | குயவர் | சிதம்பரம் | தை |
| 44.திருநீலர்கண்டயாழ்ப்பாணர் | பாணர் | திரு எருக்கத்தம்புலியூர் | வைகாசி |
| 45.திருநீலக்க நாயனார் | அந்தணர் | சாத்தமங்கை | வைகாசி |
| 46.திருமூலய நானார் | இடையர் | சாத்தனூர் | ஐப்பசி |
| 47.நமிநந்தியடிகள் | அந்தணர் | ஏமப்பேரூர் | வைகாசி |
| 48.நரசிங்கமுனையரையர் | அரசர் | நடுநாடு | புரட்டாதி |
| 49.நின்றசீர் நெடுமாற நாயனார் | அரசர் | மதுரை | ஐப்பசி |
| 50.நேச நாயனார் | சாலியர் | காம்பீலி | பங்குனி |
| 51.புகழ்த்துணை நாயனார் | அந்தணர் | ஸ்ரீவில்புத்தூர் | ஆவணி |
| 52.புகழ்ச்சோழ நாயனார் | அரசர் | உறையூர் | ஆடி |
| 53.பூசலார் நாயனார் | அந்தணர் | திருநின்றவூர் | ஐப்பசி |
| 54.பெருமிழலைக்குறும்பர் | தெரியவில்லை | பெருமிழலை | ஆடி |
| 55.மங்கையர்க்கரசியார் | அரசர் | மதுரை | சித்திரை |
| 56.மானக்கஞ்சாற நாயனார் | வேளாளர் | கஞ்சாடூர் | கார்த்திகை |
| 57.முருக நாயனார் | அந்தணர் | திருப்புகலூர் | வைகாசி |
| 58.முனையடுவர் நாயனார் | வேளாளர் | திருநீரூர் | பங்குனி |
| 59.மூர்க்க நாயனார் | வேளாளர் | திருவேற்காடு | கார்த்திகை |
| 60.மூர்த்தி நாயனார் | வணிகர் | மதுரை | ஆடி |
| 61.மெய்ப்பொருள் நாயனார் | அரசர் | திருக்கோவிலூர் | கார்த்திகை |
| 62.வாயிலார் நாயனார் | வேளாளர் | திருமயிலை | மார்கழி |
| 63.விறன்மிண்ட நாயனார் | வேளாளர் | செங்குன்றூர் | சித்திரை |

**இறைவனை அறிந்து உணர்வதே உண்மையான கல்வி**


**இந்து மதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியும் பண்ணிசையும்

ஏ.கஜேந்திரா, ஆரம்பபிரிவு-1, விடுகையாண்டு.



மனிதன் பூமியிற் பிறந்த நாள் தொடக்கம் தன்னிலும் மேலான ஏதோ ஒரு பொருள் உண்டு என்பதை உணரத் தலைப்பட்டு இறை வழிபாடு என்பதில் நிலைத்தான். ஒவ்வொரு மனித கூட்டமும் தம் அனுபவ சூழ்நிலை வயப்பட்டு ஒவ்வோர் வித வழிபாட்டை தமக்கென ஆக்கிக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளான். மனிதனின் சிந்தனையாற்றலின் முன்னேற்றத்தினால் ஞானோதயம் பெற்று,ஒவ்வொரு மதமும் உருவாகி அவற்றிற்குரிய தனித்துவமான செய்முறைகளும், கோட்பாடுகளும் உண்டாகின. இவ்வாறே பல ஞானிகளும், மகான்களும் அப்பரம்பொருளின் அருள்பெற்று மக்களை தத்தம் வழியில் ஆற்றுப்படுத்தி வந்துள்ளனர்.

எல்லா மதங்களிலும் கூறப்பட்டு, பேணப்பட்டு வந்த ஒன்று - அப்பரம்பொருளைத் துதிப்பதற்கு மனம், மொழி, மெய்களால் அழுது, உருகி, மனதொன்றி வேண்டுதல் செய்வதே ஆகும். எல்லா மதங்களிலும், அவற்றிற்குரிய புனித நூல்களும், துதிப்பாடல்களும் உள்ளன. எமது சமுதாயத்தில் நிகழ்வுறும் பிறப்பு, வளர்ப்பு இணைப்பு, உயர்வு, இறப்பு என்னும் எல்லாக் காலங்களிலும் இடம் பெறுவது பாடல். இந்நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற உணர்ச்சிகளும் வேறுபடும். இத்தகைய உணர்ச்சிகளுக்கு அமைவான பாடல்களும், இசை வேறுபாடும் இயல்பாகவே தோன்றி வழக்கிற்கு வந்தன. மகிழ்ச்சி, பூரிப்பு, ஆறுதல், துன்பம், வேண்டுதல் என்ற பலவித உணர்ச்சி வேறுபாடுகளில் பரம்பொருளை நம்பி, அதை நாடி வேண்டுதல் செய்தலே பக்திப் பாடல் ஆகிறது. எமது பக்திப் பாடல்களின் இசையே பண். அதனால் அது பண்ணிசை ஆகிறது.

தமிழ் மொழியில் உள்ள பக்தி இலக்கியமே மேலானது என்பர் பிறமொழி அறிஞர். மனமொன்றி அழுது அரற்றிக் கூத்தாடி தன்னை மறந்து பாடியுள்ளவையே தமிழரின் பக்தி சொட்டும் பண்ணார்ந்த திருமுறைகள். இறைவன் மேல் நாட்டம் மேலிட்டு எந்த உருவத்தைச் சிந்தையில் நிறுத்தி வழிபட்டார்களோ அந்தந்த உருவத்தில் தோன்றி இவ் அருளாளருக்குக் காட்சியும் தந்தான் இறைவன். ஆகையால் இத்திருமுறைப்பாடல்கள் மந்திரங்கள்-தமிழ் வேதங்கள் எனப் பெயர் பெற்றன. பாடுவோரையும், கேட்போரையும் இறையுணர்வில் ஈடுபடச்செய்யும் ஆற்றல் இத்திருமுறைகளுக்கு உண்டு. இவற்றையே சைவத்திருமுறைகள் என்கிறோம்.

''திரு'' என்ற சொல் செல்வத்தைக் குறிக்கின்றது ஆனால் அதன் உண்மைப் பொருள் சிவப்பரம் பொருளையும், சிவத்தோடு இணைபிரியாதிருக்கின்ற அருளாகிய சக்தியையும், அச்சிவ சக்தியின் துணையால் சான்றாக, ''திருவே என் செல்வமே''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அப்பர் சுவாமிகள் பாடும் பொழுது திரு-சிவபொருமானைக் குறிப்பதைப் பார்க்கலாம். ''சென்றடையாத திருவுடையானை என்றவிடத்து அருளாகிய சிவ சக்தியைக் குறிப்பதைக் காணலாம். ''சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்'' என்றவிடத்து அச் சொல் பேரின்பத்தைக் குறிப்பதை உணரக் கூடியதாகவுள்ளது.

முறை என்ற சொல் பல்பொருள் கொண்டதெனிறும், இங்கே மனக்கோணலை நீக்கி வாழ்க்கையை ஒழுங்கு பண்ணும், சீர் செய்யும் நூல் என்பதையே குறிக்கின்றது.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் ஆகும். இறையணைத்தும் அருள் வழிப்பட்டமையினால் வாயால் ஓதப் பெறுவனவாகும். இவற்றை திருக்கோயில்களிலும் மற்றைய இடங்களிலும் முறையே ஓதுபவர்கள், ஓதுவார்கள் எனப் பெயர் பெறுவர்.

எமது குறிக்கோளாகிய இறையருளைப் பெறுவதற்கு ஒருமித்த பான்மையாக ஒரு ஒழுங்கு முறையில், அதாவது நீரைப் பாய்ச்சும் போது வாய்க்கால் வழியே விட்டு பயிர்களைச் சென்றடைய வைப்பது போன்று அந்தந்தப் பாடலுக்கு ஏற்ற பண் அமைத்தவர் ஞான சம்பந்தருக்கு யாழ் வாசித்த திருநீல கண்ட யாழ்ப்பாணரின் வழிவந்த ஒரு இசைவல்ல பெண்மணியாவார். இவர் ஞானசம்பந்தர் காலத்திற்கு ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு பிந்தி வாழ்ந்தவர்.

இறைவனோடு மனம் ஒன்றி வழிபாட்டில் இணைவதற்கு ஏற்றவையாகவும், இலகுவாகக் கற்பிப்பதற்கும், கற்பதற்கும் உகந்ததாகவும் இவ்வருட்பாடல்கள் பண்ணமைக்கப்பெற்று ஓதப் பெறுபவை. இப்பண்களுக்கு வெவ்வேறு கட்டளைகளும் உண்டு. இவை தகுந்த குரு மூலம் கற்கப்பட வேண்டும். இத்திருமுறைகளை விரும்பியவாறு ஓதுதல் பெரிய தவறு. இவற்றிற்குரிய பண் முறையை மாறிப் படிப்பதும் குற்றமாகும். பண்ணோடு ஓதப்பட்டவற்றை இறைவனே விரும்பிக் கேட்டதாக நாயன்மார் நால்வருடைய வரலாறுகளிலிருந்தும் நாம் அறிகிறோம்.

ஜனரஞ்சகமாகப் பாட வேண்டும் என்ற கருத்து பலரிடமும் உண்டு. இத்திருமுறைகள் பக்தியை அடிப்படையாகக் கொண்டவை. வேறு சுமைகளுக்கு இங்கே இடமில்லை. ஆனால் பக்திச்சுவை வெளிப்பட இவற்றை மனமுருகி இவற்றிகுரிய பண்களிற் பாடலாம். தாளம், சுருதி வழுவாது உருகிப்பாடும் போது நாம் விரும்பும் இனிமை சுவை வெளிப்படும். திருமுறைகளிற் சிலவற்றை மடக்கிப் பாடுதல் என்னும் முறை, மற்றும் திரும்பத் திரும்ப பொருளுக்கேற்ற இசையுடன் ஏற்றம், இறக்கம், முதலியவை ஜனரஞ்சத்தை தருவனவாகும். திருமுறைகளைப் பாடும் போது இராகம் பாடுவது ஸ்வரம் பாடுவது தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

ஆகவே பக்தியுடன் இசைக்கவும் மனமொன்றி இறைவனை வழிபட்டு அவரது பேருளைப் பெறவுமே பண்ணிசை சாதனமாக அமைந்துள்ளது. என்பதை நாம் மறத்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிருதிருமுறைகள்

செல்வி.ஆர்.சந்திரா தமிழ்ப்பிரிவு, முதலாம் வருடம்

"உலகெலாம் உணர்ந்து ஓதுவதற்கு அரியவன்" இவ்வாறான அரியவனாய் இருந்து ஆட்சி புரிகின்றவனின் புகழினைப் பாடியுள்ளதே பன்னிரு திருமுறைகளாக வகுத்து தொகுக்கப்பட்டுள்ளன.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலே பிரதான இரண்டான இயலையும் இசையையும் தன்னோடு கொண்டு புகழ் பூத்து நிற்கின்றது. தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பிரபந்தங்கள் எனும் பதினொரு திருமுறைகளினையும், அநபாய சோழனின் முதலமைச்சராக வந்த சேக்கிழார் சுவாமிகளினால் அருளிச் செய்யப்பட்ட பெரிய புராணத்தினையும் சேர்த்து பன்னிரெண்டு திருமுறைகளாக தோன்றி திளைத்திருக்கின்றது.

அருளின் வெளிப்பாடு கலைகளாக பரிணமிக்கும் போது அது ஆன்மீகம் கலந்ததாகின்றது. மானுடனின் முயற்சிகள் அனைத்தும் ஒரு காலவரையரைக்குள் ஸ்தம்பித்து விடக்கூடியன. ஆனால் அதைவிடவெல்லாம் தாண்டி ஆய்விற்கு உற்படுத்தப்பட முடியாததொரு துறையாக விளங்குவது சமயத்துறையே இப்படிப்பட்ட சமயத்துறையின் புகழினையும், பெருமைதனையும் தொன்மை, மகிமை, அற்புதங்கள் யாவற்றையும் அறிய எமக்கு கிடைத்த சாதனங்களில் ஒன்றே திருமுறைகள் என்றால் அது மிகையாகாது.

பண்ணிசை எனப்படும் திருமுறைகள் முத்தமிழிரண்டு கொண்டு அருட்களஞ்சியமாக விளங்குகின்றது. பண்ணோடு கலந்து பாடப்பட்ட திருமுறைகள் பேரின்பம் பயப்பனவாம்.

அருளாலர்களது வாழ்வு வேட்கை, வளம், அற்புதங்கள், தத்துவம், தலயாத்திரை என்பவை அனைத்தையும் ஆராய்ந்து நோக்குமிடத்து மனித வாழ்வினை உணர்த்துவது எது? மனிதப் பண்பாட்டினை செப்பனிடுவது எது? என்று வினாவினால் அதற்கான விடையினைப் பகிர்வது திருமுறைகளே! சமயக்குரவர்கள் நால்வராலும் வாழ்வின் இன்ப நிலையிலிருந்து திருமுறைகளை அருளவில்லை என்பது திண்ணமாகின்றது. உலகிலேயுள்ள துன்பங்கள் அவலங்கள் என்பவற்றினையும் பண்ணோடு வைத்து பாடியுள்ளனர்.

இருபத்து மூன்று பண்களில் திருமுறைகள் பாடியருளியுள்ளனர். இப்பண்கள் தோன்றக் காரணமாயிருந்தவை திருத்தலங்களே. இத்திருத்தலங்கள் இறைவன் எழுந்தருளியிருக்கும் சந்நிதிகளே திருத்தலங்களின் சிறப்பு இறைவனின் திருமேனியினை சுமந்து அன்பு அருள் சுரக்கும் சைவாலயங்கள் பற்றி பண்ணிசைப்பாடல்களிலே பட்டியலிட்டிருப்பதைக் காணமுடிகின்றது. சிவனின் திருவிளைாடல்களனைத்தையும் குறிப்பதோடு இயற்கை வளம், மூர்த்தி, தலம், தீர்த்த சிறப்புக்களும் திருமுறைகளிலே அடங்குகின்றன.

ஓசைமூலம் காதுகளினுட் சென்று பேரின்பத்தினை ஊட்டவல்லது. அதற்குகாரணம் இயலோடு ஒட்டியுறைந்துள்ள இசையேயாகும். இசைக்கு உருகாதார் எவருமில்லை ஆனாலும் பண்ணிசையானது பக்திலயிப்பை சுரக்கும் தன்மை வாய்ந்தது. இறையுணர்வுடன் கூடிய குறிக்கோளுடன் அமைந்த வாழ்வினை வாழத் தூண்டுவது திருமுறைகளே. இல்லறத்தை அனுபவித்துக் கொண்டே துறவறத்தினை நாட ஞான பாதையினை திறந்துவிடவல்லது திருமுறைகளே. மொழிவளம், கருத்துவளம், சிந்தனைவளம் யாவற்றினையும் கொண்டு ஓதுவார், பாடுவார் சிரமமின்றி பாடக் கூடிய எளிமையுடயது திருமுறைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழோடு இசைக்கலந்து வர தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்'' திருமுறைகள் பாடியருளியுள்ளனர். எண்குணத்தான் சிறப்பு இயல்புகளையும் கொள்கின்றது. ''பித்தா'' எனவும் ''உடையாய் தருமே இதுவென் மெலிவே'' என்றும், சீற்றத்துடனும் ''நாமர்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்'' என்று வைராக்கிய உணர்வோடு களிவுடனும், அன்புடனும் பணிவுடனும் பரிவுடனும் அமைவதை பறைசாற்றுகின்றன திருமுறைகள்.

வேதங்களைவிட ஓதுபவனின் மனநிலை மாற்றத்தினை ஏற்படுத்த வல்லன திருமுறைகளே. வேதமோதினால் பக்தியினையும், அருளையும் மாத்திரமே ஓதுபவன் பெருகின்றான். ஆனால் திருமுறை ஓதுபவனோ இறைவனின் அன்பு, அருளினையும் பெற்று அற்புதம் செய்த தமது பேராற்றலையும் வெளிபடுத்த முடிகினறது.

பதிகம் எனும் யாப்பு வடிவினில் அமைந்த திருமுறைகளில் முதல் மூன்று திருஞானசம்பந்தராலும் அடுத்த மூன்று அப்பர் சுவாமிகளாலும் அடுத்த ஒன்று சுந்தரராலும் பாடப்பட்ட தேவாரங்களாக தொகுத்து முதல் ஏழு திருமுறைகளும், தே-ஆரம் என இறைவனுக் சூட்டப்படும் பாமாலைகளாகக் கொண்டு சிறப்பிப்பதோடு அடங்கன் முறையெனவும் அழைக்கப்படுகின்றது. எட்டாந்திருமுறையாக மணிவாசகரின் திருவாசகம் அமைகின்றது. ''திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்துகும் உருகார்'' எனும் சிறப்பினுக்கு இலக்கணமாகின்றது. அத்தோடு திருக்கோவையாறும் அடங்கும் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள் பட்டினத்தாரின் பாடல்கள் நக்கீரர் முதலானோரின் பாடல்களும் பதினொராம் திருமுறையாகவும், சுந்தரரை பாட்டுடைய தலைவனாகக் கொண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்வியல் சிறப்பினையும் திருமுறைகளினால் அவர்தாம் பெற்ற புகழினையும் எடுத்தியம்பும் பெரியபுராணம் பன்னிரெண்டாம் திருமுறையாகவும் போற்றப்படுகின்றது.

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெல்லாம்"

என்ற பெரிய புராண பாடலிலே இறுதி சொல்லாக ''உலகெல்லாம்'' என்று கூறுகின்றது. இவ்வாறே பெரியபுராணம் முதல் பாடலும் ''உலகெல்லாம்'' என்றே தொடங்குகின்றது. பெரியபுராணத்தின் முதல் சொல்லும் இறுதி சொல்லும் ''உலகெல்லாம்'' என்று உள்ளமைவை நோக்கின் உண்மை பொருளினை நிலையானப் பொருளினை சேக்கிழார் சுவாமிகள் எடுத்தியம்பியுள்ளார்.

பன்னிரு திருமுறைகளிலே முதலாவதாக அமைந்துள்ள திருஞான சம்பந்த மூர்த்தியுனுடைய முதலாவது தேவாரத்தின் முதலாவது சொல் ''தோடுடைய'' எனத் தொடங்குகின்றது. இங்கு ''தோ'' எனும் எழுத்தானது ''த்'' என்னும் மெய்யினையும் ''ஓ'' என்ற உயிரினையும் கொள்கின்றது. எனவே திருமுறைகளின் முதல்பாடலிலேயே ''ஓ'' எனும் உயர் நிற்க பன்னிரு திருமுறைகளில் இறுதிப்பாடலில் ''உலகெல்லாம்'' என முடிகின்றது. எனவே இச்சொல்லின் இறுதி எழுத்து ''ம்'' எனும் மெய்யாக அமைகின்றது. எனவே ''ஓம்'' என்ற சொல்லாக திருமுறைகளும் அடங்குவது சிறப்பிற்குரியதாகும். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்பதற்கிணங்க பன்னிரு திருமுறைகளை நாமும் ஓதி பேரின்ப பெருவாழ்வினைப் பெறுவோமாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

# இறைவனால் இயங்கும் உலகம்

இரா.சச்சிதானந்தம், இந்துசமயப் பிரிவு-விடுகையாண்டு

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

உலகம் எவ்வாறு இயங்குகின்றது என்பதையும், உடல் எவ்வாறு வாழ்கின்றது என்பதையும், உயிர் எவ்வாறு உணர்கிறது என்பதையும் எண்ண எண்ண இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஒரு மெய்ப்பொருள் இருக்கவேண்டும். அதுவே எல்லாவற்றிலும் கலந்து நின்று எல்லாவற்றையும் இயக்குகின்றது என்பதும் தெளிவாகும். அதை விளக்குவதற்குப் பல உவமைகள் தேடலாம். அவற்றுள் சிறந்தது அகரமாகிய முதல் ஒலிக்கும் மற்ற ஒலிகளுக்கும் உள்ள தொடர்பு ''அ'' என்ற ஒலி வாயைச் சிறிது திறந்தவுடன் இயல்பாக பிறக்கின்றது. அதற்குப் பிறகு மூச்சை இயக்கும் வகையாலும் ''நா'', ''இதழ்'' முதலியவற்றைப் பலவாறு மாற்றி அமைப்பதாலும் ஆ, இ, க முதலிய பல ஒலிகளும் பிறக்கின்றன. இவற்றின் தொடக்கத்தில் அடிப்படையாக அகர ஒலி இருப்பதோடு அல்லாமல் அது இவற்றில் எல்லாம் கலந்தும் நிற்கின்றது. கடவுளுக்கும் உலகத்திற்கும் உள்ள இயைபும் இத்தகையதே ஆகும். உலகம் கடவுளையே முதலாகக் கொண்டிருக்கும்.

''அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு''

நூல்கள் பலவற்றைக் கற்கக் கற்க, கடவுளின் தன்மையை உணர்ந்து வழிபடும் உணர்வு பெற வேண்டும். அறிவுப் பெற அறிவின் தூய்மையை எட்டி உணர்வதே சிறந்த பயனாகும். தூய அறிவு வடிவானவன் இறைவன். அவனுடைய திருவடிகளைத் தொழாவிட்டால் கற்ற கல்வியால் பயன் எதுவுமில்லை.

''கற்றதனால் ஆய பயன் என்கொள் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின் ?''

மக்களின் மனம் சிறந்த பொருளைப்பற்றி எண்ணத்தொடங்கினால் அந்தப்பொருளை மக்கள் வடிவில் வைத்தே எண்ண முடியும் யாரேனும் ஒரு சான்றோரின் வடிவில் வைத்துத்தான் எண்ண முடியும். புலன்கள் ஐந்தினுள் செவியே வளர்ச்சியால் முற்போக்கு உடையது என்றாலும் ஒலிவடிவாய் எண்ணம் அமைவது அறிது அதற்கு அடுத்த கண், மனதோடு இயைந்து நின்று எண்ணங்களுக்கு வடிவு கொடுத்து நிலை பெறச் செய்து வரும் ஆற்றலுடையது செவி முதலியவை மூளைக்கு வேறாக அமைந்து தொடர்புபட்டிருக்கின்றன. என்றும் கண், நரம்புகள், முளை நரம்புகளோடு சேர்ந்தாற்போல் தொடர்புகட்டு மிக அமைந்துள்ளன என்றும் ஒவ்வோர் எண்ணமும் உருவம் பெற்று நிலை பெறுவதற்குக் காரணம் அதுவெ என்றும் உடல்நூலார் கூறுகின்றார். அதனால் அறிவு வடிவான் கடவுளை எண்ணத் தொடங்கியமனமும் சிறந்த உருவம் தேடிக் கொள்கின்றது. இந்த இயல்பை நன்கு உணர்ந்தே திருவள்ளுவர் தொழுதல் என்று குறிக்கும் போது உருவ வழிபாட்டைச் சுட்டி ''நல்தாள்'' என்று கூறியுள்ளார்.

அன்போடு நினைக்கின்றவர்களின் மனமே இறைவன் விளங்கும் மலராகின்றது அந்த மலர்மேல் பொருந்துகின்றவர்கள் (தியானம் செய்கின்றவர்கள்) உலகத்ததில் நெடுங்காலம் வாழ்வார்கள். இறைவன் விருப்பு,வெறுப்பு அற்றவன் அவனுடைய திருவடிகளை நினைத்து தியானிப்பவர்களுக்கு எப்போதும் துன்பம் இல்லை. இறைவனுடைய புகழே உண்மையான புகழ். அந்தப் புகழை விரும்பி வழிபடுகின்றவர்களிடம் மயக்கத்தால் சேரும் இருவினையும் சேராமல் அகலும். இறைவன் ஐம்பொறிகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரும் அவா அற்றவன். அவனுடைய உண்மையான ஒழுக்கநெறியில் நின்றவர்கள் நெடுங்காலம் வாழ்வார்கள். இறைவன் தனக்கு நிகர் இல்லாமல் சிறந்து விளங்குகின்றவன். அவனுடைய திருவடிகளை நினைத்து தியானிப்பவர்களுக்கே மனக்கவலையை மாற்றுவது முடியும். மற்றவர்களுக்கு அது அரிது இறைவன் அறக் கடலாக உள்ள அருளாளன் அவனது திருவடிகளை நினைப்பவர்களுக்கே பொருளும், இன்பமும், ஆகிய வாழ்க்கை கடலை நீந்த முடியும்.

''மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ் வார்''

''வேண்டுதல் வேண்டாமை இலானடிசேரந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.''

''இருள் சேர் இரு வினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்.''

''தனக்குவமை இல்லாதவன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.''

''அறவாழி அந்தணன் தாள்சேர்ந் தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.''

இவ்வாறாக கடவுளை தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளார்.

இயற்கையில் கடவுள் தன்மையைக்கண்டு போற்றுவது உயர்ந்த நெறி இயற்கையில் அமைந்த பலவற்றிலும் மழை மிகச் சிறந்தது. நீரெல்லாம் ஆவியாகி மேலே கிளம்பி முகில்களாய்த் திரண்டு இயங்குதலும் பருவம் வந்தவுடன் காற்றின் துணையால் குளிர்ந்து மழையாய் பெய்தலும் மழை நீர் மண்ணில் ஊறியும் பரந்தும் பாய்தலும் ஆறாய்ப் பெருகிக் கிணறு குளமெல்லாம் நிரம்பிக் கடலில் கலத்தலும் மீண்டும் சூரிய வெப்பத்தால் ஆவியாகி முகிலாய்த் திரளுதலுமாக நடை பெறுகின்றது. இவ்வாறு திரும்பத் திரும்ப நடைபெறுதலால் உலகம் அழியாமலிருத்தலைக் காண வியப்பு மிகுகின்றது.

உயிர்களும் இவ்வாறே பல்வேறு உடல் தாங்கிப் பிறத்தலும், வாழ்தலும், இறத்தலும், மாறி, மாறி, வருகின்றன என்பதையும் இந்தக் காட்சி நினைவூட்டுகின்றது. இவ்வாறு மாறி மாறி இடை விடாமல் ஒழுங்கு பெற நிகழும் இயற்கை நிகழ்ச்சிகளை நினைக்க நினைக்க அறிவில் தெளிவு பிறக்கின்றது. உலகவாழ்க்கை இடையறாமல் நடக்க வேண்டிய வகையில் இயற்கையை இயக்கி வரும் ஒரு பெரிய சக்தியை நினைந்து உருகுவதற்கும் இது காரணமாகவுள்ளது.

ஆகவே இவ்வுலகை அன்றாடம் இயக்குவதற்கு ஒரு சக்தி மேலோங்கி நிற்கின்றது அதுவே இறைவன் என்பதை இந்து மதம் கூறுகின்றது அந்த எல்லாம் வல்ல இறைவனை வாழ்வில் நினைந்து அவனது திருவடிகளை தியானித்து இவ்வுலகை இயக்க பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுபகாரியங்கள் நடத்துவது எப்போது.....

சுப்பையா ராஜ்குமார், இந்துசமயப் பிரிவு, விடுகையாண்டு

என்னென்ன காரியங்களைச் செய்ய எந்தெந்த நேரங்கள் பொருத்தமானவையென நமது முன்னோர்கள் கணித்து வைத்திருக்கிறார்கள் சிலவற்றை நாம் காரணம் அறியாமல் ஏற்றுக்கொண்டு அதன்படி பின்பற்றுகின்றோம். இந்த நல்ல நேரங்களைப் பற்றி தமிழர்களாகிய நாம் மட்டுமன்றி எண்ணற்ற நாட்டவர்களும் பல்வேறு இனத்தவர்களும் தேர்ந்தெடுத்து செயல்படுகிறார்கள். என்பதில் ஐயமில்லை. (உ-ம்) ராக்கெட் இயக்குவதிலிருந்து ஜனாதிபதி பதவிப்பிரமாணம் வரை அனைத்திற்கும் நேரங்கள் பார்க்கப்படுகின்றன. எனவே அன்றாட சில செயல்களை செய்வதற்காக சில நல்ல நேரங்களை மட்டும் பார்ப்போம்.

ஒவ்வொரு மணி நிமிடத்திற்கும் நல்ல நேரங்கள் உள்ளன. காலை சூரிய உதய மணி நிமிடத்திலிருந்து மறுநாள் சூரிய உதயம் வரை ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு மணி நேரத்தை ஒதுக்கியுள்ளார்கள். இதற்கு கால ஓரை எனப் பெயர். ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மணி நேரம் என்னும் போதும் இராகு, கேது ஆகிய கிரகங்களுக்கு இடம் தரப்படாவிட்டாலும், இராகுவிற்கு மட்டும் ''இராகுகாலம்'' என ஒதுக்கியுள்ளனர். ஏனைய ஏழு கிரகங்களும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் என ஒரு முறை மாறி மாறிச் செயல்படுகிறது.

☐.நல்ல காரியங்களைச் செய்ய வளர்பிறைச் சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஆகிய கிரக ஓரைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

☐.நல்ல காரியங்களைச் செய்ய தவிர்க்க வேண்டிய கிரக ஓரைகள் சூரியன் செவ்வாய்,சனி அதோடு தேய்பிறைச் சந்திரன் உள்ள நாட்களில் சந்திர ஓரை.

**குறிப்பு:-** சூரிய உதயம் பொதுவாகக் காலை ஆறு மணிக்கு நிகழும் மாலை ஆறு மணிக்கு அஸ்தமனம் ஆகும். ஆனால் இந்த சூரிய உதயமும் அஸ்தமனமும் மாதத்திற்கு மாதம் மாறும்.

■ (ஓரைகளுக்கான அட்டவணையை பக்கம் 35இல் பார்க்க......)

### இராகுகாலம்

இராகுகாலம் பற்றி ஜாதக அலங்கார சம்ஹிதை எனும் இராகுகாலம் துர் தேவதைகளை வழிபடவும் நாகதோஷம் உள்ளவர்கள் வழிபடவும் பயன்படும் வேளை எனக் கூறுகின்றது. இராகுகாலத்தில் எத்தகைய காரியங்களையும் செய்வது நல்லதல்ல கிழமை தோறும் வரும் இராகுகாலம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | மாலை | 4.30 | மணிமுதல் | மாலை | 6.00 | மணி | வரை |
| திங்கட் கிழமை | காலை | 7.30 | மணிமுதல் | காலை | 9.00 | மணி | வரை |
| செவ்வாய் கிழமை | மாலை | 3.00 | மணிமுதல் | மாலை | 4.30 | மணி | வரை |
| புதன் கிழமை | பகல் | 12.00 | மணிமுதல் | பகல் | 1.30 | மணி | வரை |
| வியாழக் கிழமை | பகல் | 1.30 | மணிமுதல் | பகல் | 3.00 | மணி | வரை |
| வெள்ளிக்கிழமை | காலை | 10.30 | மணிமுதல் | காலை | 12.00 | மணி | வரை |
| சனிக்கிழமை | காலை | 9.00 | மணிமுதல் | காலை | 10.30 | மணி | வரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை முதல் அடுத்த நாள் காலை வரையுள்ள ஓரைகள்.

| கிரகஓரைகள் (காலை) | ஞாயிறு | | திங்கள் | | செவ்வாய் | | புதன் | | வியாழன் | | வெள்ளி | | சனி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூரிய ஓரை | 6.00 | 7.00 | 5.00 | 6.00 | 2.00 | 3.00 | | - | 3.00 | 4.00 | | - | 4.00 | 5.00 |
| சுக்ர ஓரை | 7.00 | 8.00 | | - | 3.00 | 4.00 | | - | 4.00 | 5.00 | 6.00 | 7.00 | 5.00 | 6.00 |
| புதன் ஓரை | 8.00 | 9.00 | | - | 4.00 | 5.00 | 6.00 | 7.00 | 5.00 | 6.00 | 7.00 | 8.00 | | - |
| சந்திரன் ஓரை | 9.00 | 10.00 | 6.00 | 7.00 | 5.00 | 6.00 | 7.00 | 8.00 | | - | 8.00 | 9.00 | | - |
| சனி ஓரை | 10.00 | 11.00 | 7.00 | 8.00 | | - | 8.00 | 9.00 | | - | 9.00 | 10.00 | 6.00 | 7.00 |
| குரு ஓரை | 11.00 | 12.00 | 8.00 | 9.00 | | - | 9.00 | 10.00 | 6.00 | 7.00 | 10.00 | 11.00 | 7.00 | 8.00 |
| செவ்வாய் ஓரை | 12.00 | 1.00 | 9.00 | 10.00 | 6.00 | 7.00 | 10.00 | 11.00 | 7.00 | 8.00 | 11.00 | 12.00 | 8.00 | 9.00 |
| சூரிய ஓரை | 1.00 | 2.00 | 10.00 | 11.00 | 7.00 | 8.00 | 11.00 | 12.00 | 8.00 | 9.00 | 12.00 | 1.00 | 9.00 | 10.00 |
| சுக்ர ஓரை | 2.00 | 3.00 | 11.00 | 12.00 | 8.00 | 9.00 | 12.00 | 1.00 | 9.00 | 10.00 | 1.00 | 2.00 | 10.00 | 11.00 |
| புதன் ஓரை | 3.00 | 4.00 | 12.00 | 1.00 | 9.00 | 10.00 | 1.00 | 2.00 | 10.00 | 11.00 | 2.00 | 3.00 | 11.00 | 12.00 |
| சந்திரன் ஓரை | 4.00 | 5.00 | 1.00 | 2.00 | 10.00 | 11.00 | 2.00 | 3.00 | 11.00 | 12.00 | 3.00 | 4.00 | 12.00 | 1.00 |
| சனி ஓரை | 5.00 | 6.00 | 2.00 | 3.00 | 11.00 | 12.00 | 3.00 | 4.00 | 12.00 | 1.00 | 4.00 | 5.00 | 1.00 | 2.00 |
| குரு ஓரை | | - | 3.00 | 4.00 | 12.00 | 1.00 | 4.00 | 5.00 | 1.00 | 2.00 | 5.00 | 6.00 | 2.00 | 3.00 |
| செவ்வாய் ஓரை | | - | 4.00 | 5.00 | 1.00 | 2.00 | 5.00 | 6.00 | 2.00 | 3.00 | | - | 3.00 | 4.00 |

இரவு

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குரு ஓரை | 6.00 | 7.00 | 5.00 | 6.00 | 2.00 | 3.00 | | - | 3.00 | 4.00 | | - | 4.00 | 5.00 |
| செவ்வாய் ஓரை | 7.00 | 8.00 | | - | 3.00 | 4.00 | | - | 4.00 | 5.00 | 6.00 | 7.00 | 5.00 | 6.00 |
| சூரியன் ஓரை | 8.00 | 9.00 | | - | 4.00 | 5.00 | 6.00 | 7.00 | 5.00 | 6.00 | 7.00 | 8.00 | | - |
| சுக்கிர ஓரை | 9.00 | 10.00 | 6.00 | 7.00 | 5.00 | 6.00 | 7.00 | 8.00 | | - | 8.00 | 9.00 | | - |
| புதன் ஓரை | 10.00 | 11.00 | 7.00 | 8.00 | | - | 8.00 | 9.00 | | - | 9.00 | 10.00 | 6.00 | 7.00 |
| சந்திர ஓரை | 11.00 | 12.00 | 8.00 | 9.00 | | - | 9.00 | 10.00 | 6.00 | 7.00 | 10.00 | 11.00 | 7.00 | 8.00 |
| சனி ஓரை | 12.00 | 1.00 | 9.00 | 10.00 | 6.00 | 7.00 | 10.00 | 11.00 | 7.00 | 8.00 | 11.00 | 12.00 | 8.00 | 9.00 |
| குரு ஓரை | 1.00 | 2.00 | 10.00 | 11.00 | 7.00 | 8.00 | 11.00 | 12.00 | 8.00 | 9.00 | 12.00 | 1.00 | 9.00 | 10.00 |
| செவ்வாய் ஓரை | 2.00 | 3.00 | 11.00 | 12.00 | 8.00 | 9.00 | 12.00 | 1.00 | 9.00 | 10.00 | 1.00 | 2.00 | 10.00 | 11.00 |
| சூரியன் ஓரை | 3.00 | 4.00 | 12.00 | 1.00 | 9.00 | 10.00 | 1.00 | 2.00 | 10.00 | 11.00 | 2.00 | 3.00 | 11.00 | 12.00 |
| சுக்கிரன் ஓரை | 4.00 | 5.00 | 1.00 | 2.00 | 10.00 | 11.00 | 2.00 | 3.00 | 11.00 | 12.00 | 3.00 | 4.00 | 12.00 | 1.00 |
| புதன் ஓரை | 5.00 | 6.00 | 2.00 | 3.00 | 11.00 | 12.00 | 3.00 | 4.00 | 12.00 | 1.00 | 4.00 | 5.00 | 1.00 | 2.00 |
| சந்திரன் ஓரை | | - | 3.00 | 4.00 | 12.00 | 1.00 | 4.00 | 5.00 | 1.00 | 2.00 | 5.00 | 6.00 | 2.00 | 3.00 |
| சனி ஓரை | | - | 4.00 | 5.00 | 1.00 | 2.00 | 5.00 | 6.00 | 2.00 | 3.00 | | - | 3.00 | 4.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு:- இராகுகாலம் பகல் நேரம் மட்டுமே இடம் பெறும்.

**எமகண்டம்**

எமகண்டம் பகலிலும் இரவிலும் இடம்பெறும் எமகண்ட நேரத்தில் செய்யும் காரியங்கள் தோல்வியில் முடிவதோடு ஆபத்தையும் விளைவிக்கும்.

**எமகண்டம் உள்ள நேரங்கள்**

| கிழமை | பகல் | இரவு |
|---|---|---|
| ஞாயிறு | 12.00-01.30 | 06.00-07.30 |
| திங்கள் | 10.30-12.00 | 03.00-04.30 |
| செவ்வாய் | 09.00-10.30 | 01.30-03.00 |
| புதன் | 07.30-09.00 | 12.00-01.30 |
| வியாழன் | 06.00-07.30 | 10.30-12.00 |
| வெள்ளி | 03.00-04.30 | 09.00-10.30 |
| சனி | 01.30-03.00 | 07.30-09.00 |

**கரிநாள்**

"ஒவ்வொரு மாதமும் வரும் கரிநாள்களில் எந்தவொரு சுப காரியங்களையும் செய்யக் கூடாது" என சோதிடக் கிரகசிந்தாமணி எனும் நூல் கூறுகின்றது.

| மாதம் | திகதி | மாதம் | திகதிகள் | மாதம் | திகதிகள் | மாதம் | திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| சித்திரை | 6,16 | ஆடி | 2,10,20 | கார்த்திகை | 1,10,17 | ஐப்பசி | 6 |
| வைகாசி | 7,16,17 | ஆவணி | 2,9,28 | மார்கழி | 6,9,11 | மாசி | 15,16,17 |
| ஆனி | 1,6 | புரட்டாதி | 16,26 | தை | 1,2,3,11,17 | பங்குனி | 6,15,19 |

**நல்லகாரியங்களுக்குப் பயன்படாத மாதங்கள்**

ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசைகளாவது,இரண்டு பௌர்ணமிகளாவது வந்தால் அந்த மாதம் மல மாதம் எனப்படும். இந்த மாதங்களில் திருமணம் செய்தல்,புதுவீடு கட்டுதல்,புதுமனை செல்லுதல்,புதிய தொழில்கள் தொடங்குதல்,வழக்குகளில் ஈடுபடுதல் போன்றவை தவிர்க்கப்படவேண்டுமென சொல்லப்படுகிறது.

**நல்ல காரியங்களைச் செய்ய தவிர்க்கவேண்டிய திதிகள்.**

அஷ்டமித்திதியிலும், நவமிதிதியிலும், நல்லகாரியத்தை செய்தால் பொருள் நஷ்டமோ அல்லது விரோதமோ ஏற்பட இடமுண்டு.

மூன்றே முக்கால் நாழிகை வரும் நல்ல நேரமும் கெட்ட நேரமும்

மூன்றே முக்கால்நாழிகை என்பது ஏறக்குறைய ஒரு மணிநேரமும், முப்பது நிமிடங்களும் ஆகும். இந்த முறையில் தரப்படும் இந்த நல்ல நேர அட்டவணைக்கு கௌரிபஞ்சாங்கம் எனப்படும். இப்பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு ஒன்றரை மணி நேரத்திற்கும் ஒரு யோகம் குறிப்பிடப்படுகின்றது. அவையாவன உத்தி, அமுதம், ரோகம், இலாபம், தனம், சுகம், சோரம், விஷம் என்ற எட்டுபிரிவுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் லாபம், தனம், சுகம், அமுதம் என்ற நான்கு நேரங்களும் நல்ல நேரங்களாகும். இந்த நேரத்தில் எந்த நல்ல காரியத்தையும் செய்யலாம் உத்தி, ரோகம், சோரம், விஷம் ஆகிய நான்கு நேரங்களும் நல்ல நேரங்களல்ல. இந்த கெட்ட நேரங்களான உத்தி எனும் நேரத்தில் எதை செய்தாலும் நட்டமும், ரோகம் எனும் நேரத்தில் எதை செய்தாலும் நோய்களையும், சோரம் எனும் நேரத்தில் எதை செயதாலும் விரோதம் அல்லது பகையும், விஷம் எனும் நேரத்தில் எதை செய்தாலும் ஆபத்தையும்,நஷ்டத்தையும் விளைவிக்கும்.

இனி ஒவ்வொரு கிழமைகளிலும் வரும் நல்ல வேளைகளையும், கெட்ட வேளைகளையும் பார்த்தால்

| யோகம் காலை-மாலை | ஞாயிறு | திங்கள | செவ்வாய | புதன | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| உத்தி | 6.00-07.30 | *4.30-06.00 | 1.30-03.00 | 1.30-03.00 | 10.30-12.00 | 9.00-10.30 | 7.30-09.00 |
| அமுதம் | 7.30-09.00 | 6.00-07.30 | 4.30-06.00 | 3.00-04.30 | 12.00-01.30 | 12.00-01.30 | 10.30-12.00 |
| ரோகம் | 9.00-10.30 | 9.00-10.30 | 6.00-07.30 | 4.30-06.00 | 03.00-04.30 | 1.30-03.00 | 12.00-01.30 |
| இலாபம் | 10.30-12.00 | 10.30-12.00 | 7.30-09.00 | 6.00-07.30 | 4.30-06.00 | 3.00-04.30 | 1.30-03.00 |
| தனம் | 12.00-01.30 | 12.00-01.30 | 9.00-10.30 | 7.30-09.00 | 6.00-07.30 | 4.30-06.00 | 3.00-04.30 |
| சுகம் | 1.30-03.00 | 1.30-03.00 | 10.30-12.00 | 9.00-10.30 | 7.30-09.00 | 6.00-07.30 | 4.30-06.00 |
| சோரம் | 3.00-04.30 | 3.00-04.30 | 12.00-01.30 | 10.30-12.00 | 9.00-10.30 | 7.30-09.00 | 6.00-07.30 |
| விஷம் | 4.30-06.00 | 7.30-09.00 | 3.00-04.30 | 12.00-01.30 | 1.30-03.00 | 10.30-12.00 | 9.00-10.30 |

* மாலை

| யோகம் மாலை-காலை | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| தனம் | 6.00-07.30 | 4.30-06.00 | 3.00-04.30 | 12.00-01.30 | 12.00-01.30 | 9.00-10.30 | 7.30-09.00 |
| சுகம் | 7.30-09.00 | 6.00-07.30 | 4.30-06.00 | 1.30-03.00 | 1.30-03.00 | 10.30-12.00 | 9.00-10.30 |
| சோரம் | 9.00-10.30 | 7.30-09.00 | 6.00-07.30 | 3.00-04.30 | 3.00-04.30 | 12.00-01.30 | 10.30-12.00 |
| விஷம் | 10.30-12.00 | 12.00-1.30 | 9.00-10.30 | 4.30-06.00 | 7.30-09.00 | 3.00-04.30 | 1.30-03.00 |
| உத்தி | 12.00-01.30 | 9.00-10.30 | 7.30-9.00 | 6.00-07.30 | 4.30-06.00 | 1.30-03.00 | 12.00-01.30 |
| அமுதம் | 1.30-03.00 | 10.30-12.00 | 10.30-12.00 | 7.30-09.00 | 6.00-07.30 | 4.30-06.00 | 3.00-04.30 |
| ரோகம் | 3.00-04.30 | 1.30-03.00 | 12.00-01.30 | 9.30-10.30 | 9.00-10.30 | 6.00-07.30 | 4.30-06.00 |
| இலாபம | 4.30-06.00 | 3.10-04.30 | 1.30-03.00 | 10.30-12.00 | 10.30-12.00 | 7.30-09.00 | 6.00-07.30 |

**திதிகள்**

திதிகளில் அஷ்டமிதிதியும், நவமிதிதியும் நன்மை தரும் திதிகளல்ல. இவை தவிர மற்ற திதிகள் 13 இவை நற்காரியங்களுக்கு பயன்படுத்தப்படும். ஆனால் சில திதிகள் சில ராசிகளுக்கு விஷ சூன்யத்தை உண்டுபண்ணுகின்றன. உங்களது நட்சத்திரம் அல்லது உங்களது ஜாதகத்தில் சந்திரன் இருக்கும் இடம் ராசி எனப்படுகிறது. திதிகள் விஷசூன்யத்தை உண்டு பண்ணும் ராசிகளைத்தெரிந்து கொண்டு, அந்த திதி மாறிய வேளைகளிலோ, மறு நாளோ நற்காரியங்களைச் செய்யலாம்.

எந்த ராசிக்காரர்கள் எந்தத்திதியில் நற்காரியங்களை செய்யலாம் எந்த திதிகளில் செய்யக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இராசிகள் | பயன்படுத்த வேண்டிய இலக்கங்கள் திதிகளின் | பயன்படுத்த கூடாத திதிகளின் இலக்கங்கள் |
|---|---|---|
| மேஷம் | 1, 2, 3, 4, 5, 7, 10, 11, 12, 13, 14 | 6 |
| ரிஷபம் | 1, 2, 3, 5, 6, 7, 10, 11, 12, 14 | 4,13 |
| மிதுனம் | 1, 2, 3, 4, 6, 7, 10, 11, 12, 13 | 5,8,14 |
| கடகம் | 1, 2, 3, 4, 5, 6, 10, 11, 12, 13, 14 | 7 |
| சிம்மம் | 1, 2, 4, 5, 7, 10, 11, 12, 14 | 3,6,9,10,13 |
| கன்னி | 1, 2, 3, 4, 6, 7, 10, 11, 12, 13 | 5,8,14 |
| துலாம் | 2, 3, 4, 5, 6, 7, 10, 11, 14 | 1,12 |
| விருட்சகம் | 1, 2, 3, 4, 5, 6, 7, 11, 12, 13, 14 | 9,10 |
| தனுசு | 1, 3, 4, 5, 6, 10, 12, 13 | 2,7,11,14 |
| மகரம் | 2, 4, 5, 6, 7, 10, 11, 13, 14 | 1,3,12 |
| கும்பம் | 1, 2, 3, 4, 6, 7, 10, 11, 12, 14 | 14 |
| மீனம் | 1, 3, 4, 4, 6, 7, 10, 12, 13 | 2,11,14 |

**குறிப்பு:-திதிகளின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1.பிரதமை | 5.பஞ்சமி | 9.நவமி | 13.திரியோதசி |
| 2.துதியை | 6.சஷ்டி | 10.தசமி | 14.சதுர்த்தசி |
| 3.திருதியை | 7.சப்தமி | 11.ஏகாதசி | 15.பூரணை |
| 4.சதுர்த்தி | 8.அஷ்டமி | 12.துவாதசி | |

**நல்ல காரியங்களை செய்ய தேர்ந்தெடுக்கவேண்டிய விடயங்கள்**

| விடயம் | திதிகள் | நட்சத்திரங்கள் | இலக்கனங்கள் |
|---|---|---|---|
| குழந்தைகளுக்கு முதன் முதலில் உணவூட்டல் | சப்தமி, ஏகாதசி, பௌர்ணமி, | ரோகினி,புனர்பூசம்,அஸ்தம், சித்திரை, அசுவினி, சதயம், திருவோணம், மிருகசீரிடம், அவிட்டம், சுவாதி, அனுஷம்,ரேவதி, உத்திரம், உத்திராடம் | மேஷம், விருட்சகம், தவிர ஏனைய லக்னங்களை பயன்படுத்தலாம் |
| புதிய பதவிகளைப் பொறுப்பேற்றல் | அஷ்டமி, நவமி தவிர்ந்த ஏனைய திதிகள் | மிருகசிரீடம், புனர்பூசம், அசுவினி, உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, உத்திராடம், அவிட்டம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி, ரோகிணி, அனுஷம். | கன்னி, துலாம் தவிர எனைய லக்னங்களை பயன்படுத்தலாம். |
| பெண்பார்க்கவும், மனைவியை அழைத்து வரவும் | அஷ்டமி, நவமி தவிர்ந்த ஏனைய திதிகள் | அசுவினி, பரணி, மகரம், பூரம், மூலம், பூராடம், ரோகிணி, திருவாதிரை, பூசம், ஆயில்யம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, திருவோணம், சதயம், உத்திராடம், ரேவதி | சுப பார்வை பெற்ற லக்கினத்தில் செய்யலாம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| விடயம் | திதிகள் | நட்சத்திரங்கள் | இலக்கணங்கள் |
|---|---|---|---|
| சீமந்தம் செய்தல் (சீமந்தம் அல்லது வளைகாப்பு எனப்படும் இது பகலில் செய்யவேண்டும்) | திருதியை பஞ்சமி,சப்தமி, எகாதசி, திரயோதசி | ரோகிணி, மிருகசீரிடம், பூசம், புனர்பூசம்,உத்திரம், ரேவதி, அஸ்தம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், உத்திரட்டாதி | மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், கும்பம், மீனம் |
| குழந்தையை முதன் முதலில் தொட்டிலில் இடுதல் | துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி திரயோதசி, துவாதசி, தசமி | ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி | ரிஷபம், கடகம், மிதுனம், கன்னி, துலாம், தனுசு, மீனம் |
| காதுகுத்துதல் (இரண்டு திதிகள், இரண்டு நட்சத்திரங்கள் வரும் நாளில் காதணிவிழா செய்யகூடாது) | துதியை, திருதியை, பஞ்சமி, துவாதசி, திரியோதசி, சஷ்டி, சப்தமி | மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சதயம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி | ரிஷபம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனம், மேஷம், மகரம் |
| கல்வி பயிலப் பயன்படல் | துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி | அசுவினி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திராட்டாதி, ரேவதி | மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் |
| உபநயனம் செய்தல் | துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, துவாதசி, திரியோதசி | அசுவினி, ரேகிணி, மிருக சீரிடம், புனர்பூசம், பூசம், உத்திரம்,அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம்,திருவோணம், உத்திரட்டாதி | ரிஷபம், கடகம், மிதுனம், கன்னி, துலாம், தனுசு, மீனம் |
| புதுவீடுகட்டல் | துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி | ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம்,சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி,ரேவதி | ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் |
| புதுமனை புகும் விழா | துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, தியோதசி | ரோகிணி, மிருகசீரிடம், பூசம், புனர்பூசம், உத்திரம், அஸ்தம், அனுஷம், உத்தி ராடம், சதயம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி | ரிஷபம், மிதுனம், சிம்மம்,கன்னி, துலாம், தனுசு, கும்பம், மீனம் |
| நோய்களுக்கு சிகிச்சை பெறல் | துதியை, திருதியை, பஞ்சமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி | அசுவினி, ரோகிணி, பூசம், உத்திரம், மிருகசீரரிடம், ரேவதி, புனர்பூசம், சித்திரை உத்திராடம், அஸ்தம், சுவாதி, அனுஷம், உத்திரட்டாதி,திருவோணம், அவிட்டம், சதயம், | மேஷம், கடகம், துலாம், மகரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்த தத்துவங்கள்.

திரு. ஜெ. நித்தியா, இந்து சமயப்பிரிவு, முதலாம் ஆண்டு (1999-2000)

சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் பதி, பசு, பாசம் எனும் மூன்றுமே ஆகும். இவற்றையே சான்றோர் ஆராய்ந்து தத்துவமாக எமக்கு சாத்திரங்கள் செய்துள்ளார்கள். இந்த வகையில் சான்றோர் ஆராய்ந்த பாசம் எனும் தத்துவத்தினுள். ஆன்மாவை பந்தித்து நிற்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்று மலங்கள் காணப்படுகின்றன. மாயை எனும் மலத்தினுள்ளே தத்துவங்கள் 36 புதைந்து கிடக்கின்றன. அவற்றினை பின்வருமாறு சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை எனும் மூன்று மாயை வகைகளினுள் அடக்கியுள்ளனர்.

சுத்த மாயையினுள் சிவ தத்துவம் 5 காணப்படுகின்றன அவை:
1.நாதம், 2.விந்து, 3.சாதாக்கியம், 4.ஈசுரம், 5.சுத்தவித்தை

அசுத்தமாயையினுள் வித்தியாதத்துவம் 7 காணப்படுகின்றன அவை:
1.காலம், 2.நியதி, 3.கலை, 4.வித்தை, 5.அராகம், 6.புருடன், 7.மாயை

பிரகிருத்தி மாயையினுள் ஆன்மத்தத்துவம் 24 கான அவை:

1.பூதங்கள் (5)
1.பிருதவி 2.அப்பு 3.தேயு 4.வாயு 5.ஆகாயம்

2.ஞானேந்திரியங்கள் (5)
1.மெய் 2.வாய் 3.கண் 4.மூக்கு 5. செவி

3.கன்மேந்திரியங்கள் (5)
1.வாக்கு 2.பாதம் 3.பாணி 4.பாயு 5.உபத்தம்

4.தன்மாத்தி (5)
1.சத்தம் 2.பரிசம் 3.ரூபம் 4.இரசம் 5.கந்தம்

5.அந்தகரணம் (4)
1.மனம் 2.புத்தி 3.சித்தம் 4.அகங்காரம்

---

எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால்
துன்பமுமில்லை, கவலையுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக பண்பாடும் வழிபாட்டு மரபும்.

**லெனின் மதிவானம் (விரிவுரையாளர்)**

மலையகத் தமிழரின் வரலாறு என்பது மலர் தூவிய பாதையில் மென்னடை பயின்றதல்ல, மாறாக கல்லும், முள்ளும் நிறைந்த பாதையில் ஒவ்வொரு அடியும் போராட்டத்தினூடு தீரமிக்க செயல் முனைப்போடு முன்னெடுக்கப்பட்டது என்பதை சமூகவியல் வரலாற்று ஆய்வாளர்கள் அறிவர். தாமே பாதை வெட்டி பயணம் செய்த ஒரு மக்கள் கூட்டம் அவர்கள். இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பான அவர்கள் பொருளாதார ரீதியில் பார்வையாளரேயன்றி பங்காளர்களல்லர் பெருந்திரளான போர்க்குணமிக்க அந்த மக்களின் அரசியல் வரலாறானது அடிப்படை உரிமைகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஜனநாயகத்தை கல்லறைக்கு அனுப்பியதையே சுட்டி நிற்கின்றது.

பல்வேறு அரசியல் சமூக பொருளாதார ஒடுக்கு முறைக்கு இம்மக்கள் உள்ளான போதும் தமது சமூக கட்டமைப்புக்குள்ளாக இம்மக்கள் எப்படியொரு தனித்துவமான பண்பாட்டு பாரம்பரியத்தினை பேண விழைகின்றனர், அவர்களின் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏனைய பண்பாடுகளின் ஊடாட்டங்கள் என்பவற்றினை இக்கட்டுரை ஆராய விழைகின்றது. குறிப்பாக அம்மக்களின் வாழ்வியலுடன் மிக நெருங்கிய பலதரப்பட்ட பண்பாட்டு கோலங்களை இக்கட்டுரை கோடிட்டுக் காட்டுவதுடன், ஒவ்வொரு விடய ஆய்வின் இறுதியிலும் சமகாலத்துடன் தொடர்புபடுத்தி விமர்சனத்தையும் முன்வைக்கின்றது.

பொதுவாக ஒரு சமூகத்தின் பண்பாட்டு வரலாற்று ஆய்வில் இருநிலைப்பட்ட செல்நெறிகள் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. முதலாவது அந்தப் பண்பாட்டிற்கு வெளியே நின்று எழுதுவோர்கள் (உ-ம்:மேனாட்டார்கள்) இரண்டாவது அந்தப்பண்பாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அந்தப்பண்பாட்டை பற்றி எழுதுவது. எனவே அந்தப்பண்பாட்டினுள் வாழ்கின்றவன் என்ற வகையில் அந்தப்பண்பாட்டின் பல யதார்த்த அம்சங்களை சிறப்பாக வெளிக் கொணர முடியும் என நம்புகின்றேன்.

தென்னிந்திய நிலவுடமைச் சமூக அமைப்பில் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்த இம்மக்கள் விவசாய வர்க்கத்துக்குரிய குணாதிசயம் கொண்டவர்களாக காணப்பட்டனர். ஆனால் அவர்கள் ஒப்பந்த பிணைப்பு செய்துகொண்டு இலங்கை வந்த போது ஓர் முதலாளித்துவ சமூக அமைப்பின் கீழ் ஓர் பரந்து பட்ட தொழிலாளர் வர்க்கமாக மாற்றப்பட்டனர். இருப்பினும் இவர்களிடையே இருந்த சாதிய அமைப்பும் இவர்களிடையே ஓர் கலாசார முரண்பாடாக தாக்கம் செலுத்தக்கூடியதாக இருந்தது. மலையகத்தில் எழுச்சி பெற்ற ஓர் மத்தியதர வர்க்கம் இதனை கருவியாக கொண்டு தமது நலனை காக்கத் தொடங்கியுள்ளது எனலாம். மலையகத்தினுள் சாதிய முரண்பாட்டை பிரதான முரண்பாடாக காட்டி அம்மக்களின் வர்க்கப்போராட்டத்தை சிதைக்கும் முயற்சிகளை சமூகசேவை நிறுவனங்களும் சில அரசியற் கட்சிகளும் மேற்கொண்டு வருகின்றன.

எனவே ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று பெருந்தோட்ட தொழிலாளர்களின் வரலாற்று ரீதியான வளர்ச்சிக்கும், விழிப்புக்கும் பண்பாட்டுக்கும் இருக்கின்ற தொடர்பை நாம் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமானதொன்று பண்பாட்டு ஆய்வு என்பது ஒரு மக்கள் கூட்டத்தினரின் தனித்துவ ஆன்மீக, தொழில்நுட்ப அம்சங்களை விவரித்து விவரணப்படுத்துவதாக அமையாது அதனை இன்றைய சமூக சிந்தனைகளுக்கான கருவியாக கொள்ளப்பட வேண்டும்.

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளரின் பண்பாட்டு அம்சங்களின் சிறப்பைப்பற்றி பெருமை பேசுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம். அவ்வவ் அம்சங்களின் சமூக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், பொருளாதார அம்சத்தினை பண்பாடு எவ்வாறு உள்வாங்கி வளர்ந்துள்ளது. இப்பண்பாட்டினை ஆய்வு செய்வதன் ஊடாக அவர்களின் சமூக விடுதலைக்கு எந்த விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்ற சிந்தனையை தோற்றுவிப்பதே எனலாம்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்து நோக்கப்படத்தக்கது. ''இவர்களின் பண்பாடு உறை நிலையிலேயே வைக்கப்பட்டது. இந்த உறை நிலைகளை ஒரு முக்கிய காரணத்தை எடுத்துக் கூறுவது அவசியமாகின்றது. இம்மக்கள் இலங்கையில் குடியேற்றப்பட்ட பொழுது அவர்கள் உள்ளூர் தொடர்புகளில் இருந்து எந்த அளவுக்கு ஒதுக்கப்பட முடியுமோ அந்த அளவுக்கு புறம்பாகவே வைக்கப்பட்டனர். அந்த புறம் போக்கு நிலைக்கான சகல வசதிகளும் வழங்கப்பட்டன. வீடு,முழு நேரத் தொழில் ஆகியன அவர்களை வந்த ஊரோடு, நாடவிடாது வைத்திருந்தன. அத்தகைய ஒரு சூழலில் இவர்கள் தனிமையான கூட்டமாகவே வாழ்ந்து வந்தனர். (இலங்கையின் மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் என்ற நூல்) இக்கூற்று இம்மக்களின் பண்பாட்டின் உறை நிலையை காரண காரியத்துடன் சுட்டி நிற்கின்றதெனலாம்.

**இந்த பண்பாட்டு வட்டத்துக்குள் வருவோர் யார் ?**

பெருந்தோட்ட தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை பெரும்பான்மையாக கொண்ட ஒரு சமூகத்தினர் மலையகம் என்ற பதத்தினுள்ளும், இந்த பண்பாட்டினுள்ளும் அடக்கலாம் எனினும் முக்கியமாக பெருந்தோட்ட தொழில் துறையுடன் தம்முடைய வாழ்வியலை இணைத்துக் கொண்ட பின்வரும் மூன்று பிரிவினரையே இக்கட்டுரை அடையாளம் காட்டி ஆராய்கின்றது.

1.பெருந்தோட்டங்களில் தமிழர்கள் (தொழிலாளிகளான இந்திய வம்சாவளித் தமிழ் தொழிலாளர்)

2.பெருந்தோட்டங்களில், நிர்வாக அலுவலங்களில், உத்தியோகஸ்தர்களாக கடமையாற்றும் இந்திய வம்சாவளித் தமிழர்கள். (ஆசிரியர்கள் உட்பட)

3.பெருந்தோட்டங்களை சார்ந்த வணிகமுயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளவர்கள்

இந்த மூன்று பிரிவினரிடையும் வர்க்க, சமூக வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் சமூக பொருளாதார அரசியல் விடயங்கள், அரசியல் வரலாற்று நிர்ப்பந்தங்கள் காரணமாக ஏற்பட்ட ஒன்றிணைப்பின் ஊடாக மலையகத் தமிழர் எனும் எண்ணக்கரு வளர்ந்து ஸ்திரமடைந்திருக்கின்றது. என்பது வரலாற்று உண்மையாகும். எனினும் மேற்கூறிய எண்ணக்கருவின் தளமாகவும் களமாகவும் அமைவது பெருந்தோட்டத் தொழிலாளரே என்பது தர்க்க ரீதியான உண்மையாகும்.

பண்பாட்டு ஆய்வாளர்களின் கருத்தும் பெருந்தோட்ட தமிழ் சமூகத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளமைக்கு மிக முக்கியமான காரணம் இம்மக்களின் சமூக பண்பாட்டு விடயங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களே எனலாம். அவர்கள் தமது லயன் வாழ்க்கை மரபிலிருந்து விடுபட்டு மேனிலை நோக்கி ஒரு சமூக அசைவியத்துக்காக தொழிற்படத் தொடங்கியுள்ளனர். தோட்டத்தின் சமூக பொருளாதார வட்டங்களுக்கு செல்ல விழைகின்றனர். பொருளாதார வரையறைகளுக்கு அப்பாலுள்ள சமூக பொருளாதார வட்டங்களுக்கு செல்ல விழைகின்றனர். இந்தக் கோட்பாடு மலையகம் எனும் கோட்பாட்டிற்கும் பண்பாட்டு பாரம்பரியத்திற்கும் வலுவளிக்கின்றது.

எனவே இம்மக்களின் பண்பாடு தென்னிந்திய பண்பாட்டுடன் பெருமளவு ஒத்ததாக காணப்படினும் இம்மக்கள் தமது உற்பத்தி, உற்பத்தி உறவுகளுக்கு ஏற்ற வகையில் இந்த மண்ணுடன் ஒட்டியதாக ஒரு தனித்துவமான பண்பாட்டை உருவாக்கியதுடன் அதனை வளர்க்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை, அவர்கள் வரும்போது கொண்டிருந்த பண்பாட்டு கோலங்களுக்கும், இன்றைய பண்பாட்டு கோலங்களையும் ஒப்பிட்டு நோக்கியறியக் கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தொழிலாளர் பண்பாட்டு அம்சங்கள் அந்த தொழிலாளர்களிடமிருந்து அவர்களின் வாழ்விலிருந்து அந்நியப்படாமல் இருப்பது அதன் மேம்பாட்டுக்கும் சிறப்புக்கும் காரணமாக அமைகின்றது எனலாம்.

**தோட்ட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவழிபாட்டுமுறைகள்**

இவ்வழிபாடு தோட்ட தொழிலாளரின் தொழில் முறையே நெருங்கிய தொடர்புடையது. ரோதை முனி, மாடசாமி கும்பிடுதல் போன்ற விடயங்களில் பெண்களின் பங்கு குறைவாக காணப்படுகின்றது. ஆனால் சாமி கும்பிடுதல் எனும் வழிபாட்டில் பெண்களின் பங்கு முக்கியமானதாக காணப்படுகிறது.இவை தவிரவும் விபூதி மந்திரித்துக் கொடுத்தல், சாமிபார்த்தல் போன்ற விடயங்கள், திருவிழாக்களில் சாமி வந்து ஆடுதல் என்பவற்றில் பெண்களின் பங்கு மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

எனவே வழிபாடுகளில் பெண்களின் பங்கு மிகக் கூடுதலாக காணப்படுகின்றது. ஆயின் கந்தசஷ்டி, கார்த்திகை தீபம் என்பன இன்று நடுத்தர வர்க்க பெண்களால் அநேகமாக மேற்கொள்ளப்படுகின்றது. எனவே தொழில்துறையோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் வழிபாடுகளில் தோட்டத் தொழிலாளப் பெண்களின் ஈடுபாட்டையும் பங்களிப்பையும் அவதானிப்பது முக்கியமானதாகும்.

**வழிபாட்டுத்தலங்களும், அமைப்பு முறைகளும்**

இதை இரண்டு விதமாக பிரித்து நாம் ஆய்வுக்கு உட்படுத்தலாம்

1.நகர்புறச் சமூகப் பொதுநிலை வழிபாட்டுத்தலங்கள்,

2.தோட்டப்புறச் சமூக பொது நிலை வழிபாட்டுத்தலங்கள்

நகர்ப்புற வழிபாட்டுத் தலங்கள் நகரின் மத்தியில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக கண்டி செல்வவிநாயகர் கோவில், மாத்தளை ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில், இரத்தினபுரி சிவன் கோயில் என்பன குறிப்படத்தக்கன. இங்கு ஐயர் பூசை செய்வார் ஏனைய மதத்தவரும் நேர்த்திக்கடன் வைத்து வழிபடச் செய்கின்றனர். பொதுவாக விஷ்ணு, முருகன், விநாயகர், சிவன் தெய்வங்களே முதன்மைப்படுத்தப்பட்ட தெய்வங்களாக காணப்படினும் இக்கோயில்களின் உள்ளே மாரியம்மன், இராமர் போன்றோருக்கு கோயில்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். திருவிழாக்கள் தவிர ஏனைய இந்து மதத்தின் முக்கிய உற்சவங்கள், திருமணங்கள் என்பன இங்கு நடைபெறும் இது நகர முதலாளிகளின் ஆதிக்கத்திலேயே காணப்படும்.

தோட்டப் புற வழிபாடுகளைப் பொருத்தளவில் இவை நகர் புற கோயில் அமைப்புகளில் இருந்து வேறுபடுகின்றன. இவை தோட்டத்து மத்தியில் அநேகமாக காணப்படும் சில வேளைகளில் தோட்டமுகப்புகளில் காணப்படுவதையும் அவதானிக்கலாம். இவை அமைவிடம் கட்டிட, ஓவிய, சிற்ப அமைப்புகளில் நகர்புறங்களில் இருந்து வேறுபடுகின்றன. இவை 'மூடிய அமைப்புடையவை' என கட்டிட ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இங்கு பண்டாரம் என்பவர் பூசை செய்வார். வெள்ளிக்கிழமைகளில் பூசை நடைபெறும் வருடாந்த திருவிழா தவிர பொங்கல், நவராத்திரி, சரஸ்வதி பூசை என்பன முக்கியமான பூசை நிகழ்வுகளாக காணப்படுகின்றன. இங்கு முத்துமாரியம்மன் பிரதான தெய்வமாக காணப்படுவதுடன் முருகன், விநாயகர், விஷ்ணு போன்ற தெய்வங்களும் காணப்படுகின்றன. பௌத்த மதத்தின் தாக்கம் காரணமாக கோயிலின் முன் ''பெருமாள் சாமி'' என்ற கருத்தில் புத்தர் சிலை போதிவடிவில் கட்டப்பட்ட கூட்டினுள் வைக்கப்பட்டிருப்பதும் உண்டு.

எனவே கட்டிட அமைப்பு முறையில் நகர்புறம் சார்ந்த கோயில்கள் திராவிடக்கட்டிடக்கலையை அடிப்படையாகக் கொண்டதுடன், தென்னிந்திய கைவினைஞர்களால் செய்யப்படுகின்றன ஆனால் தோட்டப்புறக்கோயில்கள் இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுடையனவாக காணப்படுகின்றது. தவிர நகர்ப்புற கோயில்கள் முதலாளிமாரின் ஆதிக்கத்தில் காணப்பட தோட்டப்புற வழிபாட்டுத்தலங்கள் தொழிலாளர்கள் ஆதிக்கத்தில் காணப்படுகின்றது. கோவில்களில் கொண்டாடப்படும் விழாக்களும், பூசை முறைகளிலும் கூட வித்தியாசங்கள் காணப்படுகின்றது.

தவிர தோட்டச் சந்தியில் காவல் தெய்வம் என்ற வகையில் முருகன், முனியாண்டி, தெய்வானையம்மன் என தெய்வங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

குலமட்ட, குடும்பமட்ட, தோட்ட தொழில் நிலை வழிபாடுகள் பொதுவாக இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் வழிபாட்டை ஆய்வாளர் பின்வரும் பிரிவுகளில் உள்ளடக்குவர்.

1. குடும்பமட்ட வழிபாடு
2. குலமட்டவழிபாடு
3. தோட்ட வாழ்க்கையோடு இணைந்தவழிபாடு
4. தோட்ட வரையறைக்கு அப்பாற்பட்டவழிபாடு

மேற்கூறிய வழிபாட்டு முறைகள் வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. இதில் தென்னிந்தியாவில் அவர்கள் மேற்கொண்ட வழிபாட்டு முறையின் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

**குடும்பமட்டவழிபாடு**

குடும்ப சுபீட்சத்திற்காக மேற்கொள்ளப்படும் இந்த வழிபாட்டில் விநாயகர், முருகன், விஷ்ணு, சரஸ்வதி, சிவபெருமான், இலட்சுமி, இராமர், சீதை, அனுமான், நாராயணன், சத்திய சாய்பாபா, இறந்த குடும்ப அங்கத்தவர் ஆகியோர் இடம் பெறுகின்றனர். சிறுசிலைகள், உருவப்படங்கள் என்பவற்றை வீட்டுச் சுவரில் தொங்கவிடுதல், தனியறையில் வைத்தல், பலகையில் பெட்டியடித்து வைத்தல் என வைத்து வழிபடுகின்றனர். வாழைப்பழம்படைத்தல், விபூதி, சாம்புராணி சூடம், வெற்றிலை பாக்கு, குத்துவிளக்கு என்பன வைத்து பூசை செய்யப்படுகின்றன.

**குலமட்ட வழிபாடு**

இது சாதி, கோத்திரம் சுபீட்சம் பெற வேண்டும் என்பதற்காக பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. குலங்களுக்கு ஏற்ப தெய்வங்கள் மாறுபட்டு காணப்படும். ரெட்டியாட்டி வரதம்மா, பேச்சியம்மா பெரியம்மன் என தமது பரம்பரையில் இறந்தவர்களையும் மாரியம்மன், பழனியாண்டி, மகாலச்சுமி என இந்துபாரம்பரிய தெய்வங்களையும், மதுரைவீரன், மாடசாமி முனியாண்டி, சங்கிலிக் கருப்பன், கபட்டுமுனி, கருப்பண்சாமி, வீரமாகாளி, வால்ராசா, ருத்திரகாளி, சுடலைமாடன் என்பன பலி மூலமான வழிபாட்டிற்குரிய தெய்வங்களாக காணப்படுகின்றன. இதில் மாடசாமி, மதுரை வீரன் ஆகியோரை வணங்குபவர்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியினர் எனவும் கருதப்படுகின்றனர்.

கல், வேலி, சூலம் என்பன குறியீட்டுப்பொருட்களாக காணப்படுகின்றது, மதுரைவீரனுக்கு அனேகமாக சிலை அமைக்கப்பட்டிருக்கின்றன. சாராயம், கள்ளு என்பன பலியிட்டு தெய்வங்களுக்கு படைக்கப்படுகின்றது. ஏனைய தெய்வங்களுக்கு வழமையான பூசைப்பொருட்கள் படைக்கப்படுகின்றன.

**தோட்டவாழ்க்கையோடு இணைந்தவழிபாடு**

இவ்வழிபாட்டில் ஆண்கள் ரோதைமுனி, தவறணைமுனி, கம்பிமுனி, கவ்வாத்துமுனி எனும் தெய்வங்களையும் பெண்கள் கொழுந்து சாமி, மட்டத்துசாமி எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களையும் தம் தொழிலோடு இணைந்த தெய்வங்களாக வழிபடுகின்றனர். இத்தெய்வங்கள் கல், மரம், சூலம், வேல்என்பவற்றை குறியீடாக வைத்து வணங்கப் படுகின்றன. கொழுந்து சாமியின் வழிபாடு தேயிலை செடியொன்றுக்கு வழங்கப்படும்.

பின்வரும் தெய்வங்கள் காட்டுமலைத் தெய்வங்களாகும் மாடசாமி, மதுரைவீரன், முனீஸ்வரன், மகாமுனி, வால்முனி, மயானமுனி, செண்டாகட்டி, இரட்டைமுனி, வீரமாகாளி, மஞ்சள்காளி, வடபத்திரகாளி, காமாட்சி, கொழுந்து சாமி, பூச்சியம்மா, மட்டத்துசாமி என்பன சாந்தமான பண்பு கொண்டவை என்றும்கருதப்படுகின்றது. இத்தெய்வங்கள் அனேகமாக முச்சந்தி, தோட்ட எல்லைகள் சந்தி, மரத்தடி, நீறூற்றுகள், ஆற்றங்கரை போன்ற இடங்களில் சிறிய ஆலயங்கள் அமைக்கப்பட்டு வணங்கப்படுகின்றன. ஆடு, கோழி என பூசாரி பலியிட்டு பூசையினை நாடத்துகின்றார். பச்சையரிசி, பால், பழம், வெற்றிலை, பாக்கு என்பனவும் படைக்கப்படுகின்றது.

இன்று சாயிபாபா வணக்கம் என்பது நடுத்தரவர்க்கத்தினரிடையேயும், முதலாளிமார்களிடையும் வேகமாகபரவி வருகின்றது. தொழிலாளர்கள் தம்முடைய தொழில்சார் தெய்வ வழிபாட்டிலேயே கூடுதலான ஈடுபாட்டினை காட்டுவது குறிப்பிடத்தக்கது.

குடும்ப மட்ட வழிபாடுகளில் இன்று கிறிஸ்தவமதத்தின் தாக்கம் (மதமாற்றம்) வளர்ச்சிபெற்று வருவதை அவதானிக்கலாம். மலையகத்தில் திட்டமிட்ட குடியேற்றம், தேயிலைத் தோட்ட சிங்களத் தொழிலாளருடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக புத்தரையும் வணங்கும் மரபு பெருகிவருகின்றது.

குலமட்ட வழிபாடுகள் இன்று ஆமைவேகத்தில் தாழ்த்தப்பட்டவர்களை பொருத்தளவில் அழிந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பூசைமுறைகளிலும் சில மாற்றங்கள் இன்று கடைபிடிக்கப்படுகின்றது. கூடுதலாக ஒரு இளம் தலைமுறை தம்மை இம்மரபுகளிலிருந்து விடுவித்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

பெருந்தோட்ட தமிழரின் பண்பாட்டுக் கோலம் முழுவதையும் இக்கட்டுரை சிறப்பாக வெளிக்கொணராவிட்டாலும் பெருந்தோட்ட தமிழரின் பண்பாட்டாய்விற்கான ஒரு அடித்தளத்தை இதிலிருந்து பெறமுடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இன்று கிறிஸ்தவ மதத்தின் தாக்கம் கூடுதலாக ஊடுருவுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது சமூக சேவை நிறுவனங்கள் கிறிஸ்தவ மதப்பிரிவுகளின் சமய நிறுவனங்கள் என்பன போட்டி முறையில் இம்மக்களை மதம் மாற்றுவதில் ஈடுபட்டுவருகின்றனர். இது ஒரு குறைந்த அளவு மக்களை தம்பண்பாட்டினின்றும் வேறுபடுத்துவதில், அந்நியப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்துகின்றது. எனினும் இம்மக்களின் பண்பாட்டு இறுக்கம் அவர்களை தொடர்ச்சியாக தன் பிடிக்குள் இருத்தியிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

தவிரவும் தோட்ட தொழிலாளரிடையே நாட்டார் வழக்காற்றின் அடிப்படையிலும், அவர்கள் இங்கு வருமுன் வாழ்ந்த சமூகத்தின் அடிப்படையிலும் அமைந்த வழிபாட்டு முறைகளை பின்பற்றி வருகின்றனர். ஆனால் இந்த தொழிலாளரிடையே இருந்து தோன்றிய ஒரு நடுத்தரவர்க்கத்தினர் ஒரு மிதக்கும் அல்லது போலியான ஆகமமுறைகளை அதாவது இந்த சமூகத்தின் பண்பாட்டுக்கு வெளியில் ஏனையோரால் உயர்ந்தது எனக்கூறப்படும் பூசை முறைகள், ஆசாரங்களை நோக்கி நகர்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்நாட்டவருக்கும் இறைவா

இருகரம் ஏந்தி வரம்
கேட்கின்றேன் - இறைவா
இலக்கை இழந்து
இருளில் தடுமாறும்
இறைபக்தர்களுக்காய்
இரங்கிடுவாயா?

மண்ணிலே புதைக்கப்பட்ட
மதக் கொள்கைகள்
மனிதத்தை இழந்து
தடுமாறும் மக்களுக்கு
மதியை தந்திடுமோ?

பூமாலை புனைந்து
பூபாளம் இசைத்து
உன் புகழ் பேசும்
நாவினால்
நெஞ்சுருகி வேண்டுகிறேன்
நெறிமுறையை காட்டிடுவாயா?

சாதுக்கள் சர்ப்பங்களாய்
சமர்புரியக் காவிகளும்
காக்கிச் சட்டைகளும்
கடுமை வாதம் செய்ய
கலியுக வரலாற்றை
கண்ணிலிருந்து மறைத்து
கருணை வரம் ஈந்திடுவாயா?

மதங்கள் கூறுவது
மகத்தான போதனை தான்
மதவெறி கொண்டோர்
மடத்தனமாய் உயிர்ப்பிக்கும்
மத அழிவதனை தடுத்து
உன் மைந்தர்களை காத்திடுவாயா?

இரத்தக் களரியும்
இனத்துவேசமும் இங்கே
இல்லா தொழித்து விட்டு
இலங்கையோடு
இதய சுத்தியை தந்திடுவாயா?
எந்நாட்டவருக்கும் இறைவா!

ஊனக் கருத்துக்கள்
உதவாத பேச்சுகள் நீக்கியே
ஞானக் கருத்துக்களை
ஞாலத்திற்கு எடுத்துரைக்க
நல்லவனே கருணைசூர்
நம்மவர்க்கு மட்டுமல்ல
எந்நாட்டவருக்கும் இறைவா!

செல்வி. மனோமேகலாதேவி செல்லதுரை,
இந்துசமய பிரிவு, முதலாம் வருடம் (1999-2000)

# துர்க்கையும் நீயானாய்

மு.இந்திரகுமார், இந்துசமயப்பிரிவு,
விடுகையாண்டு(98-99)

பர்வத ராஜன் மகளே
பராசக்தி தாயே – உன்
பக்தர்களின் துயர் களையும்
பத்ரகாளி நீயே

சந்தனத்தின் நிறத்தவளாம்
சாந்த சொரூபி – நல்ல
குங்குமத்தில் குலம் விளக்கும்
மங்கள மா காளி

சிங்கத்தில் வீற்றிருக்கும்
சிம்ம வாஹினி – நல்ல
ரௌத்திர தாண்டவமாடும்
"ரௌத்திரி" ஓங்காரி

மஞ்ஞை ஏறும் வேலவனை
மகா சக்தி தந்தாய் – என்றும்
தஞ்சம் என வந்தவரை
அஞ்சேல் எனக் காத்தாய்

சங்க நாதம் கேட்டு எங்கள்
சங்கடங்கள் தீரும் – உந்தன்
உடுக்கை ஒலி கேட்கையிலே
இடுக்கண் களைந்தோடும்

பாருலகில் பாவியர் எம்
பாவங்களைத் தீர்த்தாய் –
எங்கள்
துக்க மெலாம் துடைத்
தெறிந்தாய்
துர்க்கையும் நீயானாய்.

இந்து மாமன்றம் 1999 ஆம் ஆண்டு நவராத்திரிக் காலத்தில் நடத்திய கலாசாலை மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்றக் கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துக் கட்டளைகள்

*திருமதி. இரா. புவனேஸ்வரி ,ஆரம்பப்பிரிவு-I,விடுகையாண்டு.*

மேல் நாட்டாருக்கு அதிலும் குறிப்பாக அமெரிக்கர்களுக்கு இந்து மதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்கு, தமிழகத்தில் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி ஒரு புது யுத்தியை கையாளுகின்றார். மோசஸ் சொன்ன பத்து கட்டளைகள் என்ற தலைப்பில் விவரிக்கின்றார். அந்த பத்து கட்டளைகள் என்ன என்பதை வேத, ஆகம கலாவித்வ சபையில் எடுத்துச் சொன்னனார்.

01.எல்லாம் பிரம்மம். எங்கும் பிரம்மம் என்று உணர வேண்டும். அதனால் தான் பகவான் கீதையில் ''எவன் என்னை எங்கும் பார்க்கின்றானோ, அவனுக்கு நான் காணாமல் போவதில்லை; அவனும் எனக்கு காணாமல் போவதில்லை'' என்று சொன்னார். இதன் காரணமாக, எல்லோரும் நாமாக இருப்பதால், நாம் யாருக்கும் தீங்கு இழைக்மாட்டோம்.

02.மறுபிறவி உண்டு என்று நம்ப வேண்டும். நல்லவனாக வாழ்ந்தால் நல்ல பிறவி, கெட்டவனாக வாழ்ந்தால் கெட்ட பிறவி.

03. நம்முடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் மனந்தான் காரணம். அதனால் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

04.நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் காரணமாகவும் அதன் வாசனை நம்மிடம் ஒட்டிக் கொள்கிறது. பிறகு அந்த வாசனைகளின் ஏவுதல்களில் நாம் காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே வாசனை சேராமல் இருக்க வேண்டுமானால் நாம் பற்றற்ற காரியங்கள் செய்ய வேண்டும்.

05.எல்லா தெய்வங்களுக்கும் பகவான் ஒருவன் தான். அதனால் உங்களுக்கு எந்த தேவதை பிடிக்கிறதோ அந்த தேவதையை வணங்கலாம்.

06.எதிலும் நம்முடைய பாவனைதான் முக்கியம்.

07.தர்மத்தை காப்பதற்காகவும், அதர்மத்தை அழிப்பதற்காகவும் பகவான் பல அவதாரங்கள் எடுத்தார். வியாசரும், வால்மீகியும் இந்த அவதாரங்களைப் பற்றி எழுதிய நூல்களை நாம் படிக்க வேண்டும்.

08.நாம் எப்போதும் படிக்க வேண்டும்.அதற்கு ஒரு எளியவழி அவன் நாமத்தைச் சொல்லுவது தான். நாமம் நாமியை விட உயர்ந்தது.

09.கிடைத்தது போதாது என்று ஆசைப்பட ஆரம்பித்ததுமே நம்மிடம் உள்ள ஆனந்தம் போய்விடுகிறது.

10.''நீ எந்த உருவில் என்னை வணங்குகிறாயோ அந்த உருவில் நான் காட்சி அளிப்பேன்'' என்கிறார் பகவான். அதனால் ''எல்லா மதமும் சம்மதம்'' என்று இருக்க வேண்டும். பிற மதங்களைத் தூஷிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியமும் பாவமும்

செல்வி. ஜி.சிவஜோதி, ஆரம்பப்பிரிவு, விடுகையாண்டு (98-99)

உலகத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு நிலையில் பிறந்திருப்பதற்குக் காரணம், அவரவர் முன்பு செய்த புண்ணிய பாவத்திற்குத் தகுந்தபடி, ஆண்டவன் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு, நிலையில் பிறக்கும் படியாகச் செய்திருப்பதேயாகும்.

ஒருவன் செய்கின்ற நன்மையும் தீமையும் பல வகைப்படும். பிறர் அறியும்படி செய்வது அறியாதபடி செய்வது, தான் உணர்ந்து செய்வது, உணராமல் செய்வது தீமையாகத் தோன்றியது நன்மையாகப் பயன் கொடுப்பது நன்மை போல தோன்றியது தீய பலனைக் கொடுப்பது என்பன அவ்வகைகள். ஒருவன் இப்பிறவியில் செய்த நன்மைக்கும் தீமைக்கும் பயனாக இன்பதுன்பம் இவ்வுலகிலேயே அனுபவிப்பதும் உண்டு; மறுபிறவியில் அனுபவிப்பதும் உண்டு ஒருவர் மற்றவனுக்குச் செய்யும் நன்மைக்குப் பதிலாக அவனே இவனுக்கு நன்மை செய்து விடுவதையும் கூலிக்கு வேலை செய்த வினைக்குப் பயனாக உடனே கூலியாகப் பயனைப் பெறுவதையும் இவ்வுலகிலேயே வினையின் பயனைப் பெறுவதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஒருவன் கைமாறு கருதாமல் பிறருக்கு நன்மையான காரியம் செய்தால் அந்த வினை நல்வினையாகப் பதிவு செய்யப்படுகிறது. அது மறுபிறவியில் முன் செய்த புண்ணியமாக வருகிறது. ஒருவன் செய்த தீய காரியத்தின் பயனை இவ்வுலகத்தில் அனுபவியாதிருந்தால் அது அவனுக்கு மறுபிறப்பில் பாவமாக வருகிறது. பிறர் அறிய முடியாமல் மறைத்துச் செய்தாலும் அவையெல்லாம் தவறாமல் பதிவாகிவிடும். புண்ணிய பாவங்கள் மனத்தினாலும், வாக்கினாலும் உடலின் செய்கையாலும் உண்டாகின்றன. தனியே புண்ணியத்திற்கு உரிய பலனையும் பாவத்திற்குரியபலனையும் கடவுள் விதித்தபடி அனுபவித்தே தீர வேண்டும். ஒன்றை ஒன்றிலிருந்து கழிக்க முடியாது ஒருவர் செய்த வினையை மற்றவர் அனுபிக்கவும் முடியாது அவரவர் செய்ததன் பயனை அவரவரே அனுபவிக்கும்படி செய்கிறார் கடவுள்.

நாம் செய்வனவற்றிக்கெல்லாம் கடவுளே பொறுப்பு என்று கூறுதல் கூடாது. அவர் நமக்கு ஒவ்வொரு பிறவியிலும் உடலைக் கொடுத்து, உயிரை அதிற் புகுத்தி உலகத்திலுள்ள பலவகைப் போகப் பொருள்களையும் கொடுத்து பேருபகாரம் செய்கிறார். இதனால் பயன் பெறுபவர்கள் நாமேயல்லாது கடவுளல்ல.

மேலும் அவர் நமக்கு ஒவ்வொரு பிறவியிலும் இந்த உலகம் என்னும் பள்ளிக்கூடத்தில் அனுபவமாகிய பாடம் போதிக்கின்ற உபாத்தியாராகவும் இருந்து நமக்கு அறிவைப் புகட்டி வருகிறார். இப்படி அனுபவ பாடம் படிப்பதும் அறிவு பெறுவதும் நாமேயல்லாது கடவுளல்ல. இன்னும் அவர் நமக்கு வைத்தியநாதராக இருந்து நமது அறியாமையாகிய நோயை நீக்குவதற்காக இனிப்பு மருந்தாகிய இன்பத்தையும் கசப்பு மருந்தாகிய துன்பத்தையும் அவரவர் தேவையறிந்து கொடுத்து வருகிறார். இதனால் அவர் பக்ஷபாத முடையவர் ஆகார். ஓர் அரசன் குடிகளின் நடத்தைக்குத் தக்கபடி அவரவர்களுக்குப் பலவித பரிசுகளும் தருவது பக்ஷபாதமான செயலன்று.

ஒரு சிலர் மனிதரைப் படைத்தவர் கடவுளேயாதலால் மனிதரின் கெட்ட குணச் செயல்களுக்கும் அவரே பொறுப்பாளி அல்லவா? என்று கேட்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் உயிர்களைப் படைக்கவில்லை. அவைகள் அநாதியாக உள்ளவைகளே பற்பல உடல்களையும் அவை உலவுவதற்குரிய உலகத்தையும் அதிற் பற்பல பொருள்களையும் படைத்து அவற்றில் அவ்வுயிர்களை வாழவைத்து ஒரு நியதிப்படி அவைகளின் குறைகளையும் போக்கி அவற்றின் அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதுதான் அவர் செய்யும் உபகாரம், இம்முறையிலேதான் கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் நம் பொருட்டாக செய்து வருகிறார் தம் பொருட்டாக அன்று.

இவ்வாறு எம் மனிதனாலும் செய்யமுடியாத பேருபகாரத்தை நமக்குச் செய்துவரும் ஆண்டவனிடம் நாம் என்றும் நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும். அவனைச் சிந்தித்து வந்திக்க வேண்டும் அவன் வகுத்துள்ள நன்னெறியில் நடந்து அவனை அடைய முயல வேண்டும். கடவுளை எந்த பெயர் சொல்லியும் வழிபடலாம் அவரவர் வழிபாட்டின் தரத்திற்கு ஏற்ற நற்பயன் அவரவர்க்கு கிடைக்கும். அங்கு இங்கு எனாதாபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகி அருளோடு நிறைந்து இருக்கின்ற அவ்விறைவனை சிறந்த குருவிடத்திலும் கண்டு வழிபடலாம் ஆலயங்களிலுள்ள திருவுருவங்களிலும் ஆன்மார்த்த பூசைக்கு உரிய வடிவங்களிலும் வழிபடலாம் ஆண்டவனுக்குப் பிறர் கூறும் பெயர்களைப் பழித்தல் பாவமாகும்.

உயிர்களிடம் காணப்படும் ''நான்'' என்ற முனைப்பு ''எனது'' என்ற மமதை, காமம், குரோதம், உலோபம், பொய், கொலை, களவு குற்றங்கள் எல்லாம் உயிர்களைப் பிணித்துள்ள அறியாமைலிருந்து கிளம்பினவையே தன்னலம், ஆசை, கோபம், பகை போன்ற குறைபாடுகள் இல்லாமல் பிற உயிர்களுக்கு நன்மை செய்தல் புண்ணியம்! அவற்றிற்கு தீமை செய்தல் பாவம் இதை ஆன்மாக்கள் உணர்வதற்காகத் தான் ஆண்டவனது நியதிப்படி புண்ணிய பாவச் செயல்களாக அமைந்து அவைகளுக்குறிய இன்பமும் துன்பமும் ஊட்டப் பெறுகின்றன. பிறருக்குச் சம்பந்தம் இல்லாமல் தனக்குத் தானே செய்து கொள்ளும் புண்ணிய பாவங்களும் உண்டு.

பணமிருந்தால்தான் புண்ணியம் செய்ய முடியும் என்று எண்ணுவது தவறு புண்ணியம் தேடுவதற்குப் பணம் அத்தியாவசியமல்ல. நல்ல மனம்தான் முதன்மையான தேவை மனத்தால், வாக்கால், காயத்தால் புண்ணியத்தைப் பெரிய அளவில் தேடிக்கொள்ள முடியும் ''மனத்துக்கன் மாசிலன் ஆதல் அனைத்து அறன்'' என்றார் ஆன்றோர். மனம் திருந்த வேண்டுமானால் எல்லா உயர்களிடத்திலும் கருணைகாட்டும் அன்புக்கடலாகிய ஆண்டவனைப் போற்றிப் புகழ்ந்து பூசித்து வர வேண்டும் அப்போது நமது மனம் திருந்துவதோடு இறைவன் உயிர்களிடம் காட்டும் கருணையும் அவன்பால் நாம் கொள்ளும் அன்பும் நம் உள்ளத்தில் பிரகாசிக்கும். எனவே மக்கள் வாழ்க்கையின் முதன்மையானத் தேவை அன்பு என்னும் உண்மையை அனைவரும் உணர்வார்களாக. நன்மையே கடைபிடித்துப் புண்ணியச் செயல்களையே புரிந்து நாமும் இகபர சௌபாக்கியங்களை எய்துவோமாக !

செய்து சாதிப்பதற்கு கடினமானதை முன்யோசனை செய்பவன் எளிதில் முடித்துவிடுகிறான் மிகப்பெரிய காரியத்திற்கும் சிறிய துவக்கம் இருக்கிறது என்பதை முன்யோசனைக்காரன் தெரிந்து கொள்கிறான். சிறு செயல்களிடத்து ஆழ்ந்த கருத்து செலுத்துபவன் சான்றோன்.

☐ உசாத்துணைநூல்-சைவசமய சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவரச நாயகி

செல்வி. ராஜஸ்ரீ சோமராஜா,
இந்து சமயப்பிரிவு, விடுகையாண்டு 98-99



எந்த உணர்ச்சியும் இல்லாமல் ஆனந்தமயமாக இருப்பது பரம்பொருள் அதற்குத் தன் பெருமையை உணர்த்தி பிரபஞ்ச லீலையைச் சிருஷ்டிக்க வைப்பவள் தேவி பராசக்தி. அவளை ஒன்பது விதமான உணர்ச்சி பாவங்களில் நவரச நாயகியாகப் பக்தர்கள் அநுபவிக்கின்றனர்.

**சிருங்காரம்**

இதுகாட்டுவாசியான பரமேசனைக் கல்யாண சுந்தரனாக்கியவள் தேவி. தனது இடப் பாகத்தையே அவளுக்குத்தந்தான் ஈசன். தட்சிணாமூர்த்தியாக மௌனத் தவம் புரிந்தவனை ஸோமன் என்றும் ஸாம்பன் என்றும் பெயர் கொள்ளச் செய்கிறாள் தேவி இதிலிருந்து ஐயனுக்கு அவளிடமுள்ள அன்பு புரிகிறதல்லவா? அது அமைதிக்கு அருளிடத்தில் உள்ள அன்பு அமைதியும் அருளும் கொண்டாடும் சிருங்காரத்தைச் சித்திரமாகக் காண்கிறோம்.

**பீபத்ஸம**

சிவனுக்காகத் தவம் புரியும் பார்வதியுடன் இதேபரமேசன் கிழக் கோலம் பூண்டு வந்து சிவநிந்தை செய்கிறார். தம்மையே மணக்கும்படி வேண்டுகிறார். கறபின் உருவான அம்பிகை அப்போதுசொல்லொணாத அருவருப்பு அடைகிறாள்.

**பயம்**

மதுரைமீனாட்சி மாபெரும் வீராங்கனைதான். பரமசிவபக்தைதான் எனினும் கருமாரியான அவள் கபாலமும், பாம்பும், யானைத் தோலும் அணிந்து வந்து நிற்கும் மணமாகிய சிவனைக் கண்டவுடன் தைரியம் இழந்து அன்பும் இழந்து அஞ்சி நிற்கிறாள். அவளது அன்னை காஞ்சனமாலையும் மாப்பிள்ளையின் விசித்திரக்கோலத்தில் அதிர்ச்சியடைகிறாள். கன்னிகா தானம் செய்யும் திருமால் இதைப் புரிந்து கொண்டு சிவபெருமானுக்கு அறிவிக்க ஈசன் கலியாண சுந்தரனாகத் திருவுரு தரிக்கிறான்.

**ஆச்சரியம**

பாற்கடலைக் கடையும் பொழுது ஆலகால விஷம் எழுகிறது. அதன் நெடியிலேயே தேவரும் அசுரரும் மடிந்துவிழுகின்றனர் ஆனால் அதையே அமுதம் போல் ஆர்வமுறப் பருகுகிறான் சிவபெருமான் அம்பிகைக்கு இது பேரதிசயமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனை நஞ்சு பாதிக்காதது கண்டு அன்னை ஆச்சரியப்படத் தேவையேயில்லை. ஏனெனில் அவளது சௌமங்கலிய சக்தியால்தான் அவன் பிழைத்தான் என்கிறார் ஆசாரியசங்கரர்.

**ஹாஸ்யம**

உலகை முதலில் சுற்றிவரும் பிள்ளைக்குத் தெய்வக்கனியைத் தருவதாக ஈசன் கூறியதும் விநாயகர் பெற்றோரை வலம் வந்து முதலில் கனி பெற்றதும் அனைவரும் அறிந்ததே தன்னுடைய செல்லப் பிள்ளையான முருகன் மயில்மீது ஊர்ந்து உலகைச்சுற்றி ''பழம் எனக்கே'' என இறுமாந்து திரும்பியபோது தேவி எவ்வளவு நகைச்சுவை அநுபவித்திருப்பாள்.

**வீரம்**

பயந்த மீனாம்பிகையை அங்கு கண்டோம் இங்கு அவளே வீராங்கனையாக வீறுடன் விங்குகிறாள். தன்னை வெல்பவனையே மணப்பது என்று உறுதியுடன் தேசம் முழுதும் விஜயம் செய்து மன்னர்களையெல்லாம் வெற்றிக் கொள்கிறாள். மீனாட்சி அந்த வீரக்கோலத்தை இங்கு காணும் போதே இமய வரம்பில் ஐயனை அவள் சந்தித்தவுடன் மன்மத பாணத்துக்கு ஆளாகித் தன்னால் பாணம்விட இயலாது நாணத்துடன் நின்றதையும் மானசிகமாக எண்ணிப் பார்ப்போம்.

**கோபம்**

சதி என்றே பெயர்பெற்ற மகாபதிவிரதை தேவி. எனவே தன் பதியும் அதே போல் ஏகபத்தினி விரதனாக இருக்க வேண்டுமென அவள் எதிர் பார்ப்பது நியாயம் தானே? பகீரதனுக்காக ஈசுவரன் கங்காதேவியைத் தாங்கி தலையில் அமர்த்திக் கொண்டதைக் கண்டவுடன் அவளுக்கு ஆறாச் சினம் மூழுவது நியாயம் அன்றோ?

**சாந்தம்**

சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக இருந்தபோது பஞ்சாக்கினி மத்தியில் தவம் இருந்தாள் தேவி. தவம் என்ற பதத்துக்கு கொதிப்புறச் செய்வது என்ற பொருள். சுற்றிச் சூழ்ந்திருப்பதும் அக்னி ஆயினும் தவம் இருக்கும் அன்னையின் உள்ளமோ எவ்வித கொதிப்பும் இன்றி அமைதியில் ஒன்றியிருக்கிறது. ஏனெனில் அந்த உள்ளத்தில் உறையும் சாந்த வஸ்துவான சிவத்தில் அவள் ஒன்றியிருக்கிறாள். அம்பிகையின் தவமே ஞானத் திருமணம் சக்தி சாந்தத்தில் நிறைந்த திருமணம் அதுவே.

**கருணை**

சாந்தத்தில் உலக உவைப்புக்களை உணர்வதற்கு இல்லை. ஆனால் உலகு என்று ஏற்பட்டுவிட்டால் உடனே அதைக் காக்க கருணையும் இருந்தாக வேண்டும். லோகரட்சகியாக ராஜ ராஜேசுவரியாக அனைவருக்கும் கருணைபாவிப்பதே எம்பெருமாட்டியின் பெருமை. ''நமக்குத் தொழில் கவிதை'' என்றார் அமரகவி. ''தனக்குத் தொழில் கருணை'' என்று திகழ்பவளே தேவி பராசக்தி.

**உசாத்துணைநூல் - கல்கி (1969)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்நெறியும் மாதரும்

**செல்வி.மா. திலகா பிரியதர்ஷினி, இந்து சமயப்பிரிவு, விடுகையாண்டு.**

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள?'' என்று திருவள்ளுவர் வினா எழுப்பவில்லை விடையையே வினாப்போல எழுப்புகின்றார். பெண்ணினம் பாராட்டுதலுக்கும், பெருமைக்கும் உரியது பெண் எதையும் அதிகம் விவாதிக்காமல் ஏற்றுக்கொள்வாள் நம்புவாள். வாழ்ந்தும் காட்டுவாள் அதனாலன்றோ சேக்கிழார் பரவையாரை பாராட்டுவது போல, பெண்ணினத்தையே பாராட்டுகின்றார் சேக்கிழார். சுந்தரர் வாயிலாகப் பரவையாரைப் பாராட்டும் போது ''கற்பகத்தின் பூங்கொம்போ?'' என்று வர்ணிக்கின்றார். கற்பகதரு கருதியவை அனைத்தையும் தரும் என்பது மரபு அதுபோல நல்லபெண் கருதியவை அனைத்தையும் தரவல்ல ஆற்றல்உடையவளாக இருப்பாள் என்பது புலப்படுகின்றது.

ஏழாம் நூற்றாண்டில் சமயவாயிலாக சமுதாயப் புரட்சியை நிகழ்த்திய நமது அப்பர்அடிகளும்,திருஞானசம்பந்தரும் பெண் இனத்தின் பெருமையை,மனையறத்தின் மாட்சியை விளக்கப் பெரிதும் தொண்டாற்றியுள்ளனர். அவர்கள் காலத்தில் வடபுலத்தில் இருந்து வந்த பௌத்தமும், சமணமும், தமக்கென நாடும், மொழியும், இறையும் இல்லாது சுழன்று திரிந்த மாயாவாதமும்பெண்ணினத்தை இழிவுபடுத்தின மனையறத்தை சிற்றின்பம் என்றும் விலங்கு என்றும் வர்ணித்தனர். இயற்கை நெறிக்கு மாறாக துறவு நெறியை வலியுறுத்தினர் இக் கொள்கையைக் கடிந்து நாளும் இனிய தமிழால் அகத்திணை வழக்கத்தின் பெருமையை முழங்கினர் நாயன்மார்கள் ஈருருவமும் ஒருருவமாய் அம்மையப்பன் வழிபாடுகூட ஏழாம் நூற்றாண்டிலேயே முதன்மைப் பெற்றிருக்க வேண்டும் என்று தெரிகின்றது எனவே நாம் வாழும்வாழ்க்கையினை இனிமை பண்புடையதாக்கி இலட்சிய நோக்குடையதாக்கிக் கொள்ளுதலையே திருவள்ளுவர் ''வாழ்வாங்கு வாழ்தல்''என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு வாழ்வாங்கு வாழும் நெறிக்கே அருள் நெறி என்று பெயர்.

திருஞானசம்பந்தர் அருளிய தமிழ், அருள்நெறித் தமிழ், அப்பர் அடிகள் வளர்த்த நெறி நன்மை பெருகு அருள் நெறி காந்தி அடிகள் நின்று வாழ்ந்த நெறி அருள் நெறி இவ்அருள் நெறியின் முதல்நெறி, அன்பு செய்வது, வாழ்க்கையின் முன்னும் பின்னுமாய முழு இலட்சியம் எல்லோரிடமும் அன்பு செய்தல் அன்பின் வழியது உயர்நிலை என்பது குறள் பண்பாளருக்குக் காட்டும் அன்பு பண்பை வளர்க்கும் பகைவனுக்குக் காட்டும் அன்பு பகையைக் குறைக்கும் என்பது விதியாய் உள்ளது. இதனாலேயே அன்புக்கு உவமையாக தாயே பேசப் பெறுகின்றாள் அதாவது ''அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்'' என்பதில் கூட முதாலவது இடத்தில் நிற்பவள் அன்னையே.

அருள் நெறியின் இரண்டாவது ஒழுக்கமாகும், அறநெறி நிற்றல் அறத்தின் பாற்பட்ட ஒழுக்கக்கூறுகள் பலபல எனினும் பிறருக்கு உதவி செய்தலும் அங்கனம் உதவி செய்யும் ஆற்றல் கைகூடாதபோதும் துன்பம் செய்யாது இருத்தலுமே சிறந்த அறப்பண்பு. இப்பண்பு மனித குலத்தில் வளர்ந்தால் சட்டங்களும், திட்டங்களும் இல்லாமலே சோசலிச சமுதாய அமைப்பை நாம் கண்டுவிட முடியும் இத்தகைய அரிய பண்பை இயல்பிலேயே பெண்மை பெற்றிருப்பது பாராட்டுதற்குரியது.

அருள் நெறியின் மூன்றாவது ஒருக்கமாக இறைவழிபாட்டு நெறி உடலுக்குத் தேவை அதாவது மூச்சிக்காற்று உயிருக்கு தேவை போல கடவுள் வழிபாடு இயல்பாகவே பெண்களிடத்தில் காணப்படுவதை திலகவதியார், மங்கையர்கரசியார் வரலாறுகளைக் கூறலாம். இத்தகைய எடுத்துக்காட்டுள்ள இயல்பிலேயே பெருமைக்குரிய பண்புக் கூறுகளை பெற்றிருக்கும் தாய்க்குலத்தை அன்று பல்லவர் கால பக்தி இயக்கத்தின் பெருமைக்குரியவர்கள் மூலம் புலப்படுகின்றது. சுழன்றடித்து வரும் புதுமைக்காற்றின் பேரால் தடம்புரளாமல் நிலைப் பெற்றிருப்பார்களானால் அருள் நெறி வளரும் என்று கூறுவதில் சிறிதேனும் ஐயமில்லை எனவே மனித குலத்தை நேசிக்கும் அன்புடையவளாய், ஒழுக்கமுடையவனாய் இறைபக்தி உடையவனாய் வழிகாட்டுவதோடு குறைவிலா நிறைவாக கோதிலா அமுதாக விளங்கும் திருவருளை வாழ்த்த இன்ப அன்பு கலந்த நல்வாழ்வு வாழ வழிகாட்டிச் செல்ல வேண்டும் என்பது இன்றைய சமுதாயத்தின் தேவையாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பை வழிபடுவது ஏன் ?

**திருமதி. எம். தமிழ்ச்செல்வி, ஆரம்பப்பிரிவு-1, விடுகையாண்டு (98-99)**

நாகர் என்று சொல்லப்படும் பாம்புத் தெய்வத்தைத் தொன்மையான வரலாற்றுக் காலத்திலிருந்து இந்துக்கள் பக்தியுடன் வழிபட்டு வந்திருக்கிறார்கள் நல்ல பாம்பு கொடிய விஷம் கொண்டது எனினும் அதைக் கொல்லுவது பாவம் என்று இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் கருதுகிறார்கள்.

சமணர்கள், புத்த மதத்தினர் ஆகியோரும் பாம்பு தெய்வத்தன்மை வாய்ந்தது என்று கருதியே போற்றி வந்துள்ளார்கள்

நவக்கிரங்களில் ராகு, கேது ஆகிய இருவரும் பாம்பு வடிவினர் என்று எமது மதம் கூறுகிறது. பாம்புத் தெய்வத்தை வணங்குகின்ற பாங்கு சைவ, வைணவ நெறிகளில் இடம்பெற்றிருக்கிறது. நாகபரணர், பிணாகபாணி என்று சிவபெருமான் அழைக்கப்படுகிறார். அவர் பாம்புகளைக் குண்டலமாகவும், மாலையாகவும் அணிந்தவர். இறைவனது முடி மீது பாம்பு நிலவைச் சுற்றி விளங்குகிறது. சிவபெருமான் திரிபுர சங்காரம் செய்ய அரவு பூணாக உதவியது என்று புராணம் கூறும்.

திருமால் திருப்பள்ளி கொண்டிருக்கும் நாகம் அனந்தன் என்று பெயர் கொண்டது. அனந்தன் ஆயிரம் தலைகள் கொண்டவன். அவன் பாம்புகள் அனைத்துக்கும் பெரும் தலைவன். இந்த அனந்தன் பெருமாளுக்குப் பலவிதங்களில் கைங்கரியம் செய்கிறான்.

"சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள் – என்றும்
புணையாம் மணியாவிளக்காம் பூம்பட்டாம்
புல்கும் அணையம் திருமாலுக்கு அரவு."

ஆதிசேஷன் என்ற பெயர் அமைந்த இந்த அனந்தன் பெருமாளுக்கு இவ்வாறு தொண்டு செய்கின்றான் என்று பொய்கையாழ்வார் பாடியுள்ளார்.

இந்துக்கள் வாழும் இடங்களில் அரசமரம், வேப்பமரம் ஆகியவற்றுக்கு அடியில் நாக உருவங்களைக் கல்லில் செதுக்கி பிரதிஷ்டை செய்து வணங்குவது மரபு.

குழந்தைகள் பிறக்காத பெண்கள் நாகக்கல் அடித்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்து கொள்வார்கள். பாம்பின் உருவம் செதுக்கப்பட்ட கல் முதலில் ஆறு மாதங்கள் ஒரு கிணற்றில் போட்டு வைக்கப்படும், பிறகு அதை எடுத்து அரச மரம் அல்லது வேப்பரத்தின் கீழ் வைத்துப் பிராண பிரதிஷ்டை செய்வார்கள். பால், சர்க்கரை சேர்த்துப் பொங்கல் வைக்கப்படும், அரிசி சோறு நைவேத்தியமாகப் படைக்கப்படும். இவ்வாறு வழிபடும் பெண்கள் கருதரிப்பார்கள் என்பது சமய நம்பிக்கை.

நாகராஜ பூசை என்பதும் பெண்களால் செய்யப்படும் ஒரு பூசையாகும். ஏதாவது ஒரு மாதத்தில் சுக்ல பட்ச சஷ்டி திதியன்று விரதம் இருந்து நாகராஜ பூசையைச் செய்ய வேண்டும். முற்பிறவியில் செய்திருக்கக் கூடிய ஸர்ப்ப தோஷங்கள் நீங்குவதற்கும் நல்ல குழந்தைகள் பிறப்பதற்கும் இந்தச் சுக்ல பட்ச சஷ்டி விரதமும், பூசையும் உதவும்.

பாம்பாட்டிச் சித்தர் என்ற ஞானி சுமார் 130 பாடல்களில் பாம்பை அழைத்துப் பாடியதாகச் "சித்தர்" ஞானக்கோவை என்ற நூலில் உள்ளது.

ஆலடிப் பொந்தினிலே வாழ்ந்த பாம்பே
அரசடிப் பொந்தினிலே புகுந்து கொண்டாய்
வாலடி தன்னிலே பார்த்துப் பார்த்து
வாங்கியே தூக்கி நின்று ஆடு பாம்பே

இது அவற்றில் ஒரு பாடல். மனித உடலின் மூலாதாரம் குண்டலினி ஸ்தானம். மூலாதாரமான பாம்பினை யோக பயிற்சியினால் எழுப்பி, மேலேற்றும் திறம் பற்றிப் பாடியதால் இவர் பாம்பாட்டி என்று குறிப்பிடப்பட்டதாகக் கொள்ளலாம்.

மனித உடலின் மூலாதாரமே பாம்பு என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. மூலாதாரத்தில் உறங்கும் குண்டலினியை விழிப்பிக்கச் செய்து அதை அந்நிலையிலேயே இருக்க வைத்து ஆன்மாவை இறைவனோடு ஒன்று படுத்தும் ஒரு மார்க்கமே பாம்பு வழிபாடாகச் சாதாரண மக்களிடையே நாளாவட்டத்தில் பரவியிருக்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயச்சடங்குகளில் நாட்டாரிசை

**திரு.மு.மணிமொழி, இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு**

உலகத்தோரின் உன்னத படைப்புகளில் இசைக்கலையும் ஒன்றாகும். மனித வாழ்வின் பல்வேறு கட்டங்களோடு இரண்டறக் கலந்து நடனங்கள், சமயச் சடங்குகள் முதலியவற்றுடன் இயைந்து இக்கலை காலந்தோறும் செழுமை பெற்றுவந்துள்ளது. இந்தவகையில் இசைப்பாடல்கள் சமயச் சடங்குகளில்மிகவும் இன்றியமையாத வகையில் பெரிதும் பயன்பட்டுள்ளன. இசையே சடங்குகளுக்கு உயிர்த்தன்மை அளிப்பது. அதன் பொருட்டு இசைக் கருவிகளும் பயன்படுத்தப்பட்டன. அனைத்து நாடுகளிலும் பூர்வீக காலம் முதலாக நடைபெற்று வந்த சமயச் சடங்குகளிலே இசையின் பங்கு முதன்மையானது. பூர்வீக இசைப்பாடல்கள் சமயப் பின்னணியைக் கொண்டிருந்ததைப் போன்றே பூர்வீக நடனங்களும்,கூத்துக்களும் மத அடிப்படையிலேயே அமையலாயின. அதனால் பூர்வீக நடனப் பாடல்களும் சமயப் பின்னணியை கொண்டிருத்தல் இயல்பாயிற்று. தமிழ் மக்களின் வாழ்க்கையில் சமூகப் பின்னணியிலமைந்த சகல நடனங்களிலும் இடம் பெறும் பாடல்கள் யாவும் சமயப் பின்னணியை பெற்றிருத்தல் வெளிப்படையான விடயமாகும்.

சடங்குகள் ஆரம்ப காலத்தில் சமயப் பின்னணியில் தொடங்கி காலப்போக்கில் சமூக நிகழ்ச்சிகளுடன் தொடர்பு பெற்றன. அத்தகைய சடங்குகள் முன்பு நடனங்கள், நாடகங்கள் என்பவற்றுடன் இணைந்தே இடம்பெற்றது. இத்தகைய ஆட்டங்களுடன் இசையும் இணைந்தே இடம்பெற்றது ஆதலினாலேயே அனேகமான நடனப் பாடல்கள் சமயப் பின்னணியைக் கொண்டனவாக காணப்பட்டன. சிலப்பதிகாரத்திலே கூறப்படுகின்ற ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, கானல் வரி, வேட்டுவவரிப் பாடல்கள் இவ்வுண்மையை நிரூபிக்கின்றன. பண்டைய தமிழ் நாட்டில் சமய நிகழ்ச்சிகளின் போது இசைப்பாடல்கள் இடம் பெற்றன என்பதைசங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

சடங்குகளின் போது பாடல் மிக முக்கியத்துவம் பெறுகின்றது.சடங்கு முடியும் வரை பாடல்கள் இசைக்கப்படும். உதாரணமாக கிராமங்களிலே இல்லங்களில் நடைபெறும் மாரியம்மன் சடங்கு அல்லது விசேட பூசைகளின் போது மாரியம்மன் உற்பத்தி, மாரியம்மன் தாலாட்டு, முதலான பாடல்களைப் பாடுதல் சடங்கின் முக்கிய நிகழ்ச்சியாக உள்ளது. இசைமுறைகள் பூர்வீக காலம் முதலாக சடங்குகளுடனும், சம்பிரதாயங்களுடனும் தொடர்புடையனவாக வழங்கி வந்துள்ளன என்பதை பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. புவியியல் வேறுபாடுகளுக்கும், மக்கள் வாழ்க்கை முறைகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் ஏற்ப சடங்குமுறைகளும் வேறுபட்டிருத்தல் இயல்பே. அத்தகைய சடங்குகளில் பயன்படுத்தப்படும் இசைப் பாடல்களும் அவற்றிற்கேற்ற வகையில் வேறுபட்டு இருத்தல் இயற்கையாகும்.

அந்த வகையில் சமய சடங்குகளில் இடம் பெற்று வந்த வெறியாட்டம், கரகம், காவடி முதலிய வழிபாட்டு முறைகளில் நாட்டார் இசைப்பாடல்கள் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. இவ்வாறான இசைப்பாடல்களினூடாக பத்தினி, மாரியம்மன், பேச்சி அம்மன், கெங்கை வைரவன், வீரபத்திரர், வதனமார், ஐயனார் முதலான பல கிராமிய தெய்வங்கள் போற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயம்.....

ஆர்.பி.சிவகுமார், ஆரம்பப்பிரிவு-I, விடுகையாண்டு (98-99)

வரலாற்று அடிப்படையில் நோக்கின் இந்துசமயம் மிகவும் பழமைவாய்ந்தது. பரந்த நோக்குடையது. ''சனாதனதர்மம்'' என்று வழங்கப்படுவது. அது காலப் போக்கில் பல்வேறு கருத்துக்களையும் கோட்பாடுகளையும் தனதாக்கி ஏற்று இன்றைய இந்துமதமாக வளர்ச்சி அடைந்திருக்கின்றது.

சிந்துவெளி அகழ்வுகளிலிருந்து இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்த மதமாகவே எமது இந்துமதம் திகழ்கின்றது. சிந்துவெளிகால இலச்சினைகள், முத்திரைகள் மூலமாகவும், வேதகாலப்பாடல்கள் மூலமாகவும், உபநிடதங்கள் இதிகாசபுராணங்கள் வாயிலாகவும் இந்துசமய வழிபாட்டு முறையினையும், அக்காலங்களில் இந்துசமயம் பெற்றுவந்த முக்கியத்துவத்தினையும் அறியக்கிடக்கிறது.

சங்ககாலத்தில் ஐவகைநிலங்களுக்கும் இந்து சமயக் கடவுள்களே வழிபாட்டுமுறையில் இருந்தது. சங்ககால மிதமிஞ்சிய காதலினாலும், போரினாலும் விரக்தியுற்ற மக்கள் சங்கமருவியகாலத்தில் அறவழி செல்ல முற்பட்டனர். இதனால் மக்கள் வைதீகசமயங்களிலிருந்து அவைதீக சமயங்களுக்கு மதம் மாறத் தொடங்கினார்கள். இதனால் இந்து சமய வளர்ச்சி பின்னடைவை அடைந்து கொண்டிருந்தது.

அடுத்து பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி, பின்னடைவில் சென்று கொண்டிருந்த எமது மதத்தைத் தமது அற்புதங்களினாலும், தேவாரத் திருப்பதிகங்களினாலும் ஒரு உன்னதநிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றனர்.

ஈழத்தை எடுத்துப்பார்போமானால் அந்நியர் வருகைக்கு முன்னரே ஈழத்தில் இந்துமதம் பரவியிருந்ததோடு மக்கள் சிறந்த கட்டுக்கோப்புடன் இந்து சமய நெறியில் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

அடுத்து அந்நியர் வருகைக்குப்பின்னர் அவர்கள் தமது மதத்தைப் பரப்புவதிலேயே முழுமூச்சாக இருந்து செயற்பட்டு வந்தனர். குறிப்பாக ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்களையும், உதவிகளையும் வழங்கியதால் இந்துக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறத்தொடங்கினர். இவ்வாறு எமது மதம் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்த காலத்திலேதான் 19ம் நூற்றாண்டிலே இறைவனே எமது சமயத்தை வளர்க்க அனுப்பிவைத்தது போல ஆறுமுக நாவலர் பெருமான் தோன்றி இந்து மதத்தை ஒரு உன்னத நிலைக்கு இட்டுச் சென்றார்.

இதேபோன்று சைவப்பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள் போன்றவற்றை ஸ்தாபித்து சைவத்தை வளர்த்து ஒரு உன்னத நிலைக்கு ஆறுமுகநாவலர் இட்டுச் சென்றார் என்றால் அது மிகையாகாது.

இந்து சமயத்தின் உண்மையான தத்துவக் கொள்கைகளை பாமர மக்கள் தெரிந்து அவற்றை கடைபிடிக்கக் கூடிய வழிகாட்டல் போதுமானதாக இல்லாமையினால் சமயச்சடங்குகளில் சிறு தளம்பல் நிலை காணப்படுகிறது.

பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் போன்றோருக்குப் பிக்குகளும், பாதிரிமாரும் இருப்பது போன்று இந்துக்களுக்கு இந்துசமயநெறியில் இட்டுச்செல்ல ஒரு குரு இல்லாமையே எமது சமயவளர்ச்சி பின்னடைவாக உள்ளது.

மேலும் ஏனைய மதங்களுக்கு அறநெறிவகுப்புக்கள் சீரான, முறையான ஒழுங்கில் நடைபெறுகின்றது. ஆனால் எமது சமயத்தைப் பொறுத்தவரையில் இந்நிலை மிகவும் குறைவாகவே உள்ளது. மேல்நோக்கிய சிந்தனை கொண்ட பெரியோர்களின் முயற்சியால் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் அறநெறி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு நடத்தப்பட்டாலும் பெரும்பாலான மாணவர் ஒழுங்காகச் செல்வதில்லை. எனவே பயனற்ற செயற்பாடாக அமைந்து விடுகிறது.

எனவே இந்துமதத்தை பல்லவர் காலம்போல், இலங்கையில் ஆறுமுகநாவலர் காலம் போல் உன்னதமான நிலைக்கு இட்டுச்செல்ல, ஒவ்வொரு இந்துவும் திடசங்கற்பம் பூண்டு செயற்பட வேண்டும். பாடசாலைகளின் மூலமாவும், அறநெறிபாடசாலைகளைத் திட்டமிட்டும் இந்துசமயத்தை வளர்க்கவேண்டும். மாணவர்களுக்கு சைவசம்பந்தமான போட்டிகளை விழாக்காலங்களின் போது வைத்து பரிசில்கள் வழங்க வேண்டும். இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் உயர்ந்த சிந்தனைவழி நின்று எமது சமயத்தை வளர்ப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்சர தெய்வங்களின் பயன்களும் அதற்கு சொல்ல வேண்டிய மந்திரங்களும்

**செல்விகள்: ச.சசிகலா, ச.சியாமளா, தி.சசிகலா,**
முதலாம் வருடம், ஆரம்பப்பிரிவு

நமக்கு எந்தக்காரியத்தையும் திறம்பட நடத்தும் பண்பு வரவேண்டும். சாதனை செய்து சோதனையில் வெற்றியடைய வேண்டுமாயின் கீழ்வரும் மந்திரங்களை சொல்ல வேண்டும். பெறக்கூடிய நன்மைகளும் அதற்குரிய கடவுள்களும் மந்திரங்களும் பின்வருமாறு.

**1. கணேசன்**

நன்மை: கஷ்டமான காரியங்கள் வெற்றியடையும் இடையூறுகள் மறையும், அறிவு வளரும்.

மந்திரம்: ஓம் ஏகதன்ஷ்ராய வித்மஹே, வக்ர துண்டாய தீமஹி தன்னோ புத்தி ப்ரசோதயாத்.

**2. விஷ்ணு:**

நன்மை: நல்ல வாழ்வு தன் நன்னிலை கெடாமலிருத்தல்

மந்திரம்: ஓம் நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி, தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்

**3. சிவன்**

நன்மை: தனக்குத் தேவையில்லாமல் தன்னில் இருக்கும், குற்றம் குறைகள் அழிதல் ஆன்ம ஞானம் பெறும் இச்சை அதிகமாதல்

மந்திரம்: ஓம் பஞ்ச வக்த்ராய வித்மஹே, மஹாதேவாய தீமஹி, தன்னோ ருத்ர ப்ரசோதயாத்

**4. லட்சுமி**

நன்மை: செல்வம் புகழ், போக பாக்கியங்கள் சேரல்

மந்திரம்: ஓம் மஹாலக்ஷ்ம்யை வித்மஹே, விஷ்ணு ப்ரியாயை, தீமஹி தன்னோ லக்ஷ்மி, ப்ரசோதயாத்.

**5. சரஸ்வதி**

நன்மை: நல்லறிவு வளர்ச்சி, கல்வியின் மேன்மை, சூஷ்ய திருஷ்டி முதலிய சாதனங்களில் வெற்றி

மந்திரம்: ஓம் ஸரஸ்வத்யை வித்மஹே, ப்ரஹம பத்னியை தீமஹி, தன்னோ தேவீ ப்ரசோதயாத்.

**6. துர்க்கா**

நன்மை: தொல்லைகள், சச்சரவுகள் விலகல், கெட்டவர்களை அடக்குதல், கர்வம் அடங்குதல்.

மந்திரம்: ஓம் கிரிஜாயை வித்மஹே சிவ ப்ரியாவை தீமஹி, தன்னோ துர்கா ப்ரசோதயாத்.

**7. ஆஞ்சனேயர்:**

நன்மை: கடமையை எவ்வித எதிர்ப்புக்குமிடையில் செய்து முடித்தல், நம்பிக்கைக்கும் பாத்திரமாயிருத்தல், பிரம்மச்சர்யம் மேற்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம்: ஓம் அஞ்சனீ சுதாய வித்மஹே, வாயு புத்ராய தீமஹி, தன்னோ ப்ருத்வீ ப்ரசோதயாத்.

**8. சூர்யன்**

நன்மை: நீண்ட ஆயுள், ஆரோக்கியம், உடல்சுத்தி

மந்திரம்: ஓம் பாஸ்கராய வித்மஹே, திவாகராய தீமஹி, தன்னோ ஸுர்ய ப்ரசோதயா்

**9. சந்திரன்**

நன்மை: தொல்லைகள் மாறல், கோபம், ஆத்திரம் முதலியவை அடங்கிப் போதல்

மந்திரம்: ஓம் கஷ்ர புத்ராய வித்மஹே, அம்ருதத்வாய தீமஹி தன்னோ சந்தர ப்ரசோதயாத்

**10. யமன்**

நன்மை: நேரத்தை நல்லவிதமாய்ப் பயன்படுத்தல், மரணத்துக்கு அஞ்சாமை எப்போதும் சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாயிருத்தல்.

மந்திரம்: ஓம் ஸீரய புத்ராய வித்மஹே, ஹன்ஸாரூடாய தீமஹி, தன்னோ யம. ப்ரசோதயாத்.

**11. பிரம்மா**

நன்மை: புதுமையைச் செய்யும் அறிவு, பயிர்த்தொழில் செழித்தல், தாவரங்கள் நன்கு வளர்தல்

மந்திரம்: ஓம் சதுர்முகாய வித்மஹே, ஹன்ஸாரூடாய தீமஹி தன்னோ ப்ரஹ்ம ப்ரசோதயாத்.

**12. வருணன்**


நன்மை: கலைகளில் பற்று, எளிமையாயிருத்தல், தயை, கவி செய்யும் திறமை வளர்த்தல், ஏழை எளியவர்கள் பால் இரக்கம் கொள்ளல்.

மந்திரம்: ஓம் ஐல விந்தாய வித்மஹே, நீலபுருஷாய தீமஹி, தன்னோ, வருண ப்ரசோதயாத்.

**13. துளசி**

நன்மை: மக்களுக்குச் சேவை செய்வதில் ஆர்வம், எப்போதும் உண்மையைப் பேசல், பிறரின் துன்பங்களைப் போக்கும் முயற்சி.

மந்திரம்: ஓம் ஸ்ரீ துளஸ்யை வித்மஹே, விஷ்ணு ப்ரியாயை தீமஹி தன்னோ வ்ருந்தா, ப்ரசோதயாத்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிய சமூக கருத்துருவாக்கத்தில் நாயன்மார்களின் பங்களிப்பு.

ஆக்கம். ஜே.சற்குருநாதன், (விரிவுரையாளர்)

**சம்பந்தர், அப்பர், சுந்தரர் பற்றிய மீள்வாசிப்பு.**

பல்லவர் காலம் தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற காலமாக கருதப்படுகின்றது. பக்தி இலக்கியங்கள் பெருந்தொகையாக எழுந்தகாலமாக எண்ணப்படுகின்றது. பல்லவர்காலத்தில் எழுந்த பக்தி இயக்கம் பண்பாட்டு கலாசாரத்தளத்தில் முனைப்பு பெற்று எழுந்தது. சமண, பௌத்த சமய கருத்துதாக்கல்களுக்கு மாற்றீடாக பொதுவான அடித்தளத்தில் சைவ வைணவ கருத்தியலை பக்தி இயக்கம் முன்வைத்து மக்கள் மயப்படுத்தியது. வடமொழி ஆதிக்கத்திற்கு எதிராகவும், வாழ்வின் நம்பிக்கையினை ஏற்படுத்தவும் கணிசமான பங்கினை ஆற்றியது. தமிழ் மண்ணில் தமிழ் பொதுமைபடுத்தும் சிந்தனைகளை உள்வாங்கி பண்பாட்டுத்தளத்திலும் பாரிய தாக்கத்தினை பக்தி இயக்கம் கொண்டுவந்தது. இத்தகைய பன்முக வெற்றியின் பின்னால் ஆதிக்க சக்தியின் சாதிய சமூக சிந்தனைகளும் மிக நிதானமாக கட்டியெழுப்பப் பட்டதை பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

''நெல்தந்தது நிலம் சார்ந்த அரசியல் அல்ல'' எந்நாட்டார்க்கும் இறையான சிவன் மற்றும் விஷ்ணு என்ற போது சைவமும் வைணவமும் தழைத்தோங்கின. ''ஆவுரித்துதின்றுலலும் புலையரையும்'' ஐக்கியப்படுத்தி எழுந்த பக்தி பேரியக்கத்தின் பெயராலே பிராமணியம் தமிழகம் எங்கும் கோலோச்சும் நிலை தோன்றியது. சாதிய இறுக்கம் தமிழில் முழு வடிவம் பெற்றது. என்ற ந. ரவீந்திரனின் கூற்று இவ்விடயத்தில் அவதானிக்கத் தக்கது.

சாதியம் என்ற கருத்துருவம் தமிழ் தேசியம் என்ற நிலையிலும் நாயன்மார்களின் பங்களிப்பை நோக்குவது பயனுள்ள முயற்சியாகும். இவ்வாறான போக்கை அல்லது கருத்தியலை சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரையும் வரம்புக்குள் வைத்துக் காண்பது சாலப்பொருந்தும். இவர்கள் மூவரையும் சுற்றியே ஏனைய சைவ அடியார்களின் பணிகளும் அமைந்துள்ளன.

பல்லவர் கால சமூக நிலையானது வேளாண்மை மயமான பொருளாதார அமைப்பை கொண்டிருந்ததாக ஆய்வாளர்கள் எடுத்துரைப்பர். இவ்வாறான சமுதாய அமைப்பில் புதிது புதிதாக நிலங்களை உருவாக்கியும் பழைய உணர்வுகளையும் புதிய வாழ் நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டன. இவ்வாறான சமூக பொருளாதார சூழ்நிலையில் சம்பந்தரின் தோற்றம் அமைகிறது. சீர்காழி என்ற ஊரில் பிறந்த சம்பந்தர் பிராமணக் குலத்தில் அவதரித்தவர். இவருடைய பாடல்கள் பெரும்பாலும் நம்பிக்கையின் அடிப்படையில் இறையியலை கட்டியெழுப்புவதாக அமைந்துள்ளது. கூடவே தமிழ் மொழிக்கு அழுத்தங்கொடுத்து தமிழ் உணர்வுக்கும் வழிசமைக்கும் வகையில் இவரது பணிகளும், பாடல்களும் கட்டியெழுப்பப்பட்டன. சுமார் 230 இடங்களுக்குச் சென்று சைவத்தையும் தமிழையும் வளர்க்க முயன்றார் என அறியக்கிடக்கிறது.

வேதநெறிகளையும் அதன் அடிப்படையில் அமைந்த வருணாச்சர தர்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளை கடுமையாக சாடியது பௌத்தம் வேதங்களை வகுத்த பிராமணியம் மாற்றம் இல்லை. என்ற கருத்தை முன்வைக்க, பௌத்தம் மாற்றம் இயல்பானது. அது நடந்து கொண்டிருக்கும் என வாதிட்டது. ஆனால் பொருள் முதல்வாத முனைப்பான விடயங்களை அது உள்வாங்கவில்லை. பௌத்தமும் சமணமும் வடமொழியை ஆதாரமாகக் கொண்டு எழுந்தது. எனினும் அதற்கு ஏனைய துனைமொழிகளின் செல்வாக்கை அது ஏற்றுக் கொண்டு எழுந்தது. திராவிட மொழி குடும்பமொழி அமைப்புக்குள்ளும் பௌத்தம் சமணம் தன்னைச் சார்ந்த மொழிக் கலப்பை ஏற்படுத்தியது. சமூகத்தைப் பொருத்தவரை குறிப்பிடத் தக்க சமத்துவ நிலைக்கு போராடியது. சமண சமய நூல்கள் தங்களை சார்ந்த மொழியின் அடிப்படையில் போதனைகளை செய்தன. வடமொழி தமிழ் மக்கள் மத்தியில் பரவிவருவதை கண்ட சைவ நாயன்மார்கள் தமிழ் உணர்வை மக்களிடத்தில் வளர்த்து அதனூடாக சைவத்தை வளர்க்க முற்பட்டனர்.

சம்பந்தர் 'வேதநெறி தழைத்தோங்க' தமிழில் பாடியது தமிழை வளர்க்க முற்பட்டாலும் 'வேதநெறி என்ற' அம்சத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். வேதநெறி என்பது இந்து சமயத்தின் அடிப்படை விடயங்களை விளக்குவதாக அமைந்துள்ளது. ரிக் வேத காலத்திற்கு பின் தோன்றிய வேதங்கள் பிராமணிய குரலை வலுப்படுத்துவதாக உள்ளன. திராவிட, ஆரியக் கலப்பு இணைந்து சாதிய முறையை நிறுவன வடிவமைப்பில் ஏற்படுத்தின. மனு தர்மங்களும், புராணங்களும் இதற்கு ஏதோ ஒரு வகையில் துணை நின்றன. அல்லது சாதியக் கருத்துக்கள் திணிக்கப்பட்டன. இவற்றுக்கு அடிப்படையான வேதநெறியை சம்பந்தர் தழைக்கச் செய்வது தமிழ் பிராமணியத்தை வளர்க்கவே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பொது இடங்களில் சைவத்தை வளர்க்க சம்பந்தருக்கு தேவையேற்பட்டது. அதனால்தான் தான் சென்ற இடங்களில் சாதியத்திற்கு அழுத்தங் கொடுக்காமல் தமது உறவு, குடும்பம், திறமை என்று வரும் போது இத்தகைய சிந்தனை உறவுகளை பேணுவதை அவதானிக்கலாம்.

கோ. கேசவன் பின்வருமாறு கூறுவது அவதானிக்கத் தக்கது. சம்பந்தர் பாடல்களில் தமது தமிழ் ஆர்வத்தை அளவிற்கு அதிகமாக அவர் வலியுறுத்தும் போது தமிழர் சமூகத்தோடு இணைய முயலும் பார்ப்பனர் குரலை கேட்கமுடிகிறது. பரசமயக் கோளரியான ஆளுடைய பிள்ளையாரின் பாடல்கள் அன்றையக் காலத்தில் வேளாண்மை மயமாக்கல் இறையிலான வேதநெறியோடு தம்மை முற்றாக இணைத்துக் கொண்ட பார்ப்பனர் குரலாக உள்ளது. 'மண்ணில் நல்லவண்ணம் வாழ முடியும்' என்ற தெம்பைக் கொடுத்தது. இவ்வாசகம் உண்மையில் கவனிக்கப்பட வேண்டும். தமிழை வளம் படுத்தியது. தமிழார்வத்தை தூண்டியது, அதனை ஒரு மக்கள் இயக்கமாக முன்னெடுத்தது போன்ற விடயங்களில் சம்பந்தரின் பணி போற்றத் தக்கது. எனினும் தமிழுக்குள் மறைந்திருக்கும் பார்பனிய குரலை சம்பந்தர் பாடல்களிலும், பணிகளிலும் அவதானிக்க முடிகிறது. பௌத்த சமண சமய எதிர்ப்புடன் சைவமேலாண்மையை நிலை நிறுத்தியது மட்டுமன்றி, ஆகம வழிபாட்டு முறையுடன் இணைந்த பிராமண வேளாள இணைவுடன் அவரது பணிகள் அமைந்துள்ளதை கவனிக்க தவறக் கூடாது.

சமணத்தில் இருந்து சைவத்திற்கு மீண்ட அப்பர் சமணத்தை ஏற்றுக் கொண்டு சைவராக வாழ்ந்தவர். அப்பருடைய பாடல்களில் ஒருவித புலம்பல் தன்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வு மனப்பான்மையும் விரவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. சம்பந்தர் பாடல்களில் உள்ள கருத்துக்கள் அப்பர் பாடல்களிலும் இடம் பெற்றிருப்பினும் 'ஆவுரித்து தின்றுழலும் புலையரேனும்' யாவரும் கடவுளிடத்தில் ஒன்றே என்ற குரல் ஒலிப்பதைக் காணலாம். அப்பர் சமூக அமைப்பில் பின்தங்கியவராக இருந்தமையால் மேலாதிகச் சக்திகளுடன் சமரசம் செய்து கொள்ளும் போக்கினையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமண பௌத்த ஆதிக்க சக்தியினை எதிர்க்க வலுவான ஐக்கியத்தை கட்டி எழுப்பவேண்டிய தேவை நாயன் மார்களுக்கும், ஆழ்வார்களுக்கும் ஏற்பட்டது. எதிர்ப்பு உணர்ச்சிக்கு பல்வேறு தொழில் பிரிவுகளாக காணப்பட்ட சாதிகளை இணைக்கவேண்டிய தேவை இவர்களுக்கு ஏற்பட்டது. வணிக வர்க்கத்தினராகவும் நிலக்கிழாராகவும் இருந்த சமண பௌத்த சமயத்தை எதிர்க்க பரந்த ஐக்கியத்தை கட்டியெழுப்பினர். நால்வர்ண பாகுபாடு தமக்குள் இருந்தாலும் அதனை பொதுவாழ்வில் எதிரிகளின் செல்வாக்கைக் குறைக்க நாயன் மார்களும் ஆழ்வார்களும் பாடுபட்டனர். வணிக வர்க்க ஆதிக்கத்தில் இருந்து நிலமானிய சமூகத்திற்கும் அதனை சார்ந்த அரசியல் நிறுவன முறைக்கும் பக்திப் பேரியக்கம் முன்னெடுத்த போது தங்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு சாதிஅடிப்படையில் சமரச போக்கோடு தற்காலிகமான முன்னிபந்தனையாக கொள்ளப்பட்டது. இக்காலக்கட்டத்தில் சாதிகளுக்கிடையிலான உள்முரண்பாடுகளைவிட அனைத்துச் சாதியினருக்கும் உள்ளடக்கத்தில் ஒருசமயம் என்ற பொதுக்கருத்து உருவாக்கப்பட்டது.

எனினும் சாதிகளின் படி நிலை முற்றாக புறந்தல்லாத போக்கினை அப்பர், நம்மாழ்வார் பாடல்களில் காணலாம். 'கங்கைவார் சடை கரந்தார்க்கு அன்பராகில்' அவரே சண்டாளனாயினும் புலையராயினும் ஏற்றுக் கொள்ளப் படுவர் என இவ்வரிகள் கூறுகின்றன. சமயம் என்ற போர்வையில் சாதியத்திற்கு அழுத்தம் கொடுக்கப் படவில்லை. எனினும் அப்பருடைய பாடல்களில் பார்ப்பனர் - வேளாளர் தற்காலிக இணைப்பு ஏற்பட்டது. அப்பரின் தாழ்வு மனப்பான்மையுடன் நோக்கும் பொழுது சாதியத்தை தகர்க்கும் முயற்சியில் பின்தங்கி உள்ளவர் போல் தெரிகிறது. சம்பந்தர், சுந்தரரை விட அப்பருக்கு சமணர்களால் அதிக தண்டனை வழங்கப்பட்டதையும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். அப்பர் சாதிய அடிப்படை மாற்றங்களை காண விளைந்தாலும் அதனை மாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை என்பது அறிஞர்களின் துணிபாகும்.

சுந்தரர் பிராமணக்குலத்தில் அவதரித்தவர். சுந்தரர் பலவேடங்கள் பூண்டு சிறப்பாக வாழ்ந்தவர். ஏறத்தாழ 85 இடங்களுக்குச் சென்று திருப்பணிகள் செய்து வந்ததாக அறியக்கிடக்கின்றது. சமண பௌத்த சமயங்களை எதிர்க்க வேண்டிய தேவை சம்பந்தருக்கும், அப்பருக்கும் இருந்தது. ஆனால் அவ்வாறான நிலை சுந்தரருக்கு ஏற்படவில்லை. வாழ்வியலில் ஈடுபாடுகொள்வதற்கான அம்சங்கள் சுந்தரரின் பாடல்களில் காணப்படினும் உன்னிப்பாக பார்த்தால் 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்' என்ற நிலைப்பாடே அவதானிக்க முடிகிறது. அடியார் வழிபாடு என்ற விடயத்தில் சுந்தரருக்கு ஈடுபாடு இருப்பினும் அதனை மக்கள் இயக்கமாக முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை.

ஒரு புறம் திருதலங்களுக்குச் சென்று பாடிய சுந்தரர் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலப்பெருமைகளை அடிப்படையாக வைத்தே அவரது திருமணமுறைகளும் இடம் பெற்றன. சாதியப்படி நிலையில் அகமண முறையில் அவரது செயற்பாடு அமைந்திருப்பினும் இறுதியில் இறைவனோடு சேர்ந்துவிடுகிறார். தோழமையுணர்வு இவரது பாடல்களில் ஓங்கி ஒலிப்பதை காணத்தவறக் கூடாது. அத்தகைய தோழமையுணர்வு பொது இடங்களுக்கு மட்டும் உரித்தாக இருந்தது. சாதிய முறைகளை பூரணமாக ஏற்படுத்தி விட்டு அதனைச் சாராத ஒருவராக மறைந்து விடுவதையும் காணமுடிகிறது. வடமொழி மீது இவருக்கு ஓரளவு ஈடுபாடு இருந்தது என்பதை இவரது பாடல்கள் மூலம் அறியலாம். சம்பந்தரைப் போல தமிழ் மயப்படுத்தாத ஒருவராக சுந்தரர் காணப்பட்டாலும் தமிழின் தொன்மையை, வலிமையை, இயக்கத்தைப் பற்றி நிறையவே பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி தேவாரமுதலிகளின் சாதிய சமூக கருத்துருவாக்கங்கள் செயற்பட்டன. பண்பாட்டியக்கம் என்ற அடிப்படை ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்த பக்தி பேரியக்கம் அதன் பின்னால் பார்பனிய சிந்தனைகள் ஒலிப்பதை காணத்தவரக் கூடாது. பக்தி பேரியக்கத்தின் பின்னால் பண்பாட்டுக் கலாசார எழுச்சிக்கு மக்கள் துணையுடன் பெரும் சாதனையை இவர்கள் செய்தது வியக்கத்தக்கது. கூர்மையான வர்க்கப் போராட்டத்தின் ஒரு அம்சமான சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்திய இவர்களின் பணிகள் பல மாற்றங்களையும் படிப்பினைகளையும் தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஏற்படுத்தியுள்ளன.

மூவரின் பணிகளின் பின்னால் காணப்பட்ட சாதிய சிந்தனைகள் நிறைய விவாதிக்க வேண்டும். சாதிய போராட்டத்துடன் வர்க்கப் போராட்டம் இணையாத வரை சாதியத்தையும் சமூக மாற்றத்தையும் ஏற்படுத்த வெகு காலம் செல்லும் என்பதை பல்லவர் காலம் நல்லதொரு அனுபவமாக எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

**உசாத்துணை நூல்கள்.**


1. புதுவசந்தம் (தேசியக் கலை இலக்கியப் பேரவை வெள்ளி விழா மலர்)
2. தமிழ்மொழி, இனம், நாடு (கோ. கேசவன்)
3. தமிழ் தேசியப் பேருரைகள் (கட்டுரைத் தொகுப்பு)
4. பெரிய புராணம் ஒரு ஆய்வு (பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தர்)
5. தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும். (பேராசிரியர் கா. சிவத்தம்பி)
6. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் (பேராசிரியர் கைலாசபதி)
7. இந்திய தத்துவவியல் (ராகுல் சத்திருத்தியான்)
8. தாமரை (பொங்கல் சிறப்பு மலர்)
9. பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரீகமும் பற்றிய வரலாறு (பு.பு. கோசாம்பி)
10. தமிழர் வாழ்வும் பண்பாடும் (நா. வானமாமலை)


கண்பார்வையற்றவன் குருடன் அல்லன் தன் குற்றங்களை உணராதவன் இருக்கிறனே, அவன் தான் சரியான குருடன்

–மகாத்மா காந்தி–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தனின் கணங்கள்

செல்வி.ஆ.நிரஞ்சனி, ஆரம்பப் பிரிவு-2, விடுகையாண்டு.

- எவன் சித்தம் முற்றிலும் அமைதியாக இருக்கின்றதோ
- எவன் எல்லோரிடமும் மிருதுவாகவும் இனிமையாகவும் நடக்கின்றானோ
- எவன் இந்திரியங்களை வென்று விட்டானோ
- மனம் மொழி மெய்களினால் எவரிடத்தும் பகை இல்லாது எவன் இருக்கின்றானோ
- எவன் மனம் கருணையினால் உருகி ஓடுகிறதோ
- எவன் திருட்டு, வன்முறைச் செயல்கள் ஆகியவற்றிலிருந்து எப்போதும் விலகி இருக்கின்றானோ
- எவனது வாழ்க்கை நல்ல காரியங்களையே செய்வதனால் தூய்மையுற்றிருக்கின்றதோ
- எவன் பிறர் மகிழ்வதைக் கண்டு தான் மகிழ்கிறானோ
- எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருப்பதை உணர்வதால் எவன் எவரிடமும் பொறாமையோ பகைமையோ கொள்வதில்லையோ
- ஏழை என்பவருக்கு இரங்குவதே எவனுடைய இயல்பாகி விட்டதோ
- எவன் பிறருக்கு உதவுவதிலேயே கருத்தாய் இருக்கின்றானோ
- எவன் பிறரிடமுள்ள குணங்களைக் கண்டு மகிழ்ந்து, பிறர் குறைகளைக் கருதாமல் இருக்க விரும்புகிறானோ
- எப்போதும் கடவுளிடமே தன் உள்ளத்தைச் செலுத்தி எவன் இனிய மொழி பேசுகிறானோ

**அவன் தான் பக்தன் !**

---

# ஆன்மீக ஹைக்கூ.....

ரீ.கமலினி, இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு

ஊருக்கு வாசனை
உனக்கு தீக்குளிப்பா ? (ஊதுவர்த்தி)

உலகிற்கு ஒளி காட்டி
உன்னையே தேடவைத்தாய் (கற்பூரம்)

புலன் கதவுகளைப் பூட்டினேன்
புத்துணர்வு பெற்றது மனம் (தியானம்)

காலைக்குளிரும்
கம்பளிப்போர்வையும்
களைத்து எறியப்பட்டன
காதில் உனது நாதம் (சுப்ரபாதம்)

தரிப்பவன் மனதில் ஓர்
தத்துவத்தை விளக்கும் ஞானி (விபூதி)

உன் வாயில் படியேறினேன்
உள்ளத்துச் சுமைகள்
இறங்கிக்கொண்டன (கோயில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் ஒருவனே !

செல்வி. சுப்ரமணியம் பேரின்பநாயகி,
தமிழ் மொழிப் பிரிவு 1999-2000

அகிலமெங்கும் நிறைந்தவனே இறைவன்
அந்த அருளாளன் கருணை எங்குமே நிறையும்
ஆதியந்த மில்லாத அருட்கடலாம் இறைவன்
ஆட்கொண்டு நற்கருணை வழங்குபவன் இறைவன்

நதிகள் பல ஓடிச் சென்று சங்கமிப்பதும்
நாற்புறமும் சூழ்ந்து நிற்கும் ஆழ்கடலிலே,
மனித குலம் பல சமய வழி நடந்தாலும்,
மாமணியாம் அவனடியிலே ஒன்று கூடுவோம்

செந்தமிழில் சிவனென்று செப்பிடும் போதும்
அரபு தனில் அல்லாஹ்வென்று அழைத்திடும் போதும்
அருளளித்து அரவணைத்து காப்பவன் இறைவன்
அறியாது நாமும் திசைமாறிடலாமோ?

புத்தன் வழி புனித வழி என்று கொண்டாலும்
புனித யேசு காட்டும் வழி புண்ணியமென்றாலும்
நற்கருணை காட்டும் வழி எல்லாமல்லவோ!
நன்குணர்ந்து கொண்டால் இங்கு வேற்றுமையேது?

நாட்டினிலே மக்கள் வாழ்வு சிறந்திட
நலங்களெல்லாம் தரும் மெய்ப்பொருளொன்றே
பாட்டினிலே இசை கூட்டி வாழ்ந்திட
பார் புகழ் செல்வம் சீர் பெற்றோங்கும்

எண்ணிலா பயிர்களும் மரஞ்செடி கொடிகளும்
எழிலுற நறுமண மலர்களும் தந்தவன் இறைவன்
கண்ணிலே அவை எல்லாம் கண்டு நாம் களித்திட
கண்களும் தந்துள்ளான் கருணையுள்ள இறைவன்



உன்னுடன் திருவுள சம்மதமின்றியே
உலகிலே யாதொரு நிகழ்ச்சியும் நடக்குமோ ?
உன்னுடை மாட்சியும் உலகினில் நன்மையும்
எண்ணியே ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடத்துவாய்

வழங்கு பொய் புரளியும் வாதமும் வன்சொல்லும்
வழங்கிடாவகையெம் நாவினைக் காக்கவே
தகவெலாக் காட்சிகள் கண்ணுறா வண்ணம்
தயவுடன் எமது கணிகளைக் காத்திடுவாய்

எண்ணியும் முடியுமோ ஏட்டிலும் அடங்குமோ
எமக்கு நீ செய்திடும் உதவிகள் ஐயனே
விண்ணிலும் மண்ணிலும் நிறைந்திடும் அண்ணலே
வந்தையாய் உயிர்களைக் காத்திடும் வள்ளலே

எச்சமயம் காட்டுவதும் நல்வழியன்றோ
எம்மிடையே சண்டைகளும் வந்திடலாமோ ?
வாழும் வழி காட்டிச் சென்ற நற்குணத்தோர்கள்
வகுத்த வழி சென்றவனைத் தொழுது நிற்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ணனும் கண்ணனும்.

என்.சந்திரசேகரன், ஆரம்பப்பிரிவு-2, விடுகையாண்டு (98-99)

மகாபாரதப் போரில் 17ம் நாள் போர் நடந்து முடிந்து விட்டிருந்தது கர்ணனும் போர்களத்தில் கீழே விழுந்து விட்டான். கர்ணனின் முடிவைக் குறித்துப் பாண்டவர்களின் பாசறையில் வெற்றிக் கொண்டாட்டம் நடைபெற்று கொண்டிருந்தது. இத்தகைய உல்லாசவேளையில் பாண்டவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக விளங்கிய கண்ணன் மிகவும் கவலையுடன் உட்கார்ந்து இருந்தான் அவனுடைய வாய் அடிக்கடி ''இன்று இந்த மண்ணுலகினின்றும் தலை சிறந்த கொடையாளி மறைந்து விட்டான்'' என்று முணு முணுத்துக் கொண்டிருந்தது.

தர்மபுத்திரரான உதிஷ்டருக்கு எவரைப் புகழ்ந்தாலும் சரி எவருடைய நல்ல குணங்களை எவ்வளவு போற்றிப் புகழ்ந்தாலும் சரி பொறாமை ஏற்பட்டதில்லை. ஆனால் தனஞ்சயனுக்கு தன் தலையாய எதிரியான கர்ணனை கண்ணன் புகழ்வதைக் கேட்க மிகவும் மனவருத்தம் ஏற்பட்டது எனவே அவன் முகத்தைத் தொங்க விட்டப்படி அமர்ந்திருந்தான்.

அர்ச்சுனனின் நிலையைக் கண்ட கண்ணன் அவனிடம் ''அர்ச்சுனா! உன்னைப் பார்த்தால் நான் கர்ணனை அநாவசியமாக புகழ்வதாக நீ நினைப்பது போல் தோன்றுகிறது. ஒரு காரியம் செய். நீ இப்போது என்னோடு வா, தொலைவில் நின்று கொண்டு நடப்பதைக் கவனி, கொடையாளியான கர்ணன் இன்னும் இறந்து போகவில்லை. அவனுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இப்போது இந்த நிலையில் கூட அவனுடைய கொடைத்தன்மையைக் காணலாம்'' என்றார்.

இரவு ஆகி இருந்தது. யுத்தப் பூமியில் பிணம் தின்னும் நரிகளின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கும் இங்குமாக சிலர் வேதனையுடன் முணகிக் கொண்டிருந்தனர். போர் கருவிகளின் உடைந்த பாகங்கள், அம்புத்துண்டுகள், பிணக்குவியல்கள் இரத்தத்தால் சேரான தரை ஆகியவற்றினால் அந்த இடம் மிகவும் பயங்கரமாக காணப்பட்டது. அர்ச்சுனனை சிறிது தூரத்தில் நிற்கச் சொல்லி விட்டு கண்ணன் மட்டும் அந்தணரைப் போல் வேடமிட்டுக் கொண்டு உரத்தக் குரலில் ''கர்ணா! கொடையாளி கர்ணா! தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்? '' என்று கத்திக்கொண்டே நடந்தார். தரையில் மூர்ச்சையுடன் கிடந்த கர்ணன் தலையைத் தூக்கி ''என்னை அழைப்பது யார்? யாரப்பா சகோதரா! தாங்கள் எங்கே இருக்கிறீர்கள்'' என்று கேட்டான்.

அந்தணர் வேடமிட்ட கண்ணன் அருகில் வந்து ''நான் மிகவும் நம்பிக்கையோடு உங்களை நாடி வந்திருக்கிறேன். எனக்கு சிறிதளவு தங்கம் வேண்டும் மிகவும் கொஞ்சமாக கொடுத்தால் கூட போதும்'' என்றார்.

கர்ணனும் அவரிடம் ''ஐயா! தாங்கள் என் வீட்டிற்குச் செல்லுங்கள் என் மனைவி தங்களுக்கு வேண்டியளவிற்கு பொன்னும், பொருளும் கொடுப்பாள்'' என்றான். சாதாரண அந்தணராக இருந்திருந்தால் கர்ணன் கூறியப்படியே அவனது வீட்டிற்குச் சென்று இருப்பார். வந்திருப்பவர் யார்? எனவே அவர் கர்ணனிடம் கோபத்தைக் காட்டும் வகையில் ''கொடுக்க விருப்பமில்லை என்றால், இல்லை என்று சொல்லிவிடுவது தானே அங்கும் இங்கும் ஏன் ஓடச் சொல்கிறாய் நான் எங்கும் போக மாட்டேன் எனக்கு இரண்டு கடுகளவு தங்கம் கிடைத்தால் போதும் இதற்காக நான் எங்கும் போக மாட்டேன்'' என்றார்.

கர்ணன் சிறிது நேரம் யோசித்தான் பிறகு அந்தணரிடம் ''ஐயா! என் பற்களில் தங்கம் கொஞ்சம் வைக்கப்பட்டிருந்தது தாங்கள் தயவு செய்து அதை எடுத்து கொள்ளுங்கள்'' என்றான். அதை கேட்டதுமே அந்தணரின் முகம் வெறுப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கியது. அவர் ஒரு பிராமணனிடம் போய் ஒரு மனிதரின் பல்லைப் பிடுங்கிக் கொள் என்று சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை என்று கோபத்துடன் கேட்டார்.

கர்ணன் என்ன செய்வான் இங்கும் அங்கும் பார்த்து அருகில் ஒரு சிறு கல் காணப்பட எப்படியோ மிகவும் கஷ்டப்பட்டு கல் இருக்கும் இடம் வரை தன்னுடலை நகர்த்தி கல்லின் மீது பல்லை இடித்தான். பற்கள் உடைந்து விட்டன. அவற்றை கையில் எடுத்துக் கொண்டு பிராமணரைப் பார்த்து ''சுவாமி இப்போது எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான் அதைப்பார்த்த அந்தணர் சீச்சீ.. இரத்தத்தில் தோய்ந்த புனிதமற்ற எலும்பு என்று கூறியப்படி இரண்டடி பின் வாங்கினார். கர்ணன் மிகவும் கஷ்டப்பட்டு கத்தியால் தங்கத்தை மட்டும் பற்களிலிருந்து சுரண்டி எடுத்தான். அதையும் அந்தணர் ஏற்க மறுத்து விட தன் வில்லை எடுத்து கொடுக்குமாறு கேட்டான். அதற்கும் முடியாது என்று கூறிவிட,

மறுபடியும் கர்ணன் தன்னுடலை இழுத்தபடி வில் இருக்கும் இடத்திற்கு சென்று, மிகவும் கஷ்டப்பட்டு தன் தலையில் அழுத்தி வில்லின் பாணத்தை வைத்து வருணாஸ்திரத்தை விட்டான். உடனே அதிலிருந்து உண்டான மழை கர்ணனின் கையிலிருந்த பற்களின் இரத்தம் நீங்கி தங்கம் சுத்தமாகக் கழுவப்பட்டு விட்டது. இப்போது கர்ணன் மிகவும் சிரத்தையோடு அதை அந்தணரிடம் நீட்டி ஏற்றுக்கொள்ளும் படி வேண்டினான்.

மறுவினாடியே வேண்டிய வரத்தைக் கேள் கர்ணா ! என்று கேட்டபடி அந்தணர் வேடத்தில் வந்த கண்ணன் வெளிப்பட்டு கர்ணனுக்கு காட்சிக் கொடுத்தார். அர்ச்சுனனுக்கு மிகவும் வெட்கமாக போய்விட்டது. அந்த இடத்திலேயே நின்றுவிட்டான். கர்ணன் இவ்வளவு தான் கூறினான் மூவுலகிற்கும் அதிபதியான தாங்கள் என் உயிர் பிரியும் இந்த வேளையில் இங்கு வந்திருக்கும் வேளையில் நான் என்ன வரத்தை எதற்காக கேட்க வேண்டும்.

உடனே கர்ணனின் உயிர் கண்ணனின் திருவடிகளில் தலையை வைத்தப்படி பிரிந்து விட்டது.

கொடையாளி கர்ணன் பக்தியிலும் சளைத்தவனல்ல என்பது எவ்வளவு தெளிவாகி விட்டது.

**மூலம் - ஆன்மீகக்கதைகள்.**

---

**விளம்பரங்களை சேகரித்தவர்கள்:**

| | |
|---|---|
| திரு.து.உமாசங்கர், | செல்வி.ஆ.நிரஞ்சனி, |
| திரு.சு.இராஜ்குமார், | செல்வி.மீனாம்பிகை, |
| திரு.கோ.ஆனந்தராஜா, | செல்வி.சுபநாளினி, |
| திரு.சு.சேதுரட்னம், | செல்வி.சுபலக்ஷ்மி, |
| திரு.ந.சந்திரசேகரன், | செல்வி.சிவமலர், |
| திரு.என்.ஆனந்தகுமார், | செல்வி.கிருஷ்ணகுமாரி, |
| திருமதி.ரீ.ஜெயகௌரி, | திருமதி.கௌசல்யா. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனாய நாயனார்

எஸ். லோகேஸ்வரன், ஆர். குமார்,
ஆரம்பப் பிரிவு- 1, விடுகையாண்டு (98-99)

இசை இறைவனையும் இசைவிக்கும் நாதங்கடந்த நாதரையும் நாதோபாசனையால் அடையலாம். இசையால் உள்ளத்தை உருக்கினால் மனவாசகங் கடந்த ஆண்டவர் உருகி அருள் புரிவார். இந்த அருட்டிறத்தை உணர்த்துவது இவ்வரலாறு.

சோழ நாட்டில் உட்பிரிவாக விளங்குவது மேல் மழநாடு. இந்த நாட்டிலே ''திருமங்கலம்" என்ற ஒரு திருத்தலம் உண்டு. லால்குடிக்கு மூன்று கல் தொலைவில் உள்ளது. வளம் நிறைந்த திருமங்கலத்தில் ஆயர்குலம் செய்த அரியதவத்தால் ஆனாயர் உதித்தார். எப்போதும் திருநீறு விளங்கும் நெற்றியினராய் வேய்ங்குழலூதும் பக்தியினராய் விளங்கினார். பசுக்குலங்களை மேய்த்து வருவார். அதனால் பசுக்கள் நோயின்றிப்பால் பெருகி வளம் சுரந்தன. பசுக்குலம் தழைக்க, உயிர்பிழைக்கப் புல்லாங்குழலில் ஐந்தெழுத்தையும் ஏழு சுரத்தையும் அமைத்து இனிய கானம் பொழிவார். கோவலர் ஏவலராகத் தொண்டு புரிய ஆயர்குலத் தலைவராய் விளங்கினார்.

பசு பூலோகக் காமதேனு. கோமாதா என்று போற்றப்படும், பசுக்குலங்களைப் புனிதமான நிலத்தில் மேய விட்டு குளிர்ந்த நீராட்டி நிழலில் இளைப்பாரவிட்டு மாலையில் தொழுவத்தில் சேர்ப்பார்.

திருமங்கலத்தில் உள்ள சிவபெருமான் பசு ராமேச்சுரருடையார் என்ற பெயர் பெற்றவர். தாய்க்கொலை செய்த பாவத்தை பரசுராமர் இங்கு வழிபட்டு பாவந்தீர்த்தார். சிவபெருமானுடைய அபிஷேகத்திற்கு பால் தருவார். திருக்கோயில் சென்று உள்ளம் உருகி வழிபடுவார்.

கார்காலம் வந்தது இயற்கையன்னை எழிலுடன் களிநடனம் புரிகின்ற காலம். அன்று கார்த்திகை அஸ்த நட்ஷத்திரம்.

ஆனாய நாயனார் தலையை வாரி ஒரு புறம் முடித்தார். அதில் கண்ணிமாலையைச் சூட்டினார். மடிந்த காதில் காந்தள் மலரைச் செருகினார். மரவுரியும் தழையுடையும் உடுத்து நெற்றியில் வெற்றி திகழ் வெண்ணீறு பூசிக்கொண்டார். வேய்ங்குழலை எடுத்துக் கொண்டு கோவலரும் ஏவலரும் புடை சூழச்சென்றார். ஆனிரைகளுடன் முல்லை நிலத்தை அடைந்தார். எல்லையில்லாத அழகுடன் முல்லை பூத்துக் குழுங்கியது.

அங்கு கொன்றை மரம் ஒன்று பூத்திருந்தது. அக்கொன்றை மரம் அவருக்குச் சிவபெருமானை நினைவு கொள்ளச்செய்தது. அவருடைய உள்ளம் உருகியது. அன்பு வெள்ளம் பெருகியது. வேய்ங்குழலைப் பவழவாயில் வைத்து ஊதுவாராயினார். பிறவிப் பெரும்பிணிக்கு மருந்தாகிய திருவைந் தெழுத்தை உள்ளுறையாக வைத்து நாத வெள்ளத்தை எழுப்பினார். அதனைக் கேட்டு சராசரங்கள் யாவும் உருகி மகிழ்ந்தன. பசுக்குலங்களும் எருதுகளும் அவர்பால் இசைக்கேட்டு இன்புற்று நின்றன. மயில்கள் வந்து அசையாது நின்றன. பறவைகள் விண்ணில் சித்திரம் போல் நின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலங்களின் வழியாக நாகர்கள் வந்து கேட்டு உவந்தனர். வானில் வித்தியாதரர்கள், கின்னரர்கள், கிம்புருடர்கள், தேவர்கள், சித்தர்கள், முத்தர்கள் முதலியோர் வந்து செவிமடுத்து சிந்தைமகிழ்ந்தார்கள்.

''நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாங் நயத்தலினால்
மலிவாய் வெள்ளெயிற்றரவம் மயில்மீது மருண்டு விடும்
சலியாத நிலையரியும் தடங்கரியும் உடன் சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்."

இனிய ஒலியின் பெருமையால் விலங்குகள் கொடுமையின்றி சாந்தத்தை அடைந்தன. மயிலும் பாம்பும், புலியும், மானும், சிங்கமும், யானையும் ஒன்று பட்டு வந்தன. காற்று ஓங்கி வீசவில்லை. மரங்களின் கிளைகள் அசையவில்லை. அருவிகளும், நதிகளும் ஓடவில்லை. கடல்களின் அலைகள் ஓய்ந்தன. எல்லா உயிர்களும் இசைத் தேனைப் பருகி இன்புற்றன.

''மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்த இசைக் குழலோசை
வையந்தன் னையும் நிரப்பி வானந்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்போதுவில் நடம் புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால்."

ஆனாயனாருடைய குழலோசை மண்ணையும் விண்ணையும் நிரப்பிக் கண்ணுதலார் திருக்காதுக்கு எட்டியது.

''ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடைய தவ வல்லியுடன்
சானதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறும் சடைதாழ"

சிவபெருமான் சிறந்த இசை வல்லராதலால் இந்த இசையைக் கேட்க விடையின் மீது உமா தேவியுடன் தோன்றினார். ''இந்த இசைமயமாய் நம்பால் அணைவாய" என்று இறைவன் அருளிச் செய்தார். ஆனாய நாயனார் அரனார் பதம் அணைந்து ஆறாத இன்பம் எய்தினார்.

---


ஆக்கங்களை ஒப்பு நோக்கியவர்கள்:

திரு.து.உமாசங்கர்,
திரு.மு.பாரதலிங்கம்,
திரு.சு.சேதுரட்னம்,
திரு.கோ.ஆனந்தராஜா,
திரு.ஜெ.நித்யா,
திரு.என்.மனோகரன்,
திரு.மு.இந்திரகுமார்,
திரு.மு.புவனகுமார்,
திரு.செ.பி.தேவதீபன்,
செல்வி.எஸ்.சுதர்ஷினி,
செல்வி.சு.ஷோபனா,
செல்வி.சு.கல்பனா,
செல்வி.ஏ.கிருஷ்ணவேணி,
செல்வி.மா.சாரதாதேவி,
செல்வி.எம்.தமிழ்ச்செல்வி,
செல்வி.எஸ்.நித்தியகல்யாணி,
செல்வி.தே.அமுதா,
செல்வி.என்.கலைச்செல்வி,
செல்வி..ரெ.விஜி
செல்வி.சோ.ராஜஸ்ரீ,
செல்வி.எஸ்.நிருபாதேவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாச்சியார் திருமொழியில் தெய்வீகக் காதல்

**ஆனந்தி கந்தையா, முதலாம் வருடம், தமிழ்ப்பிரிவு, 1999-2000**

சங்கமருவிய காலத்தின் இறுதிப் பகுதியில் சமண பௌத்த மதங்கள் நிலை குலைந்தன சைவ வைணவ சமயங்கள் எழுச்சி பெறத் தொடங்கின. இதற்குக் காரணம் வைணவ ஆழ்வார்கள் தோன்றியமையாகும். தொடர்ந்து சைவ நாயன்மார்களும் தோன்றினர். இவர்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டத் தோத்திரப் பாடல்கள் பாடினர்.

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவர் பாடிய பாசுரங்களை நாதமுனிகள் தொகுத்து நாலாயிரந் திவ்வியப் பிரபந்தமாக எமக்கருளினர். அப்பிரபந்தத்திலே கோதையார் என்று அழைக்கப்படும் ஸ்ரீ ஆண்டாள் பாடிய பாடல்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பவையாகும். இந்நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கண்ணன் மேல் கொண்ட காதல் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

இறைவனை மானுடவடிவில் கண்டு காதல் கொண்டவள். சிறு பிராயந்தொட்டே ஸ்ரீமந்நாராயணனின் கதைகளைத் தந்தை மூலம் அறிந்தவள். நாராயணன் அன்பர்களுக்கு உதவ ஓடி வருதலையும் அவனுடைய கருணைத் திறத்தையும் எண்ணி மனம் நெகிழ்ந்தாள். தனக்கும் கண்ணன் உதவுவான் என்று உறுதியாக நம்பினாள். இதுவே காதலாக மாறியது. இக்காதல் மொழிகளையும் அனுபவங்களையும் நாச்சியார் திருமொழியில் அழகாகக் கூறியுள்ளாள்.

கண்ணன் நினைவில் அவனை எண்ணி பாவை நோன்பு நோற்பதில் பரவசமடைவாள். தன் காதலுக்காக மன்மதனையும் அவன் தம்பி சாமனையும் பின்வருமாறு வேண்டினாள்.

" உய்யவு மாங் கொலோ
என்று சொல்லி உன்னையும்
உன் தம்பியையும் தொழுதேன் "

என்பதுடன் மன்மதன் வரும் பாதையைத் தூய்மையாக்கி நுண் மணல் பரப்பி மலர்களால் அலங்கரிக்கின்றாள். மலர்களால் அர்ச்சிக்கின்றாள். மன்மதனை மறவாமலிருப்பதற்காக அவனைப் பரிவாரங்களுடன் சுவரில் தீட்டிவைக்கின்றாள்.

தான் எப்போதும் மானிடவர் ஒருவரைத் திருமணம் செய்ய மாட்டேன் என்று உறுதி கொள்கிறாள்.

" மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன் "

என்று உறுதியுடன் கூறுகிறாள்.

தேவர்க்களித்த அவியுணவைக் காட்டு நரியொன்று காலால் இடறியும் மோந்தும் வீணாக்குவது போன்றதே கண்ணனுக்காக வாழும் என்னை மானிடவர்க்கு உரியவளாக்குவது என்று கூறுகிறாள்.

கண்ணன் தன்னுடன் உறவு கொள்வதாகக் கனவு காண்கின்றாள். எந்த ஒரு பெண்ணும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவாளா? என்றும் எண்ணத் தோன்றுகிறது. தான் கனவில் காண்பதெல்லாம் நனவில் நடக்கும் என்று பெரிதும் நம்பினாள்.

ஒரு முறை தான் கண்ணனைக் கைப்பற்றியதைக் கனவில் காண்கிறாள். அதனைத் தன் தோழிக்குக் கூறி மகிழ்வதாகப் பின்வரும் பாடல் மூலம் காணக் கூடியதாக இருக்கின்றது.

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரை தாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மது சூதனன் வந்து-என்னைக்
கைத்தளம் பற்றக் கணாக் கண்டேன் தோழி-நான்"

பெண்கள் தாம் விரும்பியவனையே எந்நேரமும் நினைப்பர். அதே போல் ஆண்டாளும் கண்ணனையே நினைத்தாள்.

ஆண்டாளின் வாழ்க்கையில் கண்ண பிரான் அவளைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார். ஆண்டாள் மானிட உருவில் தோன்றி பெரியாழ்வார் மகளாக வளர்ந்து அரங்கன் திருவடிகளை அடைந்து எல்லோரும் வணங்கும் தெய்வமானாள்.

இறைவன் அருளைப் பெற ஆண்டாள் காட்டிய வழி சுலபமானதாகும். இதற்குப்பணம் வேண்டாம் அந்தஸ்த்து வேண்டாம், இறைவன் நம்மிடம் வேண்டுவது தூய உள்ளம் நிறைந்த பக்தி. இந்த பக்தி ஒன்றே போதும் என்பதே ஆண்டாளின் கருத்து.

இங்கு மேலும் கூறப்படுவது யதெனில் முக்கியமான ஒரு பொருளை வேண்டி பரம்பொருளை வணங்கி பெருமுயற்சி செய்தால் இறைவன் துயர்துடைப்பான். ஆன்மாக்களையும் இறைவனையும் சேர்த்து வைப்பது இடையராத தொழுகையாகும் என்பதையும் ஆண்டாள் கண்ணபிரான் மீது கொண்ட தெய்வீகக்காதல் மூலம் அறியலாம்.

உசாத்துணைநூல் - நாச்சியார் திருமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய மேம்பாட்டில் ஆலயங்களின் பங்களிப்பு

*செல்வி. மு. புஸ்பராணி, ஆரம்பப் பிரிவு-2, விடுகையாண்டு (98-99)*

மானிடராய் பிறந்த ஒவ்வொருவருக்கும் அவர் தம் வாழ்க்கையில் குறிக்கோளை ஏற்படுத்தி அக்குறிக்கோளை அடையும் வண்ணம் மக்களை நெறிபடுத்துவன சமயங்களாகும். இவ்வகையில் சைவசமயம் இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட தத்துவ நெறி மட்டுமன்றி வாழ்க்கை நெறியுமாகும். தனிமனித வாழ்க்கையைச் செம்மைபடுத்துமிடத்து அதன் வழியே சமூதாயத்தையும் மேம்படுத்தும் ஓர் அறநெறியாகவும் சைவசமயம் விளங்குகின்றது. சைவசமய மரபில் ஆலய வழிபாடும் அதன் வழி தொடரும் சமய நடவடிக்கைகளும் மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு இட்டு செல்கின்றன.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' ''திருக்கோயில் இல்லாத ஊரெல்லாம் அடவிக்காடே'' என்ற கூற்றுக்கள் சமுதாயத்தின் நலனுக்கு கோயிலின் இன்றியமையாதமையை எடுத்துக் காட்டுகின்றன. எங்கும் நிறைந்து விளங்கும் சர்வ அந்தர்மியாகிய இறைவனைச் சிலை வடிவில் மந்திரம் தந்திரம் பாவனைகளால் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்யுமிடம் கோயில். இது ஆலயம் எனவும் அழைக்கப்படும். கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவனிடம் ஆன்மா தன்னை அர்ப்பணித்து அவனிடம் லயப்பட்டு நிற்றல் என்பதே ஆலயம் என்ற பதத்தின் பொருள் ஆகும். ஆகவே ஆலய வழிபாடும் அங்கு மேற்கொள்ளப்படும் தொண்டுகளும் ஒரு ஆன்மாவிடம் தியாக மனப்பான்மையையும் ஆன்மீகத் திருப்தியையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு ஆலயங்கள் தனிமனிதனது சமய வாழ்க்கைக்கு மட்டுமன்றி சமுதாய வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் நிலைக்களன்களாக அமைந்து விடுகின்றன. ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்கள், விழாக்கள், விரதங்கள் போன்றன சமுதாயத்தின் கலாசாரப் பண்புகளையும் சமய நம்பிக்கைகளையும் மேம்படுத்துவனவாகவே காணப்படுகின்றன. இக்காலங்களில் ஊரெல்லாம் ஒன்று திரண்டு ஊரை அலங்கரிப்பதிலும் கலையுணர்வை ஓங்கச்செய்வதிலும் செயற்படுவதை அவதானிக்க முடியும். ஆலய முன்றலில் அனைவரும் சமம் என்ற உணர்வோடு தம் பகைமைகளை மறந்து ஏற்றத்தாழ்வுகளை அகற்றி அனைவரும் ஒன்றுக் கூடி ஒவ்வொருவரிலும் இறைவனைக் காணும் பண்பு நலத்தை மிளிரச் செய்யும் பாங்கு அங்கு வளர்கின்றது.

அத்துடன் ஆலயங்கள் கலைகளின் பிறப்பிடமாகவும், வளர்ப்பிடமாகவும் அமைந்து படிப்பறிவற்ற பாமரரையும் இறை அனுபவத்தைப் பெறச் சந்தர்ப்பங்களைக் கொடுக்கின்றன. நுண்கலைகள் அடியார்களது உள்ளத்தில் பக்தி உணர்வை ஊட்டுவது மட்டுமன்றி அங்கு இடம் பெற்றிருக்கும் இதிகாச புராண கதைத் தொடர்புகளை விளங்கும் சிற்ப ஓவியங்கள் மக்கள் மத்தியில் அறநெறி சார்ந்த விழுமியங்களை ஏற்படுத்துகின்றன.

அத்துடன் ஆலயங்களில் இடம் பெறும் மகோற்சவங்கள், சமயச் சொற் பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள், கோயில் பற்றிய பிரபந்தங்களின் அரங்கேற்றங்கள் புராண படலம், கூட்டுப் பிரார்த்தனை போன்றவை கூட்டு வழிபாட்டு முறைகளை ஊக்குவித்து சமூக ஒற்றுமையையும் உயர்வையும் மேம்படுத்துகின்றன. அவ்வேளைகளில் இடம்பெறும் அன்னதானம் வழங்கல் மோர், சர்க்கரை பந்தல்கள் அமைத்துத் தாக சாந்தி செய்தல், அங்கப்பிரதட்சணம் போன்ற நேர்த்தி கடன்களை நிறைவேற்றும் போது அவர்களுக்கு உதவுதல் போன்றன யாவுமே தனிமனித நடவடிக்கையை விட்டு சமூகத்தின் கூட்டுணர்வுடன் இடம் பெறுவன. ஆகையால் அங்கு நேர்மை, கருணை, சமூக ஒழுங்கு போன்றன அனைவராலும் கடைப்பிடிக்கப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமன்றி சில சமயங்களில் ஆதரவற்றவர்களுக்கு உறைவிடமாகவும் நோயாளர்களுக்கு பிணித் தீர்க்கும் வழிகளை நெறிபடுத்துமிடமாகவும் கூட ஆலயங்கள் பங்காற்றுவதினைக் காணமுடிகின்றது.

ஆகவே ஆலயங்கள் தனித்து வழிபாட்டிற்குரிய இடங்களாக மட்டுமன்றி பல வழிகளிலும் சமூக நலனைப் பேணும் கேந்திர நிலையங்களாகவும் அமைவதை நாம் மனங்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ண பிடாரன்

**சிதம்பரம் ஜெயந்திமாலா, ஆரம்பப் பிரிவு-2, விடுகையாண்டு (98-99)**

கண்ணன் குழலூதுவதைப் பற்றித்தான் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அவன் மகுடி ஊதிப் பாம்புகளை அடக்கிய பாம்புப் பிடாரனாக வந்தது பற்றி ஒரு சிலருக்குத் தெரிந்திருக்காது. பாம்பையே படுக்கையாகக் கொண்ட திருமால் தான் எடுத்த கிருஷ்ணாவதாரத்தில் பாம்புகளுடன் விளையாடிய சம்பவங்கள் ஒன்றிரண்டு உண்டு. கோகுலத்தில் காளிங்க மடுவில் காளிங்கன் தலைமீது கண்ணன் ஆடிய நர்த்தனம் எல்லோருக்கும் தெரிந்ததுதான், ஆனால் அதிலும் ஒரு தத்துவம் இருந்தது.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் மதுராவில் தேவகி வசுதேவர்களுக்குக் குழந்தையாச் சிறையிலே பிறக்கிறான். அவன் இட்ட கட்டளைப்படி கண்ணனை ஒரு கூடையில் வைத்துத் தலையில் சுமந்து கொண்டு யமுனையைக் கடந்து கோகுலம் செல்ல நடந்து கொண்டிருக்கிறார் வசுதேவர். மழைத் தூறல்கள் விழுகின்றன. அப்போது பாம்பு ஒன்று குடைபிடித்துக் கொண்டு பின்னால் செல்கிறது. அந்தப் பாம்பு ஆதிஷேசன் என்று சிலர் குறிப்பிடுவதுண்டு. ஆனால் அங்கே குடைபிடித்துச் சென்ற பாம்பு ஆதிஷேசன் அல்ல. ஆதிஷேசனாக இருக்கவும் முடியாது. ஏனெனில் ஆதிஷேசன் ஏற்கனவே கண்ணனின் அண்ணன் பலராமராக அவதாரம் செய்திருந்தார். அப்படியானால் குடை பிடித்த அந்தப் பாம்பு யார்? அது காளிங்கன்.

காளிங்கன் ஒரு கந்தர்வன். ஒரு மகரிஷியின் சாபத்தால் அவன் பாம்பாகி விட்டான். பகவான் நாராயணன் பூவுலகில் அவதாரம் செய்யும் போது அவர் பாதம் பட்டுச் சாபவிமோசனம் பெறவேண்டும். அதற்கெனவே தவமிருந்து காத்திருந்தான் காளிங்கன். மதுராவில் கண்ணன் பிறந்ததையும் அவனை வசுதேவர் கூடையில் தூக்கி வருவதையும் அறிந்த காளிங்கன் சாபவிமோசனம் பெறத்துடிக்கிறான். கூடையிலுள்ள கண்ணனுக்குக் குடையாகி நிற்கிறான். குழந்தையின் பாதங்கள் தன்மீது பட்டு தான் சாபவிமோசனம் பெறலாம் என்பது அவன் நம்பிக்கை. ஆனால் பகவான் சங்கற்பம் வேறாக இருக்கிறது. அதற்குரிய காலம் வராததுதான் காரணமோ என்னவோ கால்களை மேலே தூக்கி காளிங்கனை இரட்சிக்காமல் கூடையிலிருந்து கால்களை கீழே தாழ்த்தித் தன்பாத சேவைக்காகத் தவமிருந்த யமுனைக்கு அருள் புரிகிறான்.

காளிங்கன் நம்பிக்கை தளரவில்லை. கோகுலத்தில் வாழும் இந்தத் தெய்வக் குழந்தையின் பாதம் என்றாவது ஒரு நாள் தன் மீது படும் என்ற நம்பிக்கையில் கோகுலத்தில் உள்ள மடுவில் தஞ்சம் அடைகிறான். மடுநீர் விஷமாகிறது. மக்கள் அருகே செல்ல அஞ்சுகின்றனர். அது காளிங்கன் மடு என்று பெயர் பெறுகிறது. காளிங்கன் சாபம் தீரும் நாள் வந்தபோது காரணம் எதையோ காட்டிக் காளிங்கன் மடுவில் குதிக்கின்றான் கண்ணன். தன் சிரத்தில் திருமாலையே தாங்கிக் கொள்கிறான் காளிங்கன். அகந்தையால் முனிவர் ஒருவரை அவமதித்துச் சாபம் பெற்ற காளிங்கனின் அகந்தையும் தலைக்கனமும் அழியும்வரை ஆடித்தீர்க்கிறான் கண்ணன். அதுதான் ''காளிங்கநர்த்தனம்''.

தான் என்ற அகங்காரம் அழிய வேண்டும். கர்வமும் திமிரும் அழிய வேண்டும் அதற்கு இறைவன் திருவடி ஒன்றையே தேடிச் சரணடைய வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கி நின்றான் கண்ணன் அங்கே.

கிருஷ்ணவதாரத்தில் மற்றொரு சமயம் பாம்பை அடக்கும் பணியை ஏற்றுக்கொள்கிறான் கண்ணன். மகாபாரதத்தில் ஆதிபர்வ நிகழ்ச்சிகளில் இது குறிப்பிடப்படுகிறது. திருதராஷ்டினனின் புதல்வர்கள், பாண்டுவின் புத்திரர்கள் தர்மன் முதலான பஞ்சபாண்டவர்கள் இவர்கள் பால பருவத்தில் ஒன்றாகவே குருகுலத்தில் இருந்தனர். குழந்தைப் பருவம் முதலே துரியோதனன் பொறாமையும் ஆணவமும் கொண்டவன். தன் சகோதரர்களான பாண்டவர்களைக் காரணமின்றி வெறுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தில் பிறழாத யுதிஷ்ட்டிரனும், புஜபலபராக்கிரமத்திலே சிறந்த பீமனும் வில் வித்தையில் சிறந்த அர்ஜுனனும் அவனுக்கு பகைவர்களாகத் தோன்றினர். குறிப்பாக பீமன் அவனுக்குப் பரமவைரி காரணம் உடற்பயிற்சி விளையாட்டுகளில் எல்லாம் பீமனே துரியோதனனை வென்றான். தன்னைவிடப் பலசாலியாக ஒருவன் இருப்பதைத் துரியோதனாற் சகித்துக் கொள்ள முடியவில்லை. பீமனை ஒழிக்கத் தன் தம்பிகளுடன் திட்டமிட்டான்.

ஒரு நாள் வனபோஜனம் செல்ல எல்லோரும் சென்றிருந்தனர். அன்பு காட்டுபவன் போல நடித்து மயக்கம் தரும் மூலிகைகள் கலந்த உணவை பீமனுக்குத் தந்துவிட்டான் துரியோதனன். உணவு உண்ட சிறிது நேரத்தில் பீமன் மயக்கமுற்று விழுந்துவிட்டான். அவன் உடலைச் செடிகொடிகளால் சுற்றி கற்களைக் கட்டி அங்கே விஷப்பாம்புகள் நிறைந்த வாசுகிமடுவில் எறிந்து விடுகிறான் துரியோதனன்.

எல்லோரையும் போல வீடு திரும்பாத பீமனை எண்ணி அவன் தாய் குந்திதேவி கலங்கினாள். பாண்டவர்களுக்கு உற்ற நண்பன், ஆபத்சகாயன், ஆத்மபந்து ஸ்ரீ கிருஷ்ணன்தான். குந்தியும் யுதிஷ்ட்டிரனும் பகவான் ஸ்ரீகிருஷ்ணனை வேண்டிநிற்க அங்கே தோன்றி அவர்களுக்கு ஆறுதல் கூறி பீமனைத் தேடிக் கண்டுபிடித்து வருவதாகக் கூறிப் புறப்படுகிறான். பீமனுக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்பதை அறிந்து கண்ணன்-ஸ்ரீ கிருஷ்ணன் காரியத்திற்குத் தகுந்த வேஷம் போட்டுக் கொள்கிறான். ஒரு பாம்புப் பிடாரனாகக் குழலுக்குப் பதில் மகுடியை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

விஷப்பாம்புகள் நிறைந்த வாசுகி மடுவுக்கு வந்தான், உள்ளே விழுந்த பீமனை விஷப்பாம்புகள் சுற்றிக் கொண்டு அவனைக் கடித்ததால் அவன் உடல் முழுவதும் விஷமேறியிருந்தது.கண்ணன் மகுடியை ஊதினான். சாதாரண பாம்பாட்டியின் மகுடிக்கே கட்டுப்படும் பாம்புகள் கிருஷ்ணபிரானின் தெய்வீக நாதத்தைக் கேட்டுச் சும்மாயிருக்க முடியுமா ? பீமன் உடலைச் சுற்றியிருந்த பாம்புகள் ஒவ்வொன்றாகக் கரையில் வந்து விழுந்தன. கண்ணன் மகுடிக்கு மயக்கி நின்றன.

தன் சாம்ராஜ்யத்தின் அத்தனை பாம்புகளும் காணாமற் போய்விட்டதை அறிந்து பாம்புகளின் தலைவன் வாசுகியே வெளியே வந்தான். பகவான் ஸ்ரீகிருஷ்ணன் நாதத்தில் கட்டுண்டு அவனும் அவர் எதிரே கைகூப்பி நின்றான். நடந்ததை அறிந்து வருந்தி பீமனை நீருக்கு வெளியே கொண்டு வந்தான். பீமனைத் தீண்டிய பாம்புகள் அனைத்தும் மீண்டும் அவன் உடலைக் கொத்தி விஷத்தை எடுத்து வெளியே கக்கின, மூலிகை விஷமும் அத்துடன் வெளிவரவே பீமன் தூக்கத்திலிருந்து எழுவதைப் போல எழுந்தான். கிருஷ்ணபிரானின் கருணைக்கு நன்றி சொல்லி அடிபணிந்தான்.

தங்கள் தவறுக்கு மன்னிப்புக் கோரி வாசுகியும் மற்ற பாம்புகளும் கண்ணனைப் பணிந்து நின்றன. விஷமேறிய பீமனின் உடல் வஜ்ரதேகமாக இருக்குமென்றும் இனி எந்த ஜந்துவின் விஷமும் பீமனைப் பாதிக்காது என்றும் வரம் தந்தான் நாகதேவன் வாசுகி.

வாயுபுத்திரன் உடலைத் தீண்டி விஷத்தை கக்கிய பாம்புகள் எல்லாம் விஷமே இல்லாத பாம்புகளாகின. (அதனால்தான் இன்றும் தண்ணீர் பாம்புகளுக்கு விஷமில்லை என்கிறோம்.)

அசுரத்தை அழித்து தர்மத்தைக் காக்கப் பல வருடங்கள் கழித்து வரப்போகும் குருஷேத்திரப் போரில் நாகாஸ்திரத்தால் கூட பாதிக்கப்படாத உடல் வலிமையை பீமன் பெறக் கண்ணன் நடத்திய நாடகம் இது. இதில் அவன் போட்ட வேஷம் கிருஷ்ணபிடாரன்.

**நாகத்தின் விஷம் என்ன செய்யும் ?**
**நாராயணன் நம்முடன் இருக்கையிலே**

**ஆதாரம்:**
**ஞானபூமி (டி.எஸ்.நாராயணஸ்வாமி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும் கோயில்களும்.

இரா. சிவலிங்கம், (பகுதி நேர விரிவுரையாளர்)

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது ஔவையார் வாக்கு. இந்த முதுமொழிக்கு அமைய இன்று மலையகம் தோறும் ஆயிரக்கணக்கான கோயில்கள், நகர்ப்புறங்களிலும், தோட்டப் புறங்களிலும் அமைந்துள்ளது. இந்தக் கோயில்களில் பெரும்பாலானவை தோட்டப் புறங்களில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட கோயில்கள் காணப்படுகின்றன.

மலையகத்தில் தோட்டப்புற கோயில்களை எடுத்துக் கொண்டால் இக்கோயில்கள் பெரும்பாலும் அம்மன், முருகன், சிறு தெய்வ வழிபாட்டுக் கோயில்களில்களாகக் காணப்படுகின்றன இருப்பினும் இக்கோயில்களில் பல புனரமைப்பு செய்வதற்கென உடைக்கப்பட்டு, இடிபாடடைந்த நிலையில் காணப்படுவதை இன்று பல தோட்டவாரியாக அவதானிக்கலாம். இந்த கோயில்கள் ஏன் உடைக்கப் படுகின்றன. என்ன நோக்கத்திற்காக உடைக்கப்படுக்கின்றன என்பது பற்றிய தெளிவு மலையக மக்களிடையே காணப்படுவது குறைவு. ஆனால் இருக்கும் கோயில்களை மேலும், பெரிய கோயில்களாகவும், அமைக்க முனைகின்றார்கள், அந்த முயற்சியின் பயன் எந்தளவுக்கு, சாத்தியமாகியுள்ளது என்பதை நோக்க வேண்டியுள்ளது.

ஏற்கனவே இருந்த கோயில்களை உடைத்து மறுசீரமைப்பதற்கு பெருந்தொகையான பணத்தை தோட்ட மக்கள் தமது ஊதியத்தில் இருந்தும், வெளியாரிடமும் சில நிறுவனங்களிடமும் நிதியை சேகரித்தும் பல சிரமங்களுக்கு மத்தியில் புனரமைத்துக் கொண்டு வந்தாலும் குறிப்பிட்ட காலத்துக்குள் அனேகமான கோயில்கள் கட்டி முடிக்கப் படாமலே இருப்பதைக் காணலாம். அத்துடன் சேகரிக்கப்படும் நிதி முழுமையாக இந்த கோயில் கட்டட அமைப்புக்காக செலவு செய்யப்படுகின்றதா என்பதும் ஒரு கேள்விக் குறியாக உள்ளது. இவ்வாறு இந்த கோயில்கள் முற்று முழுதாக முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்களை ஆராயும் போது.

1.மக்களின் பொருளாதார நிலை
2.திறமையற்ற நிருவாகம்
3.காலத்துக்கு காலம் நிருவாகம் மாற்றம் பெறல்
4.சிறப்பான திட்டமிடல் இன்மை
5.பொறுப்புணர்ச்சி அற்றத் தன்மை
6.தொழிற் சங்க வேறுபாடுகள்
7.குல வேறுபாடுகள்
8.தோட்டப்புற மக்கள் தமக்கென குல தெய்வங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
9.சமய வழிபாட்டு முறையில் கூடிய அக்கறை இன்மை
10.வேலை பழு, குடும்ப சூழல் பொது விடயங்களில் ஈடுபட முடியாதிருத்தல்
11.பிற மதங்களின் ஊடுருவலும், சைவ மக்கள் ஏனைய மதங்களை ஏற்றுக் கொள்ளுதலும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.மலையக மக்களுக்கு சிறந்த ஆலோசனைகளும், வழிகாட்டலும் இல்லாமை.
13.தோட்ட நிருவாகங்களினால் ஏற்படும் தடைகள்
14.அரசாங்கத்திடம் இருந்து கோயில் புனரமைப்புக்கு நிதி வசதியை பெற முடியாத நிலை.
15.தேசிய நீரோட்டத்தில் இம் மக்களின் உணர்வுகள் புறக்கணிக்கப்படல். மேற் கூறிய பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சில ஆகமமுறைப்படி சில கோயில்கள் கட்டி முடிக்கப்பட்டாலும் இக்கோயில்களில் ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறுகின்றதா என்பது கேள்விகுறியாக உள்ளது.

எவை எந்த நோக்கத்திற்காக இந்தக் கோயில்களை உடைத்து ஆகம முறைப்படி மறு சீரமைப்புச் செய்தார்களோ அந்த நோக்கம் தொடர்ந்து நிறைவேற்றப்படுவது மிகக் குறைவாக உள்ளதை அவதானிக்க முடிகிறது.

கோயில்கள் உடைக்கப்பட்டு இருக்கும் காலங்களில் 3-6 வருடங்களுக்கு மேல் திருவிழாக்களோ, ஆலய வழிபாட்டு முறைகளோ நடை பெறுவது மிகக் குறைவு. இதற்கான காரணத்தைப் பார்க்கும் போது பெரிய கோயிலாக கட்ட வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதைத் தவிர வேற எந்த விதமான சிறந்த திட்டமிடலும் இவர்களிடம் காணப்படாமை. இந்தக் கோயில்கள் உடைக்கப்படுவதற்கு காரணமாகும்.

ஆகவே கோயில்கள் பெருந்தொகையான பணச்செலவில் கட்டப்பட்டாலும் அதில் தொடர்ந்து பூசைகளும், விழாக்களும் நடைபெறுமளவுக்கு வழிவகைகள் செய்ய வேண்டும். மலையக மக்கள் தொடர்ந்து இக் கோயில்களின் வளர்ச்சி கருதி சமய நிறுவனங்கள், சமயப் பெரியார்கள், மத ஈடுபாடு உடைய ஆசிரியர்கள் ஆகியோர்களின் ஆலோசனைகளைப் பெற்று, சிறப்பான வழிபாட்டு முறைகளை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும். எனவே கோயில்களை சிறப்பாக அமைப்பதோடு இன்று தோட்டப்புறங்களில் கட்டப்படாமல் இருக்கும் கோயில்களை மக்கள் தொழில் சங்க, சாதி, குல, பேதங்களை மறந்து சிறப்பான திட்டமிடலின் கீழ் மலரப்போகும் 2000ம் ஆண்டில் கட்டிமுடிக்கப்படாமல் இருக்கின்ற சகல கோயில்களும் சிறப்பான முறையில் கட்டிமுடிக்கப்பட வேண்டும். என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.



"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாதுமாகி நின்றாய் காளி

செல்வி. அ. கிருஷ்ணவேணி, இந்து சமயப்பிரிவு விடுகையாண்டு

சக்திவழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. வேதகாலத்துக்கு முற்பட்டது. இவ்வுலகில் ஒவ்வொரு அணுவிலும் சக்தியின் பேராற்றல் விளங்குவதைக் காணலாம்.

சக்தி எங்கும் எப்போதும் எதிலும் நிறைந்தவள் ஆகையால் அவளைப் பூரணி என்று போற்றுகிறோம். முத்தொழிலை செய்யும் போது பிம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி என்று வாழ்த்தி வணங்குகின்றோம். காலத்தையே வடிவாகக் கொள்ளும்போது காளி என்று அவளைக் கருதி வந்தனை செய்கிறோம்.

காளி என்று சொன்னவுடன் பயங்கரமான முகமும் கோரப்பற்களும், விரிந்து பரந்த சடாமுடியும் கொண்ட கருநிறமுள்ள ஒரு பெண்ணின் உருவமே மனக்கண் முன் நிற்கும். கருப்பு நிறம் தாமத குணத்தை குறிக்கும் பரம்பொருளின் ஐந்தொழில்களில் சங்காரத் தொழிலுக்குரியவள் காளி தேவியாவாள். தீமைகள் முதிர்ச்சி அடையும் போது அவைகளை அழித்து நன்மைகளை தோற்றுவிக்கச் சங்காரத் தொழிலை மேற்கொள்ளுகின்றாள்.

காளிதேவி வணக்கம் சிறுதெய்வ வணக்கத்தின் பாற்பட்டது என்று சிலர் கருதிய போதிலும் அது ஆதிபராசக்தியின் அம்சம் என்பதுதான் பெரியோர்கள் கண்ட முடிவு ஆகும்.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் காளி உபாஸகராகவே தமது ஆத்மீக அனுபவத்தை ஆரம்பித்தார். காளிதேவி அவரோடு பேசும் தெய்வமாக, வாழும் தெய்வமாக உயிர்த்துடிப்போடு விளங்கினாள். கடவுளை காட்டமுடியுமா? என்று கேட்ட நரேந்திரனுக்கு ஆம் என்று பதில் கொடுக்கும் துணிவைப் பரமஹம்சருக்கு அளித்தவள் காளி மாதாவேயாவாள்.

கல்கத்தாவில் உள்ள காளி விக்கிரகத்தின் மூக்குத்துவாரத்தின் முன்னால் ஒரு துரும்பை நீட்டினார் இராமகிருஷ்ணர். காளியின் சுவாசம் பட்டு அத்துரும்பு முன்னும் பின்னுமாக அசைந்தது. தெய்வம் என்று ஒரு சக்தி உயிரோடிருப்பதை உணர்ந்தான் நரேந்திரன். தெய்வம் உண்டா? இல்லையா? என்ற சந்தேகத்தில் தவித்த நரேந்திரன் சுவாமி விவேகானந்தராகி அமெரிக்காவில் இந்து மதத்தைப்பற்றி முழங்கியதும் அன்று காளிதேவி அளித்த வரம் தான்.

விடுதலை கவிஞன் என்று புகழ்பூத்த மகாகவி பாரதியார் கூட பராசக்தியின் பக்தராகவே திகழ்கின்றார். உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் ஆதிபராசக்தியின் தோற்றமாகிய காளி தேவியின் மகத்துவத்தை கீழ்வரும் ஞானபூர்வமான வரிகள் மூலம் தேங்கி நிற்கும்படி செய்து விட்டார்.

> யாதுமாகி நின்றாய் – காளி
> எங்கும் நீ நிறைந்தாய்
> தீது நன்மை எல்லாம் – காளிநின்
> தெய்வ லீலை யன்றோ?

அகண்டாகரமாக நிறைந்த தெய்வ சக்தியின் தோற்றமே காளி என்பதையும், அண்டசராசரங்களில் இடம் பெறும் இயக்கங்கள் அனைத்துக்கும் உந்துசக்தியாக விளங்குபவளும் காளி தான் என்பதை பாரதி தத்துவமாக கூறிவிட்டார்.

எனவே நாமும் காளிதேவியை உள்ளன்போடு வழிபட்டு அன்னையின் கடைக்கண்ணோக்கினால் பலவிதமான பேறுகளையும் பெற்றுப் பூரணமாக ஆனந்தவாழ்வு பெற முயலவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் நடைபெறும் மூவகை கிரியைகள்

செல்வி ராமலிங்கம் ஜீவராண', இந்து சமயப் பிரிவு, விடுகையாண்டு (98-99)

இந்து சமயத்தை பொறுத்தவரை அதற்கான ஒரு கட்டுக்கோப்பை நிலைப்படுத்தி வைக்கும் ஒரு சட்ட அமைப்பு போன்று இருப்பவை கிரியைகள். இக்கிரியைகள் சிந்தனை அளவில் சமயத்தை விடாது தமது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புபட்ட நெறிமுறையாக உணர்வு ரீதியாக இணைந்து வளர்வதற்கு உதவுபவையே கிரியைகள் ஆகும். இக்கிரியைகளில் சொந்த நன்மை கருதி செய்பவையே ஆன்மார்த்த கிரியையாகும். இவைதவிர எல்லா உயிர்களின் நன்மைகருதி செய்பவை பரார்த்தகிரியை எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பரார்த்த கிரியைகள் மூன்று வகைப்படும் அவை நித்தியகிரியை, நைமித்தியகிரியை, காமியக்கிரியை என்பனவாகும்.

இக்கிரியை முறைகளில் நித்திய கிரியை பற்றி நோக்கும் போது கோயில் அர்ச்சகர் தமது நித்திய கடமைகளை முடித்துக் கொண்டு வெண்பட்டு, உத்தரீயம், விபூதி, உருத்திராக்கம் முதலியவற்றை அணிந்து கொள்வார். பின்னர் கோயிலை அடைந்து முதலில் திருநந்திதேவரையும், துவாரபாலகரையும் வணங்கி அனுமதி பெற்று பூஜைக்கு தம்மை தயார்படுத்திய பின் வைரவர் ஆலயம் சென்று, வணங்கி முதல் நாள் இரவு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த திறப்பினை எடுத்து வந்து, திருப்பள்ளி எழுச்சி முதலிய பாடி, துவார பூசை நிகழ்த்தி, சிவசக்தி மந்திரத்தை உச்சரித்தபடி கதவை திறப்பார். அதன் பின் உள்ளே சென்று முதல் நாள் அர்ச்சித்த பூக்கள், மாலைகளைக் களைந்து, பாத்தியம், அத்தியம், ஆசமநீயம் ஆகியவற்றைக் கொடுப்பார். அதன் பின்னர் முதலில் விநாயகருக்கும் பின் மூலஸ்தான மூர்த்திக்கும் பின் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அதனைத் தொடர்ந்து நந்தி பலிபீடம் ஆகியவற்றிக்கும் இறுதியாக சண்டேஸ்வர மூர்த்திக்கும் பூசை நடைபெறும்.

பூசையின் முதல் அங்கமாக விளங்குவது அபிஷேகம் பரிசுத்தமான நீர் இதற்கென சேகரித்தவைக் கொண்டு மந்திரங்களால் புனிதப்படுத்தப்படும். பின்னர் இந்நீரினால் அபிஷேகம் செய்ய தொடர்ந்து பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் முதலியனவும் பயன்படுத்தப்படும். பின்னர் அபிஷேகம் நடைபெறும் இதன் போது மந்திரங்கள் ஓதப்படும். அபிஷேகத்தின் பின் சுவாமியை அலங்கரித்து நைவேத்தியம் படைத்து தூபதீபம் காட்டப்பட்டு, திரைச்சீலை விலக்கப்படும். திருவருள் சக்தியின் துணை நாடி அனைவரும் வழிபடுவர். தீப ஆராதனை வழிபாட்டின் நோக்கம் ஆன்மாமீக ஞான விளக்கை கிட்டுவதற்காகும்.

இதன்பின் ஒவ்வொரு மூர்த்திகளுக்கான பூஜையும் நடைபெறும் இறைவனுடைய குண இயல்புகளையும் திருவருள் சிறப்புக்களையும் அருட்செயல்களையும் சித்திரிக்கும் சிறப்புப் பெயர்களை ஒவ்வொன்றாக உச்சரித்து பத்திர புஸ்ப்பங்களை இறைவன் திருவடியில் சமர்பித்தல் அர்ச்சனை எனப்படும். நித்திய பூஜையின் போது 16,25, 50,100 என்னும் தொகையுடைய நாமாவளிகள் ஓதியும் அர்ச்சனை செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய பூஜையில் வாழ்த்தும் இடம் பெறும். பூசையில் எவையேனும் குறைகள் நிகழ்ந்திருந்தால் அவை நிறைவேற வேண்டுமென்றும் ஊரவரும் உலகத்தவரும் இறைவன் அருளால் நல்வாழ்வு பெற்றவுடன் விபூதி, தீர்த்தம்,பூ, சந்தனம், குங்குமம், பிரசாதம் முதலிய வழங்கப்படும். ஆகம முறைப்படி கோயில்களில் நடைபெறும் நித்திய பூஜை இதுவாகும்.

இந்நித்திய பூசை ஆலயங்களில் வசதிக்கேற்ப நடைபெறும். எமது நாடான இலங்கையில் வசதி படைத்த கோயில்களில் 6 கால பூசையும், சாதாரண கோயில்களில் 3 காலமும் நடைபெறும். 6 கால பூசைகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1.திருவனந்தல் பூஜை
2.காலை சந்தி பூஜை
3.உச்சிக்கால பூஜை
4.சாயங்கால பூஜை
5.2ம் சாம பூஜை
6.அர்த்த சாம பூஜை

இந்நித்தியக் கிரியைகளில் இடம்பெறும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக நைமித்தியக் கிரியை செய்யப்படும். இது மாதம் ஒருமுறை மற்றும் விரத நாட்கள், ஆண்டுத்திருவிழா என வகைப்படும். இந்த நைமித்திய கிரியைகள் விஷேட விழாக்களாகக் கொள்ளப்படும்.

நைமித்திய கிரியை இடம்பெறும்போது அவற்றுக்குரிய விஷேட அலங்காரம், அபிஷேகம், ஆராதனை, அர்ச்சனை என்பன நடைபெறும்.

ஆண்டுக்கு ஒருமுறை நிகழ்வதான உற்சவத்தில் கொடியேற்றத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பன குறிப்பிடலாம். இத்திருவிழாவின் போது சுவாமி வீதி உலா வருவது மிக முக்கிய அம்சமாகும்.

விஷேட உற்சவ தினங்களில் விஷேட தீப வழிபாடும் நிகழும் அடுக்குதீபம், அன்னதீபம், விருட்சதீபம், கும்பதீபம், கற்பூரதீபம், பஞ்சாராத்தி என்பனவும் இடம்பெறும் தீபாராதனையை அடுத்து நிகழும் உபசாரப் பூசையில் கண்ணாடி, குடை, சாமரை, கொடி, விசிறி, ஆலவட்டம் என்பன காட்டப்படும். இதையடுத்து 108, 1008, கோடி என்னும் தொகைகளில் நாமங்கள் ஓதியும் அர்ச்சனை செய்யப்படும். நித்திய பூசையில் ஏற்படும் குற்றம் இங்கு நீக்கப்படுகிறது எனக்கருதப்படுகிறது.


காமிக கிரியை என்பது பலனை எதிர்பார்த்து ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நிகழ்த்துவது. இவ்வாறு பலனை எதிர்பார்த்து செய்யும் பெரும்பாலானோர்க்கு உரியவாறு கிரியைகளை ஆகமம் வகுத்துள்ளது. கிணறு தோண்டுதல், குளம் வெட்டுதல், ஆலயங்களை கட்டுவித்தல், அன்னதானம் செய்தல் முதலியன இவற்றுள் அடங்கும். ஆனால் பலன் கருதாது செய்யும் பூஜையே சிறப்பானது. அதாவது பூசை நிஷ்காமியமாக அமைவது பெரும் பலன் தரும்.

இவ்வாறாக இந்து சமயக் கிரியைகள் நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் என மேற்கொள்ளப்பட்டு ஆன்மாக்கள் இறைவனை அடைய ஆகமங்கள் வழிகாட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜை

செல்வி. நிருபாதேவி சிவகுருநாதன், இந்துசமயம், விடுகையாண்டு (98-99)



நினைக்கும் தன்மையுடையவன் மனிதன். நினைவை வெளிப்படுத்துங் கருவி வாய், உணவுகளை அருந்துகின்ற வாய்க்குப்பெருமை கிடையாது. வாயிருந்தும் விலங்குகளை வாயில்லாத பிராணிகள் என்று கூறுகின்றோம். கருத்துக்களை வெளிப்படுத்தி வசனிக்கும் வாயை உடையவன் மனிதன்.

இந்த உடம்பையும், வாக்கையும் நமக்குத்தந்தவன் இறைவன். இவைகள் தாமே வந்து அமைவதில்லை. நாமும் எடுத்துக்கொள்வதும் இல்லை. இதனையே ''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்" என்கிறார் அப்பர். எனவே, நினைக்க நெஞ்சையும், வசனிக்க வாயையும், இந்த இரண்டையும் தாங்கி நின்று தொழிற்படுகின்ற உடம்பையும் தந்த இறைவனை நாம் ஒவ்வொருவரும் நன்றி மறவாமையின் பொருட்டு பூவும், நீரும் கொண்டு பூஜை செய்யவேண்டும்.

பூ-பூர்த்தி, ஜா-உண்டாக்குவது எனப்பொருள் தரும். அதாவது, மலமாயா கன்மாக்களைப் பூர்த்தி செய்து சிவஞானத்தை உண்டாக்கும் புனிதமான செயல் பூஜா எனப்படுகின்றது. இங்கு பூஜா என்ற சொல் பின் பூஜை என வந்துள்ளது. பூஜைக்கு முக்கியமான சாதனங்கள் பூவும் நீருமாகும். ''புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணலுமதுகண்டு அருள்செய்யா நிற்கும்"

நல்ல மலர்களைக்கொண்டு இறைவனை நாள்தோறும் அர்ச்சனை செய்யவேண்டும். அதுவே மெய்யும் கையும் பெற்றதற்குப் பயனாகும். உலகில் செல்வமும் சீரும் படைத்துச் சிறப்பாக வாழ்கின்ற ஒருவனைக் கண்டபோது ''இவர் முற்பிறப்பில் நல்ல பூவெடுத்துப் பூஜை செய்தவர்" என்று இன்றும் கூறுவார்கள்.

மேலும் எமது இதிகாச புராணக்கதைகள், வரலாற்று தலங்கள் என்பவற்றினை நோக்கும் போது அங்கு பூஜையின் சிறப்பினை அறிய முடிகின்றது. அதாவது விநாயகர் சிவ பூஜை செய்த திருத்தலம் திருச்செங்காட்டங்குடி. அதனால் அது ''கணபதீச்சுரம்" எனப் பெயர் பெற்றது. மேலும் சக்கரம் பெறும் பொருட்டுத் திருமால் நாள் தோறும் ஆயிரந்தாமரை மலர்களால் அரனை அர்ச்சித்தார். இந்திரன் பூஜித்த திருத்தலம் கண்ணார் கோயில். இவ்வாறு பூஜை செய்த தலங்களின் சிறப்பினை அறிய முடிகின்றது. இவ்வாறு சிறப்புப்பொருந்திய தலங்களைக் கண்கூடாகக் கண்டும் மனிதர்கள் இறைவனைப் பூசிக்காமல் உண்டு, உடுத்து உலாவி வீணே காலங் கழித்து காலன் வயப்படுகின்றனர். இவைகளைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி அதி வீரராம பாண்டியர் இவ்வாறு பாடுகின்றார்.

"சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறி சாரார் - அவனிதனில்
காண்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்
ஏன்பிறந்தார் மானிடராய் இன்று"

என்கிறார்.

இறைவனைப் பூசிக்காத புல்லர்களை மனிதர்கள் என்று கூறக்கூடாது. அவன் தந்த கையால் அவனை வழிபட மறுத்தால் நன்றிகொன்ற பாவம் விடாதுதானே! முன்னே செய்த பூஜையின் பயன் இப்போது வந்து உதவுகின்றது. இப்போது பூஜை செய்தால், மறுமைக்கு வந்து உதவும் முன்னே செய்த விளைவு இப்போது உணவுக்கு வருவதுபோல். என உணர்க.

அர்ச்சுனன் தன் மகன் அபிமன்யு மாண்ட அன்றிரவு சிவபூஜை செய்தான் என்று மகாபாரதம் பேசுகின்றது. அரசர்கள் சிவலிங்கம் அமைத்துப் பூசித்தார்கள் ''இறைவனைப் பூவும் நீரும் கொண்டு பூசிப்பவர் திருக்கைலாய மலைக்குத் தடையின்றிச் செல்வார்கள். அவர்கள் பின்னே மெல்ல நானும் போய் விடுவேன். என்பதனை அப்பர் இவ்வாறு பாடுகின்றார்.

"போதொடுநீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்"

அன்பர்கள் மறவாமல் அமைத்துக்கொள்ள வேண்டிய உயர்ந்த உண்மையான கருத்துக்கள் இரண்டு உள்ளன. அவை அறவழியில் செலவழித்த பொருள் நம்முடையவை. பூஜையில் செலவழித்த நேரம் நம்முடைய நேரம். ஆகவே இவற்றில் கஞ்சத்தனம் தேவையில்லை.

எல்லா நலன்களும் சிவபூஜையால் ஒருவனுக்குக் கைகூடும் எண்ணிய எண்ணங்கள் யாவும் ஒருங்கே எய்தும். அரிய கருமங்களையும் செய்து முடிக்கலாம். உடல் நலம், உளநலம், உணர்வு நலம் ஆகிய அரிய நலன்களும் விளையும். என பூஜையின் பயன்கள் கூறப்படுகின்றது.

மார்க்கண்டேய முனிவர் மறலியை வெல்ல வேண்டித் திருக்கடவூரில் சிவபூஜை செய்தார் என்பது உலகறிந்த உண்மை. சிவமூர்த்தி அவர் என்றும் பதினாறு ஆண்டாக வாழுமாறு மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்தார். இதைவிடச் சிவபூஜைக்கு மேலான சான்று என்ன வேண்டும்?

''அரிது அரிது மானுடராதல் அரிது'', ''மானுடத்துதித்தல் கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்'', ''மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே'' என மானுடப்பிறப்பின் சிறப்பினை எடுத்துக்கூறுகின்றனர். இவ்வாறு சிறப்பு பொருந்திய மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் இறைவனுடைய திருவடியைத் தங்கள் தகுதிக்குத்தக்க அளவில் அமைத்து நல்ல மலர்களை அன்புடன் இட்டு உள்ளங் குழைந்து உருகித் துதிசெய்து நாள் தோறும் பூசிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்தோம்பல்

**D.ருஷாந்தினி, இந்துசமயப்பிரிவு**
**விடுகையாண்டு (98-99)**

இந்துபாரம்பரிய அம்சங்களில் விருந்தோம்பல் என்பது இந்து மக்களின் வாழ்வோடு இணைந்ததொன்றாகும். அந்த வகையில் எமது இல்லம் தேடி வரும் விருந்தினரை உபசரித்து உணவளிப்பது இந்துமதம் காட்டும் ஒரு பண்பாகும். எனவே நாம் எவ்வாறு உணவு பரிமாற வேண்டும் என்பதை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

உணவு படைப்பதற்குச் சற்று முன்பாக வாழை இலையின் தண்டை உரிக்காது, அடிப்பாகத்தில் சிறிது அரிந்து விட்டு பின் நன்றாகக் கழுவிப் போட வேண்டும்.

சாப்பிடுபவரின் இடது கைப் பக்கம் இலையின் நுனிப் பாகமும் வலதுகைப் பக்கம் இலையின் அடிப்பாகமும் இருக்கும் படி இலையை விரித்துப் போட வேண்டும். உடனடியாக இடது கைப்புறம் தண்ணீரும் வைத்த பின்னர் பரிமாறத் தொடங்க வேண்டும்.

வாழை இலையின் நடுத் தண்டிற்கு மேல் புறம் பதார்த்தங்களைப் படைக்க வேண்டும். எதையும் கையில் படைத்தல் கூடாது. அப்பளம் போன்றவற்றைச் சுத்தமாகக் கையைக் கழுவிய பின் வைப்பது சிறப்பு அன்னம், கறி, கூட்டு இவைகளை அடுப்பில் வைத்து பாத்திரங்களிலே பரிமாறக் கூடாது. இலையின் நுனியில் உப்பு ஊறுகாய் இவற்றை வைக்க வேண்டும். இரண்டாவது வறுவல், வற்றல் இவைகளை வைத்தல் வேண்டும். மூன்றாவது அவியல், பொரியல் வைக்க வேண்டும் நான்காவது நாவினால் சாப்பிடக் கூடிய பச்சடி வகைகளை வைக்க வேண்டும். மேற்கூறிய அணைத்தும் இலையின் மேல் பகுதியில் இலை நுனியிலிருந்து, வரிசையாகப் படைத்தல் வேண்டும் இலையின் கீழ் பகுதியில் வலது கைப்புறம் பருப்பும், இனிப்புப் பாயாசம், சிறிதளவு படைக்க வேண்டும். இலையின் மத்திய பகுதியில் அன்னம் படைக்க வேண்டும். அன்னம் படைக்கும் பொழுது சிறிதும் சிந்தாது. சிறிது சிறிதாக வேண்டிய அளவு படைத்தல் வேண்டும்.

சாப்பிடத் தொடங்கும் முன் நெய் படைத்தல் வேண்டும். சாப்பிட ஆரம்பித்ததும் உப்பும் நெய்யும் படைத்தலாகாது. அன்னத்தையேனும், கறிகளையேனும் பரிமாறிய பின் கையைக் கழுவாது பால் தயிர் முதலிய பதார்த்தங்களைத் தொடலாகாது. படைப்பவர்கள் இலையைக் கவனித்து எந்த பதார்த்தங்ககளை உண்பவர்கள் பிரியமாகச் சாப்பிடுகிறார்களோ, அதை மேலும் சிறுகச் சிறுகப் படைக்க வேண்டும்.

உண்பவர்கள் வாய் திறந்து கேட்காத முன்பே படைப்பது உத்தமம் கேட்டுப் படைத்தல் மத்திமம் கேட்டும் படைக்காமலிருப்பது அதமம் முதலில் அன்னத்தில் சாம்பார் படைக்க வேண்டும். மூன்றாவது பாயாசம் படைக்க வேண்டும் நான்காவது தயிர் அல்லது மோர் படைப்பதற்கு முன் அன்னம் போட வேண்டும். பதார்த்தங்களோ அன்னமோ இலையில் மிஞ்சாதபடி உண்பவர்களின் வயது உடல் நிலை பழக்க வழக்கங்களை அனுசரித்து படைத்தல் மிக முக்கியம்.

வீட்டுக்கு வந்த புது மருமகளையும், சிறுவர், சிறுமிகளையும், வீட்டிலுள்ள நோயாளிகளையும் கர்ப்பிணிப் பெண்களையும், வயோதிபர்களையும் முதலில் சாப்பிடச் செய்ய வேண்டும்.

எனவே சைவமக்களாகிய நாம் மேலே குறிப்பிட்டுள்ள உணவு பரிமாறும் முறையை நமது அன்றாட வழ்வில் கடைப்பிடித்து இன்புறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியே சகலமும்

ரெ.விஜி இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு

"எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா - அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - அந்தத்
தாயின் கைப்பந்தென ஓடுமடா"

அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளிப்பிரகாசமாய் ஆனந்த நடனம்புரிபவள் அன்னை. ஓடும் நதியினில் ஆடும் மரக்கிளைகளில் பாடும் பறவையில், எரிதழலில் ஓடும் உதிரத்தில் சுவாசிக்கும் உயிர் காற்றில் என எங்கும் எதிலும் உயிர் மூச்சாய் நிறைந்து வாழ்வளிப்பவள் எம் அன்னை. காலை வரும் செம்பரிதியிலும் நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று காட்டுகின்ற ஒளி முகத்திலும், தென்றல் உலவிச் சிரிக்கும் சோலையில், அடர்கொடி பச்சைப்பட்டில், மழலையின் சிரிப்பில் மாந்தரின் களிப்பில் கண்ணனின் கடைப்பார்வை காட்டிவிடும் மாதரின் காந்த வீச்சில் போர் மறவனின் தடந்தோளில், ஆர்பரித்துச் சிலிர்த்தெழுகின்ற ஆழ்கடலின் வண்ணத்தில் இவ்வாறு எங்கெங்கு காணினும் சக்தியன்றே!

அண்டசராசரங்கள் அணுவும் பிசகாது உலவுவது எவ்வாறு? கருவுக்குள் உயிர்வைத்துக் காப்பது யார்? தசையும் பிண்டமும் ரத்தநாளங்களும், நரம்புகளும் நிறைந்த மனித உடலில் சிந்தனையைத் தூண்டுவது யார்? இரவும் பகலும் பிசகாது வருவது எவ்வாறு? தண்ணொளியை வெண்ணிலவும், தாங்கரு வெப்பத்தினை இரவியும் வழங்குவது எங்கனம்? கண்சிமிட்டும் தாரகைகள் கணமும் பிசகாது வயிரத் தொங்கலாக உலவுவது எவ்வாறு? பிறந்தோர் இறப்பதும், இறந்தோர் பிறப்பதும் பிறவிப் பயனடைவதும் எதனால்?

"காலமாம் வனத்திலண்டக்
கோமா மரத்தின் மீது
காளி சக்தியென்ற பெயர் கொண்டு உ ரீங்
காரமிட்டுலவுமொரு வண்டு"

"மேலுமாகி கீழுமாகி வேறுள திசையுமாறி
விண்ணும் மண்ணும் ஆன சக்தி வெள்ளம்"

இவையனைத்தும் சக்தியினால் பல்வேறு பெயரும் உருவமும் கொண்டு விளங்கும் அம்பிகையினால் தானன்றோ?

சக்தி அந்தம் எல்லையற்றது. முடிவற்றது அசையாமல் அசைவு காட்டுவது, சக்தி அடிப்பது, துரத்துவது, கூட்டுவது, பிணைப்பது, கலப்பது, உதறுவது, புடைப்பது, வீசுவது, சுழற்றுவது, தூற்றுவது, ஊதிவிடுவது, நிறுத்துவது, ஓட்டுவது, ஒன்றாக்குவது, பலவாக்குவது, குளிர் செய்வது, அனல் தருவது, இயல்பு மாற்றுவது.

சக்தி உணர்வு தருவது, சக்தி மயக்கம் தருவது, தெளிவு தருவது, சக்தி முதற் பொருள் பொருளில்லாப் பொருளின் விளைவில்லை விளைவு.

உயிரில் உறைப்பது, உணர்வில் கலப்பது அம்பிகையே! அவளின்றி ஓர் அணுவும் அசையாது.

"ஓம் சக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் வெல்லு"

எண்ணும் எண்ணம் யாவிலும் மற்றும் எடுத்த காரியம் யாவிலும் இருப்பவள் சக்தி! சக்தியே உயிர்! சக்தியே சகலமும்.

"ஒரு வாளைச் சுழற்றும் விசையினிலே - இந்த
வையம் முழுவதும் துண்டு செய்வேன் - என
நீள இடையின்றி நீ நினைத்தால் - அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே! "

(அம்பிகையின் அற்புதங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமஸ்கந்த மூர்த்தி - ஓர் தத்துவப்பார்வை

**முக்கப்பிள்ளை மூவேந்தன், இந்துசமயப்பிரிவு முதலாம் வருடம். (1999-2000)**

உலகெலாம் அடியார் கூட்டம் உவந்து ஏத்த அருட்சுடராய் விளங்கும் எங்கள் இறைவன் பேரருள் பொருந்திய எண் குணங்களைக் கொண்டவன். அவற்றில் தோற்றக் கேடிண்மை, வரம்பிலின்பமுடைமை, பேரறிவுடைமை என்பன போற்றற்குறியன. சிவனைத் தவிர ஏனைய எல்லா உயிர்களும் பிறப்பு, இறப்பு, லௌகீகம் என இன்பத்தையும் துன்பத்தையும் உடையனவாய் இருக்கின்றன.

ஒப்பில்லாத எங்கள் இறையோன் ஆதியும் அந்தமுமில்லாதவன் உயிர்கள் தோறும் நீக்கமற நிறைந்துள்ளான் உயிர்கள் மீது கொண்ட அன்பினாலேயே ஐந்தொழில்களையும் புரிகின்றான். ஆன்மாக்கள் மீது கொண்டுள்ள கருணையால் எங்கும் எழுந்தருளியுள்ளான் பதியாகிய இறை பசுவாகிய ஆன்மாக்களுக்கு அறிவிப்பான். இதனையே சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவச்சாரியார்.

"அறிதரு சிவனே எல்லாம் அறிந்த
அறிவித்து நிற்பன்" என்கிறார்

சத்துப்பொருளாகிய இறைவன் எல்லா உயிர்களுக்கும் நல்லருள் புரிகின்றான். மணிவாசகருக்கு குருந்த மர நிழலில் குருவாகவும், சுந்தரருக்கு மணநாளில் அடிமை ஓலை காட்டியும், ஞானசம்பந்தனுக்கு ஞானப்பாலை ஊட்டியும் தெய்வீக அறிவை ஊட்டுகிறான். இதனையே உமாபதி சிவாச்சாரியார் திருவருட் பயனில்.

"மன்னுபவநீ தீர்க்கும் மருந்து" என்கிறார்.

சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூன்று தரத்திலுள்ள ஆன்மாக்களுக்கும் அவற்றின் பக்குவநிலைக்கும் ஏற்ப திருவருள் கொண்டு தானாக முன் வந்து ஆட்கொள்கின்றான். பதி, பசு, பாசமாகிய முப்பொருட்களிலும் பதியாகிய இறை எதையும் அறிவிக்காமலே அறிய வல்லது. பசு அறிவித்தால் அறிவது, பாசம் அறிவித்தாலும் அறியாதது எனவே பதியாகிய எங்கள் சிவனின் நல்லருளை அவர் தரும் அளவு பெறும் வாய்ப்பு பசுக்களாகிய ஆன்மாக்களுக்கு மட்டுமே உண்டு.

சத்து என்பது அறிவுள்ளது, அசத்து என்பது அறிவற்றது. சதசத்து அறிவித்தால் அறிவது என்ற வகையில்

பதி - சத்து (இறைவன்)
பசு - சதசத்து
பாசம் - அசத்து, என்பதனை

"சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை
யுற்றசத சத்தாமுயிர்"

என திருவருட்பயன் உணர்த்துகின்றது. முப்பொருட்களின் ஆன்மா சிவத்தைப் போல சத்துப் பொருளாகிய மாயையைச் சேர்ந்து நின்று அறிய வேண்டாதது ஆன்மா, மாயை பொருளை போல அசத்துப் பொருளாயின் ஒன்றினையும் அறியாத அறிவில்லாப் பொருள் ஆகும். எனவே சிவத்துடன் நோக்க ஆன்மா அசத்தாயும் மாயையுடன் நோக்க சத்தாயுமிருந்தால் ஆன்மா சதசத்து ஆகின்றது.

சத்து பொருளாக சிவன் விளங்குவதானாலேயே உயிர்களுக்கு வேண்டுவனவற்றை வழங்குபவனாயுள்ளான் இதனாலேயே

"வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்" எனப் போற்றப்படுகிறார் ஆன்மாக்களின் தேவையறிந்து உதவும் பொருளாகிய இன்பமும் உடையதால் சத்தும், சித்தும் ஆனந்தமுமாக விளங்குகிறது.

இம்மூன்று சொற்களும் (சத்து, சித்து, ஆனந்தம்) சேரும் போது சச்சிதானந்தமாகின்றது. இங்கு உண்மை, அறிவு, இன்பம் என்பது அதன் பொருளாகின்றது. இவ் அறிவின்ப வடிவையே சோமஸ்கந்த மூர்த்தம் குறிப்பதாயுள்ளது. இதில் சிவன், உமை, முருகன் ஆகிய மூன்று மூர்த்திகளுமுள்ளனர். சிவன் சத்து மூர்த்தியாகின்றான். அவனின் வேறில்லா உமை சித்து மூர்த்தியாகவும் அவர்களில் வேறில்லா முருகன் ஆனந்த மூர்த்தி எனவும் போற்றப்படுகின்றனர்.

சத்தாகிய சிவனும் சித்தாகிய உமையும் ஆனந்தமாகிய முருகனும் மூவராயினும் ஒன்றாக விளங்கி ''சச்சிதானந்தனாய்'' உயிர்களுக்கு அருள்பாலிப்பார்கள் சதசத்தாகிய ஆன்மாக்கள் அவ்வருள் பெற்று உய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின் மகத்துவம்

**செல்வி.பி.சரோஜா, ஆரம்பப்பிரிவு-2, விடுகையாண்டு(98-99)**

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள்ளும் மிக்க மேன்மையாகக் கருதப்படும் லலிதகலை, கவின்கலை, நுண்கலை, அழகியற்கலை என்று பெயர் பெறுவதுமான இசை,நடனம்,சித்திரம்,சிற்பம் போன்றனவையே. இந்நான்கினுள்ளும் இசைக்கலை மிகவும் உன்னதமான உயர்ந்த இடத்தை வகிக்கின்றது. இசை என்ற சொல்லின் பொருளானது உயிரினங்களை தம்வசமாக்கி இசைய வைப்பதாகும் இதனை மக்கள் முதல் மாக்கள் வரை நாம் அவதானிக்க முடிகின்றது.

ஆறறிவு பெற்ற மனிதன் தனது ஒன்பது வகை உணர்ச்சிகளையும் எண்ணம், சொல், செயல் என்பனவற்றினூடாக அனுபவிக்கின்றான். இதில் நவரச உணர்ச்சிகளையும் வெளிப்படையாக பிரதி பலிக்க கூடியது. அழகியற்கலையே. இப்படிப்பட்ட அழகியற் கலையாகிய இசை எம் வாழ்வில் எவ்வித பங்களிப்பை ஆற்றுகின்றது என்பதனை நோக்குவோம்.

அழும் குழந்தையானது தன் தாயின் தாலாட்டு பாடலையோ அல்லது பிறருடைய தாலாட்டையோ கேட்டு அழுகையை நிறுத்தி உறங்கத் தயாராகின்றது. மனிதன் தொட்டிலிலிருந்து சுடுகாடு செல்லும் வரையில் இசையும் வாழ்விலே கலந்துள்ளது.

சிறுவர், ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்களை கவரவைக்கும் சில அம்சங்களை கொண்டே கற்பித்தலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அவற்றில் 1. இசை 11. அபிநயம் 111. விளையாட்டு என்பன முக்கிய அம்சங்களாகும். இசைமூலமே நாம் சமயநெறி, சுகாதாரம், சுற்றாடல் போன்ற பல பாட அலகுகளை மிக இலகுவாகவும் மனதில் பதியும் வகையிலும் மாணவர்களை கவரும் வகையிலும் ஆர்வம் ஏற்படும் வகையிலும் போதிக்க இசை உதவுகின்றது.

முற்காலத்தில் இறைவணக்கத்தின் மூலமாகவே இசை வளர்ந்ததென வரலாறுகள் சான்று பகிர்கின்றன. தற்போது எமது நாளாந்த பிரார்த்தனையில் சகல மதத்தவரும் முக்கிய கருவியாக இசையையே பயன்படுத்துகின்றனர் . இறைவன் இசைவடிவினன் என்பதை அவனது தோற்றத்திலும் இறைவனுடைய வரலாற்றின்மூலமாகவும் அறியக்கூடியதாகவுள்ளது.

எமது வீடுகளில் நடைபெறும் எந்தவொரு இன்பமான வைபவங்களிலும் ஒலிபெருக்கி பெட்டி மூலம் இசை காற்றுடன் கலந்து நம் செவிகளுக்கு இன்பமூட்டுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. வரும் உறவினர்களின், நண்பர்களின் பல்வேறு உணர்ச்சி உட்கொந்தளிப்புக்களை சமப்படுத்தி புதிய சூழலில் புத்துணர்ச்சி ஊட்டி மகிழ்வடையச் செய்வதும் இசையே இவ்வாறு ஒலிகளோடு வரும் இசை தமது தனிப்பட்ட எண்ணங்களை மறந்து தெளிவுடன் சுறுசுறுப்பாக இயங்கவும் இன்பத்தோடு வாழவும் வழிவகுக்கின்றது.

இன்றைய நவீன உலகில் நாம் பிரயாணஞ் செய்வதற்காக பல்வேறு வாகனங்களில் செல்லும் போதும் அதில் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிப்பதிவு நாடாக்கருவி, வானொலி என்பன இசைப்பரப்பி எம் உள்ளச்சுமைகளில் பங்கெடுக்கின்றது. இதனால் பயண அலுப்பு மறந்துவிடுகின்றது. அத்தோடு நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் தூரமும் நேரமும் கூட தெரிவதில்லை. அதேபோல் வர்த்தக விளம்பரத்திற்கும் இசை பயன்படுத்தப்படுகின்றது.

இசையானது மக்கள் மனதில் பதிவதோடு வியாபாரிகளுக்கு பெரும்பொருள் விற்பனையும் நடைபெற உதவுகின்றது என்றால் மிகையாகாது. அத்தோடு மட்டுமன்றி நாம் மக்களுக்கு ஒரு அறிவுரையோ அல்லது ஒரு விடயத்தையோ பேச்சாக மட்டும் பேசி கிடைக்கும் பலனைவிட இசை மூலமாக அதாவது ஒரு பாடல் மூலமாக கருத்தை பரப்பும் போது மக்கள் மத்தியில் கூடுதலான பலன் கிடைக்கும். ஒரு நாட்டில் அதன் கலாசாரத்தை பேணி பாதுகாப்பது அந்தந்த நாட்டு கலைகளே. அதில் இசையும் பெரும் பங்கு வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. வயது முதிர்ந்த காலங்களில் பொதுவாகவே இசையை மனம் நாடிச்செல்கின்றது. இதனால் இலக்கிய சமய நாட்டமும் ஏற்படுகின்றது. அக்காலத்தில் உள்ள பக்தி சங்கீத இசையைக் கேட்டு மிகவும் மனநிறைவு ஏற்பட்டுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு நோயினால் அவதியுறும் நோயாளிக்கு இசையை கேட்கும் பொழுது அந்நோயின் கடுமை குறைந்து அதனை மறக்ககூடிய சூழ்நிலை ஏற்படுகின்றது. மேலைநாடுகளில் மனநோயாளர்கள் கூட இசை மூலமாக குணமாக்கப்படுவது இன்றும் நடைமுறையில் உள்ளது. இன்றைய நவீன கண்டுபிடிப்பாளர்கள் கூட இசையை கேட்பதன் மூலம் மாட்டில் பால் மிக கூடுதலாக கறப்பதாகக் கண்டுப்பிடித்துள்ளார்கள்.

''ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது'' என்ற கூற்றுக்கு ஏற்ப இத்தொழிலிலும் இசையிலும் இருவகையான கருத்துக்கள் காணப்படுகின்றன. அதாவது நாட்டுப்பாடல்கள் என்று அழைக்கக்கப்படும் அருவி வெட்டுப்பாடல், மீன்பிடிப்பாடல், கொழுந்தெடுக்கும்பாடல், ஏர்ப்பாடல் போன்றவை அவ்வவ்தொழில்களை புரியும்பொழுது உடல் அலுப்பு ஏற்படாதிருக்கவும். வேலைப்பழு தோன்றாதிருக்கவும் இவ்விசை பெரும் பங்காற்றுகின்றது. இசையை தொழிலாக மேற்கொள்ளுவதற்கும் இது வாழ்க்கை வழியாக பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு பெரும் பங்களிக்கும் இசையானது சகலருக்கும் ஒரு பொழுது போக்காகவும் தனிமைக்கு மிக்கதோர் துணையாகவும் திகழ்கின்றது.

பிற உயிர்களை தன்வசமாக்கி இசைய வைக்கும் இசையானது ஒரு தெய்வீகக்கலை. இதை ஓரளவு பயின்ற ஒருவருக்கு பொறுமை, சாந்தம், கருணை, பக்தி, இரக்கம், கட்டுப்பாடு, கற்பனைசக்தி, ஞாபகசக்தி, ஆன்மீகவளர்ச்சி, தலைமைத்துவம் போன்ற நற்பண்புகள் உள்ளவராக இருப்பர். கர்நாடக இசை அதாவது சாத்ரீக இசையை மையமாக வைத்தே சினிமா இசை மெல்லிசை பக்தி, சங்கீதம் போன்றவை உருவாகின. சினிமா இசையானது கேட்க ரசிக்க பின்பற்ற முடியும். ஆனால் சில இசைகள் அழுத்துவிடும் தன்மையும் உள்ளது. கர்நாடக இசையை ஓரளவு கற்றபின் அதன் நுணுக்கங்களை உணர்ந்தபின் அதனுடைய வளர்ச்சி, அதன் நிலை எக்காலத்திலும் அலுத்துப்போகாது மனதில் ஐக்கியமாகிவிடும் தமிழர்கள் தென்னிந்திய இசையாகிய கர்நாடக இசையையும், சிங்களவர் வட இந்திய இசையான இந்துஸ்தான் இசையையும் பின்பற்றுகின்றனர். இன்றைய உலகில் எங்கும் இசை, எதிலும் இசை. இசையின் மகிமைத்தான் எத்தனையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும் மதமாற்றமும்

திரு. பெ.ரவிச்சந்திரன், ஆரம்பபிரிவு-2, விடுகையாண்டு (98-99)

மனிதன் தோற்றம் பெற்ற நாட்களிலிருந்தே இறைவழிபாடு காணப்பட்டதாக தொல்பொருள் ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இதற்கு சான்றாக சிந்து வெளி பள்ளத்தாக்கில் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் அகழ்வாராச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட தடயங்கள் ஒரு சான்றாகும். இத்தடயங்களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு பெண் தெய்வ வழிபாடு, உருவவழிபாடு போன்றவையும் இறைவனுக்கு பூசை நடந்ததற்கான பூசை பொருட்கள், நீர்க்கேணிகள், ஆலய நிலங்கள் போன்றவையும் காணப்பட்டதை நோக்கும் போது இறைவழிபாடு அக்காலத்தில் மேலோங்கி இருந்ததை காணக் கூடியதாக இருந்தது. அக்காலம் தொட்டே வளர்ச்சி பெற்ற வைதீக சமய ஆறு இன்று பல்கிப் பெருகி உலகத்தில் பல பாகங்களிலும் ஜாதி, மத பேதமின்றி மூலை முடுக்கு எங்கும் பாய்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றது. இதற்கு மலையகமும் விதிவிலக்கல்ல.

சங்க காலம், சங்கமருவிய காலத்தில் வளர்ச்சியுற்று பல்லவர் காலத்தில் பல்கிப் பெருகியது. சங்கமருவிய சங்கமறுவிய கால இறுதிப் பகுதியில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஏனைய அவைதீக மதங்களுடன் அனல் வாதம், புனல் வாதம் என்பவற்றில் தங்கள் தியாகங்களுடன் வைதீக சமயத்தை நிலை நிறுத்தச் செய்தனர் உதாரணமாக கூறுவோமாயின் பல்லவர் காலத்தின் முற்பகுதியில் ஆரியர் வருகையினால் வைதீக சமயம் சற்று சீர்குலைந்து ஏனைய சமண பௌத்த மதங்கள் மேலோங்கிக் காணப்பட்டது. இதற்கு ஆரியர்கள் தமிழ் நாட்டில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்ட மொழி ஜாதி பேதங்களே காரணமாகும்.

இக்காலத்தில் சமண சமயத்தில் இருந்த திருநாவுக்கரசு நாயனார் தனக்கு ஏற்பட்ட சூலை நோயை தீர்ப்பதற்காக வைதீக மதத்தை நாடினார். அவர் செய்த பல அற்புதங்களால் மீண்டும் வைதீக மதம் புத்துயிர் பெற்றது. இவ்வாறு ஆரம்பித்த பக்தி பல்லவர் காலத்தின் நாயன் மார்களில் தேவார தொண்டுகளும் அற்புத செயல்களும் எமது மதத்தை வேரூன்றச் செய்தது. அதற்கு பிறகு சோழப் பெருமன்னர் காலத்தில் சமய தொண்டுகள் முக்கியத்துவம் பெற்றது. அக்காலத்திலே ஆலயங்கள் பெருவாரியாக தோற்றம் பெற்றன. அக்காலத்துக்கு பின்பு நாயக்கர் காலத்தில் சைவ சமயத்துக்கு எதிரான அமைப்புக்களும் தோன்றின இதற்கு மூல காரணம் ஐரோப்பியர் வருகையே ஆகும். வெளிநாட்டிலிருந்து வந்த அந்நியர்கள் தமிழ் நாட்டில் பல பகுதிகளில் ஆக்கிரமித்து பல இடங்களை கைப்பற்றியதோடு அவர்களின் குறிக்கோளில் ஒன்றான மொழிமாற்றத்தையும் சமய மாற்றத்தையும் ஏற்படுத்தினர். பல இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களை நிறுவி மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாறும் படி வற்புறுத்தினர். இந்நிலையிலே சைவ சமயம் சற்று சரிவை எதிர்நோக்கியது. இத்தாக்கம் அண்மையிலுள்ள இலங்கை தீவையும் பாதிப்புக்குள்ளாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்திலே இந்தியாவை மட்டுமன்றி இலங்கையையும் கைப்பற்றி ஆட்சி செய்த ஐரோப்பியர் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி கொள்ளவதற்காக இலங்கையின் மத்திய மலைநாட்டின் தேயிலைப்பயிர் செய்கையை புதிதாக அறிமுகப்படுத்தினர். இதற்கு தேவையான தொழிலாளர்களை தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தனர் அம்மக்கள் அங்கிருந்து வரும் போது தமது உடமைகளுடன் தாம் வழிபடும் சைவ மதத்தையும் சேர்த்தே கொண்டு வந்தனர் அவர்கள் குடியேறிய ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு ஆலயங்களை நிறுவி வழிபாடு செய்தனர்.

இவ்வாறு இவர்கள் குடியேறிய பகுதி மலையகம் என அழைக்கப்படுகிறது. இம்மக்கள் வாழும் தோட்டங்களில் ஒன்று சேர்ந்து தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டனர். இவ்வாறு வளர்ச்சி பெற்றுவந்த மதம் காலப்போக்கில் மீண்டும் ஒரு தேய்வு நிலையை எதிர்நோக்கியது. இதற்கு மூலகாரணமாக இச்சமூகத்தினிடையே காணப்பட்ட சாதிப் பிரிவினைக் கொடுமையேயாகும். சாதி என்ற போர்வையில் உயர்ந்தவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் எந்நேரமும் ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

உயர் சாதி எனக் கூறிக் கொள்வோர் தம்மிலும் தாழ்த்தப்பட்டவர்களை தரம் குறைவாக கருதி இவர்களை சமூக விழுமியங்களிலிருந்து ஒதுக்கி வைக்க முற்பட்டனர். குறிப்பாக ஆலய அமைப்புகளிலும் ஆலய வழிபாடு போன்றவற்றிலும் இவர்கள் விலக்கி வைக்கப்பட்டனர். சமூகத்தில் தமக்கு கௌரவம் கிடைக்க வில்லையே, தம்மை மற்றவர்கள் மதிக்க வில்லையே என்று மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளையில் மன விரக்தியுடன் வேறு வழியை நாடவேண்டி இருந்தது. அப்போது இம்மக்களுக்கு புகலிடமாக கிடைத்தது மதம் மாறும் நடவடிக்கையாகும்.

சைவ மதத்தில் கிடைக்காத அன்பு, ஆதரவு, சுதந்திரம், இறைவழிபாடு ஏனைய மதங்களில் கிடைக்கும் என்ற எண்ணத்தில் மலையகத்தில் பெரும் தொகையான மக்கள் மதமாற்றம் பெற்று செல்கின்றனர். அத்தோடு ஏனைய மதங்களில் ஏற்படுத்தப்படும் பிரசாரம், துண்டுபிரசுரம், வேலைவாய்ப்பு, பொருளாதார உதவிகள், நோய்கள் குணமாக்குவதற்கான ஆலோசனைகள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காகவும் மதமாற்றம் பெருமளவு நிகழ்கிறது.

பல்லவர் காலத்தில் வர்ணாச்சிரதர்ம அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்கள் வைதீக மதத்தை விட்டு அவைதீக மதத்துக்கு மாற்றம் பெற்ற போது தோன்றிய திருநாவுக்கரசு நாயனார் சைவமதத்திற்கு பல தொண்டுகள் புரிந்து பல சேவைகள் செய்து மீண்டும் சைவ சமயத்துக்கு ஓர் புத்துயிர் ஏற்படுத்தினார். அன்று தோன்றிய திருநாவுக்கரசு நாயனாரைப் போல் இக்காலத்தில் எமது சைவ சமயத்தை மீட்டெடுக்க சமய நிறுவனங்கள் தொண்டர் நிறுவனங்கள் போன்றவை முன் நின்று செயற்படாவிட்டால் எதிர்வரும் காலத்தில் இந்துமதம் பாரிய சவால்களை எதிர் கொள்ளும் சாத்தியமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தொண்டில் குரவர்களும் ஆதினங்களும்

ஆறுமுகம் தியாகராஜ், ஆரம்பப்பிரிவு-2, விடுகையாண்டு 98-99

அன்பையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டதே சைவம் இந்த அன்பு உலகில் நலிவுறும் போதுதான் உலகில் சாதி, சமய, இன துவேசங்களும் பஞ்சமா பாதகங்களும் இம்சையான நடத்தைகளும் பல்கிப் பெருகுகின்றன. எனவே இற்றைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னுதித்த சைவம். இது பற்றி ஏலவே உரைத்துள்ள பெருமையைப் பெறுகின்றது. எனவே பாதகச் செயல்களும் வஞ்சகமும் மலிந்துள்ள இக்காலகட்டத்தில் இந்த சைவத்தின் சாரத்தை மக்களுக்கு வழங்குவதும் கட்டிக்காப்பதும் மட்டுமல்லாது, சைவத்தை உலகுணரச் செய்த சமயக்குரவர்களின் பணிகள் பற்றியும் உலகறிவிப்பது காலத்தின் தேவையாகின்றது.

சைவம் உலகில் நலிவுறும் வேளையில் மக்களை மக்களாக வாழவைக்கவென எமது சைவக்குரவர் நால்வரும் உலகிலுதித்தனர். மனித வாழ்க்கையின் குறிக்கோள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருட்களை எய்துவதற்கு எமக்கு வழிகாட்டிச் சென்ற இவர்களின் சேவைகளை சற்று உற்று நோக்குவது சாலச்சிறந்தது.

அன்னை பராசக்தியிடம் ஞானப்பாலுண்டமையால் ஞானம்சம்பந்தராக பிரகாசித்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அவர்கள் தமிழ் நாட்டின் பல சிவதலங்களையும் வழிபட்டு, பல தேவார திருப்பதிகங்களையும் பாடியுள்ளார். இவ்வாறே இறைவனின் திருவருளினால் பல அற்புதங்களையும் செய்தார். இறந்த வணிகனையும் பூம்பாவையையும் உயிர்ப்பித்து சமண சமய ஆதிக்கத்தைக் களைந்து சைவமணம் கமழச் செய்தார் அரவந்தீண்டி இறந்த அப்பூதி அடிகளின் மகனை உயிர்ப்பித்தார்.

நாவுக்கரசர் பெருமான் அவர்கள் மருணீக்கியார் என்ற இளமைப் பெயரிலே சமணத்துறவியாகி தருமசேனர் எனும் பெயருடன் சமண குருவாய்மாறி ஈற்றிலே சிவனின்பால் ஆட்கொள்ளப்பட்டு மீண்டும் சைவவழி வந்து திருநாவுக்கரசரானார். இதனால் சமணர்களின் பல கொடுமைகளுக்கும் முகம் கொடுத்து சிவ அருளால் விடுதலைப் பெற்றார், நீற்றறையிலடைக்கப்பட்டதும் ''மாசில் வீணையும்'' என்ற பதிகம்பாடி ஓரிடருமின்றி விளங்கினார். நஞ்சு கலந்த பாற்சோற்றை அமுதென உண்டு ஊறுபாடற்றிருந்தார். ஏவிவிட்டயானையை வலம் வரச் செய்தார். கல்லுடன்கட்டி கடலில் இட்ட போது ''சொற்றுணை வேதியன்'' எனும் பதிகம்பாடி கல் தெப்பமாகி கரைசேர்ந்த அப்பர் பல தலங்களையும் தரிசித்து பதிகம் பாடியதுடன், உழவாரத் தொண்டு புரிந்து உழவாரப் படையாளியாக சைவத் தொண்டில் நின்றார்.

அதே போன்று இறைவனால் தடுத்தாற்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் முன்வினைப்பயனாக திருவருட்சம்மதத்துடன் பரவையார், சங்கிலியார் இருவரையும் மணம் செய்தவர் முதலை வாய்ப்பட்ட பிள்ளையை பல்லாண்டுக்குப் பின்னும் வயது வளர்ச்சி பெற்ற நிலையில் உயர்பெற்று எழச் செய்தார். அத்துடன் பலதிருத்தலங்களுன்கும் சென்று சைவ உண்மைகளையும் கருத்துக்களையும் தேவாரத் திருப்பதிகங்களாகப் பாடியருளினார்.

அரிமர்த்தன பாண்டிய மன்னனின் முதலமைச்சராக இருந்த மாணிக்கவாசகர் பின் ஞானசாரியாராக வந்த சிவபிரானால் சிவஞானபோதம் எனும் நூல் போதிக்கப்பட்டு, சித்தாந்த உண்மைகளை கற்றறிந்து அவற்றைத் திருவாசகம், திருக்கோவையார் எனும் நூல்களிலே பாடியுள்ளார்.

இவ்வாறு சைவ பணி நின்ற குரவர்கள் மட்டுமன்றி ஆதினங்களும் சைவம் வளர்ப்பதில் பெரும் பணியாற்றியுள்ளன. நாயன்மார்களின் தேவார திருமுறைகளை பண்முறையாகப் ஓதும் முறையினைப் பேணுவதுடன், சமயப் பிரசாரம், சமயவகுப்புகள் பதஓம்பல், அன்னதாரனம் நாயன்மார் குருபூசை, சைவ மகாநாடு, சமய தீட்சை, சமயவாழ்வுப் பயிற்சி முதலான நற்கருமங்களில் மக்களை ஈடுபடச் செய்கின்றன. அவ்வாறே இன்னும் இயங்கிவரும் இலங்கை அரசின் அனுசரணையுடனான இந்துகலாசாரத் திணைக்களம், ஸ்ரீராமகிருஷ்ணமிசன், சாரதா சங்கம், விவேகானந்தத் திருச்சபை முதலியன சைவம் காக்கும் பணிகளில் ஈடுபட்டுவருகின்றன.

இவ்வாறு சமய குரவர்களும் ஆதினங்களும் விட்டுச் சென்ற சைவத்திருப்பணிகளை சைவர்களாகிய நாமும் தொட்டுச் செல்வது இன்றியமையாததாகும். சமயக் குரவர் போன்று தம்மையே சைவத்திற்கு அர்ப்பணிக்காவிட்டாலும் தமது குடும்பத்திலாவது சைவம் வளர்ப்பது சாலச்சிறந்தது.தமது பிள்ளைகள் மாணவர்களுக்கு சைவ சிறப்புக்களையும் கருத்துக்களையும் எடுத்துக்கூறி, அவர்களை உண்மை சைவர்களாக வாழ வைப்போமானால் நாமும் சைவத் தொண்டர்பட்டியலில் பெயர் பெற்றோராவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் ஓர் அறிமுகம்

செல்வி. சிவராஜ்.புவனேஸ்வரி, ஆரம்பப்பிரிவு, விடுகையாண்டு 98-99

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.



இறவாத புகழுடையனவும் மக்கள் வாழ்வை உயர்த்துவது மான பெருநூல்களை உலகிற்கு ஆக்கி தந்து அதன் மூலம் என்றும் வாழும் திறம் பெற்றுவிட்ட புலவர் பெருமக்கள் சிலரேயாவர். அவர்களே உலகமகா கவிஞர்கள் என்னும் சிறப்புப் பெறத்தக்கவர்கள் அவர்களுள் ஒருவர் திருவள்ளுவர் என்பது உலகனைத்தும் ஒப்புக் கொண்ட ஓர் உண்மை அவர் தமிழர். தமிழ் நாட்டில் பிறந்தவர் அவர் இயற்றிய நூல் திருக்குறள் அது உலகிலே வளம் பெற்ற மொழிகளனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலக மக்கள் குறள் கூறும் அறங்களைப் பற்றிச் சிந்தனை செய்கின்றனர். இந்த உண்மையை பாரதியார் ''வள்ளுவன் தன்னையுலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு'' எனக் கருத்துச் செறிவோடு பாடியிருக்கிறார். இந்த உண்மையைக் கொண்டே திருக்குறள் தமிழிலக்கியத்தில் பெற்றுள்ள தகுதியையும் நிர்ணயிக்க முடியும்.

உலகிலே தோன்றும் நூல்களனைத்தும் முப்பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். தோன்றிய போதே மனதை மயக்கி பின்னர் தேடுவாரற்று விடுவன ஒருவகையின நூலெழக்காரணமான சந்தர்ப்பமும் தேவையும் உள்ளவரையும் உயிர் வாழும் தகையன இன்னோர் வகையின, மூன்றாம் வகையின காலத்தை வெல்லும் தகுதியுடைய சிரஞ்சீவி நூல்கள். அவை எக்காலத்தில் இயற்றப்பட்டனவாயினும் அக்காலத்திற்கு மாத்திரமின்றி முக்காலத்திற்கும் வந்துதவி பயன் தருவன. இவ்வகை நூல்கள் மிகச்சிலவே அவற்றுளொன்று திருக்குறள். திருக்குறட் கருத்துக்கள் பொய்யில் புலவர்களான சான்றோர்களது நாவிலும் நூலிலும் மேற்கோள்களாகப் பெரிதும் பயின்று வந்துள்ளன. அவ்வாறு பயின்று வந்தமை திருக்குறளுக்குரியதோர் தனிச்சிறப்பு. உதாரணமாக ''தெய்வந் தொழா அள்'' என்ற குறளை மணிமேகலை ஆசிரியரான சீத்தலைச் சாத்தனார் ''சதுக்கப் பூதத்தின் கூற்றாக தெய்வந் தொழா அள் கொழுநன் றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'' என்னும் பொய்யியல் புலவன் பொருளுறை தேராய என்று எடுத்தாண்டுள்ளார். எனவே புலவர் பெருமக்களின் உள்ளங் கவர்ந்த உயர்ந்த நூல் திருக்குறள் சங்க நூல்களும் பிற்காலத்தெழுந்த காவியங்களும் பெரும்பாலும் தெய்வங்களையும் அரசர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நடத்திய போர்களையும் பெருங்குடி மக்களையும் பற்றியே பேசிக் கொள்கின்றன. ஆயின் திருக்குறள் நன்றுந் தீதுங் காட்டுதல் மூலம் கொள்ள வேண்டியனவற்றை வலியுறுத்தி மக்கள் அறநெறியில் வாழ வழிகாட்டுகிறது. அதனால் மக்கள் நூல், உலகப் பொது நூல் உலகனைத்துக்கும் பொருந்தும் அறநூல் எனப்படுகின்றது.

உலக இலக்கியச் சோலையிலே மணம் மிக்க மலராக விளங்குந் திருக்குறள் முப்பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன இம்மூன்று பிரிவுகளிலும் உயிரோட்டமாக ஒளிருங் கொள்கை உலகம் ஒரு குலமாதல் வேண்டுமென்பது அக்கொள்கை உதயமாகுமிடம் காமத்துப்பால். உலகவாழ்க்கை ஆண், பெண் கூட்டுறவிலே முகிழ்ந்துப் பின் விரிவடைந்து செல்கின்றது. காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு படுதலிலே அரும்பித் தழைக்கிறது. அங்கே அன்பு தெய்வீகமான காதல் பிறக்கிறது. அதுவே உலகம் ஒரு குலமாதல் வேண்டும் என்னும் கொள்கை முளை கொள்ளுமிடம் இந்தக் காதல் நெறியை அகவாழ்வை தமிழ் என்னும் அன்பு நெறியை காமத்துப்பால் பேசிச் செல்கிறது. அன்பிலே மலர்ந்த காதல் வாழ்வு தன்னை மறந்து மற்றவருக்காக வாழும் தியாக வாழ்வாகிறது.நுண்ணிய உணர்ச்சித் துடிப்புகளை விருந்தாக்கித் தருவது அந்த ஒருவனும் ஒருத்தியும் கணவனும் மனைவியுமாகி இல்லறம் நடத்துகின்றனர். அங்கே மக்கள் சுற்றம் என தொடர்பு பெருகி அவர்களது உலகம் விரிவடைகிறது. கடமைகள் பெருகுகின்றன. அவைகளுக்கடிப்படையில் அன்பு இருக்கிறது. மனத்துக்கண் மாசிலனாதல் ஆகிய பண்பிருக்கிறது. அந்தப் பண்பே அறங்களனைத்தினதும் தாயாக தோற்றமளிக்கிறது.

திருக்குறளிலுள்ள ஒவ்வோர் அதிகாரமும் ஒவ்வொரு செயலைப் பற்றி பேசுகிறது. விளக்கப்படும் பொருள் பலபல பகுதிகளாக பிரிக்கப்பட்டு, மனதிற் பதியும் வண்ணம் உடன்பட்டாலும் எதிர்மறையாலுங் கூறப்படுகிறது.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் "

எனக் கற்றார் கல்லாதவர் இயல்புகளை இருவகை வாய்ப்பாட்டாலும் விளக்குகிறார் சொல்லுடன் கருத்தாழமும் தெளிவும் நிறைந்து ஒவ்வொரு குறளும் பொழிகிறது.

திருவள்ளுவர் உலகிற்கு விலைமதிப்பற்ற மாணிக்கங்கள் நிறைந்த பேழையொன்றைத் தந்துள்ளார். அதுவே திருக்குறள் அப்பேழை 133 அறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவையே திருக்குறளிலுள்ள அதிகாரங்கள் ஒவ்வோர் அறையிலும் ஒன்றுக்கொன்று தரத்திற் குறைவுபடாத பப்பத்து மாணிக்கங்களுள்ளன. அவையே ஒவ்வோர் அதிகாரத்துமுள்ள பப்பத்து குறள்கள் அவற்றைக் கற்றுணர்ந்து பயன் கொள்வது உலகின் தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக்கு சில...

கோ.ஆனந்தராஜா, இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு

1).வயிற்றுப் பசிக்கு இரையைத் தேடு
மன அமைதிக்கோ இறையை நாடு. (வாரியார்)

2).அடைக்கலப் பொருளை திருப்பிக்கொடாதவன்
இறை நம்பிக்கை அற்றவனாவான். (நபிகள் நாயகம்)

3).தெய்வ நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் மற்றெல்லாப் பண்புகளை விட மேலானவை இவையிரண்டும் விலை மதிக்கமுடியாத செல்வங்கள். (ஜோன்சன்)

4).துன்ப காலங்களிலே பொறுமையுடன் இருப்பது
இறைவணக்கங்களில் ஒன்றாகும். (அறிஞர்)

5).பசியால் வாடி வேலையின்றி இருக்கும் மக்களுக்கு வேலை அளிப்பது ஒன்றே ஆண்டவன் தரிசனம் அளிப்பதற்கு ஒப்பானதாகும். (காந்திஜீ)

6).இகபர வாழ்வின் துறைமுகமே இறைவன் தான். (அறிஞர்-மாரோ)

7).நாம் அமைதியாக இருந்தால் - தெய்வங்கள்
மெதுவாகப் பேசுவதையும் கேட்கலாம். (எமர்ஷன்)

8).இறைவனைச் சந்திக்க எவன் விரும்புகின்றானோ
அவனைச் சந்திக்கவே இறைவன் விரும்புகிறான். (நபிகள் நாயகம்)

9).தன் நாவை அடக்கி கொள்ளும் ஒருவனுடைய-பலவீனத்தை
இறைவன் மறைப்பான் (யாரோ)

10).கொடிய வெய்யிலில் பசியும் களைப்புமாக நெற்றி வியர்க்கப் பாடுபடும் உழைப்பாளியிடம் ஆண்டவன் குடி கொண்டுள்ளான்.(தாகூர்)

11).ஆண்டவனை நம்பு; அதேவேளை உன் வெடிமருந்து-அடைமழையில்
நனைந்து விடாமலும் பார்த்துக்கொள். (நெப்போலியன்)

12).கடவுள் ஒருவரே அதனுள் முழு மனித சமூகமுமே ஒன்று தான்- (காந்திஜி)

13).இருக்கும் பொருள்கள் அனைத்தும்
இறைவன் இருப்பதை பறை முழக்குகின்றன. (நெப்போலியன்)

14).இறைவனிடம் திடமான மனதை நிறுத்தி விட்டு உன் காரியங்களைச் செய் அப்பொழுது உனக்கு அபாயங்களே ஏற்படமாட்டாது. (ஸ்ரீராமகிருஸ்னர்)

15).எங்கே ஏழைக்காக ஊக்கத்துடன் நற்செயலாற்றும் - அன்பு
இருக்கின்றதோ அங்கு கடவுளும் இருக்கிறார். (காந்திஜி)

16).தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களையும் துயரங்களையும் அடக்கி உள்ளத்தில் அமைதி உண்டாக்குவதற்கு பிரார்த்தனையைப் போல் சிறந்த வழி எதுவுமில்லை. (காந்திஜி)

இறையியல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை பல்வேறு படித்த நூல் பத்திரிகைளிலிருந்து தொகுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமுந் தமிழும்

**செல்வி. கந்தசாமி சாந்தீஸ்வரி (இந்துசமயப்பிரிவு)**

''அரிதரிது மானிடராதலரிது'' என்றார் ஔவையார். பிறவிகளில் உயர்ந்தது மானிடப் பிறவியே. இப்பிறவியிலும் யாக்கை நிலையில்லாதது. ஆதலால் கடவுளுடைய திருவடிகளை வணங்கிப் பெறுமின்பமே சிற்றுயிற்குற்ற துணையாகும். சிவநெறி பேணுதலையே நமது கடனாகக் கொள்ள வேண்டும். சைவத்தின் மேலும் தமிழின் மேலும் நாம் பற்றுக் கொள்ள வேண்டும். நிறை தவத்தோரால் அருளிச் செய்யப்பட்ட அருட்பாக்கள் நமது உயிருக்கு உறுது பயக்குமியல் பினவாயமைந்திருக்கின்றன. ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க'' அப்பாடல்களை யாம் ஓதாதொழிவோமானாற் தமிழராய்ப் பிறந்தும் பயனில்லை.

சைவமும் தமிழும் ஒருங்கே பிணைப்புற்றுள்ளன. தமிழ்மொழியை மாணவராகிய நாம் வளர்க்க வேணடுமானால் சைவத்திருமுறைகளைப் பக்தி சிரத்தையோடு கற்றல் வேண்டும். தாய்மொழியின் மூலம் சமயபோதனைகளை நாம் கற்று அதனை ஞாலமனைத்திலும் பரவச்செய்தல் அறங்கள் பலவற்றிலும் சீரயதாகும். திருவருட் பாடலகளாகிய தெள்ளமுதக் கடலிலே இறங்கிப் பிறவிப் பயனையடைய முயல வேண்டும்.

உலகில் பல மொழிகளுள அவற்றுள் தமிழ் மொழியே இனியதும் மூத்ததுமாகும் அவ்வாறே உலகிற் பல சமயங்கள் உள அவற்றிற்கெல்லாம் தொன்மையானது சைவ சமயமேயென்பது வரலாறு கற்பிக்கும் உண்மையாகும். மனிதன் தோன்றிய காலந்தொட்டுப் பக்தி சிரத்தையோடு தழுவப்பட்டு வருவது சைவமாகும். மனிதன் விரும்பியவாறு பரம் பொருளை அடைய வழிகாட்டுகின்றது. தமிழ் மொழியின் சிறப்பை உலகெங்கும் திகழும் வண்ணம் செய்தது மூவர் தமிழும், முனிமொழியும், மணிவாசகரின் வாக்குமாகும் என்பது யாவருமறிந்த உண்மையாகும்.

சைவசமயத்திற்குரிய ஆலயங்கள் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் தோன்றிப் பெருகின. சமயாசாரியார்கள் அருட்பாடல்களை இயற்றி அப்பாடல்களைப் பண்ணமைத்து பாடினார்கள். அவர்களைப் பின்பற்றிய அடியார் கூட்டங்களும் பாடிப்பரவினர். தமிழிசையும் தமிழ் நாடெங்கும் பரவிற்று தேவார திருவாசகங்களையும் ஆழ்வார்களின் பிரபந்தங்களையும் தமிழ் (வேதமாக) வேதங்களாக ஆன்றோர்கள் போற்றியுள்ளார்கள். அவை பக்குவமடைந்த பெரியார்களால் அருளிச் செய்யப்பட்டன. இறைவனே அவர்கள் வாயிலாகத் தமது தத்துவங்களை உலகிற்கு ஈந்துள்ளான். அதனால் சைவம் வளர்ந்தது. தமிழ் உலகெல்லாம் பரவியது. உடல், பொருள், ஆவி மூன்றையும் சிவபெருமானுக்கே உரிமையாக்கி அவர் திருவடித் தொணடு பூண்டு பணி செய்து கிடப்பதே நமது கடனாகும். உலகெல்லாம் அன்பு செறிய நமது துன்பங்களெல்லாம் மறையப் பிறவி நீங்கயாமனைவரும் சிவானந்தத் தேனை நாடோரும் பருக வேண்டும். சைவமும் தமிழுட் தழைத் தோங்க ஆவன செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பஞ்ச பூத கோயில்கள்*

| | |
|---|---|
| 1.திருவாரூர் அல்லது காஞ்சிபுரம் | (பிருதிவி) மண் |
| 2.திருவண்ணாமலை | (தேயு) தீ |
| 3.திருவானைக்கா | (அப்பு) நீர் |
| 4.திருக்காளத்தி | (வாயு) காற்று |
| 5.சிதம்பரம் | (ஆகாயம்) வெளி |

## *எட்டு வீரட்டங்கள்*

| | |
|---|---|
| 1.திருக்கண்டியூர் | பிரமன் சிரங் கொய்தது |
| 2.திருக்கோவலூர் | அந்தகாசுரனைச் சங்கரித்தது |
| 3.திருவதிகை | திரிபுரத்தை எரித்தது. |
| 4.திருப்பறியலூர் | தக்கன் சிரங்கொய்தது |
| 5.திருவிற்குடி | சலந்தராசுரனை சங்கரித்தது |
| 6.வழுவூர் (வைப்புத்தலம்) | யானையை உரித்தது. |
| 7.திருக்குறுக்கை | காமனை எரித்தது. |
| 8.திருக்கடவூர் | யமனை உதைத்தது. |

## *தீட்சைகளும் அதன் விளக்கங்களும்*

| | |
|---|---|
| 1.நயன தீட்சை | குரு பார்வை மூலம் செய்வது. |
| 2.ஸ்பரிச தீட்சை | குரு தம் கையால் தீண்டுவது. |
| 3.வாசக தீட்சை | குருவால் உபதேசித்தல். |
| 4.மானச தீட்சை | சீடனுடன் கலந்து அவனின் மனதில் உணர்த்துவது. |
| 5.யோக தீட்சை | யோக பலத்தால் தீட்சித்தல். |
| 6.சாத்திர தீட்சை | சாத்திர உண்மைகளை புகட்டல். |
| 7.ஔத்திரி தீட்சை | ஓமம் வளர்த்து மேற்கொள்வது. |

தாமி.ஜெயானந்த, இந்துசமயம், விடுகையாண்டு (98-99)

இந்நூலிலுள்ள ஆக்கங்களை திருத்தியவர்கள்:
திரு.வீ.எஸ்.இதயராஜா (பொறுப்பு விரிவுரையாளர்)
திரு.ஜெ.சற்குருநாதன் (விரிவுரையாளர்)
திரு.எஸ்.பிரபாகரன் (ஆசிரியர், ஊவா ஹலண்ட்ஸ், தமிழ் மகா வித்தியாலயம்-பண்டாரவளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாத பிரம்மம்

கி.பராசக்தி, இந்துசமயப்பிரிவு, விடுகையாண்டு

"முத்தொழில் புரிந்து வருவது இறை
முத்தமிழின் மையமாக இருப்பது இசை"

அண்ட சராசரங்கள் அனைத்தையும் தனது உள்ளங்கையில் அடக்கி வைத்திருப்பது இறை கேட்போர் மனதை எல்லாம் கவரும் சக்தியுடையது. இசை 'இ' என்ற உயிர் எழுத்தைத் தொடக்கமாகக் கொண்டு 'ஐ' என்ற ஓரே ஓசையோடு முடியும் இறை, இசை இவ்விரண்டின் தாற்பரியத்தை ஆராய்ந்தோமானால் இவ்விரண்டும் இரண்டறக் கலந்து நிற்கும் ஒன்று என்பது புலனாகும்.

பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து சகல சராசரங்களையும் ஆக்கி, அளித்து, அழித்து-சர்வவியாபகமாய் சர்வ லோகத்துக்கும் ஆதாரமாய் இருந்து சர்வ சக்தியும் வாய்ந்து சர்வமும் அறிந்து இசையோடு இரண்டறக் கலந்து ஒன்றென நிற்கும் இறைவனை.

" ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீயே "

என்று போற்றுகிறோம் ஆகாயம் எல்லையில் அடங்காதது. ஆனால் ஆகாயத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்கி வைத்திருப்பது போன்று நமக்கு நாமே பாவித்துக் கொள்கிறோம்; பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலுள்ள வெளியை ஆகாயம் அல்லது வானம் என்று சொல்லுகிறோம்; ஆகாயத்தில் உண்டாகிற நாதத்தை - வானத்தில் உண்டாகின்ற ஓசையை 'வானொலி' என்கிறோம்; வானம் இருக்கு பரியந்தம் ஒலியும் அதன் கண் நிலைபெற்றிருக்கும். இப்படி ஓசை ஒலியாக இயங்கி கொண்டிருக்கும் இறைவனை ''நாதமே'' 'கானமே' என்பதும் மனதுக்கும மொழிக்கும் எட்டாத பேறறிவான பரம்பொருளை விண்ணே என்று விளிப்பதும் இறைவன் ஆகாயமாக வெட்ட வெளியாக இருக்கிறார் என்பதைப் புலப்படுத்தும்.

அத்தகைய இறைவன் நாத வடிவினன் பராசக்தியான தேவி நாதம்பிகை, இசை வடிவான இறைவன் வடிவம் கடந்த பூரணம் இருந்தாலும் வடிவற்ற ஒன்றை நம்மைச் சுற்றிலுமுள்ள பல கோடிக்கணக்கான வடிவங்களின் மூலம் உணரலாம். இப்பிரபஞ்சம் மண்ணும் விண்ணும் அண்ட கோளங்களும் உயிர் என்ற மாயமும் உயிரற்றவை என்று நாம் கருதும் விந்தைகளும் ஒன்றாகச் சேர்ந்து அலைமோதும் பெருங்கடல் இதுவே இறைவனுடைய நாமம் இவ்வாறான இறைவன் நாத வடிவாகவும் நாதப்பிரம்மமாகவும் இசை வடிவாகவும் இருந்து கண்ணில்லாமல் பார்த்து காதில்லாம் கேட்டு அறிய வேண்டியதையெல்லாம் அறிந்து அவரவர் செய்த வினைப்படி சிருஷ்டித்து காப்பாற்றி அழித்து தம் மகிமைகளையெல்லாம் விளக்கிக் கொண்டே இருக்கிறார்.

பக்தியில் இசை முக்கியமான இடம் பெறுகின்றது உள்ளத்தை உருக்குவது பக்தியின் செயல் உருகுகின்ற உள்ளத்தை இன்னும் அதிவிரைவில் உருக்கி உருமாறும்படி செய்யவல்லது இசை. இசையானது இறைவனிடம் இழுத்துச் செல்லக்கூடிய காந்தசக்தியாக அமைந்து எப்பேர்பட்ட கல் நெஞ்சம் படைத்த மனிதனையும் சிறிது நேரமேனும் உலகக் காரியங்களை மறந்து மெய்மறக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து இறைவனோடு ஐக்கியப்படுத்தி விடுகிறது. இப்பிரபஞ்ச வாழ்வை மறந்து மனதை அதீத நிலைக்கு எடுத்துச் செல்லும் திறமை இசைக்கு உண்டு கண்ணன் ஊதிய குழலோசையிலிருந்து அவ்வுண்மை வெளியாகிய தன்மையை தாயுமானவர்.

"பண்ணாரும் இசையினோடு பாடி "

என்று சொல்கிறார்.

இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இசையே என்றும் அழியாதது. ஏனெனில் இறைவனே பண்! இறைவனே பண்ணில் நின்ற பான்மையில் இருக்கிறார். ''பண்ணினை பண்ணில் நின்றதோர் பான்மையை'' என்று அப்பர் சுவாமிகள் இறையைப் போற்றுவதும் நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகி என்று அபிராமிபட்டர் தேவியை துதி செய்வதும் ''இறைவனை ஆடல் பாடல் வடிவத்ததினன்'' என்று சம்பந்தர் போற்றுவதும் புராணப்படலப் பாடல்களில் காண்கிறோம்.

"நந்தி மத்தளம் கொட்ட
திருமால் தாளம் போட,
நான்முகன் பாட, அம்பலத்தே
சிவபெருமான் ஆட"

இப்படி ஏழிசையாய், இசைப்பயனாய் இன்னமுதாய் இருக்கும் இறைவனை மும்மூர்த்திகளும், தேவர்களும், நாயன்மாரகளும், ஆழ்வார்களும் பாமாலைகளால் தம் வசமாக்கினார்கள். சகல வல்லமைப் பொருந்திய பரம்பொருளான இறைவனை அடைய பலவிதமான உபாசனைகள் இருந்த போதிலும் மிகவும் ''எளிமையான'', ''இனிமையான'', ''சுருக்கமான'', வழி ''நாத போசனையே'' ஆகும் என்பதற்கு ''ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்'' போன்ற மகான்கள் எடுத்துக்காட்டாக இருக்கின்றனர்.

ஆய கலைகள் அனைத்திலும் உன்னதமான ஸ்தானத்தை வகிக்கும் தெய்வீகமான இசைக்கலையினாலே மெய்மறந்து ஆனந்த கண்ணீர் மல்க இறைவனோடு ஐக்கியமாகி வருகின்றனர். வாய்ப்பதற்கரிய மானிடப்பிறவி வாய்த்தபின் ஞானமும், சீலமும், நல்லொழுக்கமும் வடிவெடுத்தவர்களாக வாழ நாதபிரம்மனாகிய இசை வழிவகுக்கிறது.

நம் வாக்கும் மனமும் எதை அடையப்பெற இயலாது திரும்பி விடுகின்றனவோ அதை அந்த ஆனந்தம் நிறைந்த பரபிரமத்தை அடையவும், காணவும் எழுப்பும் பண்ணினுள் இசையாகி நிற்கும் நாதபிரமத்தை கண்ணால் கண்டு களித்து பேரானந்தமடையவும், அஞ்ஞான இருளிலிருந்து ஞான பூமிக்குள் பிரவேசித்து உள்ளம் என்ற பெரும் கோயிலில் இமைப்பொழுதும் நீங்காது பள்ளிக் கொண்டிருக்கும் இறைவனை தரிசிக்கவும் திரிகரணங்களுக்கும் எட்டாத பொருளை அடைந்து பிறவிப் பெருங்கடலை கடக்கவும் ஒரு மொழியிலும், ஒரு சமயத்திலும் கட்டுப்படாமல் மூவுலகினையும், முக்காலத்தையும் கடந்து முப்புறம் எரித்த முழுமுதற்பொருளான தேவாதி தேவனை அடையவும் ''நாதம்'' என்னும் காந்தம் மனிதனை இறைவனிடம் ஈர்த்து செல்கிறது. நாரத கானமாக இசையின் மகிமையே இறைவனின் மகிமை. இசையும், இறைவனும் இரண்டரக் கலந்து ஒன்றென நிற்கும் பரம்பொருளாதலால் ''இசையே இறைவன்'', ''இறைவனே இசை''.

**உசாத்துணை நூல்கள்-சமய பாடநூல்களும், 1996ம் ஆண்டு கல்கி சிறப்பிதழ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற்காலத் தோத்திரங்களில் தாய்த்தெய்வப் பாடல்கள்

செல்வி. கி.சுபத்திராதேவி, இந்துசமயப்பிரிவு, முதலாம் வருடம் (1999-2000)

உலக வாழ்வினைச் சீராகவும் பிசகின்றியும் நடத்த ஆண்,பெண் ஆகிய இருபாலரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகின்றது. இந்த வாழ்வுத் தத்துவத்தை சமயத்துறையிலும் காட்ட எம் முன்னோர் விரும்பினர். அதனாலே தோன்றியதே தாய் தெய்வ வழிபாடு எனலாம். அவ்விதம் தோன்றிய உருவமே அர்த்த நாரீஸ்வர வடிவம். சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் நடந்த போட்டியை ஆண் தெய்வங்களுக்கும் பெண் தெய்வங்களுக்கும் இடையில் நடந்த போட்டியாகப் புராணங்கள் தெரிவிக்கின்றன. அதன் முடிவு ஆண்பாதி, பெண்பாதி என சம அந்தஸ்துக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது. அர்த்த நாரீஸ்வரராக சரிபாதி உரிமை பெற்ற அம்மை சிவனது துணைவியாகி காளி, கௌரி, துர்க்கை, விசாலாட்சி, உமை என்றெல்லாம் பெயர் கொண்டு அழைக்கப்பட்டாள்.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் இந்து சமயம் உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்திக்கு இட்டுச் செல்ல இறைவன் முதலில் எடுக்கும் வடிவம் ''தாய்'' வடிவமாகும். எங்கெல்லாம் பரந்திருந்து எல்லா உயிர்களுக்கும் உள்ளுணர்வாகி நின்று அருள் பாலிப்பது அவளது பரத்துவத்தையும் தாய்மைப் பண்பையும் குறிப்பது எனலாம்.

"எங்கெங்கு காணினும் சக்தியடா தம்பி
ஏழ்கடல் அவள் வண்ணமடா
அங்கு தங்கும் வெளியினிற் கோடி அண்டம்
அந்தத் தாயின் கைப்பந்தென ஓடுமடா"

எங்கும் ஒளிப்பிரகாசமாய் ஆனந்த நடனம் புரிபவள் அன்னை பாடும் பறவையிலும் ஓடும் உதிரத்திலும் ஆடும் உயிர்களிலும் எங்கும் எதிலும் உயிர் மூச்சாக நீக்கமற நிற்பவளும் அவளே.

சூரியன் ஒளி பரப்புவதும் சந்திரன் குளிர்மை பரப்புவதும், கண் சிமிட்டும் தாரகைகள் கனமும் பிசகாது இயங்க வைப்பதும் அந்த மகாசக்தியே. கோயில் கொண்டுள்ள உத்தமனாம் இறைவனது மிடுக்கான அம்சமே ''சக்தி'' என்றும் கூறுவர். ஆதியிலே உண்டு உடுத்து உறங்கக் கற்றுக் கொண்ட மனிதன் அவற்றில் நிறைவு அடையவில்லை இன்பம் நல்கும் காட்சிகளைத் தேடி அலைந்தான். ஓங்கிய மலையைக் கண்டு அதன் அழகினை இரசித்தான். அகன்று பரந்த கடலைக் கண்டு அதிலே தனது மனதினை இலயிக்கச் செய்தான். இவை யாவற்றிற்கும் முன்பே இறைவனை இயற்கையில் கண்ட அவன் அந்த இயற்கையைத் தாய்மையாக உருவகப்படுத்தி மலைமகளாக, அலைமகளாக அந்த அன்னையை எண்ணத் தொடங்கினான்.

இயற்கையுணர்வும் அழகுணர்வும் அறிவுணர்வும் என யாவும் ஒன்றிணைந்த அன்னையை எமக்குத் தந்தனர் எம் முன்னோர்கள். இவ்விதமாக அவர்கள் எண்ணத்திலே தோன்றிய மூவரையும் ஒருவராகக் காண முயன்று முத்தொழிலுக்கும் அடிகோலும் பராசக்தியை எண்ணி வழிபட்டதை பின்வரும் பாடல் விளக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மூவர்க்கும் முதற் பொருளாய் முத்தொழிலுக்கும் வித்தாகி
நாவிற்கும் மனதிற்கும் நாடறியப் பேரறிவாய்
தேவர்க்கும் முனிவர்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்"

சிவ சக்தி பிள்ளைகளுக்கு உதவும் தாயாக அதாவது ஆன்மாக்கள் அனைவரையும் படைத்தும் காத்தும் பேரின்பத்தை அடையச் செய்யும் அருட்கருணை செய்வதனால் அவளை உலகிற்கு அன்னையாக்கி உலக மாதா எனக் கூறும் பண்பு ஏற்பட்டது. பாண்டி நாட்டைச் சேர்ந்த குமரகுருபரர் மதுரை மீனாட்சி அம்மையார் மீது பிள்ளைத் தமிழ், குறம் என்பன பாடினார். கந்தர் கலிவெண்பா நீதிநெறி விளக்கம், சகல கலாவல்லிமாலை என்பன அவர் பாடிய பாடல் தொகுப்புகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

அதாவது அன்னையை கலைவாணியாகக் கருதி பாடியதே சகலகலா வல்லிமாலை அன்னையைக் கலைவடிவமாகக் கருதி வழிப்பட்டால் கலைகள் எளிதே உண்டாகும் என்கிறார் குமரகுருபரர். மேலும் அபிராமிப்பட்டர் மிகுந்த தேவி பக்தராக விளங்கியவர். ஒரு நாள் இவர் தேவியின் உபனிதானத்தில் இருந்த போது அங்கு வந்த அரசனைக் கூட கவனிக்கவில்லை அதுமட்டுமல்ல அமாவாசை தினமான அன்றைய தினத்தினை பௌர்ணமி தினமென கூறிவிட்டார். தியானத்தி லிருந்து விழித்த பொழுது நடந்தனவற்றை யாவரும் கூறக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். தேவி சந்நிதி சென்று மெய்யன்புடன் வணங்கி அரசனுக்கு கூறிய சொற்சோர்வினின்றும் தன்னைப் பாதுகாக்குமாறு வேண்டினார். அதுமட்டுமல்ல தீபாக்கினி வளர்த்து உறியாகப் பின்னி அதனுள் நின்று ஒவ்வொறு பாடலாகப் பாடினார். பாடி முடிய முடிய ஒவ்வொறு கயிறாக வெட்டி வந்தார்.

அவ்விதம் பாடிய பாடல்களில் தேவி மகிழ்ந்து தன் காதணியைக் கழற்றி விண்ணிலே எறிய அது பௌர்ணமி நிலவாக் காட்சி தந்தது.

"தனந்தருங் கல்விதருமொரு நாளுந்
தளர்வறியா, மனந்தருந் தெய்வ
வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப
ரென்பவர்க்கே
கனந்தரு பூங்குழ லபி ராமி கடைக்கண்களே"

என்பது அபிராமியந்தாதியில் இடம் பெறும் ஒரு பாடல் ''தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை." என்பது தமிழர் பழமொழி. தாயைத் தெய்வம் என்று போற்றியது தமிழர் மரபு. இத்தகைய பெருமை படைத்த தமிழர் வாழ்வில் தாய் தெய்வ வழிபாடானது பிற்கால தோத்திர பாடல்களில் பெரும் சிறப்பை பெற்றிருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

-அறிவும், அறியாமையும் சேர்ந்ததே மனம்-

ஸ்ரீ ரமண மகரிஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் என்ற பின்புலத்தில் மதங்களின் செல்வாக்கு

**எம். நாகராஜன், ஆரம்பப்பிரிவு-2, விடுகையாண்டு (98-99)**

இலங்கையானது பல மதங்களையும் மொழிகளையும் தன்னகத்தே கொண்டு மக்களது நலன் சார் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமூக சேமநலன் பேணும் அமைப்பையும் கொண்டு காணப்படுகின்றது. இருப்பினும் காணப்படுகின்ற மதப் பிரிவுகள் அனைத்துமே மனித நலனை அடிப்படையாகக் கொண்ட போதும் அவற்றுக்கும் சமூகத்துக்கும் இடையேயான தொடர்பு வித்தியாசப்பட்டு தொன்றாகவே கருதப்படுகின்றது.

இலங்கையில் மதங்கள் என்ற கருத்தோட்டத்தில் நோக்குவோம் ஆயின் அசோகப் பேரரசனின் மகனான மகிந்தனுடைய வருகையுடன் அவன் மூலம் தேவ நம்பியதீசன் ஆட்சி காலத்தில் புத்த சமயம் இங்கு கொண்டு வரப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இதற்கு மாறாக ஆரம்பகால இலங்கையில் மதம் தொடர்பாகவும் வழிபாட்டு முறை தொடர்பாகவும் தெளிவான கருத்துக்கள் அறியப்படவில்லை. புராதன சமூக அமைப்பை போன்றே இங்கும் இயற்கை வழிபாடும், மரங்கள், மிருகங்கள் போன்றவற்றை வழிபட்டதற்கான சில தகவல்களே உள்ளன. இவற்றை விஞ்ஞான அடிப்படையிலான சரியான ஆய்வுக்கு உட்படுத்தும் போதே சரியானதொரு மதிப்பீட்டுக்கு வரக்கூடியதாக அமையும் எனலாம்.

ஏறக்குறைய கி.மு. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையை எமது இந்து மதம் கொண்டு காணப்பட்ட போதும் அதனுடைய தாக்கம் பெருவாரியாக இலங்கையில் இருந்திருக்கலாம் என்றும் அந்த மதமே இலங்கையில் ஆரம்ப மதமாகவும் இருந்திருக்க முடியும் என்றும் ஒரு அடிப்படையை அமைத்துக் கொள்ளலாம்.

அதே போன்று இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பொறுத்தவரை அவை இலங்கைக்குள் புகுந்த காலப்பகுதி தெளிவாகவே தரப்பட்டுள்ளது. காரணம் இஸ்லாம் மதம் இலங்கைக்கு அராபியருடன் ஏற்பட்ட வர்த்தக தொடர்பு காரணமாகவும் தென் இந்திய மேற்கு கரையுடன் கொண்டிருந்த வர்த்தகம் காரணமாகவும் தொடர்புகளை மேற்கொண்டிருக்கலாம். அந்த வகையிலேயே கிறிஸ்தவ மதமும் வியாபார நாடுகாண் பயணம் என்பன மூலமும் ஆரம்பத்தில் கரையோரங்களையும் பின் முழு நாட்டையும் கைப்பற்றிய 1815ம் ஆண்டுக்கு பின்பும் வளர்ச்சியை பல்வேறு விதங்களில் கொண்டுள்ளது. இவை பல மதப்பிரிவுகளையும் கொண்டுள்ளன.

அதே வகையில் நோக்கும் போது மலையக மக்களது வருகையானது 1834ம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக வளர்ச்சிக் கட்டத்தை காட்டத் தொடங்குகின்றது. கட்டம் கட்டமாக மக்களை இங்கு அழைத்து வரத் தொடங்கினராயினும் 1865 ம் ஆண்டுக்கு பின்பே பெருமளவு மக்கள் தேயிலை, இறப்பர் ஆகிய பெருந்தோட்டப் பகுதிகளில் வேலை செய்வதற்கென அழைத்து வரப்பட்டனர். அவர்கள் மலை நாட்டுக்கு வரும் போதே இந்தியாவின் தமிழ் நாட்டுப் பகுதியில் தத்தம் பிரதேசங்களில் கொண்ட மத அனுட்டானங்கள், சமய நம்பிக்கைகள் என்பவற்றோடேயே இங்கு வந்து சேர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் அம்மக்களது பண்பாடு கலைகலாசாரப் பாரம்பரியங்கள் குலதெய்வங்கள், சிறு தெய்வங்கள் என்பவையும் மக்களது வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த ஒன்றாகவே காணப்பட்டன எனலாம். அதனது வடிவங்களாகவே காமன் கூத்து, பொன்னர் சங்கரர், அருச்சுணன் தபசு என்பன போன்ற கூத்து வடிவங்களை இங்கு கொண்டு வந்தது மட்டுமன்றி அவற்றை அழிந்து விடாமல் பேணிப் பாதுகாப்பதற்கென இம்மக்கள் இயன்றளவு பங்களிப்பினை வழங்கிப் பாதுகாக்கவும் செய்கின்றனர் எனலாம்.

அதே போன்று குலதெய்வங்களும் சிறு தெய்வங்களின் வழிபாடும் அமைந்துள்ளன. சிறு தெய்வ வழிபாடு எனும் போது மாடசாமி, காளியம்மன், மதுரைவீரன் வழிபாடும் வண்ணாத்த கோட்டை ரோதமுனி போன்ற தெய்வ வழிபாடும் காணப்படுகின்றன. இவ்வழிபாட்டு முறைகளில் தங்களைக் கூடுதலாக ஈடுபடுத்திக் கொண்டவர்களைச் சாதி அமைப்பில் பஞ்சமர்களாக ஒதுக்கப்பட்டு காணப்படுகின்ற மக்களே இவ்வகைத் தெய்வங்களைத் தமது வழிபாட்டுக்குரியதாகவும் பூஜிக்கும் பணியை தன்னகத்தே கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றார்கள். இத்தகைய வழிபாடானது பெரும்பாலும் பலி இடும் முறையாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பஞ்சமர் அல்லாதவர்களாக கருதப்படுபவர்களால் கோயிலில் ஏற்கனவே வர்ணாச்சிரம தர்ம முறைப்படி உயர் குலத்தவர் எனக் கணிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தைச் சார்ந்தவர்களே பிராமணர்களாகவும், மந்திரங்கள், சமஸ்கிருதங்கள் என்பவற்றைத் துறைபோகக் கற்றுணர்ந்தவர்களாகக் கருதி சிவாச்சாரியர்களாகவும் குருக்களாகவும் திகழ்வதுடன் உதவி செய்யும் பண்டாரமாகவும் பணிபுரிகின்றார்கள். அது மட்டுமன்றி மாலை கட்டுதல், பூச்சாத்துதல், கோயில் நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளவும் பரம்பரை பரம்பரையாகக் குடும்ப ஆதிக்கத்திற்கு உட்பட்டு கோயில் நிர்வாக முறையும் சில இடங்களில் நெகிழும் தன்மை கொண்டு காணப்படுகின்றது. இருப்பினும் மலையகப் பிரதேசக் கோயில்களில் பஞ்சமர் அல்லாதவர்களுடைய செல்வாக்கு மேலோங்கிய ஒன்றாகக் கருதப்படுகின்றது.

பல்வேறுபட்ட தொழில்களை வேறுபட்டவர்கள் மேற்கொள்ளவென தொழில் ரீதியாகப் பாகுபடுத்தப்பட்டுத் தொழில்களை மேற்கொண்டனர். அவற்றுள் சில தொழிலாகவும் சில தொழில்களை யாரும் செய்யலாம் என்ற நிலையும் காணப்படுகின்றது. பரம்பரையாக மேற்கொள்ளும் தொழில்களில் சலவைத் தொழில், பொற்கொல்லர், தச்சு, சவரத்தொழில் போன்றவையும் காணப்படும். அதேவேளை இன்று எல்லா மக்களும் இத்தொழில்களை மேற்கொள்கின்றனர். இருந்தும் தொழில் அடிப்படையில் உருவான இது இன்று சமூகத்தில் பெரும் நோயாக மாறி பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சமூக உள் முரண்பாடுகளையும் தோற்றுவித்து வருகின்றது. இது எமது நாட்டில் மட்டுமன்றி தென்னாசிய நாடுகளில் குணாம்சங்களின் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

இன்றைய நிலையில் சாதியமைப்பானது ஒரு தீவிர நோயாகவும் அது ஏதோ சமூக அமைப்பில் இருந்து அகற்றப்பட முடியாத அத்தியாவசிய உறுப்பாக இருப்பது போன்று கட்டிப்பிடித்துக் கொண்டு உருளும் படித்த பாமரர்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்நிலை தொடருமேயானால் மலையக சமூத்தில் மதமாற்றத்தோடு மேற்கத்திய கலாசார மோகம் மேவி சமூக பரிமாணத்தைப் பாதகத்திற்கு கொண்டு செல்லும் பாரிய விளைவை அனுபவிக்க வேண்டியேற்படும். எனவே மதத்தை மாத்திரமன்றிச் சமூக அக்கறை கொண்டவர்கள் யாவரும் இணைந்து சாதியத்திற்கு எதிராகவும் சமூக சீர்கேட்டிற்கு எதிராகவும் கிளர்ச்சி செய்ய வேண்டியது அவசியமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும் இறைவழிபாடும்

*லெட்சுமணன் பரிதிமால், இந்துசமய பிரிவு, விடுகையாண்டு*

இன்றைய மலையகத்தில் வழிபாடானது இரண்டு வகைகளில் காணப்படுகின்றது. அதாவது ஆகம முறைக்கு உட்பட்டவழிபாடு ஆகம முறைக்கு உட்படாத வழிபாடு என்று குறிப்பிடலாம். ஆகம முறைக்கு உட்பட்ட வழிபாடு எனப்படுவது எமது சமயத்தின் சிறப்பு நூலாக கருதப்படும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ள முறைக்கு உட்பட்டு வழிபடுவதாகும். அதே போன்று ஆகம முறைக்கு உட்படாத வழிபாடு என்னும் பொழுது மேற்கூறிய ஆகம முறையில் இருந்து விலகிய தன்மை கொண்ட வழிபாடாகும். இதனை சிறு தெய்வவழிபாடு என்றும் குறிப்பிடலாம். எனவே மலையகத்தினை எடுத்து நோக்கும் பொழுது இந்த வழிபாடுகளில் அதிகளவில் மக்களிடத்தில் செல்வாக்கு பெற்றிருப்பது சிறு தெய்வ வழிபாடாகும். இந்த வகையில் வழிபடபடுகின்ற சிறு தெய்வங்களாக மாரியம்மன் வழிபாடு, மதுரைவீரன், சென்டாங்கட்டி, ரோதைமுனி, முனியப்பர், நொண்டி, காத்தவராயன் போன்ற தெய்வங்களை சிறப்பானதாக குறிப்பிடலாம்.

இவற்றில் மாரியம்மன் வழிபாடு மிகவும் செல்வாக்கு பெற்று விளங்குகிறது. இந்த மாரியம்மன் இவ்வாறு செல்வாக்கடைந்திருப்பதற்கான காரணத்தை சற்று பார்த்தோமானால் இவ்விடத்தில் சிந்து வெளி நாகரிகம் பற்றி சற்று மேலோட்டமாக பார்க்கவேண்டியுள்ளது. இங்கு ஆராய்ச்சியினை மேற்கொண்ட சேர்ஜோன்மாசர்ல், கண்ணிங்காம் போன்றோர் இங்கு சக்தி வழிபாடும் சிறப்புற்றிருந்ததாக அங்கு கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்களை வைத்துக் குறிப்பிடுகின்றார்கள். இந்த ஆதாரங்களில் அங்கு வாழ்ந்த மக்கள் பற்றி குறிப்பிடும்போது அங்கு கண்டெடுக்கப்பட்ட எழும்புகளை வைத்து கூறும் கருத்தாக அவை உழைக்கும் வர்க்கத்தினரின் எழும்புகளே என்று குறிப்பிடுகின்றார்கள் எனவே இந்த வகையில் நோக்குகின்ற பொழுது ஒரு உழைப்புவர்க்கம் அங்கு வாழ்ந்திருக்கின்றது. அதேபோன்று அவர்களிடத்தில் சக்தி வழிபாடும் சிறப்புற்று இருந்திருக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்கள். எனவே இதனோடு ஒப்பிட்டு பார்க்கின்ற பொழுது மலையகத்தில் மாரியம்மன் வழிபாடு இந்த உழைப்பாளி மக்களின் வழிபாட்டில் செல்வாக்கு பெற்றிருப்பது ஒரு ஒற்றுமையாகவே காணப்படுகின்றது.

இந்த மாரியம்மன் வழிபாடானது இந்த மக்களின் வாழ்க்கையோடு தொடர்புபட்ட வகையிலேயே வழிபடப்படுகின்றது. அதாவது மாரியம்மனின் உருவங்களில் முகமானது கொடூரமானதாகவும் அதேபோன்று பல கைகளை கொண்டதாகவும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இந்த மக்களும் போர்க்குணம் மிக்கவர்களாகவும் வீர உணர்வு கொண்டவர்களாகவும் இருப்பதை குறிப்பிடலாம். மாரியம்மனுக்காக எடுக்கப்படுகின்ற விழாக்களில் மாவிளக்கு, தீச்சட்டி, கரகம், கும்மி கோலாட்டம் போன்றவைகள் மிகவும் சிறப்பு பெறுகின்றன. அதே போன்று பாரம்பரிய இசைக்கருவிகளில் ஒன்றான தம்பும் இதில் மிகவும் சிறப்பு பெறுகின்றது. இதில் தீச்சட்டி என்பதை குறிப்பிடும் பொழுது இந்த தீச்சட்டியான சட்டியை ஏந்துவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாதாகவிருந்தே சட்டியினுல் உமி இட்டு அத்துடன் அதற்காக போடவேண்டிய விறகுவகைகளையும் இட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரித்து இரண்டு நாட்களின் பின்பு மிகவும் பக்தி பரவசத்தோடு ஒருவர் அதனை ஏந்திக்கொண்டு வீடுகள் தோறும் கரகத்துடன் ஊர்வலமாக வரும் இந்த நேரத்தில் மக்கள் மிகவும் பக்தி சிரத்தையோடு அர்ச்சனைகளை செய்வார்கள். இது தவிர கஞ்சிகாய்ச்சி ஊற்றுவதும் மிகவும் சிறப்பான ஒரு அம்சமாகும் இந்தக் கஞ்சியானது நேர்த்திக்கடனை நிவர்த்தி செய்யும் முகமாக நேர்த்தி வைத்தவர்களினால் காய்சி ஊற்றப்படுகின்றது. அதாவது அம்மை நோயினால் நோயுறுகின்றவர்கள் இந்த நோய் தீரவேண்டும் என்று நேர்த்திவைத்து நோய் தீர்ந்ததும் நேர்த்தியினை தீர்க்கும் முகமாக இந்தக் கஞ்சியினை காய்ச்சி ஊற்றுகின்றார்கள்.

மாரியம்மனை தவிர காளி, கண்ணகி, திரௌபதை போன்ற பெண் தெய்வங்களும் இம்மக்களினால் வழிபடப்படுகின்றன. கிராமப்புரங்களை பொறுத்தவரையில் பெண்வழி சமூக அமைப்பு மதிக்கத்தக்கவர்களாகவே இருக்கின்றது இதன் காரணமாகவே இவர்களிடையே செல்வாக்குபெறுகின்ற தெய்வங்களுள் பெண்தெய்வங்களை சிறப்பாக காணக்கூடியதாக இருக்கின்றது.

இதுபோலவே மேலே குறிப்பிட்ட சிறு தெய்வங்களில் ரோதைமுனி, செண்டாக்கட்டி, நொண்டி போன்ற தெய்வங்களும் செல்வாக்கு பெறுகின்றன. ரோதை முனி என்னும் பொழுது தொழிற்சாலைகளில் இயந்திரங்களில் வேலை செய்பவர்கள் இந்த இயந்திரங்களினூடாக தாம் பாதிக்கப்படக்கூடாது என்பதை வேண்டி ரோதை முனியினை வழிபடுகிறார்கள். இதில் பலியிடும் பழக்கம் மிகவும் முக்கியமானதாகும். இந்த முறை பல இதில் தெய்வங்களிலும் காணப்படுகின்றது. அதாவது செண்டாக்கட்டி, நொண்டி, இதுதவிர கவ்வாத்துசாமி போன்ற வழிபாடுகளிலும் இந்த பலியிடும் பழக்கம் காணப்படுகின்றது. அதேபோன்று இந்த வழிபாடுகளின் போது மதுவை இறைவனுக்குப் படைத்து வழிபடுகின்றார்கள் இதனை நோக்கும் போது வேதகால வழிபாடுகளில் இந்திரன், சோமபானம், சுறாபானம் அருந்தியதோடு ஒப்பிட்டுக் கூறக்கூடியதாக இருக்கின்றது. இதேபோன்று பலியிடும் வழிபாடு சிந்துவெளி காலத்திலும் இருந்தது என்பதற்கு அங்கு ஆராய்ச்சியினை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் ஆதாரங்களை குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதுபோல இன்னும் பல தெய்வங்கள் இந்த சிறு தெய்வ வழிபாட்டில் முக்கிய இடம்பெறுகின்றது.

மேலே குறிப்பிட்ட இந்த சிறு தெய்வ வழிபாடானது இந்த மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த ஒரு வழிபாடாகவே காணப்படுகின்றது. இது ஆகம முறைக்கு அப்பாற்பட்ட வழிபாடாகையால் கிரியை சடங்குகள் என்பவற்றிற்கு அப்பாற்பட்டது. இறைவனிடத்தில் தாங்களாகவே தங்களது குறைகளை கூறி தாங்களே வழிபடுகின்றார்கள் இவ்வழிபாட்டின் போது குடும்ப அங்கத்தவர்களே பூசையினை செய்கிறார்கள். எனவே இறைவனை நெருங்கி வழிபடுகின்ற ஒரு சிறப்பான அம்சம் குறிப்பிட்டுக் கூறக் கூடியதாகும். அதே போன்று இவ்வழிபாட்டில் வர்ணாச்சிரம தர்மம் காணப்படுவதில்லை. சாதிய வேறுபாடுகள் அற்று அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வர்க்க வேறுபாடுகள் அற்று வழிபடுவது இன்னொரு குறிப்பிடக்கூடிய ஒரு சிறப்பான அம்சமாகும். எனவே இந்த சிறு தெய்வ வழிபாடானது இந்த மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த ஒரு சிறந்த வழிபாடாக காணப்படுகின்றது என்று குறிப்பிடுவது சாலப்பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர்

## நன்றியுடன் நினைவு கூறுகிறார்

நன்றிமறப்பது நன்றன்று

✻ இம்மலர் வெளிவர அனுமதியினையும் ஆசியினையும் ஆலோசனையினையும் ஆக்கபூரவமான உதவிகளை அளித்த அதிபர், பிரதியதிபர், உப அதிபர், பொறுப்பு விரிவுரையாளர்,

✻ நூலை சிறப்பாக்க பெருமையுடன் ஆசிச்செய்திகளை அனுப்பிவைத்த ஸ்ரீ காஞ்சிகாம கோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரியார் சுவாமிகள், இலங்கை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தஜி, யதன்சைட் பிரதம குரு பிரம்மஸ்ரீ தேவசேனாதிபதி குருக்கள்,

✻ ஆசிச்செய்தியையும், நிதியுதவிகளையும் அனுப்பிவைத்த இந்து அபிவிருத்திச் சபை தலைவர் சுவாமி தந்திரதேவ மகராஜ்

✻ வாழ்த்துரைகளை வழங்கிய அதிபர், பிரதியதிபர், உப அதிபர், பொறுப்பு விரிவுரையாளர்கள், பேரவைத்தலைவர்,

✻ முதல்பக்கப்படத்தை அழகுற கருத்தொருமித்து அமைத்துத்தந்த விடுகையாண்டு மாணவர் திரு.எம்.புவனகுமார்

✻ மனமுவந்து விளம்பரங்களை தந்துதவியும், ஸ்டிக்கர்களை பெற்று எங்கள் பொருளாதார சுமைகளை தீர்க்க முன்வந்த வர்த்தக பிரமுகர்கள், நலன்விரும்பிகள்

✻ இந்நூலை இந்தளவிலாவது வெளியிடுவதற்கு ஊக்கமளித்து உற்சாகமளித்த பொறுப்பு விரிவுரையாளர் திரு.எஸ்.இதயராஜா, திருமதி.சுமதி அன்பரசு

✻ ஆக்கங்களை திருத்தி தந்த விரிவுரையாளர்களான திரு.எஸ்.இதயராஜா, திரு.ஜெ.சற்குருநாதன், பண்டாரவளை ஊவா ஹைலன்ஸ் தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர் திரு.எஸ்.பிரபாகரன்

✻ விளம்பரங்களை சேகரித்து தந்த முதலாமாண்டு, இரண்டாமாண்டு ஆசிரிய நண்பர்கள்

✻ பல்வேறு வகைகளில் உதவிய கொட்டகலை புஸ்பா ஹாட்வெயார் உரிமையாளர் திரு.எல்.விஸ்வநாதன் (J.P), ஹட்டன் திருமதி. சந்திரபவானி பரமசாமி, பதுளை ஊவா ஹைலன்ஸ் ஆசிரியர்களான திரு.கே.சந்திரராஜ், திரு.வே.அன்பழகன், திரு.எம்.தியாகராஜா, திரு.கே.ராஜேந்திரன், திரு.எஸ்.சுந்தரம்பிள்ளை, திரு.எஸ்.சிவகுமார், சென்ட் ஜேம்ஸ்-திரு.அண்ணாதுரை, திரு.சு.கனேசன், திரு.பெ.ராசலிங்கம், திரு.ரெ.கருணாநீதி, பதுளை தர்ஷிகா புத்தக நிலைய திரு.ஸ்ரீதரன், மாத்தளை கந்தேநுவர-ஏ.பீ. ராஜ்குமார் குடும்பத்தினர், மற்றும் கலாசாலை ஆசிரிய நண்பர்கள்.

✻ ஆக்கங்ளை தந்துதவிய தினகரன் உதவியாசிரியர், மலையப்பகுதி திரு.அருள்சத்தியநாதன் அவர்கள் விரிவுரையாளர்கள், ஆசிரிய நண்பர்கள்,

✻ இந்நூலினை சிறப்பாகவும், அழகுறவும் அச்சிட்டுத் தந்த ஹட்டன்-பிரின்டெக் அச்சகத்தாருக்கும்,

✻ மலரை முகர்ந்து அதன் அகவயத்தினையும் புறவயத்தினையும் ஆய்வுசெய்து மணத்தின் சிறப்பினை கூறிய திருமதி.சந்திரபவானி பரமசாமி, (செயாலாளர் இந்து அபிவிருத்திச் சபை மலையகப் பகுதி)

✻ வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கைக்கான மொரீசியஸ்-தூதுவர் கௌரவ.தெ.ஈஸ்வரன், சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டோர், சிறப்பு பிரதிகளை பெற்றுக் கொண்டோர்

✻ பரிசு நூல்களை அன்பளிப்பாக வழங்கிய இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் திருமதி.நாவுக்கரசு உட்பட திணைக்கள ஊழியர்கள்

✻ இந்நூல் சிறப்பாக வெளிவரவும் வெளியீட்டு விழா சிறப்புற அமைவதற்கு முக்கியமானவர்களில் ஒருவராக விளங்கிய இதழாசியர், திரு.சுப்பையா இராஜ்குமார், மற்றும் நூலாக்கக்குழு உறுப்பினர்கள், இந்து மாமன்ற உறுப்பினர்கள், அனைவர்க்கும் நன்றிகள் உரித்தாகுக.

**திரு.நல்லையா சந்திரசேகரன்** - செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி என்றும் ஒளி பரப்ப
எனது நல்வாழ்த்துக்கள்


சென்னன் மலர்வண்ணன்
இல.2, பன்சல வீதி,
ஆல்கரனோயா.
தொ.பேசி:052-5383, 5311

CEYLINCO INSURANCE COMPANY LTD,

**SHASHIKALA SUBRAMANIYAM**
Sales Consultant.

134, Galle Road,
Colombo-3.
P.O.Box. 899.

Tel:424812, 438294-5
T'Grams:Ceylinco
Fax:437613

Branch: 308/A, Katugastota Road, Kandy.
Tel:228627, Res:215, Main Street,Panwila.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# NEW HAMEEDIYA MEDICAL STORES

சகலவிதமான மருந்து பொருட்கள், பலசரக்கு பொருட்களை
பெற்றுக்ககொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்

No.26, Kotmale Road,
Talawakelle.

With best compliments from:

## GOLDEN SILK EMPORIEM

*Retailers & Wholesalers of Quality Textiles*
*Readymade Garments, and Fancy Gooos*

45, Vaughans Park Road,
Nawalapitiya.
(opposite Market Complex)
Tel:054-23027

With best compliments from:

## GOLDEN TEXTILE PALACE

Dealers in Textiles, Readymade Garments, and Fancy, Specialist in Sarees, Bombay Salwar suits etc.,

*19, Kotmale Road,*
*Nawalapitiya.*
*Tel:054-22608, 23027*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தடைகளை உடைத்து தரணியில் புதுநடைபோட

ஓம் சக்தி நூல்

உறுதுணை புரியட்டும்

கல்விக்கழகம்

அரசினர் ஆசிரியர் கலாசாலை.

யதன்சைட்-கொட்டகலை.

கலாசாலை மாணவர் பேரவை
நூல் சிறப்புற வாழ்த்துக்கள்
கூறுகின்றது.

மாணவர் பேரவை
அரசினர் ஆசிரியர் கலாசலை,
யதன்சைட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

# GOLD STEEL

**N.Udayakumar (Managing Partner)**

General Hardware Merchants & Importers Exporters & Suppliers of Hardware Items, Principal Selling Agents for ""Lanka Tor Steer""

***18, ABDUL JABBAR MAWATHA,***
***COLOMBO-12***
***T.P:337213***

ஓம் சக்தி சிறப்புற வாழ்த்துகிறார்கள்

***A.E.N.*** *இராஜேந்திரா & சன்ஸ்*

**பற்றரி சார்ஜ், வீட்டு மின் இணைப்பு,**
**என்பன செய்து தரப்படும்.**

*இல. 5. கார்பெக்ஸ் பசார்,*
*டிக்கோயா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் சக்தி" நூல் சிறப்புற எனது வாழ்த்துக்கள்



# கௌரவ. முத்துசாமி சிவஞானம்

(மத்தியமாகாண சபை உறுப்பினர்)
மாத்தளை மாவட்டம்.
278, பிரதான வீதி,
மாத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி நூல்வெளியீட்டுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

சின்னஞ்சிறுவர்க்கான சிறந்த பரிசு

பிரார்த்தனா

Prarthana



அனுசரணை:

தேசிய சேமிப்பு வங்கி

உங்கள் குடும்ப வங்கி

தலவாக்கலை-கிளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி நூல் வெளியீட்டுக்கு நல்வாழ்த்துக்கள்

# புஸ்பா ஹார்ட்வெயார் அன்ட் புஸ்பா ட்ரான்ஸ்போர்ட்ஸ்

**திரு.எல்.விஸ்வநாதன் J.P**

*(உரிமையாளர்)*

**இல.151, பிரதான வீதி,**
**கொட்டகலை.**
**தொலைபேசி:051-22877**
**பெக்ஸ்-051-2289**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# PUSHPA
# TRADERS


PAWN BROKERS &
GENERAL MERCHANTS

NO. 1, LOWSON STREET,
NUWARA ELIYA.
TEL:052-22143





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From



EURO LANKA



Importers, Dealers In Electrical Goods &

Electrical Fittings.

**160, FIRST CROSS STREET.**


**COLOMBO-11.**

**TEL:338985.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# SIVA ENTERPRIZE



**WELCOME TO NUWARA-ELIYA**
**WELCOME TO SIVA ENTERPRIZE**

Leading Estates Suppliers
General Hardware Merchants

Siva Enterprize
Blocks C1-Siva Complex,
Lowson Street,
Nuwara-Eliya.
Tel:052-22109 ,22941

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றமிகு எமது நெறி விருட்சமாய் என்றும் திகழ
ஓம் சக்தி துணைபுரியட்டும்.

தரமான ௨௨கரட் தங்க நகைகளை
நவீன டிசைன்களில்
பெற்று கொள்ள
நம்பிக்கையான நிறுவனம்



# ஜோதி ஜுவெல்லர்ஸ்

# JOTHY JEWELLERS

**149, லோவர் வீதி,**
**பதுளை.**
**தொலைபேசி: 055—22340**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இயங்குவது சக்தியால் அந்த உலக
மகாசக்திக்கு ஓம் சக்தியின் மூலம் எமது அர்ப்பணங்கள்

# தேவி ஜுவலர்ஸ் & பவுண் புரோக்கர்ஸ்

22கரட் தங்க நகைகளை வாங்கவும்,
தங்க நகைகளை நம்பிக்கையுடன் அடகு வைக்கவும்
நாடவேண்டிய இடம்

*No.24-4/1, 1st floor,*
*New Bazaar Street,*
*Nuwara-Eliya.*
*Tel:052-23616*

ஓம் சக்தி நூலுக்கு எமது நல்லாசிகள்



# ஸ்ரீ துர்க்கா அச்சகம்

திருமண அழைப்பிதழ்கள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், கும்பாபிஷேக விஞ்ஞாபனங்கள், அனுபந்தங்கள், பாடசாலை உபகரணங்கள், ஆகியவற்றை பெற்றுக் கொள்ளவும் தரமான அச்சகவேலைகளுக்கும் நம்பிக்கையுள்ள ஸ்தாபனம்

**122, பிரதான வீதி,**
**மஸ்கெலியா.**
**தொலைபேசி:052-77410**

FAX:ATN SHRI DURKA 070-521013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்



# சாந்தி ஜுவலரி

22 கரட் தரமான தங்க நகைகளுக்கு

**45, பிரதான வீதி,**
**ஹட்டன்.**
**தொலை பேசி:051—22437**

ஓம் சக்தி நூல் சிறப்பாக வெளிவர
எமது நல்வாழ்த்துக்கள்

# நியு பிரியா ஸ்டோர்ஸ்

*(விநியோகஸ்தர்கள் - பலசரக்குப் பொருட்கள்)*


**125, டி.எஸ்.சேனநாயக்க வீதி,**
**கண்டி.**
**தொலைபேசி:223979, 223351**
**பெக்ஸ்:225305**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி நூலுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

# பிரியா ஜுவலரி



அசல் 22கரட் தங்க நகைகளை அழகிய டிசைன்களில் உறுதியுடனும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்வதற்கு சிறந்த நகையகம்

**62, பிரதான வீதி,**
**ராகலை-ஹால்கரனோயா.**
**தொலைபேசி:052-65642**

With best compliments from:

# Kalaimagal Stores

Proprietor: Mr.R.Ramanathan J.P. (All Island)

*Dealers in Vegetables, Seed Potatoes, Water Pumps, Hose Pipes, Sprayers, Mistblowers and Fertilizers. (Pawn Brokers)*

Agents for:
NETAR LTD, LANKAM CEYLON LTD,
ALLIED COMMERCIAL FERTILIZERS (PVT) LTD,
PUTTALAM CEMENT CO., LTD,

53 E, Temple Building,
Ragala Bazaar,
Halgranoya.

Tel:052-65212,
65312,
65412
Fax:052-65212



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with best compliments from



# GANESH TEXTILES (PVT) LTD.

Wholesale & Retail
Dealers in Textiles

**81-83, Main Street,**
**Colmbo -11**
**Tel:325128, 343078**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயப்பணியில் ஓம் சக்தி
புகழ்பரப்ப வாழ்த்துக்கள்

நாகலிங்கம்ஸ் ஜுவலர்ஸ்

22கரட் தங்க நகைகளை வடிவமைத்து
தரமான முறையில் தயாரித்து கொடுப்பவர்கள்

101, கொழும்பு வீதி,
கண்டி
தொலைபேசி:08-232545

*with best compliments from*

SIVASHAKTHI
CORPORATION

**258, Main Street,**
**Matale.**
**Tel:22599**
**Fax:23835**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி நூல் வெளிவந்து
சக்தியின் புகழ்பாட வாழ்த்துகிறோம்



# அருணாசலம் அன்ட் சன்ஸ்

*தரமான புடவை விற்பனையாளர்கள்*

**இல. 45, அம்பகமுவ வீதி,**
**கம்பளை.**

கலாசாலையில் வெளியிடுகின்ற
ஓம் சக்தி பக்திநூல் மக்கள் மத்தியில்
சாந்தி சமாதானத்தை ஏற்படுத்த வாழ்த்துகிறோம்.

**லங்கா**
ட்ரான்ஸ்போர்ட்ஸ் சேவிஸ்.

**154/1-A. லோவர் வீதி,**
**பதுளை.**
**Tel:055-22115**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி நூல் அருள்ஒளி பரப்ப நல்வாழ்த்துக்கள்

# ரோகினி ட்ரேடர்ஸ்

சகலவிதமான சில்லறைப் பொருட்களுக்கும்
நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்

**213/3, கொழும்பு வீதி,**
**கண்டி.**

ஓம் சக்தி நூல் அருள்ஒளி பரப்ப நல்வாழ்த்துக்கள்

# முத்துசாமி அண்ட் சன்ஸ்

**இல.105, பிரதான வீதி,**
**ஹட்டன்.**
**தொலைபேசி:051-23422**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி நூலுக்கு எமது நல்வாழ்த்துக்கள்

# குமார்ஸ்

தரமான ஆண்களுக்கான
தையல் நிலையம்

**135, நுவரெலியா வீதி,**
**தலவாக்கொல்லை.**

## றீகல்ஸ்
## சிகையலங்கார நிலையம்

ஆண், பெண், சிறுவர், சிறுமியருக்கு நவீன நாகரீக முறையில் சிகையலங்காரம் செய்ய உகந்த நிறுவனம்

**136, நுவரெலியா வீதி,**
**தலவாக்கொல்லை.**

With best compliments from:

# LUGLY

**Yatinuwara Vidiya,**
**Kandy.**
**T.P:08-232783**

## Riverside Multishop

**(Hotel Suppliers &**
**Chinese Food Items etc.,**

5B. Gampola Road,
Peradeniya.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் தழைக்க வரும் ஓம் சக்தி
வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

**கணேசா மலர் வியாபார ஸ்தாபனம்**

**Proprietor:**
**K.Kanagaratnam.J.P**

சுவாமி அலங்காரம், பூமணவரை, திருமணமாலைகள், சடநாகம்,
பூச்செண்டு, தலைப்பா, ஒட்டியான செட்,
மண்டப அலங்காரம் மற்றும் அனைத்து சுப வைபவங்களுக்கும்
தேவையான சரம், மாலைகள் நவீன டிசைன்களில் செய்து தரப்படும்.
செவ்வந்தி பூ வரவழைத்துக் கொடுக்கப்படும்.

Residence:
66/1A,
மாத்தளை வீதி,
பிள்ளையார் கோவில்,
இறத்தோட்டை.
தொலை:072-62291O

Shop:
மாத்தளை வீதி,
(கோயில் அருகில்)
இறத்தோட்டை,
தொலைபேசி:066-55475

With best compliments from:

PR

**PHARMACY REX**

**(CHEMIST & DRUGGISTS)**

**23, DALADA VIDIYA,**
**KANDY.**

**TEL:08-223277**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# Micro
## VIDEO & ELECTRONIC



Video Cassetes for Hire
Audio Recording
Undertaken Repairs
(VCR, TV, Audio Equipments)

7, Bus Stand Shopping Complex,
Haputale.

With best compliments from:

# DEVI CHEMICALS
*V. Vivekanandan*

Manufactured & Dealers in After Shave, Bayrum,
Cologne, Hair Cream, Powder etc.

Devi Chemicals
Mahakandura,
Bogahakumbura.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் தழைக்க வரும் ஓம் சக்தி
வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

**அபீஷா**
**புத்தக நிலையம்**

கற்றோர்
சபையில் வெளிவரும்
ஓம் சக்தி
வழி நூலே......!
பார் புகழும்
எம் மதத்தை
சாதாரண
குடிசைமுதல்
கோபுரம் வரை
கொண்டு சென்று
உன்
பனியில் சிறந்திட
என்றும் எங்கள்
வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்கள்
பத்திரிகைகள்
கதைப்புத்தகங்கள்
அழகு சாதனப்பொருட்கள்
பரிசுப் பொருட்கள்
விற்பனையாளர்கள்

இல.137, நுவரெலிய வீதி,
தலவாக்கலை.

நூல் வெளியீடு சிறப்புற எங்களது வாழ்த்துக்கள்



**லலிதா**
**ட்ரேட் சென்டர்**

சகல விதமான ஜவுளிவகைகளுக்கும், அழகுசாதனப் பொருட்களுக்கும்

200, பிரதான வீதி,
கொழும்பு-11

தொலைபேசி:325911, 334645

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் தழைக்க வரும் ஓம் சக்தி
வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்



# ராம் பிரதர்ஸ்

(தரமான ஜவுளி விற்பனையாளர்கள்)

140, பிரதான வீதி,
கொழும்பு-11
தொலைபேசி:320127, 447698

சைவம் தழைக்க வரும் ஓம் சக்தி
வெளியீட்டுக்கு வாழ்த்துக்கள்

# வினோதினி ஸ்டோர்ஸ்

சகல விதமான மலிகைப் பொருட்களுக்கும்
நம்பிக்கையான ஸ்தாபனம்

மோரா தோட்டம்,
பொகவந்தலாவ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி சிறப்பாக ஒளிர்விட எமது வாழ்த்துக்கள்

# குகன் ஸ்டோர்ஸ்

*பி.அம்பிகைபாகன்*


பலசரக்கு வியாபாரிகள்

**71, பிரதான வீதி**
**பண்டாரவளை.**

With best compliments from:

# VINO ADVERTISING

***A.P.RAJKUMAR***



(Accredited Agents for
Radio & T.V.

245/16 B,
Mawatta Road,
Colombo-14.

Tel:074-610360
Hot Line:072-615986
Fax:337309

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் சக்தி' நூல் சிறப்புடன் வெளிவர
எமது வாழ்த்துக்கள்

வண்ண வண்ண நிறங்கங்களில்
கண்கவரும் பிரிண்டட் சாரிகள்,ஷல்வார் மற்றும்
சிறுவர் ஆடை ரகங்களுக்கு நாடவேண்டிய ஓரே இடம்



சாரி சென்டர்
308/A பிரதான வீதி,
பசறை.

SAREE CENTRE
308/A Main Street,
Passara.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printech-Hatton 051-23848